2906

T.N.L.A. Debates
Official Report

Vol 18 No 2&3

19,20 March 1986

(C)

D
V211,31'N86
N86.18.2&3
136452

வெளியீடு 12-9-1986

Issued 12-9-1986

957/86

2906

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 19, 1986-தொகுதி 18 எண் 2

Wednesday, the 19th March 1986-Volume 18 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009

**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras-600009**

விலை ரூ. 3]

[Price Rs 3

D

V211,31 'N86

N86·18·2 f3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136452
சென்னை-600 008.

## உள்ளடக்கம்

19—3—1986


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கல் குறிப்புகள் :** | |
| பேரவை முன்னாள் உறுப்பினர்கள் திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி மற்றும் திருமதி ருக்மணி தேவி அருண்டேல் ஆகியோர் மறைவு குறித்து .. .. | 171—173 |
| **2. இரங்கல் தீர்மானம் :** | |
| தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. கே.கே.ஷா மறைவு குறித்து .. .. .. | 174—175 |
| **3. வினாக்கள் விடைகள் :** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. | 176—206 |
| **4. அறிவிப்புகள் :** | |
| (அ) இறுதி துணை நிதிநிலை அறிக்கை 1985-86, முன்பண மானியக் கோரிக்கைகள் 1986–87 அளித்தல் (ஆ.செ.) .. .. | 206 |
| (ஆ) பேரவை அலுவல் .. .. .. | 276—281 |
| **5. வரவு–செலவுத் திட்டம் 1986–87 பொது விவாதம் :** | 207—276 |
| திருமதி டி. யசோதா | 207—222 |
| திரு. அ. பாலுசாமி | 222—227 |
| திரு. அ. ரகுமான்கான் | 228—243 |
| திரு. செ. செம்மலை | 243—251 |
| திரு. ஏ. எஸ். ரவீந்திரன் | 252—260 |
| திரு. மு. பாண்டுரங்கன் | 260—266 |
| திரு. கு. சுப்பராயன் | 266—276 |
| **6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.** | 81—284 |

2906

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

**1986, மார்ச் 19, புதன்கிழமை**

**பங்குனி 5, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

> ''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
> உடையானாம் வேந்தர்க் கொளி''

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்கு போன்றவன்.

## 1. இரங்கல் குறிப்புகள்.

பேரவை முன்னாள் உறுப்பினர்கள் மற்றும் திரு. கே. கிருஷ்ண மூர்த்தி, திருமதி ருக்மணி தேவி அருண்டேல் ஆகியோர் மறைவு குறித்து :

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. அ. சின்னசாமி, 29–4–1985ஆம் தேதியன்றும், திரு. ஆர். வி. சவுந்திரராஜன் 15–11–1985ஆம் தேதியன்றும், திரு. எம். மாணிக்கசுந்தரம் 24–1–1986ஆம் தேதியன்றும், திரு. எம்.எஸ்.கே. சத்தியேந்திரன், திரு. ஜி. வெங்கண்ணா ஆகியோர் 29–1–1986ஆம் தேதியன்றும், திரு. கே. பி. பழனி, 2–2–1986ஆம் தேதியன்றும், திரு. என். எஸ். ராமலிங்கம் 3–2–1986ஆம் தேதியன்றும், திரு. டபிள்யு. பி. ஏ. ஆர். சந்திரசேகரன், திரு. என். ராமகிருஷ்ண அய்யர் ஆகியோர் 6–3–1986ஆம் தேதியன்றும், திரு. தியாகு வைகாரர், 10–3–1986ஆம் தேதியன்றும், உலகப் புகழ் பெற்ற தத்துவ மேதையும், வேதாந்த சொற்பொழிவாளருமான திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியாவில் 17–2–1986ஆம் தேதியன்றும், பரத நாட்டியத்தில் புகழ் பெற்ற கலைஞரும், சிறந்த சமூக சேவகியுமான திருமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்கள் 24–2–1986ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. சின்னசாமி அவர்கள் 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை ஸ்ரீவில்லிபுத்தூர் (ஒதுக்கப்பட்ட) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று, நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர். வி. சவுந்திரராஜன் அவர்கள் 1977ஆம் ஆண்டிலிருந்து 1980ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். மாணிக்கசுந்தரம் அவர்கள் 1952ஆம ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு வரை திருச்சிராப்பள்ளி மாவட்டம் கரூர் பொது தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் அவர்கள் 1971ஆம் ஆண்டிலிருந்து 1976ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் தொகுயிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் அவர் பாராளுமன்ற மக்களவைக்கும் 1980ஆம் ஆண்டிலிருந்து 1984ஆம் ஆண்டு வரை இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்று சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜி. வெங்கண்ணா அவர்கள் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரை எல்லூர் பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. பி. பழனி அவர்கள், 1962ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. என். எஸ். ராமலிங்கம் அவர்கள் 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் தொகுதியிலிருந்தும் மற்றும் 1962ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரை தஞ்சாவூர் மாவட்டம் வேதாரண்யம் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.



திரு. டபிள்யு. பி. ஏ. ஆர். சந்திரசேகரன் அவர்கள் 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை மதுரை மாவட்டம் நிலக்கோட்டை பொது தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. என். ராமகிருஷ்ண அய்யர் அவர்கள் 1952ஆம் ஆண்டிலிருந்து 1957ஆம் ஆண்டு வரை சைதாப்பேட்டை பொது தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. தியாகு வைகாரர் அவர்கள் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டுவரை மன்னார்குடி பொது கிராமப்புற (செட்யூல்டு வகுப்பு) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தன்னுடைய தத்துவப் பேருரைகளைக் கேட்க வரும் மக்களை காந்த சக்தி போல் கவர்ந்து இழுக்கும் சிறந்த ஆற்றல் படைத்தவராவர். அடையாறு பிரம்ம ஞான சபையுடன் நெருக்கமான தொடர்புடையவர். நமது காலத்தில் வாழ்ந்த மிகச் சிறந்த தத்துவவாதிகளுள் ஒருவர் ஆவார்.

திருமதி ருக்மணிதேவி அருண்டேல் அவர்கள் இந்திய கலாச்சாரம் குறிப்பாக நடனக் கலை மறுமலர்ச்சியடைய உலகப் புகழ் வாய்ந்த கலாசேட்த்திரத்தை சென்னை அடையாறில், 1936ஆம் ஆண்டு நிறுவியவர். இவர் இசைக்கும், நாட்டியத்திற்கும் ஆற்றிய சேவை உன்னதமான ஒன்றாகும். விலங்குகளின் பால் அன்பு கொண்ட இவர், வன விலங்கு பாதுகாப்புத் துறைத் தலைவராகவும் சீரிய முறையில் பணி புரிந்தார்.

அன்னார்களின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. இரங்கல் தீர்மானம்.

தமிழ்நாடு முன்னாள் ஆளுநர் திரு. கே. கே. ஷா. மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''தலை சிறந்த விடுதலைப் போராட்ட வீரரும், முன்னாள் மத்திய அமைச்சரும், 1971ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரை தமிழகத்தின் ஆளுநராகவும் பணியாற்றிய திரு. கே. கே. ஷா அவர்கள், 14-3-1986ஆம் தேதியன்று மறைந்த துயரச் செய்தி கேட்டு, இப்பேரவை வருந்துகிறது.

அன்னாரது குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கிறது.''

மறைந்த திரு. கே. கே. ஷா அவர்கள் 1908ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் மாராட்டிய மாநிலத்தில் உள்ள காரிகான் என்ற இடத்தில் பிறந்தார். படிப்பிற்குப் பிறகு தனது பணியை ஆசிரியராகத் துவக்கினார். சிறந்த வழக்கறிஞராகவும் திகழ்ந்தார்.

திரு. ஷா அவர்கள் 22-வது வயதில் தேசிய இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். 1942-ல் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கெடுத்துக்கொண்ட காரணத்தினால் கைது செய்யப்பட்டார். பம்பாய் மாநிலக் காங்கிரஸ் குழுவின் பொதுச் செயலாளராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். 1955 முதல் 1957 வரை காங்கிரஸ் குழுவின் துணைத்தலைவராக இருந்த அவர் 1960-ல் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு 1962-63-ல் அனைத்திந்திய காங்கிரஸ் இயக்கத்தின் பொதுச் செயலாளராக இருந்து பணியாற்றியுள்ளார்.

பரோடா சமஸ்தானத்தை பம்பாய் மாநிலத்துடன் இணைக்கின்ற பணியில் அவர் ஏற்றுக்கொண்ட பங்கு குறிப்பிடத்தக்கது. பரோடா மன்னருக்குச் சட்ட ஆலோசகராகவும் இருந்திருக்கிறார்.

பல ஆண்டுகள் பம்பாய் மாநகராட்சி உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். 1952ஆம் ஆண்டு பம்பாய் சட்டப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960ஆம் ஆண்டிலும் பின்னர் 1966ஆம் ஆண்டிலும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியுள்ளார். 1967-1971-ல் மத்திய அரசின் அமைச்சராகப் பொறுப்பேற்று சிறந்தமுறையில் பணியாற்றியுள்ளார்.



திரு. கே. கே. ஷா அவர்கள் பல்வேறு கல்வி, கலாச்சார சமூக அமைப்புக்களில் தொடர்பு கொண்டு சிறப்பாகப் பணியாற்றியுள்ளார். அவர் பல்வேறு வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டிருக்கிறார். இந்தியா—பாகிஸ்தான் தகராறின்போது அகதிகள் மறுவாழ்வில் தனி அக்கறை எடுத்து பணியாற்றியுள்ளார்.

அவர் தமிழ்நாட்டின் ஆளுநராக இருந்து சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

அவரது மறைவு நமது நாட்டிற்கு ஒரு பெரும் இழப்பாகும்.

அவரது குடும்பத்தினருக்கு பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறைந்த திரு. கே. கே. ஷா அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் அலுவல்கள் இப்போது ஒத்திவைக்கப் பெற்று, முற்பகல் 10.00 மணிக்கு மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 9.09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை 10.00 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் கூடியது.

[1986 மார்ச் 19

## 3. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தஞ்சை மாவட்டத்தைப் பிரித்தல்

178—(*வினா எண். 1904) திரு. மு. தங்கமணி, திரு. மு. இராசாங்கம், திரு. கி. கிருஷ்ணமூர்த்தி. : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்திலிருந்து பிரிந்து வள்ளியம்மை மாவட்டம் எப்பொழுது செயல்பட இருக்கிறது ?

(ஆ) மயிலாடுதுறை வள்ளியம்மை மாவட்டத்தின் தலை நகராகச் செயல்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) தஞ்சாவூர் மாவட்டத்தை மூன்று மாவட்டங்களாகப் பிரித்து திருவாரூரை தலைமையிடமாகக் கொண்ட வள்ளியம்மை மாவட்டமும், நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டமும், தஞ்சாவூரைத் தலைமையிடமாகக் கொண்ட தஞ்சாவூர் மாவட்டமும் அமைக்க அரசு முடிவு மேற்கொண்டுள்ளது. இம்முடிவு அரசின் நிதி நிலைமைக்கேற்ப வரும் ஆண்டுகளில் படிப்படியாகச் செயற்படுத்தப்படும்.

(ஆ) இல்லை.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தை மூன்றாகப் பிரிக்கின்ற ஏற்பாட்டைப் பாராட்டுகிறேன். தஞ்சை மாவட்டம் மிகப் பெரியதாக இருப்பதாலும், ஜனத் தொகை அதிகமாக இருப்பதாலும், நிலப்பரப்பு அதிகமாக இருப்பதாலும் நிர்வாக வசதியை முன்னிட்டு 1987-88 ஆம் ஆண்டிலாவது தஞ்சை மாவட்டத்தைப் பிரித்து அமைக்கின்ற பணியை மேற்கொள்ளும் கருத்து அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த ஆண்டு நெல்லை மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்கின்ற பணி மேற்கொள்ளப்படவிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மக்கள் தொகை, அதனுடைய பரப்பு, அதனுடைய பிற தன்மைகள் ஆகியவற்றைப் பார்த்து, வல்லுநர் குழு அறிக்கை சமர்ப்பித்த பிறகு அது பற்றி முடிவு செய்யப்படும்.



1986 மார்ச் 19]

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்னால் செய்தியாளர்களுக்கு பேட்டி கொடுக்கும் போது தஞ்சை மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது மூன்றாகப் பிரிக்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆக, செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டிக்கும் இந்த மன்றத்தில் அளித்த பதிலுக்கும் வேறுபாடு இருப்பதால் தஞ்சை மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்படுவது உறுதியாக இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் முதலிலே இரண்டாகப் பிரிக்கப்படுவதாக இருந்தது. அதன் பிறகு மூன்றாகப் பிரிக்கப்படும் என்றும், நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட காயிதே மில்லத் மாவட்டம் அமைக்கப்படும் என்றும் இந்த மன்றத்திலே முன்பே அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே மூன்று மாவட்டங்களாக இப்போது, இருக்கிற தஞ்சை மாவட்டம் பிரிக்கப்படும் என்ற கருத்து உறுதியானது, உண்மையானது.

திரு. கோ. வீரய்யன் : தலைவரவர்களே, அந்த நிபுணர் குழு அறிக்கை வரும் ஆண்டிலே கிடைத்து, நடப்பு நிதியாண்டிலேயே தஞ்சை மாவட்ட பிரிவினை அமலுக்குக் கொண்டு வரப்படுமா ? ஏனென்றால் அது மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிறது. அதனால் நிர்வாகத்தில் சிரமம் இருக்கிறது. அதிலும் குறிப்பாக அந்த மாவட்டம் கடலோரப் பகுதியாக இருப்பதால் தொடர்ச்சியாக பல்வேறு சிரமங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவற்றை எல்லாம் கருத்திற்கொண்டு, பிரிவினைப் பணியைத் துரிதமாகச் செய்ய, வல்லுநர் குழு அறிக்கையை இந்த ஆண்டிலேயே பெற்று, நடப்பு நிதியாண்டிலேயே இந்தப் பணிகளை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒரு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறோம் என்றால், புதிதாகப் பிரிக்கப்படுகின்ற மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தொடர் செலவாக 3.5 கோடி ரூபாயும் தொடராச் செலவாக 11 கோடி ரூபாயும் செலவாகும் என்ற திட்டத்தின் அடிப்படையில் பிரிக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையிலே படிப்படியாக பெரிய மாவட்டங்களை பிரிக்க வேண்டும். நான் ஏற்கனவே கூறியபடி இந்த ஆண்டில் இரண்டு மாவட்டங்களைப் பிரிக்கின்ற பணி மேற்கொள்ளப்படுகிறது. அடுத்து, தஞ்சை, திருச்சி, தென்னாற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று முன்பே குறிப்பிட்டிருக்கிறோம். அவற்றில் எது சாத்தியமாக இருக்கிறது என்று பார்த்து, எந்த மாவட்டத்தைப் பிரிப்பது எளிதாக அமையும் என்று பார்த்து,

எப்போது எந்த மாவட்டத்தைப் பிரிக்கலாம் என்பதை வல்லுநர் குழு அறிக்கை வந்த பிறகு தான் சொல்ல முடியும் ; இப்போது திட்டவட்டமாகச் சொல்ல முடியாது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லும்போது நெல்லை மாவட்டமும் வடாற்காடு மாவட்டமும் இந்த ஆண்டில் பிரிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்தப் பணி ஏப்ரல் மாதம் தொடங்கப்படுமா அல்லது வழக்கம் போல் செப்டம்பர் மாதம் தொடங்கப்படுமா ? வடாற்காடு மாவட்டத்தையும் நெல்லை மாவட்டத்தையும் பிரித்து அமைக்கும்போது, புதிதாக அமையும் மாவட்டங்களுக்கு என்ன பெயர் வைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் . தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, புதிய மாவட்டத்திற்கு வ.உ.சி. மாவட்டம் என்றும் ஏற்கனவே இருக்கிற மாவட்டம் நெல்லை மாவட்டம் என்றும் பெயர் வைக்கப்ப்டும். அது பற்றி ஏற்கனவே இந்த அவையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஒரு பகுதி ஏற்கனவே இருக்கிற வேலூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும். புதிய மாவட்டத்திற்கு சம்புவராயர் மாவட்டம் என்று பெயரிடப்படும்.

திரு. வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே மக்கள் தொகை, பரப்பளவு எல்லாவற்றிலும் தஞ்சை மாவட்டம் மதுரை மாவட்டத்தைக் காட்டிலும் குறைவாகவே இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தை 3 மாவட்டங்களாகப் பிரிக்கப் போகிறோம் என்று நிதியமைச்சர் அவர்களே இங்கே கூறியிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது பிரிக்கப்பட்ட மதுரை மாவட்டத்தை 3 ஆகப் பிரித்து அதிலே ஒரு மாவட்டத்திற்கு வைகை மாவட்டம் என்று பெயரிட அரசிடம் ஏதேனும் உத்தேசம் இருக்கிறதா? அரசு அதற்கு அறிவிப்பு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பு செய்கிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவள்ளுவர் மாவட்டத்தின் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அப்படி இங்கேயே அறிவிக்கப்பட்டதற்குப் பிறகும் கூட, திருச்சி மாவட்டம் இன்னும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு திருவள்ளுவர் மாவட்டமாக அறிவிக்கப்படவில்லை. இந்த ஆண்டாவது அதற்கு முயற்சி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய பொறுப்பு இருக்கிறது. பிரிக்கப்பட்ட பிறகு அமைய இருக்கிற புதிய மாவட்டத்திற்கு திருவள்ளுவர் மாவட்டம் என்ற பெயர் வைக்கலாம் என்றும் குறிப்பும் இருக்கிறது. நான் முதலிலே சொன்னபடி வல்லுநர் குழு அறிக்கை வைத்து, நிதிநிலை விவரம் போன்றவற்றைப் பார்த்து பிரிக்கப்பட வேண்டும். இன்னின்ன மாவட்டங்கள் பிரிக்கப்படலாம் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாவட்டங்கள் 4 இருக்கின்றன. அதிலே எதை எதை, எப்படி எடுத்துக் கொள்ளலாம். என்பது குறித்து அந்தக் குறிப்புகள் வந்ததற்குப் பிறகுதான் முடிவு செய்ய வேண்டும்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் பிரிக்கப்படுகிறபோது பெயர் வைப்பதில், தேசத்திற்காகப் பாடுபட்ட பெரியோர்கள் தலைவர்களின் பெயர்களை வைப்பதால் மக்கள் பிளவுபடுகின்ற அபாயம் இருக்கிறது என்பதை அரசு அறிந்திருக்கிறதா ? ஆகவே அப்படி பெயர்கள் வைப்பதில் ஏற்படுகின்ற சிக்கல்களை நீக்குவதற்காக மாவட்டங்களைப் பிரிக்கின்றபோது, தலைவர்களின் பெயரோ அல்லது ஜாதியைச் சார்ந்த பெயரோ வைக்காமல் இருக்கும் வகையில் வழி செய்வதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போன்ற அப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் நல்லதுதான் என்றாலும் கூட, அது முன்பே முடிவு கட்ட வேண்டிய ஒன்று. ஏற்கனவே முடிவு கட்டி பல்வேறு மாவட்டங்களை இன்னின்ன வகையில் பிரித்து பெயர்கள் வைக்கலாம் என்று முடிவு எடுத்ததற்குப் பிறகு, அதிலே மாற்றங்கள் செய்வது அவ்வளவு எளிதாக அமையாது, எந்த அளவுக்கு அவற்றை நடைமுறைப்படுத்தலாம் என்பதை மட்டும் யோசிக்கலாம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்பு மிக்க நாகப்பட்டணத்தை தலைநகராகக் கொண்டு கண்ணியம் மிக்க காயிதே மில்லத் அவர்களின் பெயரால் ஒரு மாவட்டம் அமைக்க இருப்பதை நான் மனமார பாராட்டுகிறேன். அந்தப் பகுதியிலே அண்மைக் காலத்தில் எண்ணெய் வளம் இருப்பதைக் கண்டுபிடித்து, எண்ணெய் சேகரிப்பும் தொடங்கியிருக்கிற காலக் கட்டத்தில் நாகையிலே ஒரு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையும் வைக்க வேண்டும் என்று கோரிக்கைகள் வருகின்ற போது, விரைவாக அந்த மாவட்டத்தைப் பிரித்தால், புதியதாக ஒரு மாவட்டம்

அமைந்தால், மேற்கொண்டும் அந்தமாவட்டத்தின் முன்னேற்றத்திற்கு அது வழி வகுக்கும் என்ற காரணத்தால், அதற்கு முன்னிடம் கொடுக்க அரசு முயலுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி மாவட்டங்களைப் பிரிக்கின்ற வகையில், வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தந்த மாவட்டங்களின் எல்லை, எந்தெந்த நகரங்கள், தலைநகரங்கள், எந்தெந்த கோட்டங்கள், வட்டங்கள் போன்றவை எவ்வெவற்றிற்கு எப்படியெப்படி அமைய வேண்டும் என்ற குறிப்புகளைஆராய்ந்து தர வேண்டும் அதற்குப் பிறகுதான் ஒவ்வொரு ஆண்டும் ஒரு மாவட்டம் அல்லது இரண்டு மாவட்டங்கள் என்ற அளவில் எப்படி எடுத்துக் கொள்வது என்று ஆராய வேண்டும். அந்த முறையைத் தான் நாம் கையாண்டு வருகிறோம். அந்த வகையில் தஞ்சை மாவட்டத்தை பிரிப்பதற்கான முறை வரக்கூடிய சூழ்நிலை இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கருத்துக்களும் மனத்திலே கொள்ளப்பட்டு அந்தத் திட்டத்தை மேற்கொள்ள்லாம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களைப் பிரிப்பதற்காக, அதிகாரிகள் அடங்கிய வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்கள் எந்தெந்தப் பகுதியை எந்தெந்த மாவட்டங்களில் சேர்க்க வேண்டும் என்ற விவரங்களை அரசுக்கு சமர்ப்பிப்பார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு ஊராட்சி ஒன்றியம் பிரிக்கப்பட வேண்டும் என்றால் கூட, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட குழு அமைத்தோ, அல்லது மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தையோ கூட்டி எந்தெந்த பகுதிகளைச் சேர்க்கலாம் என்று கருத்துக்கள் கேட்கப்படுகின்றன. அது போல மாவட்டங்கள் பிரிக்கப்படுகின்றபோது அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவைக் கூட்டி அல்லது பொது மக்களுடைய பிரதிநிதிகள் கொண்ட குழுவைக் கூட்டி, மக்களின் கருத்துக்களை அறிய அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி எல்லோரையும் கேட்டு அறிகின்ற சூழ்நிலையும் வரலாம். ஆனாலும் அதிலும் சங்கடங்கள் இருக்கின்றன. பிரிப்பதற்கான நல்ல சூழ்நிலையே அமையாது போனாலும் போகலாம். அப்படிக் கேட்பது என்று வைத்து எல்லோருடைய ஒப்பீனியனையும் கேட்டால், மாவட்டத்தையே பிரிக்கமுடியாத சூழ்நிலைதான் ஏற்பட்டாலும் ஏற்படுமே தவிர



பிரிக்கின்ற நல்ல சூழ்நிலை இருக்காது. இன்றைக்கு பிரிப்பதற்காக வல்லுநர் குழு ஆராய்ந்து வருகிறது என்ற நிலையில் சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் அவரவர்களுடைய கருத்துக்களைத்தெரிவிப்பார்களேயானால், அந்தந்த கருத்துக்களின் அடிப்படையிலும் அது வல்லுநர் குழுவால் ஆராயப்படும்.

(முற்பகல் 10–10)

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களைப் பிரிக்கும் பொழுது அவற்றின் தலைநகர் மாவட்டத்தின் மையப் பகுதியில் இருக்க வேண்டுமென்பதைப் பற்றி ஆய்வு ஏதேனும் செய்யப்படுகிறதா? புதியதாக அமைக்கப்பட்டுள்ள காமராசர் மாவட்டத்தின் தலைநகரான விருதுநகர் மாவட்டத்தின் ஒரு ஓரத்தில் இருப்பதால் மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே மாவட்டத்தின் மையப் பகுதியில் இருக்கிற திருவில்லிபுத்தூர் அந்த மாவட்டத்தின் தலைநகராக மாற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய தலைநகர் கூடுமானவரையில் மத்தியில் இருந்தால் நல்லது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்தாக இருந்தாலும், முக்கியத்துவத்தின் அடிப்படையில் வாணிகத்தின் அடிப்படையில், வரலாற்றுச் சிறப்பின் அடிப்படையிலே சிலபல இடங்கள் முக்கியத்துவம் பெற்று விடுகின்றன. ஆகவே முக்கியத்துவத்தின் அடிப்படையில் தலைமை தாங்குகிற முழுத் தகுதியையும் அப்படிப்பட்ட இடங்கள் பெற்று விடுகின்றன. அந்த வகையிலே சென்னை நகரம் தமிழகத்திற்கு தலைமை தாங்குகிறது. இல்லாவிட்டால் தமிழகத்திற்கு வேறு இடத்தைத்தான் தலைநகராக அமைக்க வேண்டியிருந்திருக்கும் அதைப் போன்று தான் கல்கத்தாவும் பம்பாயும் தலைநகர்களாக அமைந்திருக்கின்றன. ஆகவே அந்த வகையிலே பார்க்கிறபோது மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் ஏற்கனவே முயன்று ஸ்ரீவில்லிபுத்தூரை முன்னுக்குக் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படிக் கொண்டுவராத காரணத்தால் விருதுநகர் அந்தப் பெயரையும், புகழையும தட்டிக் கொண்டு போய்விட்டது. அது நடந்து முடிந்து விட்ட நிலை.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் ஆண்டுதோறும் மழை, புயல் போன்ற இயற்கைச் சீற்றத்தால் பாதிக்கப் படுகிறது. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தை இந்த ஆண்டிலாவது உடனடியாகப் பிரிப்பதற்கு முன்வருவார்களா ? அதுமட்டுமல்லாமல், தஞ்சை மாவட்டத்தை சோழ மன்னர்கள் ஆண்ட காரணத்தால்,

அமைக்கப்படுகின்ற புதிய மாவட்டத்தின் தலைநகருக்கு இராஜராஜ சோழன் மாவட்டம் என்று பெயர் சூட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இயற்கைச் சீற்றத்திற்கும், மாவட்டங்களைப் பிரிப்பதற்கும் நெருங்கிய தொடர்பில்லை. நான் முதலில் தெரிவித்ததைப்போல இதுபற்றி குறிப்புகள் வருமானால், அந்த அடிப்படையில் தான் நாம் முடிவு செய்ய வேண்டும், பிரிக்கப் படுகிற புதிய மாவட்டங்களுக்கு யார், யார் பெயரை வைப்பது என்று ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, அவையில் ஏற்கனவே எடுத்துச் சொல்லப்பட்டுவிட்ட காரணத்தால், இனிமேல் பெயரை மாற்றுவது என்பது இயலாத ஒன்றாகும்.

திரு. சைதை சா. துரைசாமி : தலைவர் அவர்களே, மாவட்டங்களைப் பிரிக்கின்ற முயற்சியில், வளர்ந்து வருகிற வளர்ந்திருக்கிற சென்னை நகரை தென்சென்னை, வட சென்னை என்று இரண்டு மாவட்டங்களாகப் பிரிப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும் கூட தெரிவிக்கிறேன். சென்னையை அப்படிப் பிரிக் கிற உத்தேசம் இல்லை. மற்ற மாவட்டங்களைப் பிரித்தி ருக்கிற சூழ்நிலை சென்னையைப் பொறுத்து அமையாது. மற்ற மாவட்டங்களைப் பிரித்திருக்கிற சூழ்நிலைகள் வேறு. சென்னையை இரண்டாகப் பிரிப்பது என்பது இயலாதஒன்றாகும் சென்னை என்றென்றும் ஒரே மாவட்டமாகத்தான் இருக்கும்

திரு. இரா. சா. முனிரத்தினம் : தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் உத்தேசம் உள்ளதா ? அப்படி இல்லையெனில், அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இப்போது உத்தேசமில்லை.



### திருமயம் வட்டத்தைப் பிரித்தமைத்தல்

179—(*வினா எண். 4598)— திரு. த. புஷ்பராசு: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா வைப் பிரித்து பொன்னமராவதி தாலுகா என்ற புதிய தாலுகா ஆரம்பிக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

### மயிலாடுதுறை நிலச் சீர்திருத்த அலுவலகம்.

180—(வினா எண். 3830) திரு. என். விஜயபாலன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் உள்ள நிலச் சீர்திருத்த அலு வலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

### ஊராட்சி ஒன்றியங்களுக்கு வைப்பு மற்றும் கொடை நிதி

181—*வினா எண். 1974— திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் பதிவறை எழுத் தர், அடிப்படை ஊழியர்கள். இரவு காவலர்கள், ஆயாக்கள், தையல் ஆசிரியைகள் ஆகியோருக்கு வைப்பு நிதி, கொடை நிதி ஆகிய திட்டங்கள் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கும் அத்திட்டங்களை விரிவு படுத்த அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

[1986 மார்ச் 19

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் பதிவறை எழுத்தர், அடிப்படை ஊழியர்கள், ஆயாக்கள், தையல் ஆசிரியைகள் ஆகியோருக்கு வைப்பு நிதி, பணிக்கொடை ஆகிய சலுகைகள் வழங்கப்படுகின்றன. இரவுக் காவலர்களுக்கு மேற்கூறிய சலுகைகள் வழங்கப்படவில்லை.

(ஆ) ஊராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் இரவுக் காவலர்களுக்கு பணிக்கொடை மற்றும் வைப்பு நிதி ஆகிய சலுகைகள் வழங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே, இதனைப் பரிசீலிக்கிற பொழுது அருக்கிற ஒளிரெட்ராஸ்பெக்ட்டிவ் எபக்ட் (Retrospective effect) கொடுத்து வசூலிப்பதற்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் தேடுவதற்கும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. சண்முகம் : இவைகள் எல்லாம் பரிசீலனை செய்கிறபோது, ஆய்வு செய்யப்படும்.

### விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் தேர்வுநிலை பேரூராட்சிகளை நகராட்சியாக மாற்றும் திட்டம்.

182—(*வினா எண். 5675) திரு. எஸ். பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள விக்கிரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம் ஆகிய தேர்வுநிலை பேரூராட்சிகளை நகராட்சியாக மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறை வேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) மற்றும் (ஆ) நகராட்சித் தேர்தல்கள் முடிந்தபின் இந்தத் திட்டம் பரிசீலிக்கப்படும்.

திரு. ஏஸ். பாலசுப்பிரமணியன் - மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சியிலே ஏறக்குறைய 60 ஆயிரம் ஜனத்தொகையும், ஆண்டு வருமானம் ஏறக்குறைய 10 இலட்சம் ரூபாய்க்கு மேலும் இருப்பதால், நல்ல பல திட்டங்களைச் செயலாக்க முடியாமல் இருக்கிற காரணத்தினால், அதிகமான ஜனத்தொகை இருக்கிற காரணத்தால், இந்த பேரூராட்சியை விரைவிலே நகராட்சியாக மாற்றுவதற்கு





இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கேள்விக்கு ஆம் என்று சொன்னதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கொடைக்கானலில் புதிய பஸ் நிலையம்

183—*வினா எண். 3066 (திரு. இரா. தாமரைக்கனி) டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் கொடைக்கானலில் புதிய பஸ் நிலையம் கட்டும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 50.00 லட்சம்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பஸ் நிலையம் எப்போது கட்டி முடிக்கப்படும். அதில் அமைய இருக்கிற வசதிகள் என்னென்ன, என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இப்போதுதான் அரசினுடைய ஒப்புதலுக்காக சென்று இருக்கிறது. இது ஐ.யு.டி.பி. யின் கீழ் வருகிற ஒரு திட்டமாகும். அங்கிருந்து பணம் வந்ததற்குப் பிறகு இந்த ஆண்டு எடுத்துக் கொள்வதாக இருக்கிறோம். இந்தத் திட்டத்தோடு கூட, வணிக வளாகம், தங்கும் விடுதி ஆகியவைகளை ரூபாய் 30 இலட்சம் செலவிலே கட்டலாம் என்று இருக்கிறோம்.

டாக்டர் த. முகம்மது சலீம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொடைக்கானல் நகரியத்தில் புதிதாக பஸ் நிலையம் அமைப்பதாக நகரியக் கூட்டங்களில் கடந்த 2 ஆண்டுக் காலமாக பேசப்பட்டு வந்தது. அப்படி பேசப்பட்டு வரும் போது, பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனால் அந்தஇடம் எடுக்கப்பட்டு, பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷனால் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்று கூறி வந்தார்கள். ஆனால் பல முறை நகரியக் கூட்டத்திலே கேட்டபோது, அரசிடமிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.

எனவே அந்த இடத்தில் கூடிய சீக்கிரத்தில் விரைவாக கட்டிக் கொடுத்து, அதிலே ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் அமைத்து, அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளுக்கு இட வசதிகளை அமைக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே இது கோரிக்கையே தவிர, கேள்வி அல்ல.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்கு பலதரப்பட்ட மக்கள் செல்லுகின்றபோது, அவர்கள் கோடை ரோட்டிலே இறங்கித்தான் செல்ல வேண்டும். ஆனால் அந்த கோடை ரோட்டிலே பஸ் நிலையம் இல்லை. எனவே பஸ் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி அளித்து இருக்கிறார்கள். அந்த அனுமதி இப்போது எந்த நிலையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கோடை ரோட்டைப் பற்றித் தனிக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் கொடைக்கானலில் இயங்கி வரும் பஸ் நிலையம் மிகவும் பள்ளமான இடத்தில் உள்ளது. புதிதாக அமைக்க இருக்கும் பஸ் நிலையம் எந்த இடத்தில் அமைய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அப்படி எந்த இடமும் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், ஏரியைச் சுற்றிநிறைய இடங்கள் காலியாக உள்ளன. எனவே அந்த மாதிரியான சமதளமாக உள்ள இடத்தில் பஸ் நிலையத்தை அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கொடைக்கானல் நகரத்தில், உட்வில் காம்பவுண்டில், பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமாக சர்வே எண். 330சி நிலத்தில் 1.27 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்க உத்தேசம் செய்யப்பட்டு உள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானலுக்குச் செல்லக் கூடியவர்கள் கோடை ரோட்டிலே இறங்கித்தான் செல்ல வேண்டும். அங்கே பஸ் நிலையம் அமைப்பதற்காக அன்ன சமுத்திரம் டாங்கிலேயிருந்து எப்.டி.எல்க்கு மேலாக 3 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு உள்ளது. எனவே அதை வைத்தாகிலும், அங்கே விரைவிலே பஸ் நிலையத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, நான் கோடை ரோட்டைப் பற்றி பதில் சொல்லவில்லை. கொடைக்கானலைப் பற்றிச் சொல்லிக் கொண்டு இருக்கிறேன். கோடை ரோட்டைப் பற்றி தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் பேருந்து நிலையம் மிகச் சிறிய பேருந்து நிலையமாக இருக்கிறது. எனவே அதை வேறு இடத்தில் மாற்றி அமைக்கும் நிலைமை உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, தனியாகக் கேள்வி போட்டால், பதில் தரப்படும்.

(முற்பகல் 10.20)

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொல்கிறபோது இந்த ஐ.யு.டி.பி. மூலமாக பேரூராட்சியாக இருந்தாலும், முனிசிபாலிட்டியாக இருந்தாலும் பேருந்து நிலையம் கட்டுகிறபோது அந்தப் பேரூராட்சியில் பொதுப் பணித் துறைக்கு சென்டேஜ் சார்ஜ் என்றுகொடுக்கவேண்டியிருக்கிறதுஅதனாலேயே பேரூராட்சியாக இருந்தாலும், முனிசிபாலிட்டியாக இருந்தாலும் சென்டேஜ் சார்ஜிக்கு அதிக வட்டி கட்ட வேண்டி வருகிறது. சென்டேஜ் சார்ஜ் இல்லாமல் பொதுப் பணித் துறையே அந்த பேருந்து நிலையங்களை கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : சென்டேஜ் சார்ஜிக்கு வட்டி கிடையாது. சென்டேஜ் சார்ஜ் என்பது அவர்கள் ஆற்றுகின்ற பணிக்காக கொடுக்கப்படுகின்ற ஒரு சதவீதமாகும். அதைத் தள்ளுபடி செய்வது பற்றிய உத்தேசம் இப்போது இல்லை. அதைக் கொடுத்துத்தான் பொதுப் பணித் துறையிலே கட்டச் சொல்கிறோம்

திரு. கூடலூர் இ. வி. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது வரையில் அமைச்சரவர்கள் பேரூராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் பேருந்து நிலையம் கட்டுவதைப் பற்றி சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். பேரூராட்சிகளிலும் நகராட்சிகளிலும் எப்படி பேருந்து நிலையங்களை கட்டுகிறார்

களோ அதே போல ஒன்றியத் தலை நகரங்களிலும் பேருந்து நிலையங்கள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ? அதே நேரத்தில் அமைச்சர் அவர்கள் மற்றும் பேரவைத் தலைவர் அவர்கள் வந்து தங்குகிறபோது போதிய வசதி ஒன்றிய தலை நகரங்களிலே இருப்பது இல்லை. (மணி அடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 184 முதல் 187 முடிய மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

### ஷெட்யூல்டு வகுப்பினர்களுக்கு பஸ் ரூட் பர்மிட்டு.

188—* வினா எண். 1401— திருமதி டி. யசோத : மாண்புமிகுபோக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் ஷெட்யூல்டு வகுப்பினர்களுக்கு 18 சதவீதம் பஸ்ரூட் பர்மிட்டு வழங்கப்படுகின்றதா ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த ஆண்டில் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) 1979 முதல் 1985 வரை புதுக்கோட்டையில் இரண்டு உரிமங்களும், திண்டுக்கல்லில் இரண்டு உரிமங்களும், ஷெட்யூல்டு வகுப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளது. பழங்குடியினருக்கு உரிம ஒதுக்கீட்டின்படி உரிமங்கள் ஏதும் இதுவரை வழங்கப்படவில்லை.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டையிலே இரண்டு, திண்டுக்கல்லிலே இரண்டு என்கிற வகையில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு பஸ் பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். கொடுக்கப்பட்ட பெர்மிட்களிலே இது எத்தனை சதவீதம் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மொத்தம் கொடுக்கப்பட்டதில் அது எத்தனை சதவீதம் என்ற கணக்கு இப்போது இல்லை, ஆனால் எங்கெல்லாம் மனுக்கள் செய்யப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் கொடுக்கப்படவேண்டுமென்ற நடவடிக்கையை இப்போது அரசு



துரிதமாக எடுத்துக்கொண்டிருக்கிறது. பெரும்பாலான இடங்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் மனுபோடுவதற்கு முன்வராமல் இருந்து விட்டார்கள். இப்போது தனியாக மனுக்களைக் கொடுக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே உரிய உரிமங்களை கொடுப்பதற்காக நான் மனுக்களை கேட்டபோது அந்த மனுக்களை அவர்கள் கொடுக்காத நிலையில் இப்போது அந்த 18 சதவீதத்தை நாம் எட்டமுடியாத நிலைமையில் இருக்கிறோம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குறித்த காலத்திலே மனுக்கள் கொடுக்கப்பட்டு அவை வழக்குமன்றங்களுக்குச் சென்றிருப்பதாக அறிகிறேன். அப்படியானால் அரிஜனங்கள் கேட்கின்ற இடங்களைப் பொறுத்தவரையில் வழக்கு மன்றங்களுக்குப் போகாமல் இருப்பதற்குத் தடை செய்ய அரசு முன் வருமா ? அப்படி காலம் தாழ்த்தி மனுபோடுபவர்களுக்கும் கூட இவர்கள் கேட்டிருக்கிறார்களே என்பதற்காகவாவது சலுகை கொடுப்பதற்காக அந்த காலத்தை ஒத்திவைக்கிற வகையில் சலுகை காட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, மனுக்களைப் பொறுத்தவரையில் குறித்த காலத்திற்குள் அவர்கள் போடவேண்டும். மனுக்கள் போடாமல் இருந்தாலும் கொடுக்கவேண்டுமென்றால் அதில் பல தவறுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. காரணம் அவர்களுடைய பெயரிலே வேறு யாராவது வாங்கிக்கொள்கிற நிலைமை உருவாகும். யார் யார் முறையாக மனுக்களைப் போட்டிருக்கிறார்களோ அவர்களுக்கு நிச்சயமாக கொடுக்கவேண்டுமென்று இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர்கள் பலர் விண்ணப்பம் கொடுத்தும் அவர்களுக்கு ரூட் பெர்மிட் கொடுக்கப்படவில்லை. ஏற்கனவே எல்லோருக்கும் இந்த குறைந்த எண்ணிக்கையில் பஸ் ரூட்டுகள் கொடுப்பது நிறுத்திவைக்கப்பட்டிருந்ததால் அவை நிறுத்திவைக்கப்பட்டது என்று சொல்லப்பட்டது. உதாரணமாக, கோவை மாநகரத்திலே இருக்கக்கூடிய ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்த ஒருவர் பல வருடங்களாக பெர்மிட் கேட்டும்கூட அவருக்கு கிடைக்கவில்லை, இந்த பெர்மிட் கொடுப்பதிலே ஷெட்யூல்ட் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு கொடுக்கப்படாமல் இருப்பதற்கு ஏதோ ஒரு இடையூறு இருந்துகொண்டு இருக்கிறது. அது என்ன என்பதை அமைச்சரவர்கள் ஆழமாக பரிசீலித்து திட்டவட்டமாக அவர்களுடைய விண்ணப்பங்களை தனியாக ப்ராஸஸ் பண்ணி

பெர்மிட் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா குறிப்பிட்ட கேசை அமைச்சர் அவர்களுடைய பரிசீலனைக்கு கொண்டு வந்தால் அதுவும் சரிசெய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒன்று மட்டும் அல்ல, எங்கெங்கு அப்படி போடப்பட்டு அது கவனிக்கப்படாமல் இருக்கிறது என்று எனக்குத் தகவல் கொடுத்தால் அதன் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். இதிலே கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுவதற்கு காரணம் மனுக்கள் சரியான நேரத்தில் போடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. அப்படி யாராவது மனுக்கள் போட்டிருந்தால் அது வேறு யாருக்காவது பினாமியாகப் போட்டு இருக்கிறார்களே தவிர நிச்சயமாக அவர்கள் பயன்படுத்தப் போவது இல்லை. அப்படி இருந்தாலும் கூட அவர்களுடைய பெயரில் தாழ்த்தப்பட்ட மக்கள் பெயரில் வந்தால் கொடுத்து விட வேண்டும் என்ற நடவடிக்கையைத் தான் நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அப்படி மனுக்கள் போட்டு அது சரியாக பரிசீலிக்கப்படவில்லை, முறையாக கவனிக்கப்படவில்லை என்ற நிலை இருக்குமானால் அதுபற்றி எனக்குச் சொன்னால் நிச்சயமாக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் அவர்கள் அதற்கு முறையாக மனு கொடுத்து இருக்க வேண்டும்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்வியே 18 சதவீதம் கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பது தான். அது அவரிடத்தில் இல்லை என்றும், மொத்தத்தில் 18 சதவீதம் கொடுக்கப்பட்டதா என்று தெரியவில்லை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது குறித்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 18 சதவீதம் வந்து இருக்காது. குறிப்பிட்டு எவ்வளவு சதவீதம் என்று என்னிடத்தில் இல்லை. காரணம் மொத்தம் எவ்வளவு பர்மிட் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்ற கணக்கு இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு கொடுத்து இருக்கிறார்கள் என்ற கணக்கு மட்டும் இருக்கிறது. ஆகவே ஒப்பிட்டு என்னால் சொல்ல முடியவில்லை. 18 சதவீதம் வருவதற்கு வாய்ப்பு இல்லை. அதற்கான காரணங்களை ஏற்கனவே நான் சொன்னேன். மனுக்கள் போடுவதற்கு இதுவரை யாரும் முன் வருவது இல்லை. அதற்குப் பின்பு எப்படிச் செய்கிறார்கள் என்று சொன்னால் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக நீங்கள் மனுக்கள் கொடுக்க வேண்டும் என்று நாம் கேட்கிறபோது அவர்கள் அப்போது



விட்டுவிட்டு அதற்குப் பின்னால் மனுக்கள் கொடுத்து எங்களுக்கு பர்மிட் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். தனியாக அந்த நிலைமைகளை நாம் சரியாகப் பரிசீலிக்க வேண்டும் என்று சொன்னால் யார் யார் ஏற்கனவே மனுக்கள் முறையாகப் போட்டு இருக்கிறார்களோ அதை என்னிடத்தில் சொன்னால் அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது தாழ்த்தப்பட்ட மக்கள் பஸ் ரூட் பர்மிட் கேட்டு குறித்த காலத்தில் மனுக்கள் கொடுக்காத காரணத்தால்தான் அவர்களுக்கு அந்தச் சலுகை கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். இனி அப்படி ஒரு நிலைமை வருகிறபோது அந்த மக்கள் தெரிந்து கொள்வதற்காக பத்திரிகை மூலம் இந்த தேதிக்குள் இந்த பஸ் ரூட் இந்த மக்களுக்கு கொடுக்கப்போகிறோம் அதற்குள்ளாக மனுச் செய்யலாம் என்ற ஒரு அறிக்கையை அரசு வெளியிட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு இடத்திலேயும் இப்படி நாம் புதிதாக எந்த Bus Route ஐயும் call for செய்வது இல்லை. ஏற்கனவே மனுக்கள் யார் யார் கொடுத்து இருக்கிறார்களோ அதுவும் கோர்ட் உத்திரவுப்படிதான் நாம் பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறோம். இதிலே நமக்கு ஏற்படுகிற சிக்கல் நாம் தேசியமய கொள்கையை இன்னும் தொடர்ந்து கையில் வைத்துக்கொண்டு இருக்கிறோம். அதற்கு இடையில் நாம் அதை கொஞ்சம் நிறுத்தி இருப்பதற்கு காரணம் எங்கு எல்லாம் பேருந்து வேண்டும் என்று கேட்கிறார்களோ அரசு மூலமாக அவைகளை விட்டுவிட்டு அதற்குப் பின்னால் தொடர்ந்து நாம் தேசியமயத்தை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் செய்து கொண்டு இருக்கிறோம். எனவே இந்த நிலையில் புதிதாக விளம்பரம் செய்து மனுக்கள் வாங்குகிற நிலை இப்போது இல்லாமல் இருக்கிறது. இருந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தனிப்பட்ட முறையில் ஏதாவது செய்ய முடியுமா என்பதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்கள் Bus Route கேட்டு வரவில்லை என்றால் அவர்கள் பொருளாதார நிலைமை சிரமமாக இருக்கிறது. எனவே அரசு இதை பரிசீலித்து ஒரு

கூட்டுறவுத் துறையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு Co-operative Society அமைப்பதற்கு கூட்டுறவு முறையில் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கூட்டுறவு முறையில் அமைப்பது என்பது கொஞ்சம் கடினமான காரியம். காரணம் பிரச்சினைகளைத்தான் பார்த்துக் கொண்டு இருப்பார்களே தவிர வசதிகளை பெருக்குகின்ற முறையில் காரியங்களை செய்ய மாட்டார்கள். எனவே தனிப்பட்ட முறையில் மனுக்கள் போட்டால் உண்மையில் ஏதாவது நடக்கும். நாம் பெருமைக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற முயற்சி வீண் குழப்பத்திற்கு ஆளாக்கிவிடும். தனிப்பட்ட முறையில் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் ஊக்குவித்தால் அவர்கள் நிச்சயமாக வர முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதவைது உதவி செய்து கூட அவர்களுக்கு ஊக்கத்தைத் தரலாம் என்று நான் கருதுகிறேன்.

திரு. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய 18 சதவீதத்திற்கு உரிய மனுக்கள் குறித்த நேரத்தில் வருவது இல்லை என்று மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மனுக்கள் வராவிட்டால் அந்த இடம் அவர்களுக்காக அப்படியே வைக்கப்பட்டு இருக்கிறதா அல்லது வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அது தரப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே குறிப்பிட்ட 50 பர்மிட் என்று வைத்துக் கொண்டால் நாம் 18 சதவீதம் அதற்கு என்று ஒதுக்கி வைத்துக் கொண்டு இருக்க வேண்டும். இப்போது நாம் அப்படி வைப்பது இல்லை. காரணம் இப்போது அந்த 18 சதவீதத்தை நிரப்புவதற்கு தாழ்த்தப்பட்ட மக்களிடமிருந்து எத்தனை மனுக்கள் வந்தாலும் அதை நிரப்புவதற்கு தயாரான நிலையில் வைத்துக் கொண்டு இருக்கிறோம். எனவே அதற்காக ரிசர்வாக வைக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம். குறித்த நேரத்தில் மனுக்கள் முறையாக வர வேண்டும்.

(முற்பகல் 10-30)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல் குறிப்பிட்ட நேரத்தில் மனுக்கள் அனுப்பப்பட்டு, பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, இரக்கப்பட்டு சில பேர்களுக்கு பெர்





மிட் வழங்கப்பட்டிருந்தும் அவர்களை ஓட்ட விடாமல் தடுப்பதற்கு தனியார் நாலைந்து பேர்கள் கோர்ட்டுக்குச் சென்று எங்களுக்குத்தான் உரிமை இருக்கிறது. எங்களுக்குத்தான் தகுதி இருக்கிறது என்றும் அந்த அரிஜன மக்களுக்கு தகுதி இல்லை என்றும் சொல்லி கோர்ட்டுக்கு இழுத்து—ஒவ்வொருவரும் ரூ. 20,000, ரூ. 30,000 என்று கடன்பட்டும் பஸ் ஓட்ட முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அப்பீலுக்குப் போகிற நிலை ஏற்படுகிறது. எனவே ஹரிஜனங்கள் யார் யாருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அவர்களை எதிர்த்து அல்லது அதை எதிர்த்து கோர்ட்டுக்குச் செல்ல முடியாது என்ற ஒரு சட்டத்தைக்கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக அரசாங்கத்தின் சார்பாக ஏதாவது ஒரு டிரான்ஸ்பர் போட்டால் கூட கோர்ட்டுக்குப் போகிற நிலை இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. யாரையும் கோர்ட்டுக்குப் போகக் கூடாது என்று தடுக்கின்ற நிலை இன்றைக்கு இல்லாமலிருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தைப் பரிசீலித்து அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்பதைப் பற்றி நாம் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. க. பாரமலை : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஹரிஜனங்களுக்கு கொடுக்கிற பஸ் ரூட் உரிமங்களை எதிர்த்து நீதி மன்றங்களுக்குச் செல்வதற்குக் காரணம் தனியார் பஸ்கள் போகிற பகுதிகளில் அந்த உரிமங்கள் கொடுப்பதுதான் காரணம். ஆகவே அதைத் தவிர்க்கக் கூடிய முறையில் அரசாங்கம் மொனாப்பலியாக வைத்திருக்கக் கூடிய ரூட்களில் பரீட்சார்த்தமாக மதுரை-இராமநாதபுரம், மதுரை-திண்டுக்கல் என்ற வழித்தடங்களில் கொடுத்தால் தனியார்கள் கோர்ட்டுக்கு போக வாய்ப்பிருக்காது. அப்படிச் செய்ய இயலுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் அப்படித் தேர்ந்தெடுத்துக் கொடுப்பது கடினம். காரணம், எந்த வழித்தடத்தில் பேருந்துகள் தேவையாக இருக்கின்றனவோ அந்த வழித் தடத்திற்கு மனு செய்யலாம் என்று கேட்கிறோம். அப்போது போக்குவரத்துக் கழகங்கள், அவர்களும் மனு செய்யலாம். தனியார் யார் வேண்டுமானாலும் மனு செய்யலாம். அதில் தாழ்த்தப்பட்டவர்களும் மனு செய்கிறார்கள். அதைத்தான் பரிசீலனை செய்து கொடுக்க முடியும். ஆனால் ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு தனியாக ஒதுக்குவது என்பது முடியாத காரியம். அதில், நடை முறையில் பெரிய சிக்கல்கள், தவறுகள் ஏற்பட வழி ஏற்படும். யார் யார் மனு செய்திருக்கிறார்களோ அதை வைத்துத்தான் நாம் பரிசீலிக்க முடியும்.

[1986 மார்ச் 19

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு பெர்மிட் வழங்குகிறபோது சிலர் பினாமியாக பெற்றுவிடுகிற வாய்ப்பும் அதை மாற்றி விடுகிற வாய்ப்பும் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் ஒரு பதிலில் சொன்னார்கள். கேள்வி நேரத்தில் அப்படி கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. நில ஆர்ஜிதம் செய்வதில் கூட ஆதி திராவிடர்களுக்கு என்று நில ஆர்ஜிதம் செய்தால் பத்து பதினைந்து ஆண்டுகளுக்கு அதை விற்கக்கூடாது என்று ஒரு தடை விதித்து உத்தரவு பிறப்பித்திருக்கிறது அரசு. அதே போல் இந்தபெர்மிட்ஸ் கொடுக்கிறபோதும் ஒரு நீண்ட காலத்திற்கு, ஒரு பதினைந்து ஆண்டுக் காலத்திற்கு அதை மாற்றவே முடியாது என்ற விதியை அரசு வைத்திருக்கிறதா ? இல்லையெனில் அப்படி ஒரு விதியை ஏற்படுத்துவதற்கு அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அப்படி தனிப்பட்ட முறையில் எந்த விதியும் இல்லை. ஆனால் ஒரு உரிமத்தை இன்னொருவர் பெயருக்கு மாற்றும்போது அதன் அடிப்படை என்ன, காரணம் என்ன என்று இவைகளையெல்லாம் ஆய்ந்துதான் இப்போது அரசாங்கம் அனுமதித்துக் கொண்டிருக்கிறது. அதிலேயும் கூட கட்டுப்படுத்துவதற்கு வாய்ப்பு ஓரளவுக்கு இருக்கிறது. இருந்தாலும் கூட வேறு ஒருவர் பெயரில் வைத்துக் கொண்டு ஓட்டுகிற நிலை கூட இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு இப்போது எந்த வழியும் நமக்கு இல்லாமல் இருக்கிறது. அதைத்தான் சொன்னேனே தவிர உரிமங்கள் மாற்றப்படுவது பற்றி நான் சொல்லவில்லை. பத்து பதினைந்து ஆண்டுக்காலம் தாழ்த்தப்பட்டவர் ஒருவரே அதை வைத்திருக்க வேண்டும் என்று உத்தரவு போட்டால் அதுவே கூட அந்தக் குடும்பத்தின் அழிவுக்கு—அழிவு வந்து விடுகிற ஒரு வாய்ப்பிருக்கிறது. அவர்கள் எப்படியாவது முன்னேற வேண்டும் என்பதற்காக இப்படிப்பட்ட திட்டங்கள் போடப்படுகின்றனவே தவிர கட்டாயமாக அவர்கள் வைத்திருக்க வேண்டும் என்று சொல்வதால் அது அவர்களுக்கு இடையூறாக வந்து விடக் கூடாது. ஆனால் இப்போது இருக்கிற நிலையில் ஒரு தாழ்த்தப்பட்டவர் பெயரில் உரிமம் பெற்று இன்னொருவர் அந்த உரிமத்தை அவர்கள் பெயரில் வைத்துக் கொண்டு ஓட்டிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறது, அதைத்தான் தடுக்க முடியவில்லை என்று ஏற்கனவே சொன்னேன்.



1986 மார்ச் 19]

திரு. வி. தங்கவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஷெட்யூல்ட் வகுப்பாருக்கு பஸ் ரூட்கள் 18 சதவீதம் கொடுப்பது பற்றி சொல்கிறீர்கள். இந்த ஷெட்யூல்ட் வகுப்பாருக்கும் நரிக் குறவர்களுக்கும் ஆட்டோ பெர்மிட்ஸ் வழங்குவதில் 18 சதவீதமும், 18 சதவீதம் லாரி பெர்மிட்ஸ்-ம் 18 சதவீத டூரிஸ்ட் பஸ் பெர்மிட்ஸ்-ம் வழங்குவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்யுமா என்று அறிய ஆவலாக இருக்கிறேன்.

வைத்தலை

மாண்புமிகு திரு. சு. முத்துசாமித: பேர ருந்தாலும்வர் அவர்களே, எந்த பெர்மிட் கொடுப்பதாக இ 18 சதவீதம் அவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை அரசு போட்டு இப்போது மிகவும் கவனமாக கவனித்துக் கொண்டு வருகிறது. அதைச் செயல் படுத்திக் கொண்டு வருகிறது. மனுக்கள் எங்கெல்லாம் வந்திருக்கிறதோ அந்த அளவு முழுமையாகக் கொடுக்கப்படுகிறது. 18 சதவீதத்திற்கு கீழே மனுக்கள் வந்திருக்குமானால் அவர்களுக்கு முழுமையாகக் கொடுக்கப்படுகிறது. 18 சதவீதத்திற்கு மேலே மனுக்கள் வந்திருந்தால் யாருக்கு முறையாகக் கொடுப்பது, தகுதி யாருக்கு இருக்கிறது என்பதைப் பரிசீலித்து 18 சதவீதம் என்பதை செயல் படுத்தி வருகிறது. லாரி பெர்மிட், டூரிஸ்ட்ஸ் பஸ் பெர்மிட்ஸ் எல்லாவற்றிலும் இந்தக் கணக்கை கவனமாகக் கவனித்து நடைமுறையில் கொண்டு வந்து கொண்டிருக்கிறோம்.

டாக்டர் க. நல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர்கள் பஸ் பர்மிட்டுக்கு மனு செய்யவில்லை என்று கூறியிருக்கிறார்கள். நான் அவரை ஒன்று கேட்க விரும்புகிறேன். இந்த போக்குவரத்துத் துறையில் வேலை வேண்டி ஆதிதிராவிடர்கள் மனு செய்திருக்கிறார்களா ? அப்படியென்றால், அவர்களுக்கு உரிய பர்சன்டேஜில் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, நாம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு பர்மிட் கொடுப்பதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். வேலை கொடுப்பதைப் பற்றி உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். எல்லா இடங்களிலும் 18 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும், கொடுக்கப்பட வேண்டும் என்ற ஏற்பாட்டில் நாம் இப்போது நிரப்பிக் கொண்டிருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 18 சதவீதம் ஒதுக்கப்படுவதில் தவறுகள் நடப்பதாகவும், பினாமிகள் உருவாவதாகவும், அதைத் தடுப்பதற்கான முறையான வழிமுறைகள் இல்லை

யென்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போல், பெட்ரோல் பங்கு, இன்டேன் காஸ் ஆகியவற்றை தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கும்போது நிறைய பினாமிகள் இருக்கிறார்கள். பஸ் பர்மிட் வழங்குகின்றபோது, புதிய விதி முறைகளை உருவாக்குவதற்கு ஆலோசித்து வருவதாகவும், தற்போது வழிமுறைகள் எதுவும் இல்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். புதிய விதி முறைகளை உருவாக்கி, பினாமிகள் உருவாவதற்கு வழியில்லாமல் இருக்க, அந்த பர்மிட் வழங்குவதிலேயும் 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு அரசு ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, வழி முறைகளே இல்லையென்று நான் சொல்லவில்லை. இப்போது நடைமுறையில் சில சிக்கல்கள் இருப்பதாகச் சொன்னேன். அதைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையை அரசாங்கம் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. பேருந்துகளின் உரிமங்களை மாற்றுவதில், அதைக் கட்டுப்படுத்துவதற்கு நம்மால் முடியும். ஆனால், ஒருவருடைய பெயரில் வைத்துக்கொண்டு, இன்னொருவர் ஓட்டுகிறபோது, அதைத் தடுப்பது என்பது முடியாத காரியம். அதற்குப் புருப் இல்லை. எனவே, இந்த நிலையிருக்கிறது. ஆனால், அரசாங்கம் அதை விட்டு விடுவதற்கில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டுமென்பதிலே கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

திரு. ஜி. கே. ஜே. பாரதி : பேரவைத் தலைநாயகர் அவர்களே, மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் இன்டேன் காஸ் பர்மிட் வழங்குவதிலே பினாமி நடப்பதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், அந்த லைசன்ஸ் வழங்குகின்றபோது, நடுவண் அரசினுடைய அந்த விண்ணப்ப வினாத் தாளிலே வேறொருவரும் சேர்ந்து போட்டால் அதை ஒத்துக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து எங்களுக்கும் தெரியும். இருந்தாலும். யார் ஒப்பந்தத்தில் சேர்ந்து போடுகிறார்களோ அவர்கள் அந்த தாழ்த்தப்பட்டவரை ரூ. 5,000-மோ, ரூ. 10,000-மோ கொடுத்து வெளியே அனுப்பி விட்டு, அவர்கள் இலட்சக்கணக்கில் சம்பாதித்துக் கொண்டு இருக்கும் நிலையைத் தான் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது தடுக்கப்பட வேண்டுமென்பது தான் நம் நோக்கம்.



சென்னை கடற்கரை—தாம்பரம் மீட்டர்கேஜ் இரயில் பாதை.

*189—(வினா எண் 3187) திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரை—தாம்பரம் மீட்டர்கேஜ் இரயில் பாதைகளை பிராட்கேஜ் பாதைகளாக மாற்றக் கோரி மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை ஏதேனும் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை தற்பொழுது எடுத்துக்கொள்ள இயலாது என மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இப்போதுள்ள சூழ்நிலையைக் கருதி, மக்களின் பிரச்சினையை யொட்டி, இந்தப் பிரச்சினையை மறுபடியும் மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பாக வற்புறுத்தி நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 21 பரிந்துரைகளைச் செய்திருக்கிறோம். வற்புறுத்தி, மிகக் கட்டாயமாக செய்யவேண்டும் என்று ஒவ்வொரு முறையும் எழுதுகிறோம். ஆனால், மத்திய அரசு நிதிநிலைமைக்கு ஏற்ப, எல்லா இடங்களுக்கும் வழங்க வேண்டிய நிலை இருப்பதாலும், ஒவ்வொரு திட்டமாக அங்கீகாரம் கொடுக்கிறார்கள். எனவே அந்த வகையில் இப்போது தள்ளி வைத்திருக்கிறார்கள். அறவே இல்லையென்று சொல்லிவிடவில்லை. பின்னால் இதை ஏற்றுக்கொள்ளுகின்ற வாய்ப்பு இருக்கிறது என்று நம்புகிறேன்.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரத்திலிருந்து விழுப்புரம் வரை இரட்டை ரயில்பாதைகளை ( Two-way-track ) அமைக்கும் திட்டம் மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறதா ? அப்படி செய்திருக்குமானால், அந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு இருப்பதாக மக்கள் பேசிக்கொள்கிறார்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

[1986 மார்ச் 18

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே அதற்குத் தனிக் கேள்வி கேட்டால், கொஞ்சம் விரிவான பதிலைச் சொல்ல முடியும்.

திரு. ம. ஆபிரகாம்: தலைவர் அவர்களே, சென்னை கடற்கரையிலிருந்து தாம்பரம் வரை மின்சார ரயில் பாதை மீட்டர் கேஜாக இருக்கிறது. அந்தத் தடத்தில் இப்போது மக்கள் தொகை அதிகரித்திருப்பதன் காரணமாக, அதிக ரயில்களை விடுவதற்கு இந்த அரசு உடனடியாக மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து, தினமும் காலையில் மக்கள் படுகின்ற அவதியைக் குறைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, எவ்வளவு 'டிராபிக்' இருக்கிறது, என்ன கெபாசிட்டி இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக் கிறார்கள். அதற்கு மேலும் அதிகமான ரயில்களை விடமுடியும் என்ற நிலைமை இருக்குமானால, அவசியம் இருக்குமானால் மத்திய அரசைக் கேட்பதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்-திண்டுக்கல் பிராட்கேஜ் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி குறைவாக ஒதுக்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடற்கரையிலிருந்து தாம்பரம் போவதைப் பற்றியது தான் கேள்வி. கரூர்-திண்டுக்கல் பற்றி எல்லாம் இதிலே கேட்க வேண்டாம்.

திருமதி பா. வளர்மதி : தலைவர் அவர்களே, கடற்கரையிலிருந்து லஸ் செல்லும் பாதாள ரயில் பாதையுடன் இந்த பிராட் கேஜ் இணைந்து செல்ல மத்திய அரசை மாநில அரசு கேட்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அது இன்னும் வரவே இல்லை. அது வந்தபிறகு தான் அது இணைந்து செல்ல முடியுமா, இணையாது செல்லுமா என்று பேச முடியும். பாதாள ரயிலைப் பொறுத்தவரையில், வேலை தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.



1986 மார்ச் 19]

திரு. டி. ஆர். வேங்கட்ரமணன் : தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் சென்னை நகரத் தேவைகளைப் பொருத்து ஏற்கனவே மயிலாப்பூர் லஸ் வரையிலுள்ள திட்டம் அனுமதிக்கப்பட்டு செயலில் இருக்குமானால், அதனைச் செய்யும்போது மேலும் விரிவுபடுத்தி, சைதாப்பேட்டையிலிருந்து திருவான்மியூர் வரையில் ஒரு பீடர்லைன் அமைக்க மத்திய அரசை தமிழக அரசு கேட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் சரியான விளக்கம் தரமுடியும்.

தஞ்சை மாவட்டத்தில் பழுதடைந்த சாலைகளை செப்பனிடுதல்

*190—(வினா எண் 3435) திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான சாலைகள் நன்செய் நிலங்களின் இடையே செல்வதாலும், அடிக்கடி ஏற்படும் வெள்ளப் பாதிப்பாலும் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள இச்சாலைகளை மேம்பாடு செய்ய அதிக நிதி ஒதுக்கீடு செய்யும் நோக்கம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அரசின் நிதி பற்றாக் குறையின் காரணமாக சாலை பராமரிப்பிற்கு அதிக நிதி ஒதுக்க இயலாத நிலை உள்ளது. எனினும் ஒதுக்க படுகின்ற நிதியிலிருந்து மோசமான பகுதிகளை முடிந்த அளவுசீர் செய்தும், பள்ளங்களையும், குழிகளையும் சரி செய்தும் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதைக் கவனத்தில் கொண்டு அரசு இதில் தனிக் கவனம் செலுத்தி, அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, அந்தச் சாலைகளைச் செப்பனிடும் நோக்கம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எவ்வளவு சிறப்பாக பராமரிக்க வேண்டுமென்று நாங்கள் முயற்சி எடுத்தாலும், அங்கு இருக்கக்கூடிய மண்ணினுடைய தன்மை, அங்கே அதிகமாக தண்ணீர் இருக்கின்ற காரணத்தால், அந்தப் பாதைகள் அடிக்கடி பழுதடைந்து விடுகின்றன என்பது யதார்த்தமான உண்மை. இருந்தாலும் அரசு தனிக் கவனம் செலுத்தி, சரியாகப் பராமரிக்கவேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறது.

[1986 மார்ச் 19

வருகின்ற ஆண்டிலிருந்து இன்னும் சிறப்பாகப் பராமரிக்க நிச்சயமாக, நடவடிக்கையை இந்தத் துறை எடுத்துக் கொள்ளும்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகள் எல்லாம் ஆண்டுதோறும் வெள்ளம், புயல் போன்ற பாதிப்புகள் அடிக்கடி வருகின்ற காரணத்தால், களிம்பு மண்ணை சீர்படுத்துவதற்கு நிதிநிலைமைக்கு ஏற்றவாறு காரியங்கள் நடைபெற்று வருவதாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகள், மற்ற மாவட்டத்தினுடைய சாலைகளைப் போல் செப்பனிட்ட பிறகும், அங்கிருக்கும் களிம்பு வேறுபாட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து களி, மணல், கல்பாறை போன்ற பகுதிகளில் போடப்படுகின்ற சாலைகள், மற்ற சாலைகளுக்கு போடப்படும் விகித்தாசாரத்தை எடுக்காமல், சற்று கூடுதலாகவே அழுத்தமாக போடப்பட வேண்டும். மணல், களிப்பு, சதுப்பு நிலங்களில் ஆண்டுதோறும் சாலைகள் செப்பனிட்டப்பட்ட பிறகும் கூட, அந்த சாலைகள் நல்ல நிலையில் இல்லாமல் இருப்பதை அறிந்து, கோயம்புத்தூர் மாவட்டத்தில் போடப்படுகின்ற டபுள்-லேயர் என்று சொல்லுகின்ற அளவுக்கு அதிகப்படியாக திட்டங்களை தீட்டி தஞ்சை மாவட்ட சாலைகளை நீண்ட நெடுங்காலத்திற்கு உழைக்கின்ற சாலைகளாக அமைக்க அத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, தனியான கவனம் செலுத்தவேண்டும் என்பதற்கு எதிர்காலத்தில் நிச்சயமாக பரிசீலிக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தால், போதுமான நிதி ஒதுக்கீடு செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். அவ்வப்போது புயலாலும், வெள்ளத்தாலும் சேதம் அடைந்த சாலைகளைச் செப்பனிடுவதற்கும், உடைப்புகளை அடைப்பதற்கும் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்திருந்தும், மாநில அரசு ஆணைகளைப் பிறப்பிக்காத காரணத்தாலும், அதற்கென்று அதிகாரிகளை நியமிக்காத காரணத்தாலும் அந்தப் பணம் பயன்படுத்தப்படாமல் முடங்கிக் கிடக்கிறது என்று சொல்லப்படுகிறதே. இதை அமைச்சருடைய கவனத்திற்கு யாராவது கொண்டு வந்தார்களா?



1986 மார்ச் 19]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு நிலைமை இல்லை. அப்படிப்பட்ட ஒரு பிரச்சாரம் செய்யப்பட்டது. அது உண்மையிலலை. மத்திய அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்கியதோ அவ்வளவு பணத்தையும் நாம் செலவழித்து இருக்கிறோம். ஏதோ பதவிகள் நிரப்பப்படவில்லையென்ற காரணத்தினால் மத்திய அரசாங்கம் கொடுத்த தொகையைக் குறைத்திருக்கிறது என்று ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள். அது உண்மையில்லை. இங்கே அப்படிப் பதவி நிரப்பப்படவில்லையென்றாலும்கூட அதற்காக ஒருவரை அடிஷனல் சார்ஜாக நியமித்து அவர்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஒரு மாத இடைவெளி. அதற்காக ஒன்றரைக் கோடி ரூபாயை மத்திய அரசு குறைத்துவிட்டது என்று சொல்வது உண்மையல்ல. மத்திய அரசாங்கம் கொடுத்த பணம் முழுமையும் நாம் செலவழித்து இருக்கிறோம். இந்த ஆண்டு நமக்கு அவர்கள் கொடுப்பதில் ஒன்றரை கோடி ரூபாய் குறைத்துக் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். நிதிப்பற்றாக்குறையின் காரணமாக நிதிநிலைமையின் காரணமாக குறைத்துக் கொடுக்கிறோம் என்று அவர்கள் நமக்கு எழுதியிருக்கிறார்கள். இங்கே இருக்கிற பிரச்சினை என்றோ ஒதுக்கப்பட்ட பணம் செலவிடப்படவில்லை என்பதற்காகவோ அதிகாரிகளின் பதவிகளை நிரப்பவில்லை என்பதற்காகவோ பணத்தைக் குறைத்துக் கொடுத்தார்கள் என்பது சரியல்ல. இந்த ஆண்டு கொடுப்பனை 1½ கோடி ரூபாய் குறைத்துக் கொடுக்கிறோம் என்று அவர்கள் சாதாரணமாக எழுதுவது வாடிக்கை. அதற்குப் பிறகு நாம் எங்களுக்கு அந்தப் பணம் வேண்டும், தேவை என்று எழுதுவோம். அதற்குப் பின்னாலே அந்தப் பணத்தை நமக்கு கொடுப்பார்கள். அதுதான் இப்போதுள்ள நடைமுறை. எப்படியோ அப்படிப்பட்ட செய்தி கிடைத்து அதை எழுதியிருக்கிறார்கள். அது முழுக்க முழுக்க தவறு, சரியல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைந்திருக்கக் கூடிய சாலைகளிலே மிகப் பெரும்பாலானவை கால்வாய்களினுடைய கரைகளிலேயே அமைந்து இருக்கின்றன. ஆகவே அந்தக் கால்வாய்களிலே நீர் மிகும்போதெல்லாம் சாலைகள் அடித்துச் செல்லப்படக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையைச் சார்ந்த நிபுணர்கள் குழு அதை ஆராய்ந்த பிறகு அந்த மாவட்டத்திலே இருக்கின்ற சாலைகளை கான்க்ரீட் சாலைகளாக அமைக்கவேண்டுமென்று பல ஆண்டுகளுக்கு முன்பாகவே தெரிவித்து இருக்கிறார்கள். அந்தச் சாலைகளில் மட்டுமல்லாமல் கால்வாய்களின் அடிப்பகுதிகளையும் கான்க்ரீட்டால் அமைத்தால் தான் அந்த நீரை முழுமையாகப் பயன்படுத்தமுடியும் என்ற யோசனையையும் அவர்கள் தெரிவித்து

இருக்கிறார்கள். அதற்காக உலக வங்கி 200 கோடி ரூபாய் வரை கடன் கொடுப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பாகவே முன்வந்தும்கூட நம்முடைய அரசு முற்றாக அதைப் பயன்படுத்தத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு உண்மையா? அப்படி 200 கோடி ரூபாய் தரக்கூடிய நிலைமை இருக்குமானால் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 200 கோடி ரூபாய் பாலத அமைக்கவா அல்லது வாய்க்கால்களிலே அடித்தளத்தை அமைப்பதற்காகவா என்ற தகவல் சரியாக தெரியவில்லை. அந்தக் குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. வேண்டுமென்றால் அதைத் தெரிந்து நடவடிக்கை எடுக்கலாம். இப்போது இருக்கிற நிலைமை எல்லாம் எங்காவது 200 கோடி ரூபாய் கிடைக்கிறது என்றால் அதை நாம் முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூட அதற்காக உதவி செய்தால் நன்றி தெரிவிப்போம். அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 200 கோடி ரூபாய் எந்த முறையில் கொடுக்கிறார்கள் என்பதை நாம் பார்க்கவேண்டும். வட்டிவிகிதம் அதிகமாக இருந்தால் அதை ஏற்றுக்கொண்டு செயல்படுவது என்பது மாநில அரசுக்கு நல்லதல்ல. ஆகவே அதையெல்லாம் பார்த்து அரசாங்கம் அதைப் பயன்படுத்தக்கூடிய நிலைமை இருக்குமானால் பயன்படுத்திக் கொள்வதற்குத் தவறாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் ;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கீழத் தஞ்சையில் சாலைகள் சதுப்பாக இருப்பதாக ஒத்துக் கொண்டார்கள். அந்த சாலைகள் வயல்களுக்கு அருகிலேயும் வாய்க்கால்களுக்குப் பக்கத்திலேயும் இருப்பதாலும் அந்தச் சாலைகள் அகலமாகவும் உயரமாகவும் இல்லாத காரணத்தினாலேயும் அந்தச் சாலைகள் சதுப்பாகிவிடுகின்றன. நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டேன். கீழத் தஞ்சை சாலைகள் தார் சாலைகளாக மாற்றுவதைத் தவிர விவசாய மக்களுக்கு வேறு பரிகாரம் கிடையாது என்று எடுத்துச் சொன்னேன். அதற்காக 4, 5 ஆண்டுகளில் நிறைவேற்றக்கூடிய முறையிலே நீண்டகால திட்டமாக 50 கோடி ரூபாய் செலவிலே சிறப்புத் திட்டமாக செய்ய வேண்டுமென்று நான் நாவலர் அவர்களைப் கேட்டபோது போக்கு வரத்துத் துறை அமைச்சரிடமிருந்து வேண்டுகோள் வந்தால் பரிசீலிக்கப்படும் என்று சொன்னார்கள். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் நிதியமைச்சர் அவர்களிடம் கூறி இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருவார்களா ?



**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சாலைக்கே 50 கோடி ரூபாய் என்றால் கேட்பதற்கே பயமாக இருக்கிறது. (குறுக்கீடு) அந்த மாவட்டத்திற்கு மொத்தமாக 50 கோடி ரூபாய் என்று சொன்னாலும் அது பெரிய தொகை. நாவலர் அவர்களிடம் அதற்கு ஒப்புதல் வாங்கி விட்டதாகச் சொல்கிறார்கள். எனக்குக் சந்தேகமாக இருக்கிறது அவர்கள் ஒப்புதல் தந்துவிட்டால் உடனடியாக நான் எழுதுவதற்குத் தயாராக இருக்கிறேன். என்பதைத் தெரித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10–50)

**திரு. துரை கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது, தஞ்சை மாவட்டத்தினுடைய சாலைகளெல்லாம் பழுதடைந்திருப்பதன் காரணத்தைச் சுட்டிக்காட்டினார்கள். அந்தச் சாலைகள் பழுதடைந்து இருப்பதற்கான முக்கியமான காரணம், தஞ்சை மாவட்டம் விவசாயிகள் நிறைந்த மாவட்டமாக இருப்பதால், அந்த விவசாயிகள் போரடி போன்ற தொழில்களைச் சாலைகளில் செய்வதால் இந்தப் பாதிப்பு அதிகமாக ஏற்படுகிறது. இதற்கு மாற்று ஏற்பாடாக, போக்கு வரத்துச் சாலைகள் பாதிக்கப்படாமல் இருக்க, களம் கட்டிக் கொடுப்பதற்குப் பரிந்துரை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அறுவடை பெரும்பாலும் ஒரேநேரத்தில் நடக்கிறது. எல்லோருக்கும் களம் ஏற்படுத்திக் கொடுப்பது என்றால் ஏறக்குறைய பாதி நிலத்தை அவர்களுக்குக் களமாகவே போட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே, இடம் கிடைக்காத காரணத்தினாலேயும், மேலும் அதிகமாக பணத்தை ஒதுக்க முடியாத காரணத்தினாலேயும் இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காரியங்களைச் சாலைகளில் செய்யப் கூடாது என்று நினைத்தாலும்கூட, அரசாங்கம் அதைத் தடை செய்ய முடியும். என்றாலும்கூட அங்குள்ள விவசாயிகள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது, அவர்கள் செய்யும் காரியங்களில் பிரச்னை ஏற்பட்டு விடும் என்பதற்காக விட்டு விட வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, இடம் இதில் ஒரு பிரச்னை, இரண்டாவதாக அதை அமைப்பதற்கு வேண்டிய பணம் ஒரு பெரிய பிரச்சினை. ஆகவே, இது கொஞ்சம் சிக்கலான விவகாரம்.

**திரு. என். எஸ். வி. சி[illegible]தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் உள்ள சாலைகளைப் பற்றிக் சொன்னார்கள். தமிழகத்திலே ஏனைய மாவட்டங்களில் உள்ள சாலைகள், குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானல், தேசிய நெடுஞ்ச்சாலை, மாநிலச் சாலைகள் தவிர, பேருந்து செல்கின்ற மற்ற சாலைகளெல்லாம் மிகவும் பழுதடைந்திருக்கின்றன.

தமிழகத்திலே பல்வேறு போக்கு வரத்துக் கழகங்கள் மூலமாகப் பேருந்துகள் ஓடுவதால், அவற்றின் உதிரிப் பாகங்களின் விலை கூடியிருப்பதால், அவைகள் பழுது அடையாமல், இருப்பதற்கு, அந்தச் சாலைகளில் ஒட்டுமொத்தமான நிலையைக் கருதி, மாஸ்டர் பிளான் என்று தயாரித்து மாவட்டங்களில் உள்ள எல்லாச் சாலைகளையும் சீர் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு அடிப்படைக் காரணம், இந்த அரசு வந்த பிறகு கிட்டத்தட்ட 225 கோடி ரூபாய் செலவில் தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தை ஏற்படுத்தி, பல புதிய சாலைகளை உருவாக்கியது. பல ஆயிரக் கணக்கான கிலோ மீட்டர் சாலைகளை உருவாக்கிவிட்டது. சாலைகளின் நீளமும் அதிகமாக ஆகிவிட்டது. அவற்றைப் பராமரிக்க வேண்டிய பளு இருக்கிறது. அதற்காக பணம் வேண்டியிருக்கிறது. மாஸ்டர் பிளான் போடுவதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால் எங்கேயிருந்து பணத்தைத் திரட்டுவது என்பதுதான் மிகப் பெரிய பிரச்சினை. பட்ஜெட் போடுகின்றபொழுது, அதிலே வரி வருமா என்று எதிர்ப்பார்த்து கொண்டு, வரிகள் வந்தால் சண்டை போடத் தயாராக இருக்கிறோம். ஆகவே, இருக்கின்ற நிலையில், இத்தனையையும் செய்வது என்பது மிகவும் பெரிய பிரச்னையாக இருகிறது. வசதியும் வரவேண்டும், வரியும் போடக்கூடாது என்பதற்குத் தாங்கள்தான் யோசனை சொல்ல வேண்டும். மாஸ்டர் பிளானை உடனடியாக கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம். ஆனால் பணத்தை எங்கிருந்து ஒதுக்குவது என்பதற்குத் தாங்கள்தான் ஆலோசனை தர வேண்டும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : சண்டை போடத் தயாராக இருக்கிறோம் என்று எப்படிச் சொல்லலாம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பார்த்துக் கொள்கிறேன்.

திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்துச் சாலைகள் அனைத்தும் வயல்களால் சூழப்பட்டு இருப்பதால், வயல்களில் வேலை செய்யும் விவசாயத் தொழிலாளர்கள் சாலையின் இரு பக்கமும் அண்டை வெட்டி சாலையின் இரு பக்கமும் கரைபோல அமைத்திருப்பதால் மழைக் காலங்களில் சாலைகள் வாய்க்கால்களைப் போலத் காட்சியளிக்கின்றன. எனவே, விவசாயிகளால் வெட்டப்பட்ட அந்த் அண்டைகளை ஹைவேஸ் துறையின் மூலமாக கங்க் கூலிகளை வைத்து உடனடியாக அப்புறப் படுத்துகின்ற ட்டம் அரசின் நோக்கத்தில் இருக்கிறதா ?





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு 'பேரவைத் தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்ன என்று பார்த்து, என்ன செய்ய வேண்டும் எல்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசாங்கம் அறிவுறுத்தும்.

பவானி ஆற்றில் பாலத்தை அகலப்படுத்துதல்.

191—(*வினா எண். 3875) திரு. பு. கோ. நாராயணயன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைசசர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி நகரில் பவானி ஆற்றின் பாலத்தை அகலப் படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 192,193 மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கவும், வினா எண்கள் 194, 195 மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்கவும் ஒத்திவைக்கப் பெறுகின்றன.

வேம்பதூர்—திட்டமங்கலம் ஆதி திராவிடர் காலனி இணைப்புப் பாலம்.

196—(*வினா எண். 3868) திரு. எப். எம். இராசரத்தினம் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், வேம்பதூர் கிராமத்திலுள்ள திட்டமங்கலம் ஆதிதிராவிடர் காலனிக்கு செல்லும் சாலையில் இணைப்புப் பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) மற்றும் (ஆ) : இணைப்புப் பாலம் 28–12–1985 அன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

[1986 மார்ச் 19

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கேள்வி கேட்டபொழுது பாலம் கட்டப் படவில்லை. இப்பொழுது கட்டி முடித்தமைக்காக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார் பாக நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த திட்டமங்கலம் ஆதிதிராவிடர் காலனிக்குச் செல்லும் இணைப்புப் பாலத்தை ஒட்டியுள்ள சாலை மிகவும் பழுதடைந்து இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தை ஒட்டியுள்ள அந்தச் சாலையைச் சரி செய் வதற்கு அமைச்சரவர்கள் உத்தரவு பிறப்பிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திட்ட மங்கலம்கிராமத்தில் இணைப்புப் பாலம் போடச் சொல்லி முதலிலே அறிக்கை அனுப்பியிருந்தார்கள். அதன் பிரகாரம் இது செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே இப்பொழுது கேட்டிருக்கிறார்கள். ஆதி திராவிடர் ஆபீசிலிருந்து செயற்குறிப்பு அனுப்பப்படுமானால், அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

#### 4. அறிவிப்புகள்.

(அ) இறுதித் துணை நிதிநிலை அறிக்கை 4985—86 முன் பண மானியக் கோரிக்கைகள் 1986-87 அளித்தல் (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு :

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பிரிவுகள் 202(1), 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள் 207 (1) மற்றும் 215 ஆகியவற்றின் கீழ், 1985—86 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை மற்றும் 1986—87 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க மேதகு ஆளுநர் அவர்கள் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 மார்ச் 19]

#### 5. வரவு—செலவுத் திட்டம் 1986-87—பொது விவாதம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986—87 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசுவதற்கான வாய்ப்பு கிடைத்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை முன் வைப்பதற்கு முன்னதாக, பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களையும் நகராட்சி, பேரூராட்சித் தேர்தல்களை யும் நடத்தி முடித்திருக்கின்ற தமிழக அரசுக்கும் தமிழக முதல் வருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அது போலவே வாக்களித்த தமிழக வாக்காளர் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியை உரித்தாக்கி, என்னுடைய கருத்துக்களை முன் வைக் கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தனக்கே உரித்தான முறையில் குறட்பா ஒன்றினைக் கூறி, மிக்க பொருள்வளம் உடையதாகவும், எல்லோராலும், விரும்பத்தக்க தாகவும், எத்தகைய கெடுதலும் எய்தாததாகவும், மிகுந்த விளை பொருள் தருவதாகவும் அமைவதே நாடு என்பது வள்ளுவரின் வாய்மொழி என்றும், இத்தகைய இலக்கணத்திற்குப் பெரிதும் பொருந்திவரக் கூடிய ஒரு சிறந்த நிலப் பகுதியாகத் தமிழ் நாடு பொலிவு பெற்றுத் திகழ வேண்டுக் என்பதில், நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு, இன்றைய தமிழக அரசு, அரும்பணிகள் பலவற்றையும் நிறைவேற்றியும் வருவதாகக் குறிப் பிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

இப்பொழுது இருக்கிற அரசு தார் ரோடினால் தமிழக அரசுக்குப் பெருமை சேருகிறது என்று சொன்னால், அந்தத் தார் ரோடை உருவாக்கியவர்கள் காங்கிரஸ்காரர்கள் என்று சொல் லிக் கொள்வதிலே நாங்கள் பெருமை படுகின்றோம்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு அவருடைய அரும் பணிகள் மீது அவருக்கே சில இடங்களிலே சந்தேகம் எழும்பி விடுகின்ற காரணத்தினால், ஒரு விஷயத்தை மென்று விழுங்கி இருக்கிறார்கள்.

தமிழ்நாடு அரசு மாநில அளவில் ஏற்படுகின்ற பிரச் சினைகள் பலவற்றையும் தீர்க்கக் கடமைப்பட்டிருப்பதாகவும், ஆனால், இந்தியா முழுவதையும் பாதிக்கின்ற அரசியல் — பொரு ளாதார— சமூகப் பிரச்சினைகள், இந்தியாவின் கூட்டமைப்புக் குள் ஒரு உறுப்பாக இருக்கும் தமிழ்நாட்டையும் பாதிக்கும் போது, அவற்றையும் சமாளிக்க வேண்டிய கடப்பாடுடையதாகத் தமிழ்நாடு அரசு இருக்கிறது ' என்றும் மத்திய அரசை வலிய இழுத்துக் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

[திருமதி டி. யசோதா] [1986 மார்ச் 19

'' இந்தியா முழுவதும் தழுவிய வகையில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறைப் பொருளாதாரம், புதிய வரிகள் — ஆயத் தீர்வை — ஏற்றுமதி இறக்குமதி வரிகள் போன்றவற்றால் ஏற்படும் இன்றியமையாப் பண்டங்களின் விலை உயர்வு, உரம்— இரும்பு— நிலக்கரி போன்றவற்றின் விலை உயர்வு, இரயில் போக்குவரத்துக் கட்டண உயர்வு, டீசல் — பெட்ரோல் போன்ற எண்ணெய்களின் விலை உயர்வு போன்றவை, தமிழக அரசின் பொருளாதாரத்தையும் தமிழக மக்களின் பொருளாதாரத்தையும் பாதிக்கின்றன '' என்று குறிப்பிட்டுள்ளார்கள். இந்தப் பாதிப்பு தமிழக அரசுக்கு மட்டும் தானா ? அல்லது, இந்தப் பாதிப்பு அகில இந்தியா முழுமைக்கும் பொருந்துமா என நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11·00)

அது மட்டுமல்ல, அத்தியாவசியமான பொருள்களின் விலை உயர்வால் பொதுமக்கள் அவதிப்படுகின்றபொழுது அவர்களை கசக்கிப் பிழிந்து வாங்கிய வரியின் பெரும் பகுதியைக் கொடுப்பதில் மகிழ்ச்சி அடைவதாகக் கூறியுள்ளார்கள். மகிழ்ச்சி எப்படி வரலாம்? உண்மையிலேயே நீங்கள் மக்கள் படும் அவதியைப் புரிந்து கொண்டிருந்தால் வரியை விதிக்காதீர்கள். அது மட்டுமல்ல. கூடுதலாகப் பெறும் நிதியைத் தராதீர்கள் என்று குறிப்பிட்டிருந்தால் நான் உண்மையிலேயே உங்களைப் பாராட்டியிருக்க முடியும். ஆனால் நிதி கிடைக்கின்ற நேரத்திலே சந்தோஷப்படுகின்ற, மகிழ்ச்சி படுகின்ற நம்முடைய நாவலர் அவர்கள் இங்கே அந்த நிதி எப்படி வந்தது என்று வேதனையோடு சொல்கிறார்கள். நான் ஒன்றைக் குறிப்பிட ஆசைப்படுகிறேன். நம்முடைய நாவலர் அவர்கள் அவை முன் வைத்திருக்கிற வரவு-செலவு அறிக்கையின் கடைசிப் பக்கத்தில் ''எனக்கு இந்த நிதி நிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கிட செவ்விய முறையில் உதவியையும் ஒத்துழைப்பையும் புரிந்த நிதித்துறைச் செயலாளர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, நிதித்துறைச் செயலாளருக்கு நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிதித்துறைச் செயலாளர் அவர்கள் பத்திரிகையிலே என்ன பேட்டி கொடுத்திருக்கிறார்கள் என்றால் இன்றைக்கு தமிழ்நாட்டிலே குறைந்த அளவு பற்றாக்குறை பட்ஜெட்டும் இந்த அளவுக்கு ஒரு வரி இல்லாத பட்ஜெட்டும் அமைவதற்கு மத்திய அரசினுடைய அதிகமான நிதி உதவியும் மத்திய கால கடனும், சிறு சேமிப்பினுடைய வருவாயும்தான் என்று கூறியிருக்கிறார்கள்.

அதை வைத்துப் பார்ப்போமானால், மத்திய அரசினுடைய மிகப் பெரும் நிதி உதவிதான் இன்றைக்கு மாநில அரசு இப்படிப்பட்ட பாராட்டுக்குரிய, வரி இல்லாத நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்க பேருதவியாக இருக்கிறது என்பதை நான் ங்கே சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.



1986 மார்ச் 19] [திருமதி டி. யசோதா]

அதே நேரத்தில் இலங்கைப் பிரச்சினைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். இலங்கைப் பிரச்சினையிலே அவர்கள் தமிழக அரசுக்கும் தமிழக மக்களுக்கும் இருக்கிற வேதனையை எடுத்துச், சொல்கிறபோது ''இனி காலத் தாழ்வுக்கு இடமில்லாமல் விரைவில் பிரச்சினையைத் தீர்க்க முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தியப் பிரதமரைத் தமிழக அரசு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்றால் அந்த நடவடிக்கைகள் என்ன என்று ஏன் நீங்கள் விளக்கவில்லை? அந்த முறைகளைச் சொன்னால் தானே மக்களும் அரசும் புரிந்துகொள்வார்கள். அதைச் சொல்லாமல் ஏதோ ஒன்றைச் சொல்லி, பிரச்சினையிலிருந்து நழுவிச்சென்று, பழியை மத்திய அரசுமீது போடுவது நல்லதல்ல. இலங்கைவாழ் மக்களுக்கும் இது சரியாக இருக்க முடியாது.

அதைப்போன்று இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக அரசு செய்து வருகின்ற உதவிகளைப் பற்றியும், செலவிடுகின்ற தொகையைப் பற்றியும் நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதே நேரத்தில் இலங்கையிலிருந்து அகதிகளாக வருகின்ற தமிழர்களுக்கு மத்திய அரசு செய்கின்ற உதவிகளைப்பற்றிக் கூறவில்லை. பெருமளவுக்கு மத்திய அரசுஉதவி செய்துகொண்டிருக்கிறது. அவர்களைப் பேணிக் காப்பதற்கு மத்திய அரசு வசதி செய்து கொடுத்திருக்கிறது. அதையும் நீங்கள் சுட்டிக்காட்டியிருந்தால், நிதிநிலை அறிக்கையிலே ஒரு நியாயத்தை எடுத்து வைத்திருக்கிறீர்கள் என்ற நிலை ஏற்பட்டிருக்கும். ஆனால் மத்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்குச் செய்கின்ற உதவிகளைச் சொல்லாமல் நீங்கள் செய்கின்ற உதவிகளை மட்டும் எடுத்துக் காட்டியிருப்பது நிச்சயமாக நேர்மையான ஒன்றாக இருக்க முடியாது என்று நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல கிருஷ்ணா ஆற்று குடிநீர்த் திட்டத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தத் திட்ட திற்கு இசைவு அளிப்பதில் மத்திய அரசு காலத்தாழ்வு செய்துவருவதன் காரணமாக இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகளும் காலத்தாழ்வு பெற்றுள்ளன என்று மக்களுக்கு ஒரு சமாதானம் கூறியிருக்கிறீர்கள். ஆனால் காலத்தாழ்வுக்கு உண்மையான காரணம் என்ன? யார் காரணம் என்பதை நீங்கள் ஏன் விளக்கவில்லை? ''மாநிலங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கான ஓர் அருமையான எடுத்துக்காட்டு இத்திட்டம்'' என்று இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தபோது மறைந்த அருமை அன்னையார், பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் குறிப்பிட்டதை இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டியதற்கு நன்றி ; தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே

நான் குறிப்பிட விரும்புவது, மாநிலங்களிடையே ஒற்றுமை நிலவுவதற்கான ஒரு அருமையான திட்டம் இது. அப்படியானால் இந்த கிருஷ்ணா நதி நீர் வருவதற்கு மத்திய அரசு ஏன் ஒப்புதல் அளிக்கவில்லை என்று சொன்னால் மாநிலங்களுக்குள்ளே ஒற்றுமையில்லை. மகாராஷ்டிரமும், கர்நாடகமும் ஏதோ பிரச்சினைகளை வைத்துக்கொண்டு அவர்கள் முடக்கிக் கொண்டிருக்கிற காரணத்தால்தான் நமக்கு இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே இருக்கிற பிரச்சினைகளுக்கெல்லாம் நாம் சரியான முறையில் தீர்வு கண்டால் நிச்சயமாக மத்திய அரசு அதற்குக் குறுக்கே இருக்காது என்பதைத்தான் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. வே. இரா. ஜெபராமன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, சட்லஜ் பியாஸ் நதியில் புதிய ஒப்பந்தம் ஏற்படுகிறபோது கிருஷ்ணா நதித் திட்டத்தினைப் பொறுத்தவரையில் ஏன் அத்தகைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக் கொடுக்ககூடாது என்று நான் அறிய விரும்புகிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா அவர்கள் பேசுகின்றபோது மாநிலங்களுக்கிடையே ஒற்றுமை இல்லை என்ற உணர்வை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். கிருஷ்ணா நதிநீர்த்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டிய இந்தச் சூழ்நிலையில் ஒரு புதுப் பிரச்சினையைத் தயவு செய்து உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வகையிலே கூறியதை அவைக் குறிப்பிலே இருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி டி. யசோதா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாநிலங்களுக்குள்ளே ஒற்றுமை இல்லை என்று சொன்னவுடனே மாநிலங்களுக்குள்ளே இருக்கின்ற ஒற்றுமை தடைப்பட்டு, அதன் காரணத்தால் கிருஷ்ணா நதிநீர்த் திட்டம் வருவது தடைப்பட்டு அந்த வகையில் நான் 'மிகப் பெரிய தடையாக இருந்துவிடுவேன் என்று நினைத்தால் அது வருத்தத்திற்குரிய ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். கர்நாடக அரசு கூட இன்றைக்கு நமக்குத் தண்ணீர் கொடுக்கச் சம்மதித்து இருக்கிறார்கள். ஆனால் பிரச்சினைகளை நாம் அணுகி ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்பதைப் பற்றி இந்த மன்றத்தில் கூட சொல்லவில்லை என்று சொன்னால் வேறு எங்கே சென்றுதான் சொல்வது?





மத்திய அரசின் மீது குற்றம் சாட்டுகிற அதே நேரத்தில், பொறுப்பை மத்திய அரசின்மீது சுமத்துகிற அதே நேரத்தில் நமக்குள்ளே இருக்கின்ற பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் மத்திய அரசு சுலபமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குரிய வழிவகைகளை உருவாக்கித் தர வேண்டியது நம்முடைய கடமை. ஏனென்றால் மற்ற மூன்று மாநிலங்களையும் விட முதன்முதல் அதற்குரிய பணத்தைக் கொடுத்திருப்பது நம்முடைய அரசுதான். நம்முடைய வரிப்பணத்திலே இருந்து 47 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறோம். அவ்வாறு 47 கோடி ரூபாயை முதற்கட்டமாக நாம் கொடுத்துவிட்டதற்குப் பிறகு இதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்குமா, கொடுக்காதா என்ற அச்ச உணர்வில் இருக்கிறோம் என்ற வகையில் நீங்களே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் அன்னை இந்திரா காந்தி அவர்கள் மாநில அரசுகளுக்கிடையே ஒற்றுமை காண இந்தத் திட்டம் உதவும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒற்றுமை வலுப்பெற வேண்டும் என்பதிலும், அதிலே எங்கேயும் வேண்டாத சூழ்நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் நாம் ஜாக்கிரதையாக இருந்தால் நிச்சயமாக இந்த திட்டத்தை நிறைவேற்றுவதில் மத்திய அரசுக்கு எந்தவிதமான இடையூறும் இருக்காது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய நிதிநிலை அறிக்கையில் வெள்ள நிவாரணப் பணிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உங்களுக்கெல்லாம் நினைவு இருக்கலாம் என்று நினைக்கிறேன். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் மிகப்பெரிய மழையும், வெள்ளமும் ஏற்பட்டு எல்லோரும் தத்தளித்துக் கொண்டிருந்த நேரம் அது. அந்தச் சூழ்நிலையில் நமக்கு அதிகமான நிதியுதவி தேவைப்பட்டது. நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் 90 கோடி ரூபாய் தமிழகத்தின் வெள்ள நிவாரணப் பணிகளுக்காகத் தேவை என்று சொன்னது குறித்து பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தார்கள். அதன்பின்னர் எங்கள் கட்சியிலே இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர் 'இல்லை, அது போதாது 100 கோடி வேண்டும்' என்று சொன்னார்கள்.

நம்முடைய மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார்கள். 'ஆமாம் நிதியுதவி அதிகமாகத் தேவை, வெள்ள நிவாரணத்திற்கு' என்று பத்திரிகையில் அறிக்கை கொடுத்து '120 கோடி ரூபாய் வேண்டும்' என்று சொன்னார்கள். நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் ஏலம் எடுப்பதுபோல் 90 கோடி, 100 கோடி, 120 கோடி என்று அறிக்கைகள் கொடுக்கின்ற நிலைமையில், 66.8 கோடி ரூபாய் மத்திய அரசால் கொடுக்கப்பட்டும் இன்றையவரையிலும் 45 கோடி ரூபாய் தான் நாம் செலவழித்திருக்கிறோம். இதையும் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்த நிதி

யாண்டு முடிவதற்குள்ளாக 60 கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்கிறோமே தவிர நாம் அந்த 66.8 கோடி ரூபாயை முழுமையாகச் செலவிடுகின்ற நிலைமை இல்லை. பின் எதற்காக நாம் அவ்வளவு பெரிய தொகையைக் கேட்க வேண்டும்? நாம் கேட்பதிலே பாதியை அவர்கள் கொடுத்தும் கூட அதைச் செலவு செய்யவில்லை என்றால் இன்னொரு சந்தர்ப்பத்திலே எதற்காகவாவது நிதி கேட்கிறபோது, நாம் கேட்கிற தொகை பற்றி மத்திய அரசு பரிசீலனை செய்கிறபோது, ஏற்கெனவே கொடுத்தோம் இவர்கள் செலவு செய்யவில்லை, எனவே இப்போது இவர்கள் கேட்பதில் பாதிகூட வேண்டாம் கால்பங்கைக் கொடுக்கலாம் என்று எண்ணிவிடுகின்ற நிலைமை ஏற்படாதா என்று நான் கேட்க விரும்புகிறேன். எனவே ஏன் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி நம்முடைய நாவலர் அவர்கள் குறிப்பிட்டால் நலமாக இருக்கும் என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

நிறைய பொருள்களைக் குறிப்பிட்டுக் கூறி, ''கீழ்க்கண்ட பொருள்களின் மீது இருந்து வரும் விற்பனை வரிகள் அறவே நீக்கப்படுகின்றன'' என்று கொடுத்திருக்கிறார்கள். ஏதாவது அவைகளில் விசேஷமாக குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்தேன். அதிலே முதலாவதாக ''துத்தநாகம் பூசிய இரும்பு வாளிகள்'' என்று கொடுக்கப்பட்டிருக்கின்றன. பிளாஸ்டிக் பக்கெட்டுகள் அதிகமாக வந்து விட்டக் காரணத்தால், இரும்பு வாளிகள் விலை போகவில்லை. அதனால் அவற்றிற்கு வரி நீக்கம் செய்திருக்கிறீர்கள். அப்படி அதற்கு வரியை இறக்கவில்லை என்றால் அது விலையே போகாது.

அடுத்து வீடுகளில் பயன்படும் கரி மற்றும் நிலக்கரி, மரத்தவிடு, உமி போன்ற பொருட்களாலான எரி பொருட்களுக்கு வரி நீக்கம் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு என்று கொடுத்திருக்கிறீர்கள். இந்த நாட்டுச் சர்க்கரையை இப்போது அவ்வளவாக யாருமே பயன்படுத்துவது இல்லை.

அடுத்து நுரை ரப்பரால் தயாரிக்கப்படாத பஞ்சு, இலவம் பஞ்சு மெத்தைகள், தலையணைகள் மற்றும் இணைப்பு மெத்தைகள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அடுத்து மெழுகுவர்த்திகள், படச் சட்டங்கள் மற்றும் படங்கள், வெள்ளி மெட்டி என்று இருக்கிறது. மெட்டியைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அதுவும், அது பெண்கள் சம்பந்தப்



பட்டது என்பதால், நாவலர் அவர்களிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். ஓரளவு வசதி படைத்த பெண்கள், மற்றும் மத்திய தர வகுப்பைச் சேர்ந்த பெண்கள் போன்றவர்கள் தான் வெள்ளியினால் செய்த மெட்டியை அணிகிறார்கள். ஏழை எளிய பெண்கள் வெள்ளைச் செம்பு எனச் சொல்லக் கூடிய உலோகத்தினால் ஆன மெட்டியைத் தான் போடுகிறார்கள். அதற்கு வரி உண்டா? அல்லது அதற்கும் வரி விலக்கு உண்டா என்று நான் அவரிடம் இருந்து கேட்டுத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போல சென்ற ஆண்டு விதித்த சில புதிய வரிகளை ரத்து செய்திருக்கிறார்கள். அந்த வகையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''தற்போது பருத்தி நூலின் மீது பலவிதமான வரி வீதங்கள் இருக்கின்றன. பின்னப்பட்ட உள்ளுடைக்குப் பயன்படுத்தப்படும் நூல் மீது 2 சதவீத வரியும், கைத்தறி ஆடைகளுக்குப் பயன்படுத்தப்படும் நூல் மீது 3 சதவீத வரியும், மற்ற நூல் வகைகள் மீது 4 சதவித வரியும் விதிக்கப்பட்டு வருகின்றன. இந்நூல் வகைகள் அனைத்தையும் சமமாகக் கருதி இனி அனைத்திற்கும் ஒரே சீராக 3 சதவிகித விற்பனை வரியாக விதிக்கப் கருதப்பட்டுள்ளது'' என்று கூறியிருக்கிறார்கள்.

விதைப்பதற்காக விற்கப்படும் சான்றளிக்கப்பட்ட பருத்தி விதைகளுக்கு வரி கிடையாது என்று முதலிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நாவலர் மிகவும் சாமர்த்தியமாக இந்த பட்ஜெட்டைப் போட்டிருக்கிறார்கள். முதலிலே பயிரிடு, பஞ்சாக விளைந்து வரட்டும், விளைந்து வந்ததற்குப் பிறகு, நூல் ஆகும் போது, மொத்தமாக வரி போட்டு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்வதைப் போல, பருத்தி விதைகளுக்கு வரி கிடையாது, ஆனால் பருத்தி நூலுக்கு வரி என்று சொல்லி இருக்கிறார்கள்.

அடுத்து மாநிலத்திலே தன்னாட்சி கோருகிறோம். அப்படி தன்னாட்சி கோருகிற நேரத்திலே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நமக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதை மறுக்கவில்லை. என்னென்ன அதிகாரங்கள், என்னென்ன வகையிலே அளிக்கப்பட வேண்டும் என்பதைப் பற்றி சர்க்காரியா கமிஷன் ஆராய்ந்துக் கொண்டிருக்கிறார்கள். நாமும் நம்முடைய தரப்பிலே என்னென்ன வேண்டுமென்று கேட்கிறோம். இதில் நான் என்ன கேட்க விரும்புகிறேன் என்றால், மாநிலத்திலே தன்னாட்சி கோரும் நேரத்தில் உள்ளாட்சி மன்றங்களிலே தன்னாட்சி நடைபெற வழி வகுக்கப்பட்டிருக்கிறதா அல்லது இல்லையா என்று தான் கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு உள்ளாட்சி அமைப்புகளிலே எல்லா அதிகாரங்களும் பறிக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கு இப்போது என்ன அதிகாரம் இருக்கிறது? தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய தலைவருக்கு முன்பெல்லாம் மகாத்மா காந்தி சொன்னதைப் போல கிராம ராஜ்யமாக ஆள வழி இருந்தது. இப்போது அவர்களிடமிருந்து எல்லா அதிகாரங்களும் பறிக்கப்பட்டு விட்டது. முன்பு கிராம மருத்துவம் அவர்களிடம் இருந்தது, இப்போது பறிக்கப்பட்டு விட்டது. அதே போல கல்வி அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு விட்டது. அதே போல என்ஜினீயரிங் டிபார்ட்மெண்ட்— ரோடு போட செப்பனிட இது போன்ற பணிகளைச் செய்வதற்காக முன்பு அவர்களிடமிருந்தது இப்போது எடுக்கப்பட்டு விட்டது. இன்றைக்கு அவர்கள் அங்கே உட்கார்ந்துக்கொண்டு என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், மத்திய அரசாங்கம் அமைத்துக் கொடுத்திருக்கிற என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி. புரோக்கிராம்கள் சரியாக நடைபெறுகிறதா என்று பார்வையிடும் பணியைத் தான் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணியைத்தான் ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் செய்துக் கொண்டிருக்கிறார்களே தவிர, பறிக்கப்பட்ட அவர்களுடைய அதிகாரங்கள் திரும்பப் பெற்று செயலாற்றக் கூடிய நிலைமையில் இல்லை.

நேற்றைய தினம் ஒரு பத்திரிகையிலே நான் பார்த்தேன். நம்முடைய அமைச்சர் ஒருவர் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். கட்சி சார்பிலே கொடுக்கப்பட்ட கருத்தாக இருந்தாலும் கூட, அது ஊராட்சி ஒன்றிய தலைவர்கள் சம்பந்தப்பட்டதாக இருப்பதால், அதைப் பற்றி ஒட்டு மொத்தமாகத் தான் சொல்ல விரும்புகிறேன். ''என்ன இருந்தாலும் உங்களுடைய கதை எடுபடாது. ஊராட்சி ஒன்றியங்களிலே நீங்கள் எதையாவது செய்ய நினைத்தால் செய்து விட முடியும் என்று நினைக்காதீர்கள். அவை அத்தனையும் எங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கையிலே இருக்கிறது'' என்று பத்திரிகையிலே சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதிக அதிகாரம் இல்லாத சூழ்நிலையிலேயே, உங்கள் கீழே இருக்கிற ஊராட்சி ஒன்றியத்தலைவர்களை இந்த ஆட்டு ஆட்டிப்படைக்கிறீர்களே, உங்களுக்கு இன்னும் அதிகமான அதிகாரத்தைப் பிரித்துக் கொடுத்தால் எங்கே சர்வாதிகாரிகளாக மாறிவிடுவீர்களோ என்ற அச்சம் ஏற்படுகிற சூழ்நிலையிலே (கரவொலி) அந்த அறிக்கைகள் இருப்பதை தயவு செய்து உடனடியாக நீங்கள் நினைத்துப் பார்த்து தீர்ப்பதற்கு முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இன்றைக்கு அலுவலகங்கள் கிடையாது. ஏற்கனவே இருந்த அலுவலகங்கள் என்னவாயிற்று என்று கேட்கிறீர்கள். ஏற்கனவே





இருந்த அலுவலகங்கள் இன்றைக்கு மதிய சத்துணவுக் கூடங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. மதிய சத்துணவுக் கூடங்கள் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பஞ்சாயத்து அலுவலகங்களில் இருக்கிற மதிய சத்துணவுக் கூடங்களை வேறு எங்காவது மாற்றலாம் என்றால் இடம் கிடையாது. சரி, இவர்களுக்கு புதியதாக இடத்தை வாடகைக்கு வாங்கிக் கொடுக்கலாம் என்றால், அதற்கும் இடம் கிடையாது. இந்தச் சூழ்நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களுக்கு அலுவலகங்கள் இல்லாமல் சத்துணவுக் கூடங்கள் அந்த இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையை அரசு உணர வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்னும் பத்து உறுப்பினர்கள் பேச வேண்டியிருப்பதால் சீக்கிரமாக முடித்து விடுங்கள்.

திருமதி டி. யசோதா : இன்றைக்கு வரதட்சணைக் கொடுமைகள் எங்கே பார்த்தாலும் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக பாதிக்கப்படுகிறவர்கள் பெண்களாக இருப்பதால் நான் மிக வேதனையோடு சொல்கிறேன். நம்முடைய உள் துறை செயலாளர் அவர்கள் சென்ற வாரம் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்துள்ளார்கள். அதில் ஒரு வாரத்தில் மட்டும் 100 மனுக்கள் இந்த வரதட்சணைக் கொடுமைக்காக வந்திருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சோக சம்பவங்கள் தொடரா வண்ணம் நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். மனிதாபிமான அடிப்படையில் இவற்றை அரசாங்கம் மிக வேகமாக அணுக வேண்டும். இது போன்ற கொடுமைகளை நடத்துபவர்களை கடுமையாக தண்டிப்பதற்கு வழி வகைகளை ஆராய வேண்டும். அதற்கு இந்தியாவில் தமிழகம் ஒரு எடுத்துக்காட்டாக விளங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல கவர்னர் உரையில் மாவட்டங்களை பிரிக்கிற வகையில், திருநெல்வேலி மாவட்டத்தையும், வட ஆற்காடு மாவட்டத்தையும் பிரிப்பதாக குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய நிதி நிலை அறிக்கையில் அவற்றை பிரிப்பதற்கான நிதி ஒதுக்கத்தைக் காணவில்லை. காலையில் ஒரு கேள்வி கேட்கிற போது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். ஒரு மாவட்டத்தைப் பிரிக்க தொடர் செலவு 3 கோடி ரூபாயும், தொடராச் செலவு 11 கோடியும் ஆகும். ஆகவே ஒரு மாவட்டத்தைப் பிரிக்க 14 கோடி ரூபாய் ஆகும். திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க இருக்கிறோம். அதே போல வட ஆற்காடு மாவட்டத்தை இரண்டாக பிரிக்க இருக்கிறோம். குறைந்தபட்சமாக எடுத்துக்

கொண்டாலும் கூட 28 கோடி ரூபாய் அளவிற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் நீங்கள் சுட்டிக்காட்டாதது வருத்தத்திற்குரிய தாகும்.

அதே போல பஞ்சாயத்து யூனியன் தேர்தல்களை நடத்தி முடித்து இருக்கிறீர்கள். நீங்கள் முன் வைத்த காலை பின் வைத்து விட்ட காரணத்தாலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற இழப்பை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். நான் ஒட்டுமொத்தமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். தமிழக முதலமைச்சர் அவர்கள் அரிசனங்களுக்கும், பெண் களுக்கும் நிறைய வாய்ப்புக்களைக் கொடுக்க வேண்டுமென்று தனித் தொகுதிகளை உருவாக்கினார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட்டிலே அதற்கு தடை வாங்கினார்கள். அந்த வழக்கை நாம் நடத்தி இருக்கலாம். அதனை நடத்தாமல், வழக்கு திரும்பப் பெற்றது கூட தெரியாமல், நாம் பஞ்சாயத்து தேர் தலை பழைய முறையிலே நடத்துவது என்று முடிவெடுத்தோம். இன்றைக்கு நீங்கள் யோசித்துப் பாருங்கள். அனைத்துக் கட்சி களின் சார்பிலே அண்ணா தி.மு.க., காங்கிரஸ், தி.மு.க., மற்ற எல்லா கட்சிகளையும் ஒட்டுமொத்தமாக வைத்துப் பாருங் கள். எத்தனை அரிசனத் தலைவர்கள் வெற்றி பெற்று வந்து இருக்கிறார்கள். 382 பஞ்சாயத்து யூனியன்களில் தேர்தல் நடத்தியிருக்கிறோம். அதில் அரிசன தலைவர்கள் 3 பேர்கள் தான் வந்திருக்கிறார்கள். இது ஒரு நல்ல வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக இருக்க முடியுமா ? அல்லது அரிசனங்களுக்கு தனித் தொகுதி தேவையில்லை என்று சொல்கிறார்களே, இந்த நிலை மையை நீங்கள் ஒட்டுமொத்தமாக பரிசிலித்து பார்த்தால், அதில் கிடைக்கும் விடை அரிசனங்களுக்கு நிச்சயமாக தனித் தொகுதி தேவை என்பது தான். அதைத் தான் நமக்கு இப்போது நடந்து முடிந்திருக்கும் தேர்தல்களின் முடிவு தெரிவிக்கிறது. ஆகவே நல்ல மனம் படைத்த உங்களை, இதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11–20)

அடுத்தாற்போல தென் மண்டல பண்பாட்டு மையம் ஒன்றை மத்திய அரசாங்கம் நிறுவி இருக்கிறது. அதற்கு மத்திய அரசாங் கம் 5 கோடி ரூபாய் கொடுத்து இருக்கிறது. உடனே நம் முடைய நாவலர் அவர்கள் சொல்லுகிறார்கள், தென் மாநிலங் கள் அனைத்தும் சேர்ந்து அதற்குச் சமமான தொகையை வழங்கும் என்று. நான் சொல்லிக் கொள்ள விரும்புவது நம்முடைய தமிழ் நாட்டின் சார்பாக வேண்டுமானால் நீங்கள் சொல்லலாம். தென் மாநிலங்கள் என்று சொன்னால், மற்ற எல்லா மாநிலங்களையும் ஒட்டு மொத்தமாக சேர்த்து ஒரு சமமான தொகை கிடைக்கும் என்று சொன்னால், அது உங்களுடைய யூகமா ? அல்லது அவர்





களைக் கலந்து ஆலோசித்து இந்த நிலையை எங்களுக்கு நீங்கள் தெரிவித்து இருக்கிறீர்களா என்பதை நான் அறிய விரும்பு கிறேன்.

அதேபோல், விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். வரவேற்கக்கூடியதுதான். இந்த விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தவரையில், சென் னையில் உள்ள அரிசன மக்களுக்கு இட வசதி போதிய அளவில் இல்லை. எனவே இந்த இட வசதி இல்லாத காரணத்தால், அவர்கள் தெருக்களில் சில விளையாட்டுக்களை விளையாடுகிறார் கள். உதாரணமாக கேரம் போர்டு விளையாடுகிறார்கள். கேரம் போர்டு விளையாட்டிலே நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் இருக்கிறார்கள். யாருக்காவது சந்தேகம் வந்தால், வாருங்கள், நான் அழைத்துச் சென்று காட்டுகிறேன். அந்த விளையாட்டு வீரர்களை போலீசார் கையைக் கட்டி, தெருவிலே நாயை இழுத்துச் செல்வது போல், இழுத்துச் செல்லுகின்ற கொடுமை இருக்கிறதே, அதை நான் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலே கூட சுட்டிக்காட்டி இருக்கிறேன். ஆனால் அதைப் பற்றி நீங்கள் எந்த விதமான ஆணையும் கொடுக்கவில்லை. ஒரு சமிக் ஞையும் செய்யவில்லை. இதன் காரணத்தால், இன்றைக்கு அந்த விளையாட்டு வீரர்கள், விளையாட்டிலே சிறப்பாக இருக்கக் கூடியவர்கள், போலிசாரால் கைது செய்யப்பட்டு, இழுத்துச் செல்லுகின்ற சூழ்நிலை இருப்பது மட்டுமல்லாமல், அவர்கள் விளையாட முடியாத நிலைமையும் இருக்கிறது. எனவே நீங்கள் சற்று இரக்க உணர்வோடு இதைச் சிந்திக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மருத்துவமனையைப் பற்றிக் குறிப்பிட்டு இருக் கிறார்கள். ' 5 ஆயிரம் பேர் வாழும் சமவெளிப் பகுதிகளிலும் 3 ஆயிரம் பேர் வாழும் மலை, பழங்குடியினர் பகுதிகளிலும் சுகாதாரத் துணை நிலையங்கள் அரசு ஏற்படுத்தி வருகின்றது. 1985 மார்ச் வரையில், 5,860 சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று சொல்லியிருக்கிறார்கள். 1985 மார்ச் என்று சொன்னால், துவங்கியது எந்த ஆண்டு? 1985 மார்ச் வரைக்கும் 5,860 நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறீர்கள் என் றால் எந்த ஆண்டு இதைத் துவங்கினீர்கள் என்பதை நீங்கள் சுட்டிக் காட்டவில்லை. எனவே இது எத்தனை ஆண்டுக் காலத்திற்குள் ஏற்படுத்தப்பட்ட துணை நிலையங்கள் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்.

அடுத்து, இந்த துணை நிலையங்களில் இருக்கிற கொடுமை என்ன என்று சொன்னால்—நான் ஏற்கெனவே சொல்லி யிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற குன்றத் தூரைப் பற்றி, அங்கே ஒரு மருத்துவமனை இருக்கிறது. நல்ல மருத்துவமனை, 4, 5 பெட்டுகள் கூட இருக்கின்றன.

ஆனால் அங்கே பிரசவத்திற்காக வருகிற பெண்களிடத்திலே மருந்து கேட்கிற கொடுமை இருக்கிறது. அவர்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டு வருகின்றபோது, அவர்களிடம் நீங்கள் மருந்து கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். பிரசவம் ஏற்பட்டதற்குப் பிறகு, அதிகமான ரத்தப் போக்கு ஏற்படுகிறபோது அதைத் தடை செய்வதற்குக் கூட மருந்து வேண்டும் என்ற நிலைமை இருக்கிறது. மேலும் அப்படிப் பட்ட உயிர் காக்கும் மருந்துகளை, குளிர் சாதனப் பெட்டிகளில் வைத்து இருந்தால், அந்த மருந்தினுடைய தன்மை கெட்டுப் போகாமல், அதனுடைய முழுப் பலன் நமக்குக் கிடைக்கும். எனவே இந்த துணைச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்துகிறபோது, அங்கே மருந்துகள் இல்லாத ஒரு நிலைமையை நீங்கள் போக்க வேண்டும். முதலிலே மருந்தை வையுங்கள். பிறகு குளிர் சாதனப் பெட்டிகளை வைப்பது பற்றிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், ஆலய திருப்பணிகளுக்கு 15 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆலய திருப்பணிகளுக்கும், குளங்களை வெட்டுவதற்கும் 15 லட்ச ரூபாய் நிச்சயமாகப் போதாது. சென்ற ஆண்டுகூட நான் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, என்னுடைய தொகுதியிலே இருக்கிற மாங்காடு காமாட்சி அம்மன் கோயிலைப் பற்றிச் சொன்னேன். அந்தக் கோயிலில் உள்ள அம்மன் யாரை நினைத்து தவம் செய்கிறாள் என்று சொன்னால், தன்னுடைய கணவன் வெள்ளீஸ்வர பெருமாளை நினைத்து தவம் செய்கிறாள். அந்தக் கோயில் பாழடைந்த கோயிலாக இருக்கிறது. அங்கே பலர் சூதாடிக் கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. இதைப் பற்றி எல்லாம் நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சொன்னேன். இப்போது அந்த வெள்ளீஸ்வரப் பெருமானுக்கு நல்ல காலம் வந்திருக்கிற காரணத்தினால், நம்முடைய அரசாங்கம் 5 லட்சம் ரூபாய் ஒதுக்கி, இப்போது அங்கே வேலை நடந்து கொண்டிருக்கிறது. எனவே இந்த ஒரு கோயிலைச் சரி செய்வதற்கு 5 லட்ச ரூபாய் தேவைப்படுகிறது என்று சொன்னால், நீங்கள் மொத்தமே 15 லட்ச ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறீர்கள். தமிழ் நாட்டிலே இருக்கிற அனைத்துக் கோயில்களையும் சரிப்படுத்த இந்த 15 லட்ச ரூபாய் எப்படிப் போதும்? எனவே இது மிகவும் குறைந்த தொகையாக உள்ளது. இதை நீங்கள் அதிகரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் கோயில்களுக்கு இன்றைக்கு அதிகமாக நிலங்கள் இருக்கின்றன. அந்தக் கோயில் நிலங்களை அரசாங்கம் கையகப் படுத்துவதற்கு ஏன் இன்னும் காலதாமதம் செய்கிறது என்பது புரியவில்லை. மிகப் பெரிய பணக்காரர்கள் இன்றைக்கு கோயில் நிலங்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள்.



எனவே அந்தக் கோயில் நிலங்களைக் கையகப்படுத்தி அதைப் பின் தங்கியவர்களுக்கும், வறுமையில் வாடுகின்றவர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் நீங்கள் கொடுத்து உதவ வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் ஒரு முக்கியமான பிரச்சினை. சென்னை நகரை சர்வே செய்து கிட்டத்தட்ட 90 வருடங்கள் ஆகின்றன. 1896-ல் சென்னை நகரம் சர்வே செய்யப்பட்டிருக்கின்றது. இன்று வரையிலும் கிட்டத்தட்ட 90 வருடங்கள்—இன்னும் 10 வருடங்கள் போனால் அதற்கு கூட நாம் நூற்றாண்டு விழா கொண்டாடலாம்—90 வருடங்கள் ஆகின்றன சென்னை மாநகரத்தை சர்வே செய்து. சர்வே செய்தால்தான் அரசாங்கத்தினுடைய நிலங்கள் அனைத்தும் நமக்கு திரும்ப கிடைக்கும். இன்றைக்கு அரசாங்கத்தினுடைய நிலங்களிலே—புறம்போக்கு நிலங்களில் எல்லாம் மிகப் பெரிய கட்டிடங்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. நான் இன்னும் கூட சொல்வேன். தாசில்தார் ஆபீஸுக்கு நீங்கள் போனீர்களானால் பட்டா கொடுப்பதில் கூட மூன்று வகை இருக்கிறது. பட்டாக்கள் வழங்குவதில் பலவிதம் இருக்கிறது. லிங்க்ஸ் பட்டா—செயின் வைத்து அளத்தல்—மெட்ரிக் பட்டா, புஃட் பவுண்ட் பட்டா என்கின்ற மூன்று விதப் பட்டாக்கள் கொடுக்கிறார்கள். மெட்ரிக் பட்டாவாக கொடுக்க வேண்டுமென்று நம்முடைய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளையெல்லாம் மெட்ரிக்கிலே வர வேண்டுமென்று முடிவெடுத்து பல ஆண்டுகாலம் ஆகிவிட்டன. இன்றுவரையிலும், தாசில்தார் அலுவலகத்தில் பட்டாக்கள் வழங்குவதில் மூன்று வகைகள் இருக்கின்றன. நகரங்கள் எல்லாம் இன்றைக்கு மெட்ரிக் முறையில் இருக்கின்றன. பழைய நகரங்கள் கிராமப் புறங்கள் எல்லாம் லிங்க்ஸ் முறையில் இருக்கின்றன. அதே போல இன்னும் பல பகுதிகள் இதிலும் இல்லாமல் அதிலும் இல்லாமல் இருக்கின்றன. இதை நீக்குவதற்கு அரசாங்கம் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதே போல நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட ஹைவேஸில் இருக்கின்ற, அரசாங்கத்தினுடைய நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த கட்டிடங்களையெல்லாம் அளந்துப் பார்த்து இடி இடி என்று எங்கு பார்த்தாலும் இடிக்கச் செய்தார்கள். பூந்தமல்லியிலே ஒரு இடத்திலே அதிகாரிகள் வந்து இடிக்கும் போது ஜனங்களுக்கு ஒரே சந்தோஷம். ஒரு முறை ரோட்டிலே போய்க் கொண்டிருக்கும் போது சந்தோசமாக வந்தாராம். எவ்வளவு பெரிய ரோடு, இதிலே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்களே, ரொம்ப பெரிய சாலையாக இருக்கிறது என்று சொன்னாராம். அந்தப் பணி ஏன் நிறுத்தப்பட்டது? அந்தப் பணியை ஏன் தொடரவில்லை? அந்தப் பணியை நீங்கள் நிறுத்துவதற்கு தடுத்த கரம் யாருடைய கரம்? அந்த நற்பணியை நீங்கள் தொடராமல்

[திருமதி டி. யசோதா] [1986 மார்ச் 19

விட்டு விட்டீர்கள் என்பதை எண்ணுகின்றபோது, அது உண்மையிலேயே வேதனைக்குரியதாகத்தான் இருக்கிறது. அதேபோல கவர்னர் உரையிலே சொல்லி இருக்கிறீர்கள் 23 ஆம் பக்கத்திலே. ஒரே வருடத்தில் அரிஜனங்களுக்கும் பின் தங்கியவர்களுக்கும் தலா 5 லட்சம் வீடுகள் கட்டித் தரப்படும், என்று நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். ஆனால் இந்த 10 லட்சம் வீடுகளைக் கட்டுவதற்குரிய எந்தவிதமான சமிக்ஞையையும் இங்கே தென்படவில்லை என்பதை நினைக்கின்றபோது ஒரு வேளை நீங்கள் ஏமாற்றுகிறீர்களோ என்கின்ற அச்ச உணர்வு ஏற்படுகின்றது. ஆகவே அதையும் நீங்கள் நிச்சயமாக கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இறுதியாக நேரம் ஆகிவிட்ட காரணத்தால் ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அரசு பள்ளிகளிலே இன்றைக்கு செல்கின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது என்று புள்ளி விவரம் கொடுத்து இருக்கிறார்கள். என்னால் அதை யூகிக்க முடியவில்லை. அது ஒரு வேளை ரெக்கார்டாக இருக்கலாம். பள்ளிக்கூடம் விடுகின்ற நேரத்திலே நீங்கள் அங்கே போய் பாருங்கள். 35 பிள்ளைகள் படிக்க வேண்டிய பள்ளிக்கூடத்திலே, 15 பேரும் 20 பேரும் வெளியே வருகின்ற காட்சியைத் தான் நாம் பார்க்கிறோம். நிறைய பிள்ளைகள் சாப்பாட்டிற்காகத்தான் போகின்றார்களே தவிர படிப்பதற்காக போவதாகச் சொல்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியவில்லை. கல்வியினுடைய தரம், அரசு பள்ளிகளிலே சிறப்புக்குரியதாக இல்லையென்ற காரணத்தினாலேதான் தனியார் பள்ளிக்கூடங்களிலே இடம் கிடைப்பதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அமைச்சரே ரெக்கமன்டேஷன் செய்தாலும் சேர்த்துக் கொள்கின்ற நிலமை இருக்கின்றதா என்றால் இல்லை. நம்முடைய அரசாங்கத்தினுடைய பள்ளிகளிலே அந்தக் கல்வியின் தரம் இல்லாத காரணத்தால் சாதாரண மக்கள், நடுத்தர மக்கள் அத்தனை பேர்களும் தனியார் பள்ளிகளுக்குச் செல்கின்றார்கள். வசதியற்ற, வருவாய் அற்ற ஏழை எளிய மக்கள் வேறு வழியில்லாத காரணத்தினாலே அரசாங்க பள்ளிக் கூடங்களிலே படிக்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்று சொன்னால், இந்த அரசாங்கம் ஏழை எளிய மக்களுக்காக இருக்கின்ற அரசாங்கம் நிச்சயமாக கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு மிக அதிகமான அக்கரையை எடுத்துக் கொள்ள வேண்டுமென தெரிவித்துக் கொள்கிறேன். உற்பத்திப் பெருக்கம் இல்லை. வளர்ச்சி திட்டங்களும் இல்லை. வணிகவரி செலுத்தக்கூடிய சக்தி படைத்தவர்கள் மீது வரிபோட்டு அதன்மூலம் வளர்ச்சி பெற முயலுவதில் தவறுஇல்லை என்பதைக்கூறி வேலையில்லாத் திண்டாட்டத்தை பொறுத்தமட்டிலும் இங்கே நிறைய தொழில் கல்லூரிகள்



1986 மார்ச் 19] [திருமதி டி. யசோதா]

ஆரம்பிக்க இருக்கிறீர்கள் என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். சத்துணவு கூடத்திலே எல்லாம் வேலை வாங்கிக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். 60 இலட்சம பேர் வேலை செய்கிறார்கள் என்றெல்லாம் சொல்கின்றார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. சத்துணவுக் கூடத்திலே பணியாற்றுகின்ற ஆயாவுக்கு தொழில் வளர்ச்சியோ, கல்வி வளர்ச்சியோ ஏற்படுமென நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. சததுணவுக்கூட பள்ளிகளிலே இருக்கின்றவர்களுக்கு சமையலை வேண்டுமானால் நன்றாக கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கலாம்.

(முற்பகல் 11–30)

அதை விட Industrial Estates உருவாக்கப்பட வேண்டும். அதன் மூலமாக தொழில் வளர்ச்சிகளை உருவாக்க வேண்டும். கல்லூரியில் படித்து விட்டு வெளியே வந்தால் அவர்களுக்கு வேலை வேண்டும். அந்த வேலைக்கு உரிய சூழ்நிலையை உருவாக்க அரசு நிச்சயமாக முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக மதுவிலக்கு பற்றி கூறி விடைபெறுகிறேன். மதுவிலக்கு பற்றி கூறுகிறபோது 3 மாதத்திற்கு 60 கோடி ரூபாய் நட்டம். ஒரு ஆண்டிற்கு 250 கோடி ரூபாய் நட்டம் என்று சொல்லியிருக்கிறார்கள். சனவரியிலிருந்து மார்ச் வரையில் 3 மாதத்திற்கு 60 கோடி ரூபாய் நட்டம் என்று சொன்னால் அந்த நட்டத்தை ஈடுகட்டுவதற்கான செயற் குறிப்பு இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை.

அது மட்டும் அல்ல. மத்திய அரசு அதற்கு உதவி கொடுக்கும் என்று எதிர்பார்ப்பதாக கூறியிருக்கிறார்கள். நான் உங்களுக்கு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், சென்ற 1983–84 ஆம் ஆண்டிலே, நாம் சாராயக் கடைகளை ஏலம் கொடுத்த நேரத்திலே, 200 கோடி ரூபாய் வருமானம் வரும் என்று பெருமையாக இருந்தோம். ஆனால் 200 கோடி ரூபாய் நமக்கு வரவில்லை. நட்டம் ஏற்பட்டது. அதைப்பற்றி நம்முடைய நாவலர் அவர்களிடம் சென்ற பட்ஜெட்டின் போது கேட்டபோது அவர்கள் சொன்னார்கள் லாபம் வந்து இருக்க வேண்டியதுதான். ஆனால் உரிய நேரத்தில் அவர்களுக்கு நாம் சாராயத்தைக் கொடுக்காத காரணத்தால் அவர்கள் வழக்கு மன்றத்தில் வழக்கை பதிவு செய்து விட்டார்கள். ஸ்டே வாங்கி விட்டார்கள், அதனால் நமக்கு பணம் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். அந்த நட்டத்தோடு தான் இந்த அரசை நடத்திக் கொண்டு வந்திருக்கிறீர்கள். தனிப்பட்டவர் கோர்ட்டில் போய் பணம் கட்ட முடியாது என்று அவர்கள் அனுமதி

வாங்கிக் கொண்ட காரணத்தால் நமக்கு வர வேண்டிய 200 கோடி ரூபாய் வராத சூழ்நிலையில் இந்த அரசு சிறப்பான முறையில் நடைபெற்று இருக்கிறது. ஆகவே தான் சொல்கிறேன், மத்திய அரசு நிச்சயமாக நிதி கொடுக்கும் என்று நான் நினைக்கிறேன். நமக்கு உதவி செய்வதற்கு மத்திய அரசு எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் அருமைத் தலைவர் பாரதத்தின் பிரதமராக இருக்கின்ற தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் நிச்சயமாக தமிழக அரசின் மீது தனியாக பற்றும் பாசமும் வைத்து இருக்கின்ற காரணத்தால் நாம் கேட்பதை நம்முடைய தேவைக்கு மேலேயே இதுவரையில் கொடுத்து வந்து இருக்கிறார்கள். நிச்சயமாக மது விலக்கை அமல்படுத்தினால் நிறைய கொடுப்பார்கள். கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், கொடுக்க இருக்கிறார்கள் என்பதை சொல்லி என் கருத்துக்களை இந்த அவையின் முன் வைத்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. அ. பாலுசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாவலர் அவர்கள் வாசித்தளித்த 1986–87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை மன்றத்தில் எடுத்துவைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு ஆண்டிலும் வரிகள் இரண்டு வருவது உண்டு. அவைகளில் ஒன்று ஜனவரி, மற்றொன்று பிப்ரவரி. ஆனால் வள்ளல் புரட்சித் தலைவர் ஆட்சியில் புது வரிகள் இல்லையென்ற அளவுக்கு, மாற்றுக் கட்சி முகாமிலுள்ள தலைவர்கள் நிதிநிலை அறிக்கையைக் காரணம் காட்டி குறை சொல்ல முடியாத அளவில் நிதிநிலை அறிக்கையை அளித்த நாவலர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இங்கே இந்த நிதிநிலை அறிக்கையில் பேசிய நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் காலையிலே வருகின்ற நேரத்திலே அ.இ.அ.தி.மு.க. ஆட்சியை எப்படியும் குறை கூற வேண்டுமென்ற எண்ணத்திலே தான் வந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். வந்தவுடனேயே சர்வாதிகார ஆட்சி என்று கூறினார்கள். பின்பு புரட்சித் தலைவர் ஆட்சியில் ஏழை எளியவர்களுக்காக நீக்கப்பட்ட வரிகளை அவைகள் ஏழை எளிய மக்களுக்காக நீக்கப்பட்ட வரிகள் இல்லை என்று எல்லாம் சொன்னார்கள். பின்பு நல்ல முறையில் தமிழக அரசு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது என்றும் பேசினார்கள். மத்திய அரசு ஒரு தாயைப் போன்றது. மாநில அரசு ஒரு பிள்ளையைப் போன்றது. ஆகவே மத்திய அரசு நிதி கொடுத்தது என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்





டிருக்கிறேன். மேலும் தந்தை தன் பிள்ளையை அடிக்கும் போது எந்தத் தாயும் பார்த்து மனமகிழ மாட்டார். அடிப்பட்ட அந்த பிள்ளையின் கண்ணீரைத் துடைக்கின்ற தாயை அடிப்பட்ட பிள்ளையை அரவணைத்து வடிக்கின்ற கண்ணீரைத் துடைக்கின்ற தாயைப் போல் மத்திய அரசு சுணக்கப்பட்ட வகையில் ஏழை எளிய மக்களைப் பாதிக்கின்ற வகையில் ஒரு சில வரிகளை விதித்தாலும் தாய் உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் வரியில்லா பட்ஜெட்டை தந்த வள்ளல் உள்ளம் கொண்ட தமிழக முதல்வரை தமிழகத்தில் வாழ்கின்ற அத்தனை மக்களும் குறிப்பாக ஏழை எளிய மக்கள் மனதார வாழ்த்துகிறார்கள். புதுவரியில்லா பட்ஜெட் என்றும் பல முனை வரியை ஒழித்து ஒருமுனை வரி கண்ட ஒப்பற்ற ஆட்சி என்றும் வரவேற்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அந்தப் பிள்ளை தாய் வயிற்றில் இருக்கும்போதே முடிசூட்டு விழா நடத்திப் பார்ப்பது போல் உள்ளாட்சித் தேர்தலை வைத்து, இதய தெய்வம், தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் மாயை மறைந்து விட்டது, தமிழகத்தின் ஆட்சி ஆட்டம் கண்டு விட்டது என்றும் மனக் கணக்கு போட்டு விட்டார்கள். மகுடம் சூட்டு விழாவை கனவில் கண்டு மகிழ்கிறார்கள். ஆனால் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழகக் கட்சித் தலைவரும், மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் அவர்களை, நான் ஆணவத்தோடு சொல்லவில்லை, அகந்தையோடு சொல்லவில்லை, மெத்த பணிவன்போடு பேராசிரியா அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். அகந்தைச் சொற்றொடர்களைக் கொண்ட வார்த்தைகளை பேராசிரியர் அவர்கள் உபயோகிக்கிறார்கள் என்று ஆன்றோர்களும், சான்றோர்களும் பேச ஆரம்பித்து விட்டார்கள் என்பதை பேராசிரியர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, சற்று முன்பு நடந்த சம்பவத்தை தங்கள் முன் வைத்து நினைவூட்ட விரும்புகிறேன்.

1980-ல் பாராளுமன்றத் தேர்தல் தமிழகத்திலும் நடைபெற்றது. காங்கிரஸ் கட்சித் துணையோடு திராவிட முன்னேற்றக் கழகம் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியது. பின்பு ஓரிரு மாதங்களுக்குள் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது. வாக்குகள்கூட எண்ணப்படவில்லை. தாங்கள் தான் ஆட்சியைக் கைப்பற்றப் போகிறோம் என்ற எண்ணத்தில் முப்பெரும் விழா எடுப்பதற்கு கலைஞர் அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள். ஒன்று பிறந்த நாள் விழா, இரண்டு முடிசூட்டு விழா, மூன்றாவது வெற்றி விழா. வால் போஸ்டர் கூட அச்சடித்தார்கள். எப்படி நடத்துவது என்று திராவிட முன்

னேற்றக் கழகத் தலைவர்கள் கூடி வெள்ளோட்டம் பார்த்தார்கள். பின்பு தேர்தல் முடிவு என்ன ஆனது? கலைஞர் மனக் கோட்டையை மக்கள் மண் கோட்டைகளாக இடித்துத் தள்ளவில்லையா? புரட்சித் தலைவர் அவர்களை ஆட்சி சிம்மாசனத்தில் அமர வைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, தமிழகத்தின் கோட்டையில், தமிழக முதல்வராக, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை அமரச் செய்து அழகு பார்த்தார்கள் என்பதை கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மேலும் தாங்கள் அனுதாப அலையால் வெற்றி பெற வேண்டுமென்று பெரியகுளம் இடைத் தேர்தலைச் சந்தித்தார்கள். ஆனால் வெற்றி பெற முடிந்ததா? அதுபோன்று திருச்செந்தூர் சட்டமன்ற இடைத் தேர்தலை அனுதாபத்தால் கைப்பற்ற கனவு கண்டார்கள். கைப்பற்ற முடிந்ததா? மக்கள் தோல்வியைக் கொடுத்து விட்டார்கள். அதை மறந்து விட்டு, உள்ளாட்சித் தேர்தலை தலை உச்சியில் வைத்து, நாடு எங்கள் பக்கம் கோட்டைதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பக்கம் என்பதாக கலைஞர் அவர்கள் கனவு காண்கிறார். நடந்து முடிந்த உள்ளாட்சித் தேர்தல் எதனால் தோற்றது என்பதை மக்கள் பேசுவதை கலைஞர் அறியவில்லையா? அல்லது அவருக்குப் புரியவில்லையா? இதை வைத்து தயவு செய்து கலைஞர் அவர்கள் தப்பான கனவு காண வேண்டாம் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எப்படி இருந்தாலும் மக்கள் என்றும் புரட்சித் தலைவர் பக்கம் தான் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் இந்த மாமன்ற உறுப்பினர்களை நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். கலைஞர் ஆட்சி செய்த காலத்தையும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தையும் சற்று சீர் தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கலைஞர் 7½ ஆண்டு ஆட்சி செய்த காலத்தில் இதுபோன்ற வரியின்மை நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தது உண்டா? தமிழகத்தில் தொழில் வளத்தைப் பெருக்குகின்ற வகையில், அத்தியாவசியமான பொருட்களின் வரியைக் குறைத்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துணையோடு இந்த மாமன்றத்தில் டாக்டர் நாவலர் அவர்கள் வைத்து இருக்கிறார்கள். இதுபோன்று கலைஞர் ஆட்சியில் தொழில் வளம் பெருகுகின்ற வகையில், முயற்சிகள் எடுத்தது உண்டா? ஏழை எளிய மக்கள் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்களுக்கு வரியை ரத்து செய்து, கூடுதல் வரிகளை நீக்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்தது போன்று, கலைஞர் ஆட்சியில் நடவடிக்கை எடுத்தது உண்டா? ஏழை எளிய மக்கள் வாழ வழி செய்தது





உண்டா? ஆனால் அதற்கு மாறாக தமிழக விவசாய மக்கள் உபயோகிக்கும் பம்பு செட்டுகளுக்கு ஒரு யூனிட்டுக்கு ½ பைசா குறைக்க வேண்டுமென்று கலைஞர் அவர்களை கெஞ்சிக் கேட்டார்கள். ½ பைசாவாவது, ¼ பைசாகூட குறைக்க மாட்டேன் என்று கலைஞர் கூறி, அன்று ஒன்றும் அறியாத அப்பாவி மக்களை இரும்புக் கரங்களால் அடித்து மண்டைகளை உடைத்து தண்டிக்கவில்லையா? அத்தோடு நில்லாமல் காவல் துறையை ஏவிவிட்டு இந்த நாட்டிற்கு உழைத்து உணவளிக்கும் ஏழை விவசாயிகளைத் துப்பாக்கிரவையால் சுட்டுப் பொசுக்கி அவர்களது பச்சை இரத்தத்தைக் குடித்து தி.மு.க. ஆட்சியைச் சுழற்றிய பெருமை கலைஞர் ஆட்சியில் பொறிக்கப்பட்ட முத்திரை என்பதை நாடு மறக்குமா என்பதை கலைஞர் அவர்கள் உணரவேண்டுமென்று நான் இந்த மாமன்றத்தின் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

(முற்பகல் 11-40)

ஆனால், புரட்சித் தலைவர் அவர்களை தமிழக மக்கள் ஆட்சிப் பீடத்திலே அமர்த்தியவுடன் ஏழை விவசாயிகளுக்கு 1 யூனிட்டுக்கு 14 பைசாவாக இருந்ததை 10 பைசாவாகவும் குறைத்தும் பின்பு ஏழை விவசாயிகள் உபயோகிக்கும் பம்பு செட்டுகளுக்கு அடியோடு வரியை ரத்து செய்த ஒரே முதல்வர் இந்தியத் துணைக் கண்டத்தில் இன்றைய தினம் தமிழகத்தை ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் ஒருவர்தான் என்பதை நான் பெருமையோடு கூறிக் கொள்கிறேன். அந்த அளவுக்கு இன்றைக்கு தமிழகத்தை ஆட்சி செய்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு விவசாய மக்களுக்கு பல நன்மைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஆனால், கலைஞர் மேலும் ஒன்றைச் சொல்கின்றார் தீயை கொளுத்திவிட்டு தீயையே அணைக்கத் தண்ணீரைத் தேடுபவரைப் போல, மதுவிலக்கை எடுப்பதைப் பற்றி உறுதியாக இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லவில்லை என்று சொல்கின்றார். பட்ஜெட்டை அலசிப் பார்த்து பெரிய பொல்லாப்பைச் சொல்லுவதுபோல இருட்டிலே இல்லாததை தேடும் குருட்டு மனிதரைப் போல் இந்த நாட்டில் குடிப் பழக்கத்தை ஒழிக்கப் பல ஆண்டுக் காலம் போராடி குடிப் பழக்கத்தை ஒழித்த தேசப் பிதா காந்தி அவர்களின் கொள்கையையும் இந்த அரசுக்கு எத்தனை நட்டம் வந்தாலும் மதுவிலக்கை கொண்டுவர மாட்டேன் என்றும் மதுவிலக்கினால் கிடைக்கின்ற வருமானம் குஷ்டரோகியிடம் இருந்து பெறும் வெண்ணெய்க்குச் சமம் என்று பெருந்தகை பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கைப் பிடிப்போடு இருந்தார்கள்.

ஆனால், அந்தக் கொள்கையை வேரோடு அழித்து குடிப் பழக்கத்தை மீண்டும் தமிழகத்திற்குக் கொண்டு வந்து தமிழக வழி வம்சாக்களை குடிகாரர்கள் ஆக்கிய பெருமை கலைஞர் கருணாநிதியையே சாரும். ஆனால், கொலை பாதகம் செய்பவன் அன்பைப் பற்றிப் பேசுவது போன்று கலைஞர் அவர்கள் இந்த பட்ஜெட்டில் மதுவிலக்கைப் பற்றி உறுதியாக எதுவும் இல்லை என்று சொல்லுகின்றார்.

மேலும், தமிழர்களின் இன்னல்களைத் துடைக்கும் தளபதியைப் போன்று இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிக்கிறார் கலைஞர். ஆனால், அவர் ஆட்சி செய்த நேரத்திலே தமிழகத்திற்குச் சொந்தமான, இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சொந்தமான கச்சத் தீவை இலங்கை அரசுக்கு தாரை வார்த்துக் கொடுக்க மத்திய அரசுக்குத் துணை போனவர்தான் கலைஞர் கருணாநிதி என்பதை நான் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் ஆட்சி செய்த காலத்திலே இலங்கையில் சிங்களவர்கள் தமிழர்கள்மீது நடத்திய கோர தாண்டவங்களைத் தடுத்து கேட்டதுண்டா? சட்டமன்றத்தில் இலங்கை அரசைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியதுண்டா? ஆனால், புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற காரணத்தினால் இலங்கையில் சிங்களவர்கள் நடத்தும் வெறியாட்டங்களைக் கண்டித்து சட்டமன்றத்தில் கண்டனத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது.

மேலும், தமிழகம் முழுவதும் கடையடைப்பு செய்து சிங்களவர்களைக் கண்டித்து கண்டனத் தீர்மானங்கள் மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. தமிழகத்திலே உள்ள அத்தனை கடைகளும் அத்தனை தொழிற்சாலைகளும் இரயில்களும் ஏனைய போக்குவரத்துகளும் ஓடாத அளவுக்கு சண்டித்த ஒரே முதல்வர் நம்முடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். வேறு எந்த முதலமைச்சரும் அதைப்போன்று கண்டித்தது உண்டா?

எந்த மாநிலத்திலும் எந்த முதலமைச்சரும் நிதிநிலை அறிக்கையில் வைக்காத 1986—87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதல் கட்டமாக சிங்களவர்களிடமிருந்து தமிழர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கூறுகின்ற, இந்த நிதிநிலை அறிக்கையில் அதைக் கூறுகின்ற தமிழர்களின் நலனுக்காக வாழ்ந்து வருகின்ற ஒரே தலைவர் புரட்சித் தலைவர்





எம். ஜி. ஆர். ஒருவர்தான் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் ஆணித்தரமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் இங்கு பல ஏழை எளியவர்களுக்கு நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற பல பொருட்களுக்கு வரிகளை ரத்து செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட உன்னதத் தலைவர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் அண்ணா கண்ட சமதர்மவாதியாக, காந்தி கண்ட இராம ராஜ்யத் தலைவராக, சோஷலிச தத்துவாதியாக, கம்யூனிஸ்ட் சித்தாந்த பொதுவுடைமைப் பூங்காவாக விளங்குகின்ற புரட்சித் தலைவரின் புனித ஆட்சியைப் பலதரப்பட்ட மக்களும் போற்றிப் புகழ்கின்றார்கள். கடலிலிருந்து அலையைப் பிரிக்கலாம்; மலரிலிருந்து மணத்தைப் பிரிக்கலாம்; கதிரவனிலிருந்து ஒளியைப் பிரிக்கலாம்; ஆனால், தமிழ் மக்களிடமிருந்து புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைப் பிரிக்க முடியாது என்று கூறிக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பலயிடங்களிலே வறட்சி ஏற்பட்டிருக்கிறது அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் மக்கள் மழையின்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அந்தப் பகுதியை வறட்சிப் பகுதியாக அறிவித்து நல்ல பல நன்மைகளைச் செய்வதற்கு தமிழக அரசு உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த அவசர நிலையிலும் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கு, நன்றியைக் கூறி, முடித்துக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசுகின்ற பொழுது இந்த அரசு சர்வாதிகார அரசு என்று நான் குறிப்பிட்டதாகச்சொன்னார்கள். நம்முடைய அமைச்சரவர்கள், உள்ளாட்சித் துறை/யூனியன் தலைவர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பொழுது உங்கள் சக்தியெல்லாம் எங்களிடத்தில் இருக்கிறது என்பதைப் போல ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அதைக் கண்டிக்க வேண்டுமென்றுதான் சொன்னேனே தவிர, சர்வாதிகார ஆட்சி என்று நான் குறிப்பிடவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் ஏதோ அறிக்கை கொடுத்ததாக அம்மையார் அவர்கள் சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) உள்ளாட்சித் துறை என்று சொன்னார்கள். அதனால் சொல்கிறேன்.

திருமதி டி. யசோதா : உள்ளாட்சித்துறை அமைச்சருடைய கையிலே இருக்கிறது என்ற பாணியிலே ஒரு அமைச்சர் சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கையிலே அந்த அதிகாரம் இல்லை, அரசிடம் அந்த அதிகாரம் இருக்கிறது. அதற்காக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யப்படும் என்று கருதத் தேவை இல்லை. உள்ளாட்சிகள் தமிழக அரசுக்குக் கட்டுப்பட்டது என்ற கருத்தைச் சொல்வதற்காகச் சொல்லப்பட்டதே தவிர வேறல்ல.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவரவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை இங்கே சபையிலே வைத்த நம்முடைய நிதியமைச்சரவர்கள் இப்பொழுது அவையிலே இல்லாதிருந்தாலும் கூட, இங்கே உட்கார்ந்திருக்கக் கூடிய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களின் மூலமாக இந்தக் கருத்துக்கள் போகும் என்ற நம்பிக்கையில், உங்கள் மூலமாக சில கருத்துக்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இங்கே வைக்க விரும்புகிறேன். மொத்த வருமானம் 2,674.11 கோடி ரூபாய், மொத்தச் செலவு 2,450.86 கோடி ரூபாய், மூலதனக் கணக்கிலான செலவையும் சேர்த்துக் கொள்கிறபோது பற்றாக்குறை 12.24 கோடி ரூபாய். இவ்வாறு பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. நான் எடுத்து உடனேயே சொல்லிவிட விரும்புகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கை வெளிச்சம் தராத விளக்காக, கரை தாண்டப் பயன்படாத ஒரு காகிதக் கப்பலாக, சகாராவைத் தாண்ட இயலாத கிழட்டு ஒட்டகத்தைப் போல இருக்கிறது என்பதை நான் ஆதாரத்தோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் வழக்கமாகத் தன்னுடைய பதிலுரையிலே சொல்லுவார்கள். ' இந்து ' பத்திரிகையும், ' எக்ஸ்பிரஸ் ' பத்திரிகையும், மற்றும் சில பத்திரிகைகளும் எங்கள் பட்ஜெட்டைப் பாராட்டியிருக்கின்றன பார்த்தீர்களா என்று அவருக்கே உரிய பாணியில் கேட்பார்கள். ' இந்து '' பத்திரிகை எடிட்டோரியலை நானும் படித்துப் பார்த்தேன். அதைப்போலவே, எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலேயும் வந்திருக்கிற எடிட்டோரியலையும் படித்துப் பார்த்தேன். எக்ஸ்பிரஸ் பத்திரிகை தெளிவாகச் சொல்கிறது. மதுவிலக்கு அமல்



படுத்தப்படும் என்ற அறிவிப்பு, கிருஷ்ணா நதித் திட்டம், குறிப்பாக வீடு கட்டும் திட்டம் பற்றிய விளக்கம் ஆகியவை சந்தேகத் கருமேகங்களை உருவாக்கி இருக்கின்றன என்ற கருத்தை எழுதுகிறார்கள். '' இந்து '' பத்திரிகை, இவ்வளவு பக்கங்களை கொண்ட பட்ஜெட்டைப் படித்துப் பார்த்து விட்டு, கடைசியாக தொழில் வளர்ச்சி பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒருவேளை , நான் சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரன் ஏதோ சொல்கிறான் என்று நீங்கள் வருத்தப் படலாம். ஆனால், நீங்கள் நேற்று வரை ஆதாரம் காட்டிய அந்தப் பத்திரிகைகளே, இன்றைக்கு மக்கள் கருத்தைப் பிரதி பலிக்கிற விதத்திலே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-50)

அடுத்து, இங்கே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். குறிப்பாக, எங்களுடைய தலைவர் கலைஞரை மையமாக வைத்து, பல பிரச்னைகளைப் பேசினார்கள். அவருடைய மழலைப் பேச்சை நான் மகிழ்ச்சியோடு கேட்டு ரசித்தேன். ஆனால் அவர் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கிறார் தேர்தல் முடிவிற்குப் பின்னால் என்பதை நான் உணர்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். மரியாதைக்குரிய துணை சபாநாயகர் அவர்களே, இப்பொழுது உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது. நம்முடைய மதிப்பிற்குரிய சகோதரி, சட்டமன்ற உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் நன்றி தெரிவித்ததைப் போல, நானும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களுக்கு, ஜனநாயகத்தை நேசிப்பவன் என்ற முறையில், தி.மு. கழகத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இருளடைந்த அந்த ஜனநாயக மாளிகைக்குள் விளக்கேற்றி வைக்கப்படுகின்ற ஒரு காரியம் இப்பொழுது மக்கள் மன்றத் தீர்ப்பால் நடைபெற்றிருக்கின்றது. அதற்கான ஒரு வாய்ப்பை, நீண்டகால இடைவெளிக்குப் பிறகு, அளித்தமைக்காக, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உள்ளாட்சித் தேர்தல் முடிவடைந்ததற்குப் பிறகு, ஏறத்தாழ, 1½ இலட்சம் பேர்கள்—அவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும்—தமிழ்நாடு முழுவதும் புதிய பொறுப்புக்கு வந்திருக்கிறார்கள். உறுப்பினர்களாக, தலைவர்களாக, அரசியல் இயக்கங்கள் தேர்தல் களத்திலே வெற்றி பெறு

வதும் தோல்வி பெறுவதும் சாதாரணமான விஷயம். அதைப் பற்றி நாங்கள் அன்றைக்கும் கவலைப்படவில்லை, இன்றைக்கும் கவலைப்படவில்லை. அன்று வந்ததும் அதே நிலா. இன்று வந்ததும் அதே நிலா என்ற நிலைதான், எங்களைப் பொறுத்தவரையில் தோல்வியாக இருந்தாலும் வெற்றியாக இருந்தாலும். நமது மரியாதைக்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், தேர்தல் முடிவுகள் வந்தவுடனே, தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்கள் பதவி ஏற்கிற நேரத்திலே, நான் அந்த உறுப்பினர்களுக்கெல்லாம் வாழ்த்து சொல்கிறேன் என்று சொன்னார்கள். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். தேர்தல் நல்ல முறையிலே நடைபெற்று முடிந்திருக்கிறது ; கட்சி மாச்சரியங்களை எல்லாம் மறந்து, ஒத்துழைப்போடு, மக்களுக்கு தொண்டு செய்கின்ற விதத்திலே, மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று ஏற்றுக்கொண்டு சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்றெல்லாம் அறிக்கை விட்டார்கள். அந்த அறிக்கையைப் பார்த்து, ஜனநாயக உணர்வோடு நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் அறிக்கை விட்டிருக்கிறார்கள் பெருந்தன்மையோடு என்று நான் மகிழ்ச்சி அடைந்தேன். அது தேர்தல் தீர்ப்பு வருவதற்கு முன்பாக.

இப்பொழுது நான் இந்த உரையைப் படித்துப் பார்க்கிறேன். ஏற்கனவே, இந்தச் சட்டமன்றத்திலே ஒரு மரபுகூட இருக்கிறது. சட்டமன்றத் தேர்தலிலே ஆளுங்கட்சி வெற்றி பெற்ற நேரத்திலே, 'மிகக் கம்பீரமாக, சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு ஆளுநர் உரையில்,'........ இம் மாநிலத்தில் பொதுத் தேர்தல்கள் மிக அமைதியான முறையில் நடந்தேறியிருக்கின்றன. பெருவாரியான மக்களும் முன் வந்து தங்கள் வாக்குரிமையை முறைப்படி பயன்படுத்தியுள்ளனர். மக்கள் வழங்கிய மாபெரும் தீர்ப்பை இந்த அரசு பெற்றிருக்கிறது என்றால், அதற்குக் காரணம், அரசு மேற்கொண்ட பல்வேறு கொள்கைகளின்பால் , மக்கள் கொண்டிருக்கும் உறுதியான ஆதரவும் மறுபடியும் நிலைநாட்டும் நம்பிக்கையும் ஆகும். அரசின் கொள்கைகளிடத்தே மட்டுமல்லாமல் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் தலைமையிடத்திலும் மக்கள் எவ்வளவு நம்பிக்கையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மீண்டும், நிலைநாட்டும். தன்மையதாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது எங்களுடைய வெற்றி தோல்விகளைப் பற்றிக்கூடச் சொல்ல வேண்டாம். பொறுப்பேற்றவர்களுக்கு வாழ்த்துச் சொல்கிறோம். ஒரு மிகப் பெரிய தேர்தல் நடைபெற்று இருக்கிறது. 'கட்சி மாச்சரியங்களுக்கு அப்பாலே சிறப்பாகச் செயல்படுவார்கள்' என்று அரசியல் நாகரிகம் கருதி, பெருந்தன்மை



கருதி, ஜனநாயக மரபு பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே சொல்லியிருக்கக் கூடாதா என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் கன்னி யுத்தம் நடத்தினோம், தோற்றுப் போனோம், பயிற்சி இல்லாமல் இருந்து விட்டோம், புதுமுகங்களைப் போட்டோம், கொள்கைப் பரப்புச் செயலாளர் தேர்தல் களத்திற்குப் போகவில்லை, திருட்டு ஓட்டு போட்டு விட்டார்கள், வாக்காளர் பட்டியல் 25 சதவீதம் தான் என்ற இந்த வாதங்கள் ஒருபுறம் இருக்கட்டும். நான் அவை பற்றி சொல்ல விரும்பவில்லை. ஆனால், மரபு காப்பாற்றப்படவில்லையே என்று நான் வருத்தம் தெரிவிக்கிறேன்.

அதே நேரத்திலே, வெற்றி பெற்று விட்டோம் அல்லது தோல்வி அடைந்து விட்டோம் என்ற பிரச்சினைக்கு அப்பாலே தொடர்ந்து இந்த மன்றத்திலே சென்னை மாநகராட்சித் தேர்தல் நடைபெற வேண்டுமென்று நாங்கள் கேட்கின்றோம். அடையாளக் கார்டு தரப்படும், என்று ஒரு காரணம் சொன்னீர்கள். போட்டோ எடுக்கப்பட்டு அடையாள அட்டை வாக்காளர்களுக்குக் கொடுக்கப்படும் என்று ஒரு காரணம் சொன்னீர்கள். மஸ்டர் ரோல் வழக்கு இருக்கிறது என்று காரணமாகச் சொன்னீர்கள். இப்பொழுது புதிதாக நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லிய செய்தியை இந்து பத்திரிகையிலே பார்த்தேன். வாக்காளர் பட்டியலை சரி செய்ததற்குப் பிறகு தேர்தல் நடத்தப்படும் என்று சொல்கிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், அப்படியானால, வாக்காளர் பட்டியல் சரியாக இல்லை, தவறாக இருக்குமானால், அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகரீகமாக, ஜனநாயக மரபுப்படி சரியாகத்தான் நடந்தது, 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை உண்டு என்று நான்தான் உத்தரவிட்டேன் ; நான்தான் ரிவைஸ் செய்தேன், ஆனால் தப்பு நடந்து விட்டது,' அமைச்சர் ஆர்.எம்.வீ. அவர்கள் சொல்வது தவறு, உண்மை அல்ல என்று சொல்ல வேண்டும். அல்லது தவறு நடந்து விட்டது, பட்டியல் தயாரிப்பதில், என்று வருந்தம் தெரிவிக்க வேண்டும். அப்படியில்லாமல், வாக்காளர் பட்டியலை இன்னும் காரணமாகச் சொல்வது சரியாகாது.

மற்ற மாநகராட்சிச் சட்டங்களையெல்லாம் பார்த்து, சில திருத்தங்கள் செய்ய வேண்டியிருக்கிறது என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் சொல்லியிருப்பதாகப் பத்திரிசையிலே வந்திருக்கிறது. அவர் சொல்லியதா, அல்லது வேறு அமைச்சர் சொல்லியதா என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை. பத்திரிகையிலே அது வந்திருக்கிறது. இவ்வளவு வருஷ காலமாக பல முனிசிபாலிட்டி சட்டங்களைப் பார்த்திருக்கக் கூடாதா ? அதை இப்பொழுதுதான் பார்க்க வேண்டுமா ? அதையினால்,

[திரு. அ. ரகுமான்கான்] [1986 மார்ச் 19

வெற்றி தோல்வி என்ற பிரச்சினை கூடாது. அதெல்லாம் ரொம்ப சாதாரணமான விஷயங்கள். நாங்கள் தேர்தல் வெற்றி பெற்றதும் இறுமாந்திருந்ததில்லை, தோல்வி அடைந்ததும் வேதனைப்படவில்லை, அரிச்சந்திரன் மனைவி சந்திரமதியைப் போல ஒப்பாரியெல்லாம் வைக்கவுமில்லை.

ஆனால், நான் கேட்கிறேன். கோவை, மதுரை, சென்னை, மாநகராட்சிகளுக்கு எல்லாம் தேர்தலை நடத்துவதிலே தயக்கம் ஏன்? அவைகளுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் அங்கே போக வேண்டும். மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் இப்போதைய நிலைமை என்ன? நான் வழக்கமாகச் சொல்வது போல குப்பை குன்றுகளாக இருக்கிறது; சாக்கடை பெருக்கெடுத்து ஓடுகிறது; கழிவுநீர் வசதி இல்லை; கழிப்பிட வசதி இல்லை; விளக்குகள் சரியாக எரியவில்லை. அதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் எல்லாக் கட்சியினரும் பொது மக்களும்தான். ஆகவே, இந்தத் தேர்தலை இந்தக் கூட்டத் தொடரிலேயே அறிவிக்க வேண்டும். வெற்றி தோல்வி என்பது வேறு விவகாரம். குண்டலத்தோடு பிறந்தவர் எங்கள் புரட்சித் தலைவர் என்று நம்முடைய அமைச்சர் காளிமுத்து அவர்கள் பேசியதைப் பார்க்கும்போது இதற்காக நீங்கள் நிச்சயமாகப் பயப்படவில்லை என்று தெரிகிறது. வில்லோடு பிறந்தவள் சீதை; வெற்றியோடு பிறந்தவர்கள் நீங்கள் என்ற கருத்தை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன். ஆகவே, இதிலே வெற்றி தோல்வி முக்கியமல்ல, உடனடியாக தேர்தலை நடத்துங்கள்.

இன்னொன்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மாநில சுயாட்சி பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே சர்க்காரியா கமிஷன் அறிக்கையை இங்கே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே அமைச்சரவை விவாதத்திற்குப் பிறகு வைக்கலாம் என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த விவாதம் முடிந்திருக்கும். சர்க்காரியாவின் சந்தேகத்தைத் தீர்த்திருக்கும் என்று கருதுகிறேன். எனவே அந்த அறிக்கையை இந்த அவையில் வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரிலே ஈடுபட்ட தியாகிகளுக்கு 150 ரூபாய் உதவித் தொகை வழங்குவதுபற்றி ஒரு சட்டத்தை இங்கே நிறைவேற்றினீர்கள். பலர் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் எல்லோருக்கும் உதவித் தொகை வழங்கப்படவில்லை. அவர்களுக்கு எல்லாம் பத்து நாட்களுக்குள் தரப்படும் என்று சூளையில் அகில இந்திய அண்ணா தி.மு.க.-வைச் சேர்ந்த—எங்கள் கட்சியின் முன்னாள்



1986 மார்ச் 19] [திரு. அ. ரகுமான்கான்]

மாவட்டச் செயலாளர்—சீதாபதி அவர்களுடைய வீட்டில் நடந்த கூட்டத்தில் 3, 4 வருடங்களுக்கு முன்னரேயே கூறினார் முதலமைச்சர். ஆண்டுகள் பல உருண்டோடி விட்டன. அந்த 150 ரூபாய் இன்னும் தரப்படவில்லை.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போரிலே ஈடுபட்டு சிறை சென்றவர் அருமைச் சகோதரர் ரவிச்சந்திரன். 1965-லே சட்டக்கல்லூரியில் படிக்கும்போது எங்களோடு இருந்த தோழர் அவர். இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டு 1968 ஆம் ஆண்டில் சிறையில் இருந்தவர். அவருடைய மகள் சுஜரிதா மொயின் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துக்கொண்டிருக்கிறார். பிளஸ் 2-வில் சிறப்பாக மார்க் வாங்கியிருக்கிறார். நுழைவுத் தேர்விலும் சரியான மார்க் வாங்கியிருக்கிறார். ஆனால் எம்.பி.பி.எஸ். படிப்புக்கு அட்மிஷன் கிடைக்கவில்லை. உடனே ரவிச்சந்திரன் மெட்ராஸ் ஹைகோர்ட்டில் ஒரு ரிட் போடுகிறார். அதிலே அவர் கேட்டிருப்பது, தமிழ் பாதுகாப்பு வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சிறப்பு ஒதுக்கீட்டிலிருந்து, அந்தக் கோட்டாவிலிருந்து என் மகளுக்கு ஒரு இடம் கொடுங்கள்; நான் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சிறை சென்றவன் என்று கேட்டிருக்கிறார்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பின் சின்னமாக இருக்கிற இந்த சர்க்கார், தமிழை பாதுகாக்க இருக்கிற இந்த சர்க்கார் அரசாங்க வக்கீல் மூலம் நீதிமன்றத்தில் அபிடேவிட் பைல் செய்கிறது. அதிலே இந்தி எதிர்ப்புப் போரிலே ஈடுபட்டு சிறை சென்றவருடைய மகளுக்கு தமிழை பாதுகாக்க சிரமத்தை ஏற்றுக்கொண்டவர் என்று கருதி விசேஷ இட ஒதுக்கீடு கொடுக்க முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, இந்தியை எதிர்த்து சிறை சென்றவர் தமிழை பாதுகாக்கின்றவர் இல்லையாம். அதற்காக ஏற்பட்ட சிரமத்தை ஏற்றுக்கொண்டவர் இல்லையாம். சென்னை, உயர்நீதிமன்றத்தில் இந்தக் கருத்தைத் தெரிவித்த அரசாங்கத்திற்கு நன்றி.

கலைஞர் ஆட்சி இருக்கும்போது இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்ட தியாகிகளுக்கு 75 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டம் இருந்தது. அதை எதிர்த்து தளவாய் என்பவர் சுப்ரீம் கோர்ட்டில் கேஸ் போட்டார். சுப்ரீம் கோர்ட் என்ன தீர்ப்பு அளித்தது என்றால், இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டது தேசத் துரோகம், ஜனநாயக விரோத நடவடிக்கை, பிரிவினைப் போக்குக்கு இடமளிப்பது; அதற்கு ஊக்கமளிக்கக் கூடாது என்று கேவலப்படுத்தி, தீர்ப்பு அளித்தது. உடனே, தமிழ் பாதுகாப்பு வீரர்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற உணர்வோடு சொன்னார்கள். இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டவர்கள் தமிழ் பாதுகாப்பு வீரர்கள். அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று

ஒரு சட்டத்தையே இந்த அவையில் கொண்டுவந்து, 150 ரூபாய் உதவித் தொகை அளிக்க வேண்டுமென்ற அந்தச் சட்டத்தை நிறைவேற்றினார்கள். ஆனால், இன்றைக்கு ஹைகோர்ட்டில், இது வேறு, அது வேறு என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இரட்டை நிலைக்கு ஒரு முடிவு இல்லையா? ஒரு கொள்கையிலே உங்களுக்கு உறுதி இருக்க வேண்டாமா?

அதைப்போன்று இன்றைக்கு பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. கரூர்-திண்டுக்கல் அகல இரயில் பாதைக்கு போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை. மாஸ் ராப்பிட் ட்ரான்சிஸ்ட் ஸிஸ்டமான மயிலாப்பூர்-பீச் துரித இரயில் பாதைக்கு போதுமான தொகை ஒதுக்கப்படவில்லை. திருநெல்வேலி கூடங்குளத்தில் இரண்டாவது அனல் மின் நிலையம் அமைக்க பணம் ஒதுக்கப்படவில்லை. வட சென்னையில் அணு மின் நிலையத்திற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. நெய்வேலியில் மின்சார உற்பத்தியை அதிகமாக்க நிதி ஒதுக்கப்படவில்லை. அதைப் போன்று சேதுசமுத்திரத் திட்டம், காவேரி பிரச்சனை, கிருஷ்ணா குடிநீர் பிரச்சனை, பல்வேறு தொழிற்சாலைகள் எல்லாம் இருப்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

(நண்பகல் 12–00)

இன்னும் சொல்லப் போனால் இதுபோன்று பல்வேறு காரியங்களுக்கெல்லாம் மத்திய அரசு அனுமதி தராமல் இருக்கிறது. அப்படி இருந்தாலும் பரவாயில்லை. மத்திய அரசு பல்வேறு பொருட்களினுடைய விலையை உயர்த்தி இருக்கிறது. பெட்ரோல், மண்ணெண்ணெய், சமையல் எண்ணெய், சிமெண்ட், சோடா, பீடி, வெற்றிலைப் பாக்கு, துணி இப்படி பல்வேறு பொருட்களுக்கு விலையுயர்வை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதைக் கண்டித்து மேற்கு வங்க முதல்வர் திரு. ஜோதிபாசு அவர்கள் தன்னுடைய மாநிலத்தில் கதவடைப்பு நடத்துகிறார். அரசாங்கத்தின் சார்பாக போராட்டம் நடத்துகிறார். ஆனால் நமக்கு பல்வேறு பிரச்சனைகள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் விலைவாசியைக் கண்டித்து நீங்கள் போராட்டம் நடத்த வேண்டாம், ஒரு கண்டனமாவது தெரிவிக்க வேண்டாமா? ஒரு வருத்தமாவது தெரிவிக்க வேண்டாமா?

அதுமட்டுமல்ல, தொழிற்சாலைகள் எல்லாம் வேண்டும், அந்த அமைப்புக்கள் எல்லாம் வேண்டும் என்று கோரிக்கை வைக்க வேண்டாமா? கல்வி மாநிலப் பட்டியலிலிருந்து பொதுப் பட்டியலுக்குப் போய் இருக்கிறது. அது தப்பு என்று சொல்ல வேண்டாமா? இலங்கைத் தமிழர் பிரச்சனை இருக்கிறது. இன்றைக்கு இருக்கிற மத்திய சர்க்கார் தென்னாப்பிரிக்காவோடு டிப்ளமேட்டிக் ரிலேஷன்ஷிப்பை முறித்துக் கொண்டது போல்



இலங்கையோடும் முறித்துக் கொள்ள வேண்டும் என்று தெளிவாக உங்களால் சொல்ல முடியாதா? தீர்மானத்தை நிறைவேற்ற முடியாதா? பி.எல்.ஓ.—விற்கு அங்கீகாரம் செய்ததுபோல் அங்கீகாரம் செய் என்று கேட்க முடியாதா? உகாண்டாவிலே இருக்கக்கூடிய வட இந்தியர்களுக்கு ஒரு நிலை, இலங்கையிலே இருக்கக்கூடிய தமிழர்களுக்கு ஒரு நிலையா என்பது குறித்து வலியுறுத்திக் கேட்க முடியாதா? இலங்கைப் போராளி திரு. பாலசிங்கம் போன்றவர்களை நாடுகடத்தினால் அதை நீங்களும் ஆமாம் என்று ஆதரித்து எங்களைப் போன்றவர்களைக் கைது செய்து சிறையிலே அடைக்கிறீர்கள். இவ்வாறு அவற்றையெல்லாம் கண்டிப்பதற்குப் பதிலாக திருவையாறிலே நம்முடைய மரியாதைக்குரிய பிரதம அமைச்சர் அவர்களுக்கு நமது முதலமைச்சர் அவர்கள் வீணை கொடுத்தார்கள். வீணை கொடுக்கட்டும். ஆனால், தமிழகத்தின் வீணை நரம்புகள் அறுந்துவிட்ட நிலைமையில் இருக்கின்றனவே! எனவே, நான் கேட்கிறேன், அதை தயவு செய்து சிந்தித்துப் பாருங்கள். ஒரு அரசாங்கத்திற்கு ஒரு இன உணர்வு, ஒரு மொழி உணர்வு இருக்க வேண்டாமா? நமது மக்கள் பாதிக்கப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டாமா? வாளும், கேடயமுமாக மேடைகளில் முழங்கினால் மட்டும் போதுமா? ஒரு அரசாங்கத்தை எதிர்த்து நியாயத்திற்காகப் போராட வேண்டாமா?

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பகிங்கரமாக ஒரு அமைச்சர் பார்லிமெண்டிலே சொல்கிறார்**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பார்லிமெண்டில் அந்த சப்ஜக்டைப்பற்றிப் பேசியிருக்கிறார்கள். அந்த டிஸ்ப்யூட்டை இங்கே ரெய்ஸ் பண்ணவேண்டாம். நான் அனுமதியளிக்கவில்லை. அந்தப் பகுதியை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : முதலமைச்சர் அவர்களுடைய வீட்டில் 77 நாட்களாக டெலிபோன் தொடர்பு இல்லை என்று நான் கேள்விப்படுகிறேன். மக்களின் பணியை ஆற்ற வேண்டிய ஒரு முதலமைச்சரின் வீட்டிலே 77 நாட்களாக டெலிபோன் தொடர்பு இல்லை. அப்படி என்றால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் பல்வேறு பிரச்சினைகளை எப்படி தெரிவிக்க முடியும்? எல்லாவற்றையும் வயர்லெஸ் மூலம் தெரிவிக்க முடியுமா? போலீஸ் மூலம் காண்டாக்ட் பண்ண முடியுமா? ஒரு சர்க்காரை நடத்திச் செல்லக் கூடிய முதலமைச்சர் 77 நாட்களாகத் தொலைபேசித் தொடர்பு இல்லாமல் இருக்கிறார் என்று சொன்னால் இது ஒரு செயலற்ற சர்க்கார், நான்

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பங்க்ஷனிங் சர்க்கார், நான்-பெர்ஃபார்மன்ஸ் சர்க்கார் என்று சொல்வதில் எந்தவிதமான தப்பும் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், கிருஷ்ணா நதி நீர்த் திட்டம் சம்பந்தமாக. என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் இன்றைய தினம் இங்கே இல்லை. ஆனாலும் நிதியமைச்சர் அவர்கள் உரிய பதில் சொல்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பகீரதன் கங்கையைக் கொண்டு வந்தது போல் நாங்கள் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து விட்டோம் என்று சொன்னார்கள். 1976 ஆம் ஆண்டிலே, மறைந்த இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் தெளிவாக இந்தத் திட்டம் நிறைவேறும் என்று சொன்னார்கள். 1983-லே தான் ஒப்பந்தமே நிறைவேறியது. மகாராஷ்டிரம், கர்நாடகம், தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களின் செக்ரட்டரிஸ்-ம் கையெழுத்து போட்டார்கள். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் சார்பாக திரு. படேல் அவர்கள் அன்றைக்கு செயலாளராக இருந்தார், அவர் கையெழுத்து போட்டார். அதற்காக பெரிய விளம்பரம், பெரிய நிகழ்ச்சிகள் எல்லாம் நடைபெற்றது. ஆனால், இப்போது என்ன நிலைமை என்று கேட்டால் இந்தத் திட்டத்திற்கு 10 ஆண்டுகள் ஆகி விடும்போல் தெரிகிறது. தொழில் நுட்ப ரீதியாக இது இப்போது சாத்தியமா ? யார் கேட்பது ? நீர்ப்பாசனத்துறை அமைச்சர் சங்கரானந்த் ராஜ்ய சபையிலே கேட்கிறார். தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் திரு. உபேந்திரா அவர்கள இந்தத் திட்டம் எத்கனாமிக்கலாக சரியாக வருமா, ஜியாலிஜிக்கல் ரிப்போர்ட் கிடைக்கவில்லை, எனவே, அவை எல்லாம் சரியாக வந்தால் தான் மத்திய சர்க்காரின் அனுமதி கிடைக்கும் என்று சொல்கிறார்கள். வனப் பாதுகாப்புத் துறை அனுமதிக்கவில்லை ; வாட்டர் கமிஷன் அனுமதிக்கவில்லை ; பிளானிங் கமிஷன் அனுமதி கொடுக்கவில்லை. இந்தத் திட்டம் நிறைவேறுமா என்பதைப் பொறுத்த வரையில் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, அதாவது சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு. தேவ கவுடா அவர்கள் சட்டமன்றத்தில் பகிங்கரமாகத் தெரிவிக்கிறார். கர்நாடகத்தில் மட்டுமல்ல, மகாராஷ்டிராவிலும் தெரிவிக்கிறார்கள். ஆக, இது நடைபெறுமா, நடைபெறாதா என்பதிலேயே ஒரு தெளிவற்ற நிலைமை இருக்கிறது.

நான் கேட்கிறேன் என்று யாரும் தப்பாக எண்ண வேண்டாம். ஏற்கெனவே நீங்கள் அதற்கு 30 கோடி கொடுத்திருக்கிறீர்கள். இதே சபையிலே நான் கேட்டிருக்கிறேன் அதற்கு வட்டி என்ன ஆகிறது என்று. யாருடைய பணம், நம்முடைய நாட்டு மக்களின் வரிப்பணம். இந்தப் பணத்தில் 45 கோடி ரூபாயைக்





கொடுக்கப்போகிறோம் என்று சொல்கிறீர்கள். நான் கேட்கிறேன். சத்திரத்சோற்றுச்கு யார் இந்தத் தாத்தய்யங்கார் என்று. மக்களின் வரிப்பணத்தை எடுத்துக் கொடுக்க ஒரு அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அந்தத் திட்டமே நடைபெறுமா, நடைபெறாதா என்று சொல்கிறபோது நீங்கள் அந்தப் பணத்தைக் கொடுக்கலாமா ? சட்டமன்றத்திலே தாக்கல் செய்யப்பட்டிருக்கிற பட்ஜெட்டிலே —உங்களுக்கே தெரியும்— அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. அப்படியே இன்னொரு கருத்தையும் சொல்லிவிடுகிறேன். நிதியை ஒதுக்கியிருந்தாலும் கூட நாம் கொடுக்கின்ற பணத்தைத்தானே அவர்கள் செலவழித்ததாகக் காட்டக்கூடிய சூழ்நிலை இருக்கிறதேதவிர, அவர்கள் ஏதாவது அதற்காகஒதுக்கீடு செய்திருக்கிறார்களா? அப்படி ஏதாவது காரியம் நடந்திருக்கிறதா நமது முதலமைச்சர் கெட்டிக்கார அண்ணனாக இருப்பார் என்று நினைத்தோம். ஆனால் ராமாராவ் அல்லவா இன்றைக்கு கெட்டிக்கார தம்பியாக இருக்கிறார்கள். திட்டத்தை நிறைவேற்றாத நிலையிலேயும் ராமாராவ் அல்லவா நம்முடைய பணத்தை எல்லாம் மேலும் பெறுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இது எந்த வகையிலே நியாயம் ? ஆகவே தான் நான் இந்த அரசாங்கத்தை தெளிவாகக் கேட்க விரும்புகிறேன். ஏமாற்றாதீர்கள், கிருஷ்ணா நதிநீர் திட்டம் உண்டா இல்லையா என்று திட்டவட்டமாகச் சொல்லிவிடுங்கள்.

ஆளுநர் உரையிலே நிலத்தடி நீரைப் பயன்படுத்தி 98 கோடி ரூபாய் செலவிலே ஒரு குடிதண்ணீர் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படியானால் கிருஷ்ணா நதிநீர் திட்டமும் உண்டு, இந்த 98 கோடி ரூபாய் திட்டமும் உண்டு என்று சொல்லுகிறீர்களா ? அல்லது இதைத்தான் அதுவாகக் குறிப்பிடுகிறீர்களா என்று எனக்குச் சந்தேகம் எழுகிறது. ஆனால் வீராணம் திட்டத்தைப் பொறுத்தவரையில், அரசியலமைப்புச் சட்டத்தின்படி எதிர்க்கட்சிகளை வைத்து போடப்பட்ட கமிட்டியில் — பீசிபிள்—சாத்தியம் உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். இதிலே அப்படி எல்லாம் கிடையாது. இதிலே டெக்னிக்கல் விவகாரம் இருக்கிறது என்று சொன்னால், சபையிலே அதன் முழு ரிப்போர்ட்டையும் வையுங்கள், விவாதம் நடத்துங்கள், அதிலே ஏதாவது குறைகள் இருக்கிறதா என்று பாருங்கள். இருந்தால் நிவர்த்தி செய்ய முயலுங்கள். அதை விட்டு அரசியல் நோக்கத்திற்காக சென்னை நகர மக்களின் தலை எழுத்தோடு தயவு செய்து விளையாடாதீர்கள் என்று சென்னை மக்களின் சார்பாக உங்கள் மூலமாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

இன்னொன்றையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மிக முக்கியமான ஒரு பிரச்சினையை இங்கே நான் கொண்டு வரவிரும்புகிறேன். அதைப்போலவே ரேஷன் அரிசியின் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. 20 கிலோவாக இருந்தது, 12 கிலோவாக ஆகி, 6 கிலோவாக ஆக்கப்பட்டு மீண்டும் 12 கிலோவாக ஆகியிருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்கள் வீடு கட்டுவதற்காக பணம் கடன் வாங்கி இறந்துபோனால், பாக்கியை வட்டியோடு தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது அவர்களிடத்திலேயிருந்து வாங்குகிற பணத்தில் மூலமாகத்தானே தவிர அதிலே ஒன்றும் புரட்சி இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுக்கு இரு வழிப் பயணச் சலுகை வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதுபோல் இன்னும் பல்வேறு வாக்குறுதிகள் இருக்கின்றன. அவர்களுக்கு செய்ய வேண்டிய பணிகள் பல இருக்கின்றன. புரொபஷனல் டாக்ஸ் ரத்து செய்யப்படும் என்று தேர்தல் அறிக்கையில் சொல்லி இருந்தார்கள். அது ரத்து செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.

அதைப்போலவே ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் உள்ள வழக்குகள் தாம் வாபஸ் வாங்கப்பட்டிருக்கிறதே தவிர, என்.ஜி.ஓ.-க்கள் 32 பேர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கதி என்ன ? அடுத்த தேர்தலுக்கு முன்பு அவைகளையும் ரத்து செய்வீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. ஆனால் அதை தேர்தலையொட்டி செய்வதற்குப்பதிலாக, இடைக்காலத்திலும் அத்தகைய நல்ல காரியத்தைச் செய்யலாமே என்று கேட்டு அந்த சஸ்பெண்டுகளை நீக்கி உத்திரவிட வேண்டும் என்று உங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பற்றி பெரிய பிரச்சாரம் செய்தார்கள். என்ன பிரச்சாரம் என்று கேட்டால், இந்த திட்டத்திற்கு ஏறத்தாழ 3 ஆயிரம் கோடி ரூபாய் செலவாகும். ஆனால் நீங்கள் என்ன சொன்னீர்கள் என்றால், நாங்கள் வீடுகட்டுகிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நரிக்குறவர்களுக்கு வீடு கட்டுகிற திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். அதைப் போலவே பிற்படுத்தப்பட்ட நலிந்த பிரிவினர்களுக்கும் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி பிரச்சாரம் செய்தீர்கள். நான் உங்களைப் பார்த்து பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கானச் சாத்தியக் கூறு இருக்கிறதா ? எங்கேனும் இந்த பட்ஜெட் உரையில் அது பற்றி சொல்லியிருக்கிறார்களா? இதில் நான் இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த பட்ஜெட் உரையிலே வேறு ஹவுசிங் ஸ்கீமிலே இருக்கக்கூடிய நிதி ஒதுக்கீட்டைப் பற்றித்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறு இல்லை. அதிலே நாவலர் அவர்களுக்கே உரிய பாணியில் சொல்லியிருக்கிறார்கள்.





ஏதோ ஆளுநர் உரையிலே சொல்லியதைத்தான் நிதி நிலை அறிக்கையிலும் சொல்லப் படுவதைப் போல, மூன்று ஆண்டுகளில் 30 இலட்சம் வீடுகள் ; ஒருவீட்டுக்கு 10 ஆயிரம் செலவு ஆகும் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதைப்பற்றி பத்திரிகையிலே கேட்ட போது 'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்று சொன்னார்கள். ஆனால் இந்த திட்டம் வெறும் தேர்தல் அறிக்கையாகவே போய்விட்டது. பல வாக்குறுதிகள் அது மாதிரி கொடுக்கப்பட்டது. பிரசவமான தாய்மார்களுக்கு சத்துணவு கொடுப்பது, விவசாயக் கடன் ரத்து, மலிவான விலையில் தாலிக்கு தங்கம், குடும்பத்தில் ஒருவருக்கு வேலை ; அதுமாதிரி ஹஜ் யாத்திரை செல்பவர்களுக்கு தங்குவதற்கு விடுதி கட்டும் திட்டம், அதே போன்று தாய்மார்களுக்கு வசதியாக வீடுகளுக்கே சென்று குறைந்த விலையில் காய்கறிகள் மற்றும் அத்தியாவசியப் பண்டங்களை கொடுப்பது போன்ற எவ்வளவு திட்டங்களைக் கொடுத்தீர்கள். நான் கேட்கிறேன், அதனுடைய கதையும், இந்த வீடு கொடுக்கின்ற திட்டத்தின் கதையும் ஒன்றாகிவிட்டதோ , அதற்கு நீங்கள் கல்லறை கட்டிவிட்டீர்களோ என்று கூட வருத்தமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள். 23 நிமிடங்கள் ஆகிவிட்டன.

திரு. அ. ரகுமான்கான் : முடித்துவிடுகிறேன். இன்னும் ஒரு நிமிடம். அதைப்போலவே தான் உங்கள் மதுவிலக்குக் கொள்கையும். சாராயக் கடைகள் மூடப்படும் என்று சொல்லுகிறார்கள். அப்படி அதை அமல் நடத்தினால், அதாவது சாராயக் கடைகளை மூடினால் கருணாநிதி அரசியலை விட்டு வெளியேறுவாரா என்று கேட்டார்கள். இந்தி திணிப்பை நிறுத்தி விட்டால் நமது முதலமைச்சர் அரசியலை விட்டு வெளியேறுவாரா என்று யாராவது கேட்டார்களா ?

[பிற்பகல் 12-10]

அல்லது விலைவாசியை கட்டுப்படுத்துவேன் என்று அண்ணா அவர்கள் சொல்லியபோது, தலைவர் காமராசர் அவர்களும், பெரியவர் பக்தவத்சலம் அவர்களும், விலைவாசியைக் கட்டுப் படுத்திவிட்டால் அண்ணா அரசியலை விட்டு வெளியேறலாம்

என்று சொன்னார்களா ? ஏன் சொல்லவில்லை ? பெரியவர் காமராசர் ஏன் கேட்கவில்லை ? அவர்கள் விவரமானவர்கள். நான் கேட்க விரும்புகிறேன். மதுவிலக்குச் சட்டத்தை அமல் நடத்துவேன் என்று சொன்னவர்கள் நீங்கள்தான். மது அரக்கனை ஒழிப்பேன் என்று சொன்னது நீங்கள்தான். தாய் மீது சத்தியம் வழங்கியது நீங்கள் தான். கள்ளுக் கடைகளை திறந்ததும் நீங்கள்தான். அரசாங்கம் நடத்தும் என்று சொன்னது நீங்கள்தான். பழையபடி வரும் 1987-ஆம் ஆண்டு சனவரி முதல் தேதியிலிருந்து அமல் நடத்துவோம் என்று சொன்னது நீங்கள்தான். நீங்கள் சொன்னதைச் செய்யுங்று என்று நாங்கள் கேட்டால், கருணாநிதி அரசியலை விட்டு வெளியேறுவாரா என்று கேட்டால் எப்படி ? கருணாநிதி அவர்களை தமிழ்நாட்டின் அரசியலிலிருந்து எந்தக் கொம்பனும் வெளியேற்ற முடியாது.

There is no Hamlet without the prince of Denmark ஆகவே நான் சொல்ல விரும்புகிறேன். தேர்தல் வெற்றி தோல்வி என்பது சகஜம். சாதாரண நபர்கள் கூட பதவிகளுக்கு வந்து விடலாம். ஜனநாயகத்தினுடைய பலமும் பலகீனமும் அது தான். இதையெல்லாம் புரிந்து கொண்டு தான் ஒரு அரசியல் இயக்கத்தில் இருப்பவர்கள் இருக்க வேண்டும்.

அடுத்து நம்முடைய பினான்ஸ் செகரிட்டரி அவர்களை கேட்கிறபோது சொல்கிறார். விஸ்கி, பிராந்தி கடைகள் மூடப்படுமா என்று கேட்கிறார்கள். மூடப்படாது என்று அவர் பதில் சொல்கிறார். இது என்ன பாதி மீசை ? எடுத்தால் மீசை முழுவதையும் எடுக்க வேண்டும். பாதி மீசை வைத்தால் சரியாக இருக்காது. விஸ்கி, பிராந்தியை திறந்து வைத்துவிட்டு கள்ளு , சாராயத்தை மட்டும் நாங்கள் மூடுகிறோம் என்று சொல்வதற்குப் பெயர் மதுவிலக்கா ? எனக்கு இன்னொரு சந்தேகம். மதுவிலக்கு இப்போது இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் பெர்மிட் வாங்கித்தான் குடிக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் ஊர் கடத்துகிற சட்டம் அமலில் இருக்கிறது. ஆனால் நாவலர் மதுவிலக்கை அமல் நடத்தப் போகிறோம் என்று சொல்கிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது ? உங்கள் பெர்மிட் சிஸ்டம் என்னவானது ? ஊர் கடத்துகிற சட்டம் என்னவானது ? அரசாங்கமே ஒப்புக்கொள்கிறது. என்ன அர்த்தம் ? மதுவிலக்கு என்ற சட்டம், ஆனால் மதுவிலக்கு அமலில் இல்லை. மீண்டும் மதுவிலக்கைக் கொண்டு வருகிறோம். முரண்பாடே உன் பெயர் தான் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியா என்று வருத்தத்தோடு கேட்க வேண்டியிருக்கிறது. கடைசியாக துணைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு ஒரே ஒரு கருத்தைச் சொல்லி விடை பெறுகிறேன். இது முக்கியமானது. அரசாங்கத்திற்கு இது அவசியம் தெரிந்தாக வேண்டும். ஏனென்





றால் அரசாங்கத்தின் கவனத்திற்கு இது தெரியாத சூழ்நிலை இருக்கக் கூடாது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன். துணைத்தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு வழக்கறிஞர்., அந்த முறையில் அவசியம் இதை நீங்கள் கேட்க வேண்டும். வேல் முருகன் என்று ஒருவர் ; பி.எஸ்ஸி., பட்டதாரி. கோவையைச் சேர்ந்தவர். பிரிண்டிங் டெக்னாலஜி, அச்சுத் தொழில் நுட்ப கல்லூரியில் அவருக்கு அட்மிஷன் கிடைக்கிறது. 1983– ஆம் ஆண்டில் பர்ஸ்ட் கிளாசில் பாஸ் பண்ணுகிறார். பாஸ் பண்ணியவுடனே லித்தோகிராபி பிரிண்டிங் மேல் படிப்பிற்கு அப்ளிகேஷன் போடுகிறார். பர்ஸ்ட் கிளாஸ் பாஸ் பண்ணிய அவருடைய அப்ளிகேஷன் ரிஜெக்ட் ஆகிறது. அவரைப் போலவே பலரும் ரிஜெக்ட் ஆகிவிடுகிறார்கள். உடனே ஹைகோர்ட்டில் ரிட் போடுகிறார்கள். ஹைகோர்ட்டிலே அவருடைய கேஸ் தோற்றுப் போய்விடுகிறது. என்ன காரணமென்று கேட்டால், அவர் குறைந்த மார்க் வாங்கி இருக்கிறார். இந்த டிப்ளாமா கோர்சில் சேர்வதற்கு தேவையான மார்க் இல்லை. இப்படி கோர்சில் மார்க் லிஸ்டை கோர்ட்டில் கொண்டு போய் தாக்கல் செய்தார்கள். அதைப் பார்த்த நீதிபதி சொல்லிவிட்டார்கள். சரி, மார்க் குறைவாக இருக்கிறபோது ரிட் போடுவது எப்படி நியாயம் ? அவருக்கு தகுதியில்லை என்று கோர்ட்டிலே போட்ட ரிட்டை தள்ளுபடி செய்துவிட்டார்கள். உடனே அவர் என்ன செய்தார் என்றால் சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார். சுப்ரீம் கோர்ட்டிலே ஒருவிசேஷம் நடந்தது. ஹைகோர்ட்டிலே பிரிண்டிங் டெக்னாலஜியின் டைரக்டர் திரு. சீனிவாசன், இன்னொருவர் புரபசர் மோகனராவ், இந்த இரண்டுபேரும் அபிடபிட் தாக்கல் செய்தார்கள். ஒரு மார்க் பட்டியலையும் தாக்கல் செய்திருக்கிறார்கள். இவர் தான் அன்சாரி என்பவைரக் கூட — சீனியாரிட்டி என்றும் கருதாமல் மிக முக்கியத்துவம் கொடுத்து கொண்டு வந்த சீனிவாசன் என்பதை நான் நினைவுப்படுத்த விரும்புகிறேன். தகுதியின் அடிப்படையில், வேறு யாரும் கறுப்புக் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்துவிட வேண்டாம். தகுதியிருந்தும் இப்படி மாற்றினார்கள். ஆனால் சுப்ரீம் கோர்ட்டிலே என்ன நடந்தது என்று கேட்டால், அந்த மாணவர் உண்மையான மார்க் லிஸ்ட்டை போட்டோ-ஸ்டட் காப்பி எடுத்துக்கொண்டு வந்து அனெக்ஷர்-5 என்று தாக்கல் செய்தார். நீதிபதி பகவதி அவர்கள் அதைப்பார்த்து விட்டு மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தின் சார்பாக பராசரன் அவர்கள் வழக்கறிஞர். கவுண்டர் பைல் பண்ணுங்கள் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய அட்வொகேட் பராசரன் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் கவுண்ட்டர் பைல் பண்ணுவதாக இல்லை என்று சொல்லிவிட்டார்கள். அப்போது நீதிபதி கோர்ட்டிலே கேட்டிருக்கிறார்கள். இதிலே எது உண்மையான மார்க் பட்டியல் ?

எது உண்மையான ஹேன்ட் ரைட்டிங் என்று கேட்டபோது, ஒரு பிரிண்டிங்க் டெக்னாலஜி இன்ஸ்ட்டிட்யூசனில் இருப்பவர்கள், கோர்ட்டையே ஏமாற்றி, மார்க் பட்டியலைத் திருத்தி சுப்ரீம் கோர்ட்டிலே கொடுத்து, சுப்ரீம்கோர்ட்டிலே அது தப்பு. இர்ரெகுலாரிட்டி என்று அவர்களே ஒப்புக்கொண்டு அந்த பையனுக்கு மீண்டும் தண்டனை கொடுப்பதற்கு பதிலாக, கல்லூரியிலே சேர்த்துக்கொள்வதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். அன்-கன்டிசன் அப்பாலஜி கேட்டுக் கொண்டார்கள். இர்ரெகுலாரிட்டி என்று ஒத்துக்கொண்டார்கள். ஆகவே, இடம் கொடுங்கள் என்று சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு கொடுத்திருக்கிறது. நான், அந்த அப்பிடவிட், அந்த டைரக்சன்-அரசாங்கத்தின் சார்பாக அங்கே மறுத்து விட்டு, ஓப்பன் கோர்ட்டிலே அப்பாலஜி கேட்டார்களே, அந்த சீனிவாசன், டைரக்டர், அந்தக் கல்லூரியினுடைய பிரின்சிபால், மோகனராவ் அவர்கள் போட்டிருக்கக்கூடிய கவுண்டர் அப்பிடவிட், நான் சொல்கிற நபர் போட்ட பெட்டிஷன், ஆகிய அத்தனையையும் நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். ஆதாரத்திற்கு யாரும் யோசிக்க வேண்டாம். ஆகவே, நான் கேட்கிறேன். இதிலே வேடிக்கை என்னவென்றால், மகாராஷ்டிரத்திலே உள்ள முதலமைச்சர் மார்க் பட்டியலைத் திருத்தியதற்காக பதவியை இழந்தார்கள். ஆனால், ஒரு டைரக்டர், ஒரு பிரின்சிபால், இவர்களுக்கு நம்முடைய அரசாங்கம் என்ன செய்கிறது தெரியுமா ? அந்த பிரின்சிபால் மோகன்ராவிற்கு நல்லாசிரியர் விருது கொடுக்கிறார்கள். எவ்வளவு பெரிய கொடுமை? இதற்கும் ஆதாரம் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, இதில் இருந்து என்ன தெரிகிறது என்று கேட்டால், நான் பகிங்கரமாகவே குற்றம் சுமத்துகிறேன். நீங்கள் நீதி விசாரணை செய்யுங்கள். கல்வி அமைச்சருக்கும், டைரக்டருக்கும், பிரின்சிபாலுக்கும், அந்த மார்க் பட்டியல் திருத்தியதிலே சம்பந்தம் இருக்குமோ என்ற அச்சம் எனக்கு எழுகிறது. அதற்கான ஆதாரங்களைக் கொண்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்திலே தருவதற்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கொடுங்கள், நாங்கள் பார்க்கிறோம் என்று சொல்லாமல் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். நிரூபிக்கப்பட்டால், பதவியை ராஜினாமா என்று பகிங்கரமாக நீங்கள் சொல்ல வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் மருத்துவக் கல்லூரி சம்பந்தமாக ஒரு குற்றச் சாட்டு, இதே சபையில் எங்களுடைய தலைவர் அவர்களால் சொன்னபோது, அதிகாரிகள் ரெக்கார்டுகளை மாற்றினார்கள். அதிகாரிகள், டேட்டை மாற்றி, கையெழுத்துப் போட்டார்கள். என்ன தப்பு என்று நீதிபதி கேட்கிறபோது, அது எனக்குத் தெரியாது, அதிகாரிகள் செய்துவிட்டதாகச் சொன்னார்கள். யார் அந்த அதிகாரி ? 8 ஆண்டுக் காலமாக கண்டு





பிடிக்க முடியவில்லையா ? நடவடிக்கை இல்லையா ? ஆகவே இப்படிப்பட்ட ஊழல்கள் பரவலாக இருக்கின்றன. இன்னும் $1\frac{1}{2}$ மாதம் இருக்கிறது. கதை தொடரும், நன்றி வணக்கம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, வெறும் கதை என்று சொன்னதற்காக நன்றி.

திரு. அ. ரகுமான்கான் : நான் விளக்கம் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் கதை என்று சொன்னீர்கள். அதற்காகச் சொன்னார்கள். (குறுக்கீடு) திரு. செம்மலை அவர்கள் பேசுவார்கள்.

*திரு. செ. செம்மலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் இந்த அவையில் வைக்கப்பட்டு இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெறுகின்ற விவாதத்தில் கலந்து கொண்டு ஒரு சில கருத்துக்களை நான் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்லிலே வடிக்கப்பட்ட ஒரு அழகான சிலையைப் பார்க்கிறபோது, வேறு எந்தச் சிற்பியாலும் இந்த அளவிற்கு சிலையை வடிக்க முடியாது என்று நமக்குச் சொல்லத் தோன்றும். அந்த வகையில் நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைச் சிறப்பாக உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு முறை தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். '' கோட்டையிலே போடப்படுகிற திட்டங்களுடைய பலன்கள், தமிழ்நாட்டின் கோடியிலே இருக்கக்கூடிய குடிசைகளுடைய கதவுகளைத் தட்ட வேண்டும்'' என்று சிறப்பாக எடுத்துச் சொன்னார்கள். அந்த வகையிலே நல்ல பல நற்திட்டங்களை உள்ளடக்கிய ஒரு நிதிநிலை அறிக்கையாக நம்முடைய நாவலர் அவர்கள் தயாரித்து இந்த அவைக்கு இதை அளித்து இருக்கிறார்கள் என்பதை நாம் இந்த நேரத்தில் மனம் விட்டுச் சொல்லியாக வேண்டும். பல இடங்களில் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய எண்ணங்களை எழுத்து வடிவமாக நம்முடைய நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே வடித்துகாட்டி இருக்கிறார்கள். இவ்வாறு சிறப்பாக தயாரிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை இன்னும் சிலர் குறை சொல்லிக்கொண்டு இருக்கிறார்ள்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் அப்படி குறை சொல்கிறவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புவது இதைவிட சரியான திட்டமாக, இதைவிட நல்ல திட்டமாக, எந்தத் திட்டங்களையாவது உங்களால் தரமுடியுமா? என்று அவர்களைப் பார்த்து நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

(பிற்பகல் 12—20)

நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொண்டார்களோ, இல்லையோ, நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் எடுத்துச் சொன்ன, கடைசியாக அவர்கள் சொல்கிறபோது, சொன்ன விவாதங்கள் சூடற்றதாக, ஒளி மிகுந்தனவாக அமையட்டும், என்ற அந்த ஒரு கருத்தை அவர்கள் ஏற்று, சூடு இல்லாத ஒரு விவாதத்தை இன்றைக்கு அவர்கள் எதிர்க்கட்சி என்ற அளவிலே துவக்கி இருக்கிறார்கள் என்பதற்கு நான் இந்த நேரத்திலே அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அத்தோடு ஒன்றைச் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் உள்ளாட்சி மன்றத் தேர்தலைப் பற்றியும், நடந்து முடிந்த தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பெற்ற பிரதிநிதிகளுக்கு நன்றி சொல்லக்கூடிய வாசகங்கள் இல்லை என்றும் சொன்னார்கள், வாய் அளவிலே மகிழ்ச்சியையும், நன்றியையும் சொல்வதை விட நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக்கொண்ட அந்த அமைப்புகளின் நிர்வாகம் செம்மையாக நடைபெற அவைகளின் நிதிச் சுயசார்பு நிலையை மேம்படுத்துவதற்கு அந்த அமைப்புக்களுக்குக் கூடுதல் நிதி ஆதாரங்களை அளிக்கும் வகையில், அனைத்து நகராட்சிகள் மற்றும் ஊராட்சி அமைப்புகளில் தற்போது இருந்துவரும் கேளிக்கை வரி மீதான கூட்டுக் கட்டணத்தை மேலும் 10 சதவீதம் அதிகரித்து, அவர்களுக்கு நிதி ஆதாரத்தை, நன்றி உணர்வோடு, மகிழ்ச்சியோடு, இதைக் குறிப்பிட்டு இருக்கிறார்களே, அதை அவர்கள் படித்துப்பார்த்து, அதைப் பாராட்டி இருக்க வேண்டாமா? என்றுதான் இந்த நேரத்திலே எனக்குக் கேட்கத் தோன்றுகிறது.

நம்முடைய மரியாதைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு ஆட்சியினுடைய இலக்கணமாக எடுத்துச்சொல்கிறபோது, "Tap the rich and pat the poor" என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இருக்கிற அரசியலமைப்புச் சட்டத்தினுடைய அதிகார வரையறைக்குட்பட்டு, "டேப் தி ரிச்" என்று சொல்கிற அந்த வாசகம் முழுக்க முழுக்க மத்திய அரசுக்கு பொருந்துவதாகவும், "பாட் தி புவர்" என்று சொன்ன அந்த





வாசகம் நம்முடைய மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டுக்குப் பொருந்துவதாக அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லியாக வேண்டும். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் இங்கே குறிப்பிட்டு சொன்னார்கள். மத்திய அரசினுடைய நிதி உதவியுடன் இந்த நிதி நிலை அறிக்கையை நீங்கள் இவ்வளவு சிறப்பாக தயாரிக்க முடிந்தது என்று சொன்னார்கள். கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள். நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். அவர்கள் சொன்ன வார்த்தையை ஏற்றுக் கொள்கிறேன். 100 கோடி ரூபாய் அளவிற்கு இந்த ஆண்டு கூடுதலாக நிதி ஒதுக்கிய மத்திய அரசுக்கு என்னுடைய நன்றி.

அதே சமயத்தில், இந்த கூடுதல் நிதியைப் பெற்றுத் தந்த நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், கேட்ட தொகை கிடைத்துவிட்டது. அல்லது கூடுதல் நிதி மத்திய அரசு கொடுத்து விட்டது என்று நாம் மகிழ்ச்சியில் இப்போது இல்லை. நான் மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அம்மையார் அவர்களைப் பார்த்து, கேட்பது, நமக்கு கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு மத்திய அரசிடம் இருந்து நமக்கு கிடைக்கப் பெற்றிருக்கிறதா என்பதை தயவு செய்து இந்த நேரத்திலே நாம் கட்சி உணர்வுக்கு அப்பாற்பட்டு சிந்திக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் போல, "டேப் தி ரிச்" என்று சொன்னதைப் போல, நிதி ஆதாரங்களில், எந்தெந்த நிதி ஆதாரங்களில் நிதி அதிகமாக பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதோ, அல்லது பணக்காரர்களிடமிருந்து வரியைப் பெறுகிற அந்தத் துறைகளை எல்லாம் அந்த ஆதாரங்களை எல்லாம் இன்றைக்கு மத்திய அரசு தன்னுடைய கையிலே வைத்துக் கொண்டு இருக்கிறது. உதாரணமாக எடுத்துக்கொண்டால், எக்சைஸ் டியூட்டி, கஸ்டம்ஸ், அதே போன்று இன்கம் டாக்ஸ் இப்படி அதிக வருவாய் ஈட்ட கூடிய அந்தத் துறைகள் எல்லாம் அவர்கள் கையிலே இருக்கிறது என்பதை தயவு செய்து அம்மையார் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மாநிலங்களைப் பொறுத்த வரையில், குசேலர்களாக இருக்கிற நிலைமைக்கு தள்ளப்பட்டு இருக்கிறார்கள். மத்திய அரசினுடைய நிதிப் பங்கீட்டுச் கொள்கைதான் இதற்குக் காரணம் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். எனவே தான் தமிழக முதல்வர் புரட்சி தலைவர் அவர்களும், நம்முடைய நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும், மத்திய அரசினுடைய நிதிப் பங்கீட்டுக் கொள்கையில் மாற்றம் தேவை என்று அடிக்கடி வலியுறுத்திக்கொண்டு வருகிறார்கள்.

[திரு. செ. செம்மலை] [1986 மார்ச் 19

உதாரணமாக நான் சொல்ல விரும்புகிறேன். இன்கம் டாக்சிலே இன்றைக்கு வருகிற தொகையிலே, இன்கம்டாக்ஸ் மூலமாக இன்றைக்கு மத்திய அரசுக்கு வருகிற தொகையிலே, மாநிலங்களுக்கு அவர்கள் பிரித்து தருகிற வகையில், உள்ள அந்த நடைமுறையை நீங்கள் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும். இதிலே முழுக்க முழுக்க இன்கம் டாக்சிலே நமக்குப் போதிய பங்குகளைத் தருவதில்லை. அவர்கள் ஒரு நடைமுறையை வைத்திருக்கிறார்கள். இன்கம் டாக்சிலேயிலிருந்து வருகிற நெட் ப்ராசிட்ஸ் என்ற ஒரு வரையறைவைத்து, அதிலே நெட் ப்ராசிட்ஸ் என்று சொல்லுகிறபோது, முழுக்க முழுக்க அந்தத் தொகையை வசூலிக்கிற அந்தச் செலவுத் தொகையை கழித்துக் கொண்டு, அதே போல் Tax on the union emoluments அதையும் குறைத்துக் கொண்டு,அதே போல் Penalties under the Income tax Act அதையும் அவர்கள் குறைத்துக் கொண்டு, அதைப் போல், இன்டரஸ்ட்ரெக்கவரிஸ் அதையும் அவர்கள் குறைத்துக் கொண்டு ஒரு தொகுப்பை அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அது தான். net proceeds. அதிலிருந்து கிடைக்கவேண்டிய நியாயமான பங்காவது நமக்குக் கிடைக்கிறதா என்று சொன்னால் அதிலும் "The States are getting less than 70 per cent of the net proceeds." இந்த நிலைமையில் தான் இன்றைக்கு அந்த நிதி பங்கீட்டுக் கொள்கையை மத்திய அரசு கையாள்கிறது என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அப்படி பார்க்கிறபோது ஒரு பக்கம் இப்படி நிதியைக் குறைத்துக் கொண்டு இன்றைக்கு நம்முடைய நிதி ஆதாரங்களை நாம் தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை அவர்கள் தந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். நம்முடைய மரியாதைக்குரிய மத்திய நிதி அமைச்சர் திரு. வி. பி. சிங் அவர்கள் ராஜ்ய சபையிலோ பாராளுமன்றத்திலோ பேசுகிற போது ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். விற்பனை வரியை நீக்கி விட்டு அவற்றிற்கு பதிலாக கூடுதல் எக்சைஸ் வரி விதிக்கும் திட்டத்திற்கு ஆதரவை மாநில அரசுகளிடமிருந்து பொது கருத்தை ஏற்படுத்தும் முயற்சியை நாம் தொடர்ந்து செய்யப் போவதாக மத்திய நிதியமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். நான் இதை இந்த மாமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்காக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு பக்கம் மத்திய அரசு சர்க்காரியா கமிஷனை அமைத்து அதிக அதிகாரம் கொடுக்கிறோம் என்று சொல்லி அங்கே ஒரு கமிஷனை வைத்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஒரு பக்கம் இப்படிப்பட்ட அறிவிப்பு மத்திய நிதி அமைச்சர் அவர்களால் கொடுக்கப்படுகிறது. நான் கேட்டுக் கொள்கிறேன். இது எந்த வகையில்



1986 மார்ச் 19] [திரு. செ. செம்மலை]

நல்லது என்பதை மட்டும் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். சாப்பிடுவதற்கு தட்டில் சாப்பாட்டையும் வைத்து சாப்பிட விடாமல் கையை கட்டிப் போடுகிற நிலைமை அல்லவா இது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு மத்திய நிதி அமைச்சர் பாராளுமன்றத்தில் அந்த பேச்சை பேசியிருக்கிறார்கள். அந்த பேச்சுக்கு இன்றைக்கு நம்முடைய அரசின் நிலைமை என்ன ? நாம் என்ன கருத்தை மத்திய அரசுக்கு வலியுறுத்த இருக்கிறோம் என்பதை மாண்புமிகு நாவலர் அவர்கள் பதிலுரையில் எடுத்துச் சொல்வார்களானால் இந்த அவைக்கும் இந்த நாட்டுக்கும் நல்லதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்கு மேலாக நம்முடைய பாரத பிரதமர் மரியாதைக்குரிய ராஜிவ் காந்தி அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்கள் தங்கள் நிதி ஆதாரங்களை பெருக்கிக் கொள்ள அவர்களே முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர எதற்கு எடுத்தாலும் மத்திய அரசின் உதவியை நாடக் கூடாது. இதைச் சொல்வது பாரத பிரதமர் அவர்கள். ஆனால் இன்றைக்கு அதிகாரங்கள் எல்லாம் அவர்கள் கையில் இருக்கிறது. இதைச் சொல்கிறபோது ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது. பெட்டி சாவி மாமியார் கையில் இருக்கிறது. குடும்பத்தை நடத்துகிற அந்த அதிகாரம் மாமியார் கையில் இருக்கிறது. ஆனால் செலவை சரிக் கட்டுகிற அதிகாரம் மருமகளிடம் இருக்கிறது. மாமியார் ஒரு குறிப்பிட்ட தொகையை மாத செலவுக்கு என்று கொடுத்து விட்டு மருமகள் இந்தத் தொகைக்குள் குடும்பத்தை நடத்திக் கொள்ள வேண்டும் அதற்கு மேலே தேவைப்பட்டால் எப்படி சமாளிப்பது. * * * இதைத் தான் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும், டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களும் அடிக்கடி வலியுறுத்தி வருகிறார்கள். எனவே தான் நான் உறுதியாக சொல்கிறேன். மத்திய அரசு தன்னுடைய நிதி பங்கீட்டுக் கொள்கையில் மாற்றத்தைச் செய்து மாநில அரசுகளுக்கு கூடுதல் நிதியை ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெயர் அளவில் சர்க்காரியா கமிஷன் அமைத்து மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கிறோம் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. நான் வேண்டி விரும்பி கேட்டுக் கொள்வது, மத்திய அரசு அதிக அதிகாரத்தைக் கொடுப்பதற்கு முன்னால், உங்களுக்கு நல்ல எண்ணம் இருக்குமானால் அந்த நல்ல எண்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

ணத்திற்கு அறிகுறியாக எங்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான பங்கை அதிக நிதி உதவியைக் கொடுங்கள்; அதற்கு பிறகு அதிகாரம் கொடுங்கள்; நாங்கள் அதில் நம்பிக்கை வைக்கிறோம், என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு மது விலக்கைப்பற்றி அறிவித்து இருக்கிறார்கள். 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மது விலக்கு கொள்கையை அமல் செய்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நிதி வேண்டும். இன்னும் சொல்கிறேன், மத்திய அரசிடமிருந்து அந்த நிதியைப் பெற்றதற்கு பிறகு அமல் செய்ய வேண்டும். அதுதான் சரியாக இருக்கும். எனவே மாண்புமிகு நாவலர் அவர்கள் வருகிற 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் தேதிக்குள் அதற்கான இழப்புத் தொகையை, ஈட்டுத் தொகையை மத்திய அரசிடம் வாதாடிப் பெற வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு திட்டங்களை தீட்டுகிறபோது சில நடைமுறை தவறுகளைச் செய்கிறது. இன்றைக்கு எதற்கு எடுத்தாலும், பீகாரையும், உத்தரப் பிரதேசத்தையும் காட்டி திட்டங்களை தயாரித்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன்—இன்றைக்கு தொழில் வளர்ச்சி இல்லை என்று திரு. ரகுமான்கான் அவர்கள் பேசினார்கள். திருமதி யசோதா அவர்கள் பேசினார்கள். மத்திய அரசினுடைய அந்த நடைமுறைத் திட்டத்தின் படி இன்றைக்கு Zero Industry District என்று மாவட்டங்களை தேர்ந்தெடுத்து அந்த மாவட்டங்களுக்கு சலுகைகளை அளித்து வருகிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் எந்த மாவட்டத்தையும் அப்படி தேர்ந்தெடுக்கவில்லை. காரணம் என்ன அவர்கள் சொல்லுகிறார்கள் என்றால் உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் உள்ள மாவட்டங்களில் தொழிற்சாலைகள் இல்லை; எனவே அங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். இது எந்த விதத்தில் நியாயம்? ஓட்டப் பந்தயத்தில் முன்னால் ஓடிக் கொண்டு இருக்கிறவனைப் பார்த்து பின்னால் ஓடி வருகிறவன் வரும் வரை மெதுவாக ஓடு என்று சொல்வது போல் அல்லவா இருக்கிறது. எனவே வளர்ந்து வருகிற மாநிலங்களுக்கு இப்படி தடைப் போட்டால் எப்படி அது வளரும்? எனவே தொழில் வளர்ச்சிக்கு யார் தடையாக இருக்கிறார்கள் என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் மெத்த பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதில் மத்திய அரசு காலந்தாழ்த்துகிறது என்பதை நாவலர் அவர்கள் நமக்கு சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.





(பிற்பகல் 12–30).

இன்றைக்கு மின்சாரத் திட்டங்கள், பல்வேறு திட்டங்கள் இந்த அரசினால் தயாரிக்கப்பட்டு, திட்டக் குழுவிற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு மேலாகியும் திட்டத்திற்கு அனுமதி கொடுக்காத போது எப்படி அதை நிறை வேற்றி மக்களுக்கு பயனுள்ள காரியங்களைச் செய்ய முடியும் என்று நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நாட்கள் கடக்க கடக்க, திட்டச் செலவு அதிகரித்துக் கொண்டே போகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வீடு கட்டுகின்ற திட்டத்தைப் பற்றி ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்லி முடித்து விடலாம் என்று கருதுகிறேன். புரட்சித் தலைவர் எப்போதும் செய்ய நினைத்ததை செய்து முடிப்பவர் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. திட்டங்களை அறிவிக்கிற போது புரட்சித் தலைவர் அரசு எந்தத் திட்டங்களை அறிவித்தாலும் எதிர்க்கட்சிகள் ஏற்றுக் கொள்வதில்லை. தன்னிறைவுத் திட்டமானாலும், சத்துணவுத் திட்டமானாலும் ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய அரசு ஏற்றுக் கொண்டு, திட்டச் செலவுகளில் நிதி ஒதுக்குகிறது என்றால், அவற்றை அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று தான் அர்த்தம். செயல்படுத்தாமல் விடப் போவதில்லை. நிச்சயமாக செயல்படுத்துவார்கள்.

அதேபோல் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ரகுமான்கான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். அவர்கள் எந்தத் திட்டத்தையும் குறை கூற வேண்டுமென்பதற்காகவே சொல்கிறார்கள். 1975–76 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, நிதிநிலை அறிக்கையில் கலைஞர் அவர்கள் சொல்கிற போது ஒரு இலட்சம் வீடுகளுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, அந்த திட்டத்தினை தாழ்த்தப்பட்டோர் மேம்பாட்டு வீட்டு வசதி நிறுவனத்தின் மூலமாக முனைப்போடு நிறைவேற்றுவோம் என்று கூறப்பட்டது. எந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டாலும், அரசு ஆணைகள் மூலமாகத் தான் நிறை வேற்றப்படும். 1975-லே சொல்லப்பட்டு, நிறைவேற்றுவதற்கான அரசாணைகள் வெளியிடப்படவேயில்லை. இது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்த வெட்கக்கேடான செயல். அப்படி திட்டங்களை அறிவித்து விட்டு, அரசு ஆணைகள் போடப்படாமல் கிடப்பிலே போடப்பட்டதைப்போல், புரட்சித் தலைவர் எந்தத் திட்டத்தையும் விட்டு விடமாட்டார். பல அமைப்புகளின் மூலம் நிதி உதவிகளைப் பெற்றாவது, முடித்துக் காட்டுவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பற்றிய ஒரு சில கருத்துக்களை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஓமலூர் வட்டம் தொழிலிலே பின்தங்கிய வட்டமாக இருக்கிறது. மாநில அரசைப் பொறுத்த வரையில், தொழிலிலே பின்தங்கிய வட்டங்கள் ஒவ்வொன்றாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். நடப்பாண்டில் ஓமலூர் வட்டத்தைத் தொழிலிலே பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நாம் வறட்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறோம். சேலம் போன்ற வானம் பார்த்த பூமியில் குடிநீர் பற்றாக்குறை வந்து விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டிருக்கிறது. கூடுதலாக போர்வெல் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறான வறட்சி நிலையைப் பற்றி மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்குக் கூட நன்றாகத்தெரியும். தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியமும், நகரப் பஞ்சாயத்துக்களும் போர்கள் போடுவதில்லை. குடிநீர் வடிகால் வாரியமும், நகரப் பஞ்சாயத்துக்களும் குறைந்த பட்சம் தலா ஐந்து போர்வெல்கள் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்?

அடுத்து, சேலத்தில் மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரையில், மேச்சேரி, ஓமலூர் வழியாக குடிநீர் திட்டம் ஒன்று உலக வங்கி உதவியோடு தொடர இருக்கிறது. அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தி முடித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரேயொரு ஆலோசனையாக நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்களிடம் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். வரியைத்தள்ளுகிற போது, சீரமைக்கிற போது, பவர் லூமைப் பொறுத்த வரையில், ஹேங்க் யார்ன் (Hank Yarn) நூலுக்கு 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாக குறைத்திருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். அதே சமயத்தில் சீரமைப்பு என்ற முறையில் ஹோசியரி என்ற பனியன் தயாரிக்கும் நூலுக்கு இரண்டிலிருந்து 3 சதவீதம் என்று வைத்து ஒரு சதவீதத்தை ஏற்றியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சரின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, பவர் லூமில் பயன்படுத்துகிற நூலுக்கு 4 சதவீதத்திலிருந்து 3 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. பவர் லூமிற்கு மட்டும் சலுகை





அளிக்கப்பட்டுள்ளதாக கைத்தறி நெசவாளர்கள் மத்தியில் பேசப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கு சலுகை அளிக்கின்ற வகையில், ஊக்கம் அளிக்கின்ற வகையில், கைத்தறியில் பயன்படுத்தக் கூடிய ஹேங்க் யார்ன் என்ற நூலுக்கும், குறைந்தபட்சமாக, ஒன்று, இரண்டு சதவீத வரியைக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆந்திராவிலே அந்த ஹேண்ட் லூமிற்கான வரியைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். அதேபோல் மத்திய சர்க்காரிலே கைத்தறி வளர்ச்சியை முன்னிட்டு, எக்சைஸ் டூட்டி கிடையாது. எனவே கைத்தறி நெசவாளர்களைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசு. நம்முடைய நாவலர் அவர்கள் ஒன்றிரண்டு கோடி ரூபாய் இழப்பு என்று ஏற்பட்டாலும்கூட இந்த ஹேங்க் யார்னுக்கு 3 சதவீதத்திலிருந்து சிறிது வரியைக் குறைத்து அந்த மக்களைப் பாதுகாக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்காக நன்றிகூறி முடிக்கிறேன்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசிய நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்திலே முதல்வராக இருந்த கலைஞர் அவர்கள் ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு 1 லட்சம் வீடுகள் கட்டமுடியவில்லை என்று சொன்னார்கள். அவர்கள் ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்னாலே 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு உறுப்பினர் பேசியதற்கு இப்படி உடனுக்குடன் பதில் சொல்ல முடியாது. நீங்கள் பேசும்போது வேண்டுமானால் அதற்குப் பதில் சொல்லலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை பேசும்போது மத்திய அரசாங்கத்தை மாமியார் என்றும் மாநில அரசு மருமகள் என்றும் கூறி மாமியார் மருமகளுக்கு ஒரு தொகையைக் கொடுத்து * * * அது மிகவும் விரசமாக இருக்கிறது. ஆகவே அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துவிட்டு சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்து இருக்கிற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது எனக்கு 'Sishtath' என்ற ஆங்கிலப் பத்திரிகை ஆசிரியர் எழுதியது நினைவுக்கு வருகிறது. In India, gestures rather than policies are practiced என்று அவர் கூறினார். அதைப் போல இந்த நிதிநிலை அறிக்கை கொள்கை அறிவிப்பாக இல்லாமல் கோடிட்டுக் காட்டுகிற அறிக்கையாக இருக்கிறது. அரசின் திட்டவட்டமான கொள்கையைக் காட்டுகிற அறிக்கையாக இது இல்லை.

இந்த நிதிநிலை அறிக்கை பாமர மக்களுக்கு பனிநிலவாய், பொதிகைத் தென்றலாய் அமைந்திருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இது சுடு கதிராய், எரிமலையாய்த்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறபோது மற்ற உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : இந்த நிதி நிலை அறிக்கையிலே 12.24 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது. பற்றாக்குறை போடுவது குற்றமும் அல்ல, உபரி காட்டுவது பெருமைப்படத்தக்கதும் அல்ல. செல்வாதாரங்கள் எந்த வழிகளிலே தேடப்பட வேண்டும், எந்த வகையிலே அவைகளை செலவிட வேண்டு மென்பதற்கான திட்டவட்டமான குறிப்புகள் நிதிநிலை அறிக்கையிலே இருக்க வேண்டும். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் ஏதோ தற்காலிகமான சலுகைகள் தான் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, பிரச்சினைகளிலிருந்து ஒதுங்கிப்போகக் கூடிய மனப்போக்குத்தான் தெரிகிறதே தவிர பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற முறையிலே பிரச்சினைகளை எப்படித் தீர்ப்பது என்று தெரிவிக்கின்ற போக்கு இல்லை என்பதை நான் மிக வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தை பயமுறுத்திக் கொண்டிருக்கக் கூடிய பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டம். அதைப் போக்குவதற்காக அதற்கான திட்டங்களோ நிதி ஒதுக்கீடுகளோ இதிலே எதுவும் கிடையாது. புதிய தொழில்கள் எதுவுமே இல்லை. அதற்கான நிதி ஒதுக்கீடுகளும் இல்லை. இந்த நேரத்திலே நான் ஒரு கசப்பான உண்மையைக் கூற ஆசைப்படுகிறேன். நண்பர் திரு. செம்மலை அவர்கள் பேசும்போது மத்திய அரசு காலத்தை நீட்டிக்கிறது. அனுமதியளிக்கவில்லை என்று சொன்



னார்கள். நான் மாநில அரசுமீது குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். பாலக்கோடு சர்க்கரை ஆலை 10 ஆயிரம் டன் கரும்பு உற்பத்திக்கு உள்பட்டது. மேலும் ஒரு சர்க்கரை ஆலை அங்கே வேண்டுமென்று அனுமதி கோரி அங்கே உள்ள 3 சட்டமன்ற உறுப்பினர்கள் சிபாரிசு செய்தும் இன்னும் அந்தக் குறிப்பு 5 மாத காலமாக அமைச்சர் மேசைமீது தூங்கிக் கொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

இத்தகைய மெத்தனப் போக்கு இருக்கின்ற வரையிலும் தொழில் வளர்ச்சி தமிழகத்தில் இருக்க முடியுமா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போல இன்னொன்று. பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு 8-3-1986 ஆம் தேதி அன்றைய செய்தித் தாளில் வந்ததைச் சொல்ல விரும்புகிறேன். '' இந்தியன் எக்ஸ்பிரஸ் '' பத்திரிகையில்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அனுமதியுடன் படிக்கிறேன் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்களே தவிர, அப்படிக் கொடுத்து முன் அனுமதி பெறவில்லை. இப்படி முன்கூட்டியே தலைவரிடம் கொடுத்து அனுமதி பெறாமலேயே, '' அனுமதியுடன் படிக்கிறேன், அனுமதியுடன் படிக்கிறேன் '' என்று சொல்லுகின்ற நிலை பொதுவாக உள்ளது. அப்படிச் சொல்கிறார்களே தவிர எங்களிடத்தில் யாரும் காட்டுவது இல்லை. அப்படிக் காட்டினால் அமைச்சரிடம் சொல்வதற்கும் வசதியாக இருக்கும். (குறுக்கீடு)
The rule is applicable not only to Thiru Ravindran but to all members யாராக இருந்தாலும் இனிமேல் முன்கூட்டியே தலைவரிடம் கொடுத்து அனுமதி பெற்றுப் படிக்க வேண்டும்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இந்த மாமன்றத்தில் உறுப்பினராக இருக்கின்ற இந்த ஓராண்டுக் காலத்தில் இதுவரையில் தங்களிடம் அனுமதி பெறாமல் படித்துக் காட்டப்பட்ட நிகழ்ச்சிகள் பல முறை இந்த மாமன்றத்தில் நடைபெற்றிருக்கின்றன. மற்றவர்கள் சொல்வதைப்போல, பத்திரிகையில் வந்தது என்று மட்டும் சொல்லி நான் கூறவில்லை. அந்தப் பத்திரிகையையே நான் கொண்டு வந்திருக்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்கு, தேதி குறிப்பிட்டு அவர்களிடத்தில் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிச் செய்ய வேண்டுமென்றால் அதையும் செய்யத் தயாராக இருக்கிறேன்.

மத்திய அரசாங்கத்தால் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறையிலே போதிய அதிகாரிகளை நியமனம் செய்யாத காரணத்தால் ஏறக்குறைய 6 பதவிகள் 6 மாத காலமாக நிரப்பப்படாததன் காரணமாக குறிப்பிட்ட அளவு தொகை சரண்டர் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் போக்கு அரசாங்கத்திற்குப் பெருமையளிப்பதாக இருக்காது என்பதை மட்டும் திட்டவட்டமாகத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

பத்து இலட்சம் வீடுகள் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே பார்த்தால் அதற்கான ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஏன் இதைக் கூறுகிறேன் என்றால், ஒரு வீட்டிற்கு 3,000 ரூபாய் என்று ஒதுக்கினாலும்கூட 300 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இங்கே அவற்றைப் பெற முயற்சிக்கப்படும் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர மற்றபடி நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்படவில்லை.

இலங்கைத் தமிழர்கள் பற்றிக் குறிப்பிடுகின்றபொழுது, இது வரை மொத்தம் சுமார் ரூ. 45 கோடி செலவிடப்பட்டுள்ளது என்று சொல்கிறார்கள். ஆனால் ஒரு அரசு தனக்கு வந்த தொகையைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டிய கடமை இருக்கிறது. இலங்கைத் தமிழர் நல்வாழ்வு நிதி என்று ஒரு நிதி திரட்டப்பட்டது. அதற்காக அட்டைகள் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மூலம் கொடுக்கப்பட்டது. உறுதியாக, திட்டவட்டமாக ஒரு குற்றச்சாட்டைக் கூறுவதற்குத் தயாராக இருக்கிறேன். அந்த அட்டைகளிலே எண்கள் இல்லை; இன்று வரை எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது, அந்தத் தொகை அரசு நிதியிலே சேர்க்கப்பட்டதா என்பதற்கு நிதிநிலை அறிக்கையிலே ஆதாரம் இல்லை. இத்தகைய போக்குகள் மாற வேண்டும் என்பதை மாமன்ற உறுப்பினர் என்ற முறையிலே கூறிக்கொள்கிறேன்.

தெலுங்கு-கங்கை திட்டம் பற்றிக் குறிப்பிட்டார்கள். இது வரை 52 கோடி ரூபாய் செலவிட்டோம். இந்த ஆண்டில் 45 கோடி ரூபாய் செலவிட ஒதுக்கியுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. தெலுங்கு கங்கை திட்டம் என்பது தமிழக அரசும், ஆந்திர அரசும் இணைந்து செயலாற்ற வேண்டிய ஒரு திட்டம். இந்தக் குறிப்பில் தேடித் தேடிப் பார்த்தேன். இதுவரையில் ஆந்திர அரசு எவ்வளவு ரூபாய் செலவிட்டிருக்கிறது என்று பார்த்தேன். ஆனால் அதைப்பற்றிய குறிப்புரைகூட காணப்படவில்லை. ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசு இன்னும் அனுமதி கொடுக்கவில்லை என்று மட்டும் சொல்கிறார்கள். இது ஒரு புறம் இருக்கட்டும். அந்த அனுமதி கிடைக்காத நிலையிலே நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை இந்தத் திட்டத்திற்குச் செலவிடுவது முறையானதுதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.



மின் உற்பத்தியைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே இந்த மாமன்றத்தில் சாத்தனூர் புனல் மின் நிலையம் பற்றிக் கேட்டேன். மின்துறை அமைச்சரவர்களும் பதில் சொன்னார்கள். ஆனால் அதைப்பற்றி இந்த அறிக்கையில் குறிப்புகள் எதுவும் காணப்படவில்லை. இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மதுவிலக்கினால் ஏற்படுகின்ற இழப்பைப் பற்றிக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக உறுதியாக கூறுகிறேன். மதுக் கடைகள் 31-12-1986 வரையில்கூட நீட்டிக்கப்படுவது கூடாது. அப்படி நீட்டிப்பதை எங்கள் கட்சியோ அல்லது நாங்களோ விரும்பவில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்த மதுக்கடைகளை நீட்டிப்பது மக்களுக்குச் செய்கின்ற நன்மையாக இருக்காது. ஆகவே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் உடனடியாக இன்னும் ஒரு மாத காலத்திற்குள்ளாக மதுக்கடைகளை மூடிவிட்டால் நல்லது. இதே நேரத்தில் ஒரு குற்றச்சாட்டையும் சாட்ட விரும்புகிறேன். மதுக் கடைகளைக் கொண்டு வரும்பொழுது, வேலையில்லாத படித்த இளைஞர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படும் என்று சொன்னார்கள். அது எந்த அளவிற்கு இந்த அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். மொத்தம் எத்தனை சாராயக் கடைகள் ஏலத்தில் விடப்பெற்றன? அதில், படித்த, வேலையில்லாத இளைஞர்கள் எவ்வளவு பேர்களுக்கு விடப்பட்டது? நிச்சயமாகக் கூறுகிறேன், கட்சிக் கண்ணோட்டத்தில்தான் விடப்பட்டன என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் இருக்கின்றன. யாருமே அதை மறுக்க முடியாது.

அதேபோல், நகராட்சி மேம்பாட்டுக்காக ரூ. 56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நாவலர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த ரூ. 56 இலட்சம் மிகமிகக் குறைந்த தொகை. இதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை நகராட்சியைப் பொறுத்தவரை, நான் சென்ற ஆண்டு, சபையிலே பேசிய அதே நிலைதான் இன்னும் நீடிக்கிறது. எனவே, இந்த மேம்பாடு திட்டங்கள் நடக்கின்ற நகரங்களிலே, திருவண்ணாமலையைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வி மேம்பாடுக்காக, கூடுதல் ஆசிரியர் பதவிகள் ஏற்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

' கல்லாரைக் காணுங்கால் கல்விநல்கா
கசடற்ற தூக்க மரம் இங்கே உண்டாம், என்றார்

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1986 மார்ச் 19

பாரதிதாசன். நான் வேதனையோடு கூறுகின்றேன். திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் மட்டும் 10 ஆசிரியர் பதவிகள் ஏறத்தாழ 2 ஆண்டுக்காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதே போல், மாணவர் ஆசிரியர் விகிதத்தை எடுத்துக் கொண்டால், 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருக்க வேண்டுமென்பது அரசின் கருத்து. விதி. ஆனால், திருவண்ணாமலை பெண்கள் மேநிலைப் பள்ளியிலே 110 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியை என்ற நிலைதான் இருக்கிறது. இதுதான் கல்வி மேம்பாடு திட்டமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

அதே நேரத்திலே இந்த அரசுக்கு ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன், பி.டி. படித்த, பி.ஏ. படித்த பெருவாரியான இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதே நேரத்திலே, செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் போதுமான அளவில் இல்லாமல், அந்தப் பதவிகள் காலியாக இருக்கின்றன. பி.டி., பி.எ. ப்டித்த பட்டதாரி ஆசிரியர்களை, செக்கண்டரி கிரேட் ஆசிரியர்கள் பதவிகளிலே போட்டு, பின்னால், அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தால், வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும், ஆசிரியர் பற்றாக்குறையும் தீரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிய கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 1 கோடி ஒதுக்கீடு என்பது மிகமிகக் குறைவு. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர் பிரச்சினை பற்றி கூறப்பட்டுள்ளது. அதை தீர்ப்பதற்கு ஒரு நபர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த கமிஷன் அளிக்கும் பரிந்துரைகளின்மீது ஆசிரியர்களுக்கு நிவாரணம் அளிக்க, ஏதேனும் ஒதுக்கீடு இருக்கிறதா என்றால் நிச்சயமாக இல்லை. அது அந்த ஒரு நபர் குழுமீது ஒரு ஐயத்தை ஏற்படுத்துகிறது. அது ஆசிரியர்களுக்கு சலுகை வழங்குமா. வழங்காதா என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது. அதையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்திலே ஆசிரியர் பிரச்சினையிலே சரியான அணுகுமுறை சரியான நேரத்திலே எடுக்கப்படாத காரணத்தால் பல பிரச்னைகள் உருவாகின்றன. ஏதோ ஒரு விதத்திலே அது தீர்ந்தாலும்கூட, இன்னும் பழி வாங்கும் போக்கு அரசிடம் இருப்பதாக கருத இடம் இருக்கிறது. ஆசிரியர்கள் பிரச்னைகளுக்கு ஆதரவாக இருந்த தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் உட்பட 23 பேர்கள் இன்னும் வேலையில் அமர்த்தப்படாமல், அந்தச் சங்கத்திற்கு அங்கீகாரமும் அளிக்



1986 மார்ச் 19] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

கப்படாத நிலைமையிருக்கிறது. அத்தகைய பழி வாங்கும் மனப்பான்மை ஒரு அரசுக்கு நல்லதல்ல. எனவே, உடனடியாக அவர்களுக்கு வேலையும் கொடுத்து, சங்கத்திற்கு அங்கீகாரமும் கொடுக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த மன்றத்தின்முன் வைக்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்கள் பெருமையாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள், செலவினங்களில் சிக்கனக் கொள்கை கடைபிடிக்கப்பட்டிருப்பதாக. எனக்கு வருகின்ற அழைப்பிதழ்களைப் பார்க்கின்றேன். அதைப் பார்க்கையில் இதுதானா சிக்கனம் என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு அழைப்பிதழும் ரூ. 4, ரூ. 3, மதிப்பில் அச்சடிக்கப்படுகின்றது. அரசு விழாக்களுக்கு அத்தகைய ஆடம்பரமான அழைப்பிதழ்கள் தேவையா என்ற வினாவை இங்கே எழுப்ப விரும்புகிறேன். ஒரு அமைச்சர் ஒரு தொகுதிக்கு வரும்போது, அங்கு நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளை ஒன்றாக வைத்துக் கொண்டு போனால், பயணச் செலவு போன்றவை மீதமாகும். ஆனால், வாரத்திற்கு ஒரு விழா என்று வைத்துக்கொண்டு, அடுத்தடுத்த கிராமங்களுக்குப் போகின்ற போக்கும்தான் இப்பொழுது இருக்கிறது. இவையெல்லாம் செலவினங்களைச் சிக்கனப்படுத்தும் முறையாக இருக்கும் என்று மனசாட்சி உள்ள எவருமே ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், சலுகை என்று குறிப்பிடும்போது, துரு பிடிக்காத இரும்பைப் பற்றிக் குறிப்பிடும்போது, முதல் விற்பனைக்கென்று ஒரு சதவீதமும் இறுதி விற்பனைக்கு ஒரு சதவீதமும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், இறுதி விற்பனை என்று எப்படி முடிவு செய்யப் போகிறீர்கள்? இரண்டாவது விற்பனை என்றால் அதிலே ஒரு பொருள் இருக்க முடியும். இறுதி விற்பனை என்பதை யார் முடிவு செய்ய முடியும்? எப்படி முடிவு செய்ய முடியும்? எப்பொழுது முடிவு செய்ய முடியும்?

(பிற்பகல் 12–50)

அடுத்து, வியாபாரிகளுக்கு பதிவுக் கட்டணம் 10 ரூபாயாக இருந்ததை 100 ரூபாயாக அதிகரித்திருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்கது அல்ல. ஏழை வியாபாரிகளுக்கு 100 ரூபாய் என்பது ஒரு சுமையாக இருக்கிறது. ஆகவே, இதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கேளிக்கை வரியைப் பொறுத்தவரையில் 10 சதவீதம் வரி உயர்வு என்று இருக்கிறது. உள்ளாட்சி மன்ற நிர்வாகத்திற்கு என்று கூறப்பட்டிருக்கிறது. இது யாரை பாதிக்கும் ? ஏழை எளிய மக்களைத்தான் இது பாதிக்குமே தவிர நிச்சயமாக பணக்காரர்களை பாதிக்காது. 'கம்பவுண்டிங்டாக்ஸ்' வந்த பிறகு திரையரங்குகளில் நடக்கும் தில்லுமுல்லுகள் அரசாங்கத்திற்கு தெரியாதது அல்ல. இருக்கைகளின் எண்ணிக்கையைக் குறைத்துவிட்டு, பின்னால் இடத்திற்கு ஏற்ப செயர்களைப் போட்டுக் கொள்கிறார்கள். ஆகவே, இப்படி கேளிக்கை வரியை உயர்த்துவதைக் காட்டிலும் இவ்வாறு தவறு செய்கின்ற உரிமையாளர்கள்மீது நடவடிக்கை எடுத்தாலே உள்ளாட்சி மன்றங்களுக்கு போதுமான தொகை கிடைத்து விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுயநிதி கல்லூரிகள் என்று பல கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் கல்லூரிகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மருத்துவக் கல்லூரிகளைப்பற்றி மட்டும் குறிப்பிடவில்லை. வேண்டும் என்றே குறிப்பிடப்படவில்லையா அல்லது தவறுதலாக விடுபட்டிருக்கிறதா என்று தெரியவில்லை. ஆனால் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த சுயநிதி கல்லூரிகள் எல்லாம் ஒட்டு மொத்தமாக கொள்ளையடிக்கின்ற கூடாரங்களாக இருக்கின்றன. It is a brand on the pı blic a fraud on the society என்று திட்டவட்டமாக என்னால் கூறமுடியும். தனிப்பட்டவர்களுடைய சுக போகங்களை பூர்த்தி செய்யத்தான் இந்த சுயநிதி கல்லூரிகள் அமைந்திருக்கின்றன. அதைத் தவிர மக்களுக்கு எந்தவிதமான பயனும் இல்லை. இரண்டரை இலட்சம், மூன்று இலட்சம் ரூபாய் என்று பேப்பரிலே அறிக்கை விட்டு மாணவர்களைச் சேர்க்கும் சுயநலவாதிகளுக்கு அரசாங்கம் துணையாக இருக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடும்ப நலத் திட்டம், துணைத் தலைவரர்களே, மன்னிக்க வேண்டும். நான் மறுபடியும் இதற்கு பத்திரிகைசளைத்தான் ஆதாரமாகக் காட்ட வேண்டியிருக்கிறது. 9–3–1986 ஆம் தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் குடும்ப நலத் திட்டம் பற்றி ஒரு சிறப்பான செய்தி வந்திருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தில் இரண்டே ஊர்களில் மட்டும் 12,000 பொய் கேஸ்கள் பதிவாகியிருக்கின்றன. குடும்ப நலத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்றுகிறோம் என்று சொல்கிறார்களே தவிர, செம்மையாக நிறைவேற்ற வேண்டுமென்று விரும்புகிறார்களே தவிர, ஒழுங்கான முறையில்





திட்டம் நிறைவேற்றப்படவில்லை, பணம் ஒழுங்காக செலவிடப்படவில்லை என்பதை மிகுந்த வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று, இங்கே நீதிமன்றங்கள் பற்றி கூறும்போது, இரண்டே இரண்டு நீதிமன்றங்கள் அமைப்பதுபற்றி மட்டுமே கூறப்பட்டிருக்கிறது. வழக்கறிஞர்கள் அடுத்த மாதம் 23-ந்தேதி முதல் கோர்ட்டுகளுக்குப் போகாமல், பகிஷ்காரம் செய்யப்பொகிறார்கள். நீதிமன்றம் ஆணையிட்ட பிறகும் நீதிமன்றங்களில் போதுமான அளவுக்கு நீதிபதிகள் நியமிக்கப்படவில்லை ; காலி இடங்கள் நிரப்பப்படவில்லை. ஆகவே, புதிய நீதிமன்றங்களை அமைக்கவில்லை என்பது ஒருபுறமிருந்தாலும் இருக்கிற நீதிமன்றங்களில் போதுமான அளவுக்கு நீதிபதிகளை அமர்த்தி, நீதிமன்றங்களை செம்மையாகச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மனந்திறந்து, உளமுவந்து பாராட்டப்பட வேண்டிய திட்டம் ஒன்றுகூட கண்ணுக்குப் புலப்படவில்லையா என்று நாவலர் அவர்கள் நினைப்பார்கள். பாராட்ட வேண்டியதை நான் பாராட்ட தவறமாட்டேன். இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கிற ஒரு விஷயத்தை நான் பாராட்டுகிறேன். அரசு ஊழியர்கள் கடன் வாங்கி வீடு கட்டும்போது, இடைக்காலத்தில் அவர்கள் மரணம் அடைந்து விட்டால், அவர்கள் மேற்கொண்டு கட்ட வேண்டிய கடன், வட்டி தள்ளுபடி என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மனம் திறந்து, உளம் திறந்து பாராட்டுகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் எல்லோரும் நிச்சயமாகப் பாராட்டுகிறோம். அதே நேரத்தில் இந்தத் திட்டம் ஆசிரியர்களுக்கும் ஆலய ஊழியர்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, என்னுடைய தொகுதி பற்றி ஒரு கருத்தைக் கூறி, முடித்துக் கொள்கிறேன். திருவண்ணாமலை நகராட்சிக்கு குடிநீர் திட்டத்திற்காக 4.74 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, உடனடியாக அந்தப் பணியைச் செய்ய வேண்டும். பள்ளிக்கூடங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அவற்றை மேம்படுத்த வழிவகைக் காண வேண்டும்.

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றை தெரிவித்துக் கொள்கிறேன். செல்லங்குப்பம், நாடரா லிங்கம், ஜமீன் கூடலூர் முதலிய ஊர்களிலிருந்து திருவண்ணாமலை நகருக்கு 'டவுன் பஸ்' விட வேண்டு

மென்ற கோரிக்கை நீண்டகாலமாக இருந்து கொண்டிருக்கிறது. இன்றுவரை அதற்கு பதில் இல்லை. அந்த கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை ; அதற்கு என்னை ஆளாக்க வேண்டாம் என்று இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வேட்டவலத்தில் ஒழுங்குமுறைக் கூடம் ஏற்படுத்த வேணடும்; சோலார்பாடி, கீழ் பெண்ணாத்தூர், கருங்காலி குப்பம், கத்தாழம்பட்டு புறவோடி முதலிய ஊர்களுக்கு சாலை வசதி செய்து கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

திரு. மு. பாண்டுரங்கன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், அதாவது நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்கள் நம் தமிழ்நாட்டு மக்களுக்காக இந்த மாமன்றத்தின் மூலம் அளித்துள்ள 1986–87 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீதுள்ள விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பளித்தமைக்காகத் தங்களுக்கு இந்த மாமன்றத்தின் மூலம் நன்றி கூறிக்கொள்கிறேன்.

புதிய சிந்தனைகள், புதிய கருத்துக்கள், புதிய திட்டங்கள் எல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்து இயம்பப்பட்டுள்ளன. உண்மை அப்படி இருக்க, வேண்டுமென்றே மறைத்து சில உறுப்பினர்கள் குற்றம் சாட்ட வேண்டுமென்ற ஒரே எண்ணத்தோடு கங்கணம் கட்டிக் கொண்டு இந்த மாமன்றத்தில் குற்றம் சாட்டுவதையே வேலையாகக் கொண்டு குற்றம் சாட்டுகிறார்களே ஒழிய உண்மையிலேயே தென்றல் வீசும் இந்த நிதிநிலை அறிக்கையை மனமாறப் புகழத் தவறி விட்டார்கள்.

மாநில அரசு ஏற்றுக் கொண்டுள்ள பொறுப்புகளைச் சிறப்பாகவும், செம்மையாகவும் முடிக்க வேண்டும் என்றால் மிகுந்த பொருளாதார வசதி தேவைப்படுகிறது என்றும், பொருளாதாரத்தைப் பெருக்குவதற்கு மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் தேவைப்படுகிறது என்றும் கூறியுள்ளீர்கள். இந்தக் கருத்தைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் 1969 ஆம் ஆண்டு எழுதிய கட்டுரை ஒன்றில் மாநிலங்கள் அதிக அளவில் அதிகாரங்கள் பெறத்தக்க விதத்தில் அரசியல் சட்டம், அதாவது இன்டியன் கான்ஸ்டிட்யூஷன் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்று வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறேன் என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார்கள். எனவே நம் தாய்த் திருநாட்டில் உள்ள அனைத்து மாநிலங்களுக்கும் அதிக அதிகாரங்கள் இருந்தால் தான் மாநிலங்கள் ஏற்றுக் கொண்டுள்ள





பொறுப்புக்களைச் செவ்வனே முடிக்க இயலும். பேரறிஞர் அண்ணா அவர்கள் மாநில அரசு என்பது பெரிய முனிசிபாலிட்டிக்குச் சமம் என்று கூறியுள்ளார்கள். அப்படிப்பட்ட மாநில அரசுக்கு வரும் வருவாய் அன்றாடச் செலவினங்களுக்குத்தான் சரியாக இருக்கும். ஆகவே ஆக்கபூர்வமான வேலைகளையும், நாட்டுக்குப் பயன் தரும் பெரிய வேலைகளையும் செய்ய வேண்டுமென்றால் நாம் மத்திய அரசைத்தான் எதிர்பார்க்க வேண்டியுள்ளது என்பதைத் தெள்ளத் தெளிவாக இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மத்திய அரசு கண் திறந்து பார்த்தால் தான் மாநில அரசு எந்த ஒரு திட்டத்தையும் தீட்ட முடியும் என்று திட்டவட்டமாக அவ்வப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி வந்ததை இந்த நேரத்தில் நான் நினைவூட்ட விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்தையொட்டி நீதிபதி ஆர்.எஸ். சர்க்காரியா அவர்கள் இந்தியாவில் இணைப்பு ஆட்சி முறை ஏற்பட உரிய பரிந்துரைகளைச் செய்ய வேண்டுமென்று எதிர்பார்த்து நடமாடும் பல்கலைக் கழகம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள மக்களின் கருத்தைத் திட்டவட்டமாக எடுத்து இயம்பியிருப்பது உறவுக்குக் கைகொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம் என்ற தத்துவத்தை இங்கே விளக்கிக்கொண்டு இருக்கிறது.

அடுத்து, இலங்கை வாழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முறைப்படி எடுக்க வேண்டிய நடவடிக்கையை காலத்தாழ்வு இல்லாமல் மேற் கொள்ள வேண்டுமென்று இந்தியப் பிரதமரை தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது என்பதையும் தமிழக அரசு உரிய நேரத்தில் உரியனவற்றை நம் பிரதமர் அவர்களிடம் கேட்கத் தவறியது இல்லை என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டியது இந்த நிலைமையிலே தேவையாக இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். இலங்கை வாழ் தமிழர்கள் மீது நமக்கு இருக்கும் ஆழ்ந்த பற்றையும் இது எடுத்துக் காட்டுகிறது. பாரதப் பிரதமர் அவர்கள் தனக்கே உரிய சாதுரியத்தால் உரிய நேரத்தில் செய்ய வேண்டியதைச் செய்து முடிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திருவள்ளுவப் பெருந்தகை,

''செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்''

என்று மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அதாவது செய்யக் கூடாத ஒரு காரியத்தைச் செய்தாலும் கெடும், செய்ய வேண்டியவற்றை உரிய நேரத்திலே செய்யாமல் விட்டு விட்டாலும் கெடும் என்று தெளிவாக இந்த மாமன்றத்தின் மூலம் நடமாடும் பல்கலைக் கழகம் தாய்த் திரு நாட்டின் பாரதப்

பிரதமருக்குச் சுருக்கமாக எடுத்துக் கூறியுள்ளது உண்மையிலேயே பாராட்டுக்குரிய ஒன்றாகும். நம் நாட்டு மக்கள் அதற்கு நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தமிழ் அகதிகள் மற்றும் தமிழகம் திரும்பியோர் ஆகியோரின் நிவாரணப் பணிகளுக்காகவும், மறுவாழ்வுப் பணிகளுக்காகவும் இதுவரையில் சுமார் 45 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளதை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு உரிய நேரத்தில் எடுத்துக் கூறியுள்ளது குறித்தும் நம்முடைய தமிழ் மக்கள் புரட்சித் தலைவர் அவர்களை வாயார, மனமாரப் பாராட்டுவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

முதலமைச்சர் குழந்தைகள் மதிய உணவுத் திட்டம் 1982–83 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்று தொடர்ந்து நல்ல நோக்கத்தில் நடைபெறறு வருவதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். 1986–87 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் சத்துணவுத் திட்டத்திற்காக 168.92 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது என்றும். சீருடை, பாட நூல்கள் போன்றவற்றிற்கு 27.39 கோடி ரூபாய் செலவாகும் என்றும் கோடிட்டுக் காட்டி இருப்பதிலிருந்து டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எந்த அளவுக்கு ஏழை எளிய மக்களின் பால் பற்று வைத்து தொண்டாற்ற முற்பட்டுள்ளது என்பது நாட்டு மக்களுக்கும், நல்லவர்களுக்கும் புரியாமல் இருக்க நியாயம் இல்லை. ஆனால் வேண்டுமென்றே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் களில் சிலர் குற்றம் சாட்ட வேண்டுமென்ற ஒரே நோக்கத் தோடு இந்த மன்றத்திலே குற்றம் சாட்டிக் கொண்டிருக்கிறார் களே ஒழிய, உண்மையை எடுத்துக் கூற வேண்டும் என்ற மனம் அவர்களுக்கு ஏன் வரவில்லை என்பதைத்தான் இந்த மன்றத் திலே கேட்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 1–00)

ஆனால் நம்முடைய நடமாடும் பல்கலைக் கழகம் அவர்கள், இந்த பட்ஜெட் உரையின் 13–வது பாராவில்,சத்துணவுத் திட்டம் நல்ல நோக்கத்தில் நடைபெற்று வருவதை மாண்புமிகு உறுப் பினர்கள் அனைவரும் அறிவர் என்று சூசகமாக அறிவித்துள் ளார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் ஏழைக் குழந்தை களின் உடல், மனம் ஆகிய அனைத்தும் நல்ல நிலையில்; நல்ல சூழ்நிலையில் வளர வேண்டும் என்று கருதித்தான் 168.92 கோடி ரூபாய்களை சத்துணவுத் திட்டத்திற்காக 1986–87க்கு உரிய வரவு-செலவுத் திட்டத்தில் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் செலவை அதிகமாக்க வேண்டும் என்று கருதியோ என்னவோ பல நேரங்களில் சத்துணவிற்காக வழங்கப்படும், அரிசி, பருப்பு, என்ணெய் போன்ற பொருட்களை அங்கே பணிபுரியும் நமது சகோதரர்கள் எடுத்துச் சென்று விடுகிறார்கள், என்பதை என் னால் எடுத்துக் கூறாமல் இருக்க முடியவில்லை.





காய்கறிகளைக் கூட கோணிப்பைகளில் கட்டி எடுத்துச் செல் லும் போது, வழியிலேயே பிரித்து சீல் உடைத்து, வேண்டிய காய்கறிகளை எடுத்துக் கொண்டு பிறகு வேறு சீல் வைத்து, கொடுக்கவேண்டிய இடங்களில் கொடுக்கப்படுவதாகக் கூட நான் என்னுடைய தொகுதியிலே கேள்விப்பட்டேன். தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏழைக் குழைந்தைகள் வாழ வேண்டும் என்று அவர்களுக்காக இதுபோன்ற திட்டங் களை செம்மையாக செயல்படுத்த முயலும்போது, அதை திருடிக் கொண்டு போகும்படியான பாவகாரியங்களைச் செய்வது நியாயம்தானா என்று இந்த மன்றத்தின் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்ப தூஉம்
உண்ப தூஉம் இன்றிக் கெடும்.''

என்ற வள்ளுவரின் திருக்குறளைத்தான் அவர்களுக்கு நான் நினைவு படுத்த விரும்புகிறேன். ஆகவே, தயவுசெய்து சத்துணவு திட்டத்தில் கை வைக்க யார் முனைந்தாலும் அவர்கள் மீது பாரபட்சமற்ற முறையில் ஈவு இரக்கம் இல்லாது கடுமையான தண்டனை வழங்கும் வகையில் கடுமையான உத்தரவுகளை போட வேண்டும் என்று நமது அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

நமக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டங்களுக்கென 1986-87 ஆம் ஆண்டுக்கு 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழக மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கி மகிழ்ச்சியை அளித்துக் கொண்டிருக்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் இல்லாத ஊர்களே இல்லை என்று சொல்லும்படியாக, அனைத்து ஊர் களுக்கும் தமிழக அரசு செய்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமங் களில் சென்று நேரிடையாக மக்கள் குறைகளை கேட்கின்ற நேரத்தில், பெரும்பான்மையான கிராமங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டும் என்றுதான் கேட்டு முறை யிடுகிறார்கள். நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பி.டி.ஓ.-வைக் கேட்டால் அந்த ஊர் 3-ஆவது கேட்டகிரி, 4-ஆவது கேட்டகிரி, 5-ஆவது கேட்டகிரி என்று பிரித்து வைக் கப்பட்டுள்ளது என்றும், கேட்டகிரி வாயிலாக அது வரும் போதுதான் அதற்குச் செய்ய முடியும் என்றும் சொல்லுகிறார்கள்.

தயவு செய்து இந்த விஷயத்தில் கேட்டகிரி என்று பார்க்கா மல் எந்த ஊர்களுக்கு மேல்நிலைத் தொட்டி வேண்டும் என்ற நிலையிருந்தாலும் அந்த ஊர்களுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியை அமைத்துத் தர வேண்டும் என்று இந்த மாமன்றத் தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

1987 ஜனவரி முதல் நாள் முதல் தமிழ்நாடு முழுவதிலும் கள், சாராய விற்பனை அறவே நிறுத்தப்பட்டு, மதுவிலக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என்ற அரசின் முடிவு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒன்று. அப்படிச் செய்தால் 1986-87ஆம் ஆண்டில் 60 கோடியும், 1987-88ஆம் ஆண்டில் 250 கோடியும் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படும் என்றும் அதில் 50 விழுக்காட்டை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும் என்றும் கேட்டிருப்பது நல்லதொரு கோரிக்கை. மத்திய அரசு அதை நிறைவேற்றி வைக்கும் என்று உளமார நம்புவோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்கை அமல் படுத்த நினைப்பது ஏழை எளிய மக்களைக் காப்பாற்றத்தான். இப்போது ஏழை எளிய மக்கள் தான் அதிகமாக குடிப் பழக் கத்தில் ஈடுபட்டு கையில் உள்ள பொருள்களையெல்லாம் இழக் கின்றார்கள். அதுவும் நாள்தோறும் கூலி வேலை செய்துவரும் வருமானத்தைக் கூட அவர்கள் இழக்க நேரிடுகிறது. அதைத் தவிர்க்கத்தான் ஏழை எளிய மக்களைக் காப்பாற்றத்தான் மது விலக்கை மீண்டும் அதிக அளவில் அமல் படுத்த வேண்டும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் நினைப்பது, அவர்களுடைய தாய் உள்ளத்தை, தமிழக மக்கள் மீது எந்த அளவுக்கு பற்றும் பாசமும் வைத்திருக்கின்றார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இதில் நான் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மது விலக்கை அமல்படுத்தும்போது 1958ஆம் ஆண்டு புரொஹிபிஷன் ஆக்ட்டிலே உள்ள தண்டனைகளையே கைக்கொள்ள வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சாராயக் கேசுகளை நடத்தி எனக்கும் பழக்கம் இருக்கிறது. 1958ஆம் ஆண்டு புரொஹிபிஷன் ஆக்ட்டிலே கொடுக்கப்பட்டுள்ள தண்டனை விதிமுறைகளை முதலிலே கையாண்டுக் கொண்டிருந்தார்கள். பிறகு மதுவிலக்கை விரிவு படுத்தும்போது அந்த தண்டனை அதிகமாக்கப்பட்டது. அப்படி அதிகமாக்கிய நேரத்தில், ஏழை எளிய மக்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டு, அவர்கள் மீது நிறைய வழக்குகள் போடப்பட்டு, பல ஆண்டுகள் அவர்கள் கோர்ட்டுக்கு நடக்க வேண்டியிருந்தது. தண்டனை கடுமையாக இருந்த காரணத்தால் அவர்கள் எல்லாம் மிகவும் வேதனையுற்று இருக்கிறார்கள். அந்த வேதனை வெறுப்பாக வளரும். ஆகவே, 1958ஆம் ஆண்டு புரொஹிபிஷன் ஆக்ட்டிலே உள்ள தண்டனையை எடுத்துக்கொள்ள வேண்டு மென்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன். மேலும் முடியுமானால் இந்தியா முழுவதும் மதுவிலக்குக் கொள்கையை பின்பற்றுமாறு பாரதப் பிரதமர் அவர்களை நம் முடைய அரசு கேட்டுக் கொள்ள வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையாக தெரிவிக்கிறேன்.





அடுத்து கல்வியைப் பொறுத்தவரையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு தலையாய முன்னுரிமை அளித்து வருவதை தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். 1985-86 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மேம்பாட்டிற்காக 468 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டில் கல்வி மேம்பாட்டிற்காக 551 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட் டிருப்பதிலிருந்து தமிழக மக்கள் கல்வியில் சிறந்து விளங்கவேண்டு மென்று புரட்சித் தலைவர் அவர்கள் அக்கறை கொண்டுள்ளார் கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. 1986-87 ஆம் ஆண்டில் கடந்த ஆண்டுகளைப் போலவே கூடுதல் ஆசிரியர் பதவிகளுக்கு அரசு அனுமதியளிக்க உள்ளதை அறிந்து குறிப்பாக ஆசிரிய பெருமக்கள் தமிழக அரசை வாழ்த்துவார்கள் என்றே கருதுகிறேன். ஆனால் ஏனோ ஆசிரியர்கள் நம்முடைய அரசுக்கு எதிராக செயல்பட்டு வருகிறார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்களுக்காக தாய் உள்ளம் கொண்டு எல்லாவித மான உதவிகளையும் சலுகைகளையும் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நாடே நன்கு அறியும்.

அதேபோன்று அரசு ஊழியர்களுக்காக அரசு பல சலுகை களை அளித்து வந்துள்ளது. இப்போது இந்த அறிக்கையின் 40ஆவது பாராவில் ஒரு புதிய திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. வீடு கட்டுவதற்காக முன்பணம் பெற்ற அரசு ஊழியர், அரசுப் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால் அவருடைய கணக் கில் நிற்கின்ற பாக்கித் தொகையை வட்டியுடன் தள்ளுபடி செய்வதற்காக, வீடு கட்ட முன்பணம் வாங்கிய அரசு ஊழியர் களுக்கென, ஒரு தனி குடும்ப நல நிதியை ஆரம்பிக்கவுள்ளதை அறிந்து அனைத்து அரசு ஊழியர்களும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. அரசு ஊழியர்களும், ஆசிரிய பெருமக்களும் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசை பாராட்டுவார்கள் என்றே நினைக்கிறேன்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு".

என்ற குறளை அவர்கள் மனதில் இறுத்திக் கொள்ள வேண்டு மென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இவைகளை யெல்லாம் எடுத்து கூறிவிட்டு என்னுடைய தொகுதி பிரச்சினை கள் ஒன்றிரண்டை சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதியில் கூரை வீடுகள் தான் நிறைய இருக்கின்றன. கூரை வீடுகளைத் தவிர, ஓட்டு வீடு, மெத்தை வீடுகளே கிடையாது. அந்தவகையில் என்னுடைய தொகுதி பிற்பட்ட தொகுதியாக இருக்கிறது. விவசாயம் சம்பந்த மான தொழிற்சாலை ஒன்றினை கலசப்பாக்கம் தொகுதியில் நிறுவிட நம்முடைய அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து நான் இதனைக் குறிப்பிடும்

போது. தயவு செய்து யாரும் குற்றமாகச் சொல்வதாக நினைக்க வேண்டாம். என்னுடைய தொகுதியில் பல பள்ளிகள் மரத்தடியில் நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பள்ளிகளுக்கு சிறு சிறு கட்டிடங்களைக் கட்டுவதற்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் பேசுகின்ற பொழுது "வேறு வழியில்" என்று ஆரம்பித்ததிலிருந்து "எண்ணிப் பார்க்க வேண்டும்" என்று குறிப்பிட்டது வரையில் உள்ள பகுதி அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றது. 'எப்படி சமாளிப்பது' என்று அந்த வாக்கியத்தை முடித்து விடலாம்.

*திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் முன்வைக்கப்பட்டிருக்கிற 1986-87 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் ஒரு சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இங்கே ஆளுகிற தரப்பைச் சேர்ந்த நண்பர்கள் பேசுகிறபோது தொடர்ந்து வருத்தப்பட்டுக் கொண்டார்கள். எதிர்த் தரப்பில் இருக்கிறவர்கள் தொடர்ந்து குற்றம் குறைகளைச் சொல்வதாகவும், இப்படி குறைகளைச் சொல்வது நியாயம் தானா என்று முறையீட்டுப் படலத்தை மேற் கொண்டார்கள். அவர்களுக்கு நான் ஒன்றினை நினைவுபடுத்த விரும்புகிறேன். மரியாதைக்குரிய மறைந்த அண்ணா அவர்கள் இதே சட்டமன்றத்தில் எதிர்த் தரப்பில் இருந்தபோது இப்படித்தான் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் குறைபட்டுக் கொண்டார்கள். அப்படி அவர்கள் குறைப்பட்ட போது அண்ணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். எதிர்க் கட்சிகள் ஆளும் கட்சிக்கு லாலி பாடுவதற்காக சட்டமன்றத்திற்கு வரவில்லை என்று". இருக்கிற நடப்பில் நிலவுகிற பல்வேறு குறைகளைச் சுட்டிக்காட்டுவதுதான் எதிர்க்கட்சிகளின் பணி என்ற முறையிலே அவற்றை ஜனநாயகப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொள்ள இனிமேலாவது பழகுங்கள் என்று மட்டும் நான் தொடக்கத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

இங்கே முன்மொழியப்பட்டு இருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலும், தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கோ, அல்லது வளர்ச்சிக்கோ முற்றிலும் தடையாக இருக்கக்கூடிய புதிய சவால்களைப் பற்றியும், அந்தச் சவால்களை தீர்த்துக்கொள்வதற்குரிய மார்க்கங்கள் என்ன என்பதைப் பற்றி



யும் தெளிந்த சிந்தனை இந்த அறிக்கையில் இல்லை என்பது அதிர்ச்சிக்குரியதே அல்ல. ஏன் என்று சொன்னால், ஆளுகிற கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற முறையில், ஆளுகின்ற கட்சிக்கு தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையிடுகிற விலங்குகளாக இருக்கிற பிரச்சினைகளைப் பற்றி, தெளிந்த ஞானம் இல்லை என்பதும், அதற்குரிய அரசியல் பொருளாதார அறிவை அவர்கள் நாடிச் செல்ல விரும்பவில்லை என்பதனாலேயும் அத்தகைய பிரச்சினைகளுக்கு அவர்களால் தீர்வு சொல்ல முடியவில்லை. நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையிலும் நான் தெளிவாகச் சொல்ல விரும்புவது. ஒரு மிகச் சிறந்த தமிழ் ஆய்ந்த தமிழன் என்ற முறையில் நல்ல தமிழ் நடையிலே இது தரப்பட்டு இருக்கிறது. வழக்கம்போல திருக்குறளும் சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தவிர, இந்த நிதிநிலை அறிக்கையிலே தமிழ்நாட்டினுடைய தேவைகள் புரிந்து கொள்ளப்பட்டுத் தீர்வு சொல்லப்படவில்லை என்பது எதிர் தரப்பிலே சுட்டிக் காட்டப்பட வேண்டிய விஷயம் என்ற முறையிலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீண்ட அனுபவம் உள்ளவர் தான் நமது நிதியமைச்சர் அவர்கள். இதே சட்டமன்றத்தில் நிரம்ப அனுபவம் பெற்றவர்கள்தான். ஆனால் என்ன செய்வது? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது திறமைசாலிகளை முடமாக்கவல்ல ஒரு விஷக் கூண்டு என்கிற காரணத்தால், இந்த இயக்கம் எந்தவிதமான அரசியல், பொருளாதார முன்னேற்றத்திற்கு உரிய விஷயங்களையும் அடிப்படையாகக் கொண்டு இருக்கவில்லை என்பதால் அந்த இயக்கத்தில் யார் இருந்தாலும், இத்தகைய நிலையை மேற்கொள்வது தவிர்க்க முடியாது என்ற முறையில் நான் சொல்கிறேன். நான் தனிப்பட்ட அமைச்சர் அவர்களையோ, அல்லது தனிப்பட்ட நபர்களையோ குற்றச்சாட்டு சொல்லவில்லை. அது எங்களுடைய இயல்பும் அல்ல. நான் ஒரு விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட விரும்புவது, இன்றைக்கு மாநிலத்தினுடைய முன்னேற்றத்திற்கு சவால்களாக எழுந்திருக்கிற பிரச்சினைகள் என்ன என்பதைப் பற்றி இந்த நிதி நிலை அறிக்கையில் தெளிவாக்கப்பட்டு இருக்கிறதா என்பதை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு) இடையூறுகள் வருவதைப் பற்றி கவலையில்லை. ஆனால் எனக்கு ஒதுக்கப்பட்டு இருக்கிற காலத்தில் ஒரு வினாடி கூட இழக்க நான் விரும்பவில்லை.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மொத்தமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை விஷக்கூண்டு என்று சொல்கிறார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவர்கள் எல்லாம் அப்படி மாற்றப்பட்டு விடுகிறார்கள். அப்படி ஆகிவிடுகிறது, அதில் இருக்கக்கூடியவர்க.

அறிவாளிகள்தான். ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விஷக்கூண்டு என்று அவர்கள் சொல்கிறார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கக்கூடியவர்கள் விஷத்தில் ஊறிய வித்துக்களே தவிர, மற்றவர்கள் அல்ல. இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிற பிரச்சினைகள், திட்டங்கள், அதிலே இருப்பது எல்லாம் தேவையில்லை என்று சொல்ல முடியுமா? உங்களால். எந்தத் திட்டம் தேவையற்றது, எந்தப் பிரச்சினை தேவையற்றது. என்று சொன்னால், அதற்கு பதில் அளிக்கத் தயாராக இருக்கிறோம்.

திரு. கு. சுப்பராயன்: துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதையே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். நான் விஷக்கூண்டு என்று சொன்னேன். அவர்கள் விஷத்தில் ஊறிய வித்துக்கள் என்று ஒப்புக்கொண்டதற்காக நன்றி தெரிவித்துக் சொள்கிறேன்.

அடுத்து என்ன என்ன திட்டங்களை எல்லாம் நீங்கள் நிறைவேற்றவில்லை என்பதைப் பற்றி நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். பொறுமையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு மாநிலத்தில் இருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சனைகளில் ஒன்று வேலையில்லாத் திண்டாட்டம். வேலையில்லாத் திண்டாட்டம் என்கிற மிக முக்கியமான சவாலைச் சந்திப்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் ஏதாவது ஆக்கபூர்வமான திட்டங்கள் முன்மொழியப்பட்டு இருக்கிறதா? இல்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ருத்திராட்சக் கொட்டைகளை உருட்டி ஜபம் செய்வதால் ஒழியாது. வேலையற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்குரிய திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பது வருத்தத்திற்குரியது.

அதேபோல் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்களில் இந்தியாவிலே முதல் இடம் தமிழ்நாட்டுக்குத்தான். இங்கே 57.2 சதவீதம் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் வறுமைக் கோட்டிலேயிருந்து விடுபட வேண்டுமானால், இவர்களுக்கு வேலை வாய்ப்பு வேண்டும். அந்த வேலை வாய்ப்பு வழங்குவதற்கு உரிய எந்தத் தொழில் திட்டமும் இந்த அரசிடம் இல்லை.

அடுத்து நிலத்தடி நீர் தொடர்ந்து கீழே இறங்கிக் கொண்டு இருக்கிறது. தொடர்ந்து கீழே இறங்கிக் கொண்டு இருக்கக்கூடிய நேரத்தில், எதிர்காலத்தில் குடிநீருக்கும் விவசாயத்திற்கும்



மிகப் பெரிய அபாயத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரச்னை இது. இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பது பற்றி ஏதாவது திட்டம் முன்மொழிவுகள் இருக்கிறதா, என்றால் இல்லை.

அதேபோல் பவர். மின்சாரத்தைப் பொறுத்த வரையிலும் ஏதோ ஒரு கணக்குப் பிள்ளை மாதிரி பட்ஜெட்டில் சொல்லப்பட்டு இருக்கிறதே தவிர நாங்கள் இன்ன காரியங்கள் ஆற்றினோம் என்ற தொகுப்பு இருக்கிறதே தவிர, என்ன காரியங்கள் ஆற்றப் போகிறோம் என்று சொல்லப்பட்டு இருக்கிற விஷயங்கள் கூட வெறுமனே இங்கொன்றும், அங்கொன்றுமாக எடையற்றவையாக இருக்கிறது. மின்சாரத் துறையைப் பொறுத்த வரையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கும், நிலத்தடி நீர் கீழே இறங்குவதைப் போக்குவதற்கும், இன்னும் இந்த மாதிரியான மிக முக்கியமான விஷயங்களைப் பற்றிய தெளிவான எதிர்காலத் திட்டம் இந்த அறிக்கையிலே எதுவும் இல்லை.

அதேபோல் தொழில் துறையைப் பற்றி இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். தொழில் துறையைப் பற்றி நான் மிக முக்கியமான ஒரு உதாரணத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தொழில் துறையில் சுயதிருப்தி அடைந்திருக்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டில் 31 தாலுக்காக்கள் பிற்படுத்தப்பட்ட தாலுக்காக்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த 31 தாலுக்காக்களில் 9 தாலுக்காக்களிலேதான் பிற்பட்ட பகுதி என்ற அறிவிப்பிற்குப் பொருத்தமான சலுகை வழங்கப்பட்டிருக்கின்றது. குறிப்பாக 15 சதமான மின்சாரக் கட்டண சலுகை என்பது 9 தாலுக்காக்களிலேதான் வழங்கப்பட்டிருக்கின்றது. மற்றவற்றில் வழங்கப்படவில்லை. நான் மிகவும் மதிக்கின்ற நம்முடைய மரியாதைக்குரிய ஆளுங்கட்சி உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் கூட பேசும்போது குறிப்பிட்டார்கள். மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டில் பிற்பட்ட மாவட்டங்கள் என்ற அளவில் அறிவிக்க ஒப்புக்கொள்ளவில்லை, அறிவிக்கவில்லை என்றெல்லாம் வருந்தப்பட்டுக் கொண்டீர்களே, பிற்பட்ட தாலுக்கா என்று அறிவித்த 31 வட்டங்களில் அறிவிக்கப்பட்ட ஏரியாக்களுக்கு வழங்கப்பட வேண்டிய 15 சத மின்சாரக் கட்டண சலுகை மாநில அரசால் வழங்கப்பட்டு விட்டதா? இருக்கிற அரிவாளில் அறுக்க முடியாத உங்களுக்கு 27 அரிவாள்கள் எதற்கு என்று நான் கேட்க விரும்புகிறேன். இருக்கிற அதிகாரத்தை முறைப்படுத்தி பயன்படுத்த வேண்டாமா? பயன்படுத்தவில்லை. என்னுடைய மாவட்டத்தில் அவினாசி தாலுக்கா பிற்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கு கிட்டத்தட்ட 3 ஆண்டு காலமாக நூற்றுக் கணக்கில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் சலுகைக் கட்டண

மின்சார இணைப்பு இல்லாமல் வெறுமனே இயங்காமல் நின்று கொண்டிருக்கின்றன. ஒன்று அந்த கட்டிடங்களை இடிக்கச் சொல்லிவிடுங்கள். அல்லது மின்சார இணைப்பு கொடுங்கள். எதைச் செய்யப் போகிறீர்கள் என்பதை தயவுசெய்து நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இறுதியாக பதில் அளிக்க வேண்டுமென்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் இந்த ஆட்சி மிகச் சிறந்த கல்யாண குணம் கொண்ட ஆட்சி என்பதிலே எனக்கு கொஞ்சமும் சந்தேகம் கிடையாது. முன் உதாரணமான ஆட்சி ; ஆனால், நல்லவர்க்கல்ல. தவறானவர்களுக்கு. நிர்வாகத் துறையிலே என்ன செய்கிறார்கள் ? இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிபற்றி நான் தொடர்ந்து சில விஷயங்கள் குறிப்பிட விரும்புகிறேன். மற்ற கட்சிகளைப் பற்றி இவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால், ஆட்சி நடத்துகிற இவர்களின் நிர்வாகத்தின் கீழ் அரசாங்க விழாக்களில் ஆளுகின்ற கட்சி நபர்களுக்கு அதிகாரக் கூட சாதகமாக சாய்க்கப்படுகிறதே, எப்படி? சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட சில இடங்களில் விட்டு விட்டார்கள் என்று சட்டமன்ற உறுப்பினாகளே போராடவேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது. ஆனால், ஆளுகிற கட்சியைச் சார்ந்த அரசுப் பொறுப்பில் இல்லாத பல நபர்கள் அரசாங்க விழா மேடைகளில் முன் வரிசைகளிலேயே அனுமதிக்கப்படுகிறார்களே, அது எதன் பொருட்டு ? ஆளுகிற கட்சி என்பதால், அதிகார துஷ்பிரயோகம் என்பதன் பொருட்டு அல்லவா ? இந்த அதிகார துஷ்பிரயோகம் இந்த ஆட்சியில் இல்லை என்று ஒருவேளை மெஜாரிட்டி இருக்கிறது என்பதால் கூட மறுக்கலாம். அப்படி மறுப்பதாலேயே அது உண்மையாகி விடாது. நீங்கள் தெரிந்து கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில், தெரிந்து கொள்ளவேண்டுமென்பதற்காக அழுத்தம் திருத்தமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

அதைவிட இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிற மிகச் சிறந்த ஜோக்குகளில் ஒன்று தமிழ்நாட்டிலே சாலைகள் மிக நன்றாக இருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதுதான். நான் இந்த ஆண்டு படித்த ஜோக்குகளிலேயே அற்புதமான ஜோக் அதுதான். எனக்கு முன்னர் பேசிய ஆளும் கட்சி நண்பர்கள் குறிப்பிட்டார்கள். கேள்வி நேரத்திலேகூட சாலைகள் சரியில்லை என்று சொன்னார்கள். ஆனால், அதிகாரபூர்வமாக வழங்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது, ரோடு மிக நன்றாக நிர்வகிக்கப்படுகிறது என்று. இதிலிருந்து என்ன புலப்படுகிறது. மக்களுக்கும், உங்களுக்கும் கொஞ்சமும் கூட சம்பந்தம் இல்லை என்பதுதான். மக்களின் அன்றாட வாழ்க்கை நெருக்கடிகளில் சுகங்களில் அல்ல துக்கங்களில் நீங்கள் கொஞ்சம்கூட இரண்டற





கலக்கவில்லை என்பதை மிக தெளிவான ஒப்புதலாகத் தெளிவுபடுத்துகிற பட்ஜெட்டாகத்தான் நான் இந்த பட்ஜெட்டை பார்க்கிறேன். அப்படி சொன்னதை தயவுசெய்து பின்னராவது திருத்திக் கொள்ளுங்கள். ரோடு பல்லாங்குழி ஆட்டம் நடத்துகிற அளவு பாழ்பட்டு கிடக்கிற நிலமாகத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் கிடக்கின்றது. எனவே, அது மாற்றப்படவேண்டுமே தவிர மகிழ்ச்சி கொள்ளத்தக்கதாக இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மத்திய அரசைப் பற்றிக் கூட குறிப்பிடுச் சொன்னார்கள். மத்திய அரசை எதிர்ப்பதில் உங்களுக்கு ஏன் நடுக்கம்? மத்திய அரசாங்கம் என்ன மிக சரியாக நடந்துகொண்டதா? இந்த மாநிலத்தின் தேவைகளை இந்த மாநிலத்தின் பொருளாதார நலன்களை சேதாரப்படுத்திய குற்றம் புரிந்த குற்றவாளிகளில் ஒன்று மத்திய அரசு. இந்த மத்திய அரசு சமீபத்திலே நாடாளுமன்றம் கூடுவதற்கு 20 நாட்களுக்கு முன்னர் ஜனநாயக பண்பிற்கு முற்றிலும் விரோதமான முறையில் ஒரு நிர்வாக உத்தரவின் மூலம் எரி பொருள்களின் விலைகளை ஏற்றினார்கள். இதே மாதிரி மற்ற பொருள்களின் விலைகளையும் ஏற்றி விட்டனர். இவற்றில் பிரஜைகள் மட்டும் அல்ல தமிழ்நாடு அரசாங்கமும் பாதிக்கப்பட்டது. மதிப்பீட்டு வைத்திருந்த மாநில அரசின் திட்ட மதிப்பீடுகள் நிலைகுலைந்து போய்விட்டன. திட்ட மதிப்பீடுகளை சேதாரப்படுத்திய உத்தரவு எது ? மத்திய அரசின் விலைவாசி ஏற்ற உத்தரவுதான்.

(பிற்பகல் 1-20)

இந்த மத்திய அரசின் ஜனநாயக விரோத உத்தரவுக்கு எதிராக இந்த அறிக்கையில் ஒரு கண்டனத்தைத் தெரிவித்து இருக்க வேண்டாமா ? இந்த ஜனநாயக விரோத உணர்ச்சியை சகித்துக் கொண்டு எப்படி நீங்கள் மாநிலத்தின் பிரதிநிதியாக விளங்க முடியும். நம்பிக்கையோடு உங்களுக்கு வாக்களித்த இந்த மாநில மக்களின் சுவாச காற்றாக நீங்கள் விளங்க வேண்டும் என்று சொல்லி உங்களுக்கு ஆட்சி நடத்துகிற அதிகாரத்தை மக்கள் வழங்கி இருக்கிறார்கள். மக்களின் பொருளாதார நலன்களை சேதாரப்படுத்தியது சாதாரண விஷயம் அல்ல. இது ஒரு விபரீதமான விஷயம். சர்வதேச மார்க்கெட்டில் எண்ணெய் விலை இறங்குகிறபோது இந்தியாவில் மட்டும் எண்ணெய் விலை ஏற்றப்படுகிறது. இதன்மூலம் தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை சேதாரப்படுத்தியதன் காரணமாக அந்த உத்தரவை கடுமையாக கண்டிக்க வேண்டும் என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே போல் மூடிய ஆலைகளின் பிரச்சினை. இந்த மூடிய ஆலைகளை நாட்டுடமையாக்கக் கோரி 18 ஆம் தேதி அன்று கோவையில் இருந்து பாத யாத்திரையாக 100 க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள். தொழில் துறையின் முன்னேற்றத்தைப் பற்றி சொல்கிறார்கள். ஏன் மூடிய ஆலைகளைத் திறப்பதில் அக்கறை செலுத்தவில்லை? உங்களுக்கு அதிகாரம் இல்லையா? அவற்றை எடுக்கச் சொல்லி நிர்ப்பந்திக்கிற அதிகாரக் கோலை ஏன் எடுக்க உங்களால் முடியவில்லை. 8 ஆலைகள் மூடப்பட்டு இருக்கின்றன. எண்ணாயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சொல்லி பாத யாத்திரை வந்திருக்கிறார்கள். இன்றைக்கு வரையிலும் இது குறித்து ஆக்க பூர்வமான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

குஜராத் மாதிரி நமது மாநில அரசு மேற்கொள்ளவேண்டும் என்று தொடர்ந்து அவர்கள் அங்கே வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் இந்த அரசு அதைக் கண்டும் காணாமல் இருந்து கொண்டு இருப்பதற்கு என்ன காரணம்? உங்களை செயல் அற்று வைத்து இருப்பது எது? தயவுசெய்து சிந்திக்க வேண்டாமா? இந்திய போர்ஜ் என்ற கம்பெனி மூடி எத்தனை நாட்கள் ஆகின்றன. 10-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பட்டினியால் செத்தார்கள். அந்த செத்த தொழிலாளர்கள்தானா காரணம் அந்த தொழிற்சாலை மூடப்பட்டதற்கு. அந்த தொழிற்சாலையை நடத்திய நிர்வாகம் தான் அடுத்த மூப்பாக இருந்து கொண்டு வேறு 4, 5 இடங்களில் தொழிற்சாலைகளை கட்டிக் கொண்டு நடத்திக்கொண்டு இருக்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம். உங்கள் ஆட்சி தான் இந்த தவறான அநியாய நடைமுறைகளுக்கு ஒரு பாதுகாப்பாக இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து ஆசிரியர்களின் நன்றிமறப்பது பற்றிகூட ஆளுங்கட்சி நண்பர்கள் குறிப்பிட்டார்கள். நன்றி மறப்பது நன்று அன்று என்று சொன்னார்கள். கேட்க நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் இங்கு இந்த ஆட்சி இவ்வளவு விரைவில் வாக்களித்தவர்களின் நன்றியை மறக்கலாமா? மக்கள் வாக்கு அளித்தார்கள். மக்களின் ஒரு பிரிவினர்தான் என்.ஜி.ஒக்களும். 35 தலைமைச் செயலக ஊழியர்கள் இன்றைக்கு வரையிலும் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்த ஊழியர்கள் என்ன கொலைக் குற்றவாளிகளா? *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. கே. சுப்பசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும் போது ஆசிரியர்கள் * * * அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு இயக்கத்தைப் பற்றி நீங்கள் பேசாமல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வாறு பேசியதை நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட விரும்புவது, 35 ஊழியர்கள் இன்றைக்கு வரையிலும் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அவர்கள் வேலை நீக்கத்தை நிரந்தரமாக அப்படியே வைத்துக்கொள்கிற வகையில் என்ன தவறு செய்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் கோல் சாதக, பாதக அடிப்படையில், வெறுப்பு விருப்பு அடிப்படையில் தான் இயக்கப்படுகிறதே தவிர நியாயத்தின் அடிப்படையிலல்ல என்பதுதான். தங்களுக்கு சாதகமானவர்களுக்கு சாதகமாக சட்டம் இயற்றுவது, தங்களுக்கு எதிராக நிற்பவர்களை பழி வாங்குவது என்பதற்கு இது ஒரு மிகச் சிறந்த உதாரணமாகும்.

தயவுசெய்து பழிவாங்கும் போக்கைக் கைவிட்டு மாற்றிக் கொள்ளுங்கள் என்பதை நான் இங்கே குறிப்பிடவிரும்புகிறேன். ஆசிரியர்கள் பிரச்சினை எந்த அளவுக்கு இன்றைக்கும் தேக்கி வைக்கப்பட்டு இருக்கிறது. ஏன் அந்த கார்த்திகேயன் கமிஷன் அறிக்கை தொடர்ந்து கால தாமதப் படுத்தப்படுகிறது. இதற்கு என்ன காரணம்? சட்டமன்ற கூட்டத்தொடர் முடிகிற வரை அந்த அறிக்கை வரப்போவது இல்லை. சட்டமன்றத்திற்கு முன்னால் வைத்து விவாதிக்கவேண்டிய அவசியத்தை இந்த அரசு நிச்சயம் ஏற்படுத்தாது. அப்படி ஏற்படுத்தக்கூடாது என்பதற்காகத் தான் சட்டமன்ற கூட்டத்தொடர் முடிந்ததற்கு பின்னால் அவற்றை பற்றி நடவடிக்கை மேற்கொள்வது போல் ஒரு நிலைமை தெரிகிறது. தயவுசெய்து அதை கைவிட்டு சட்டமன்ற கூட்டத் தொடர் முடிவதற்கு உள்ளாக கார்த்திகேயன் கமிஷன் அறிக்கையை பெற்று அவற்றின் நியாயமான பரிந்துரையை மட்டும் அல்ல அனைத்தையும், அதை நிறைவேற்றுவதற்கு முன்னால் சம்பந்தப்பட்ட அரசு ஊழியர்கள் சங்கங்கள், ஆசிரியர்கள் சங்கங்களைச் சந்தித்து விவாதிக்கவேண்டும். அதன் பிறகுதான் அதன் முடிவுகளை அறிவிக்கவேண்டும் என்று நான் இங்கே குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

அதேபோல் விவசாயிகள் நலன்கள் பற்றி பேசுகையில் அவர்களுக்கு விலை கட்டுப்படியாக இல்லை என்று தொடர்ந்து போராடினார்கள். விலை கட்டுப்படியாக இல்லாமல் இருப்பதற்கு மத்திய அரசின் கொள்கைதான் காரணம். மத்திய அரசின் கொள்கைக்கு எதிராக இந்த மாநில மக்களின் சரியான பிரதிநிதி என்ற முறையில் இந்த மாநிலத்தின் தேவைகளுக்கும் இந்த மாநில விவசாயிகள் நலன்களுக்கும் வாதாடவேண்டும், போராட வேண்டும். நான் மேலும் சொல்லி அதை விளக்க விரும்பவில்லை. அனைத்துத் தரப்பு உணர்ச்சிக்கு வடிகால் என்ற முறையில் அவற்றை வெளிப்படுத்துகிற முறையில் இந்த ஆட்சி மத்திய அரசின் பொருளாதார நிலைகளுக்கு எதிராக போராடவேண்டும.

புதிய கல்விக் கொள்கையைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தக் கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசும் ஒப்புக்கொள்கிறது. கல்விக் கொள்கையின் நிலை என்ன? மத்திய அரசு மாவட்டத்திற்கு ஒரு மாதிரி பள்ளி என்று சொல்லி அதில் மகாராஜா மகாராணி குழந்தைகள் போய்ப் படிக்கலாம். வரிசேலுள்ள மிகப்பெரிய தொழில் மன்னர்கள் குழந்தைகள் அங்கே படிக்கலாம். ஆனால் ஏழை எளிய பாட்டாளி வீட்டில் பிறந்த ஒரு குழந்தை இந்தியாவில் ஒரு உயர்ந்த கல்வி ஞானத்தைப் பெறுவதற்கு அளவிலாத விலை கொடுக்க வேண்டும். அந்த விலையைக் கொடுப்பதற்கு குறைந்த வருமானமுடைய தொழிலாளர்களால் முடியாது. மத்திய அரசாங்கத்தினுடைய கல்விக் கொள்கை என்ன? வசதி படைத்தவர்கள்தான் கல்வி பெறவேண்டும், வசதியற்றவர்கள் கல்வி பெறுகிற உரிமையைப் பறிப்பதுதான். அந்த உரிமையைப் பறிப்பது நியாயம் தான் என்று ஒப்புக்கொண்டது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கடைப்பிடிக்கக் கூடிய கல்விக் கொள்கையில் தெரிகிறது. அதுதான் தமிழ் நாட்டில் தொடர்ந்து நடைபெறுகிறது. மருத்துவக் கல்லூரியிலிருந்து சகல கல்லூரிகளிலும் இவற்றை உங்களால் தடுக்க முடியவில்லை. ஏன்? இவற்றுக்கு நீங்கள் இரையாகிப் போனீர்கள். இவற்றுக்கு இரையாகிப் போன காரணத்தினால் அந்த தவற்றை தடுத்து நிறுத்தக் கூடிய நிலையில் நீங்கள் இல்லை என்பது இந்தக் கல்விக் கொள்கையின் மூலமாக மிகத் தெளிவாகக் காணத் தெரிகிறது.

அதுபோன்று இன்றைக்கு இருக்கக் கூடிய மிக முக்கியமான பிரச்சினைகளில் நீங்கள் சார்பற்றவர்கள் போல் சில பல நேரங்களில் பாவனை செய்கிறீர்கள். அதில் எல்லாம் நாம் ஒன்றும் சொல்ல முடியாது. ஆட்சி அதிகாரத்திலிருந்து நேர்மையாக செங்கோல் ஓச்சுவது போல் சொல்லப்பட்டாலும் அனுபவமும், ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற பல்வேறு நிகழ்ச்சி



களிலே தெரிகிற உண்மை அப்படி அல்ல. உதாரணமாக, கூட்டுறவுத் துறை. கூட்டுறவுத் துறை அதிகார துஷ்பிரயோகத்தினுடைய மிக முக்கியமான ஒரு துறை. என்னுடைய கோவை மாவட்டத்தில் கூட, மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில் இந்தப் பிரச்சினை கிளப்பப்பட்டது. எதிர்க்கட்சி எம்.எல்.ஏ-க்களின் பெயர்களே போடப்படாமல் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களின் பெயர்கள் பக்குவமான முறையில் போடப்படும். இது என்ன நேர்மை? இந்த நேர்மைதான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நேர்மை. பண்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று கொட்டி முழக்குவது வெறும் வால் போஸ்டரில்தானா? வாழ்க்கையில் இல்லையா. அண்ணாவினுடைய கொள்கை வெறும் பொழுதுபோக்கிற்குத் தானா? அவர் கற்றுத்தந்த ஞானத்தை, அவர் கற்றுத் தந்த அரசியல் பண்பை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டாமா? கடைப்பிடிக்கவில்லை என்பது உங்களுடைய ஆட்சியின் ஒவ்வொரு உரைக்கல்லையும் உரைத்துப் பார்த்தாலே புலப்படுகிறது.

ஆகவே தயவுசெய்து பெரும்பான்மை இருக்கிறது, ஆளுகின்ற கட்சி என்பதாலே, எதிர்த் தரப்பின் குரல்வளையை நசுக்குகின்ற பெரும்பான்மை இருக்கிறது என்பதாலே எல்லா விஷயங்களிலும் பெரும்பான்மையால் சந்திக்கலாம் என்பது ஜனநாயகத்தினுடைய சிறந்த முன்னுதாரணம் அல்ல என்பதை நான் குறிப்பாக எடுத்துச்சொல்லி, இறுதியாக ஒரு விஷயத்தை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். தொகுதியைப் பற்றி பல்வேறு உறுப்பினர் பெருமக்கள் சொன்னார்கள். அதற்குள்ளே நான் போக நேரமில்லை. காவிரி நீர் பிரச்சினையும், கிருஷ்ணா நதி நீர்ப் பிரச்சினையும், இந்த ஆட்சியினுடைய விவேகக்குறைவின் அடையாளம் என்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. கிருஷ்ணா நதி நீர் பிரச்சினை. இன்றைக்கு மத்திய அரசே அனுமதி மறுக்கிறது. மத்திய அரசு அனுமதி மறுத்ததற்குக் காரணம், மராட்டியமும், கர்நாடகமும் தங்கள் நலன் பாதிக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறது. ஆகவே அந்த அரசுகள் தங்களுடைய நலன் பாதிக்கப்படுகிறது என்று சொல்கிற காரணத்தாலே அந்திர அரசு பேச வரவில்லை என்று மத்திய அமைச்சரே இந்தத் திட்டத்தின் அனுமதி மறுப்பைப் பற்றி வெளியிட்டிருக்கிறார். இந்த பட்ஜெட்டிலே கிருஷ்ணா நதி நீர் சென்னைக்கு வராது என்பதற்குரிய ஒப்புதல் தபால் ஆபீஸ் முத்திரை குத்தப்பட்டிருப்பதாக நான் கருதுகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய நிதியமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையிலே இந்தத் திட்டத்திற்கு இறுதி ஆணி அடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. எதற்காக இவ்வளவு பணம் கொட்டினீர்கள் என்று நான் குற்றம் சாட்ட விரும்பவில்லை. கொட்டத் தான் செய்வீர்கள். விவேகக் குறைவு. என்னதான் செய்வீர்கள்? ஒரு திட்டத்தை செயல்

[திரு. கு. சுப்பராயன்] [1986 மார்ச் 19

படுத்துவதற்கு முன்னர், இந்தத் திட்டத்தை செயல்படுத்துகிறபோது என்னென்ன எதிர் விளைவுகள் தோன்றும், அவற்றை சமாளிப்பதற்குரிய அரசு இயந்திரங்கள் முறைப்படுத்தப்பட்டிருக்கின்றனவா, பிரச்சினைகளை முறைப்படி தீர்ப்பதற்கு வழி இருக்கிறதா என்பதை எல்லாம் முன்கூட்டியே சிந்தித்து அறியாமல், இந்த அரசு விவேகக் குறைவாக செயல்பட்டிருக்கிறது.

இறுதியாக காவிரிப் பிரச்சினை. இந்தக் காவிரிப் பிரச்சினை நிரந்தர தீர்வு காணப்படாததால் மிக விரைவில் தஞ்சாவூர் பாலைவனமாக ஆகிவிடக் கூடும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் காரணமாக தொடர்ந்து வருடந்தோறும் பிச்சைக் குரல் போட்டுக் கொண்டிருக்கிறோமே தவிர, நிரந்தர தீர்வு காண வழியேற்படவில்லை. காவிரி பிரச்சினையில் நிரந்தர தீர்வு காண, மத்திய அரசின் பிடரியை பிடித்து நெருக்கவேண்டும். மத்திய அரசாங்கத்தை நெருக்காத வரையில் இந்த முக்கியமான பிரச்சினைக்கு தீர்வு ஏற்படாது. தமிழக மக்களின் தேவைகளையும், கர்நாடக மக்களின் தேவைகளையும் உணர்ந்து சமூகத் தீர்வு காணப்பட மத்திய அரசு அரசியல் விளையாட்டு நடத்த அனுமதிக்காமல், நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

## 4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) பேரவை அலுவல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்:—

| | |
|---|---|
| 20—3—1986 .. (வியாழக்கிழமை)<br>21—3—1986 .. (வெள்ளிக்கிழமை) | 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. |
| 22—3—1986 (சனிக்கிழமை)<br>23—3—1986 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |



1986 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

| | |
|---|---|
| 24—3—1986 .. (திங்கட்கிழமை) | 1. 1986–87 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் பேரவைக்கு அளித்தல்.<br>2. 1985–86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை நிதி நிலை அறிக்கையைப் பேரவைக்கு அளித்தல்.<br>3. 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி. |
| 25—3—1986 .. (செவ்வாய்க்கிழமை) | 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி. |
| 26—3—1986 .. (புதன்கிழமை) | 1. 1985–86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.<br>2. 1985-86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்.<br>3. 1986–87 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் மீது விவாதமின்றி வாக்கெடுப்பு.<br>4. 1986–87-ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு—அறிமுகம் செய்தல்<br>5. 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி. |

[பேரவைத் தலைவர்] [1986 மார்ச் 19

| | | |
|---|---|---|
| 27—3—1986 .. (வியாழக்கிழமை) | .. | 1. 1985–86 ஆம் ஆண்டிற்கான இறுதி துணை மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி)<br>2. 1986–87 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும் (விவாதமின்றி)<br>3. 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்—தொடர்ச்சி. |
| 28—3—1986 .. (வெள்ளிக்கிழமை) | .. | தூய வெள்ளிக்கிழமை—விடுமுறை. |
| 29—3—1986 .. (சனிக்கிழமை)<br>30—3—1986 .. (ஞாயிற்றுக்கிழமை) | } | விடுமுறை. |
| 31—3—1986 .. (திங்கட்கிழமை) | .. | 1986–87 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதமும், பதிலுரையும். |
| 1—4—1986 .. (செவ்வாய்க்கிழமை) | .. | 1986-87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—தொடங்குதல்.<br>20—வேளாண்மை.<br>49—குடிநீர் வழங்கல்.<br>50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. |



1986 மார்ச் 19] [பேரவைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| 2—4—1986 .. (புதன்கிழமை) | .. | 35—நுகர் பொருள் வழங்கல். |
| 3—4—1986 .. (வியாழக்கிழமை) | .. | 33—வீட்டு வசதி.<br>34—நகர்ப்பகுதி வளர்ச்சி. |
| 4—4—1986 .. (வெள்ளிக்கிழமை) | .. | 2—மாநில ஆயத் தீர்வைத் துறை.<br>26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்.<br>27—கதர்த் தொழில்.<br>(தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்). |
| 5—4—1986 .. (சனிக்கிழமை) | .. | 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம். |
| 6—4—1986 .. (ஞாயிற்றுக்கிழமை) | .. | விடுமுறை |

(பிற்பகல் 1.30)

| | | |
|---|---|---|
| 7—4—1986 .. (திங்கட்கிழமை) | .. | 13—நீதி நிர்வாகம்.<br>14—சிறைச் சாலைகள். |
| 8—4—1986 .. (செவ்வாய்க்கிழமை) | .. | 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்.<br>6—பத்திரப் பதிவு.<br>10—பால் வழங்கு திட்டங்கள்.<br>22—கால் நடை வளர்ப்பு. |
| 9—4—1986 .. (புதன்கிழமை) | .. | 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |
| 10–4–1986 (வியாழக்கிழமை) | .. | தெலுங்கு புத்தாண்டு—விடுமுறை. |
| 11–4–1986 .. (வெள்ளிக்கிழமை) | .. | 18—மருத்துவம்.<br>19—பொதுச் சுகாதாரம்.<br>(தேவையிருப்பின் பேரவை மாலையிலும் கூடும்.) |

| | |
|---|---|
| 12–4–1986 (சனிக்கிழமை) | 3—மோட்டார் வண்டிகள் சட்டங்கள்—நிர்வாகம்.<br>39—சாலைகளும் பாலங்களும்<br>40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும், கப்பல் போக்குவரத்தும்.<br>54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு.<br>55—சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| 13–4–1986 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 14–4–1986 (திங்கட்கிழமை) | தமிழ்ப் புத்தாண்டு—விடுமுறை |
| 15–4–1986 (செவ்வாய்க்கிழமை) | 23—கூட்டுறவு. |
| 16–4–1986 (புதன்கிழமை) | 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். |
| 17–4–1986 (வியாழக்கிழமை)<br>18–4–1986 (வெள்ளிக் கிழமை) | 17—கல்வி. |
| 19–4–1986 (சனிக்கிழமை) | 21—மீனளம்<br>32—பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன். |
| 20–4–1986 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை |
| 21–4–1986 (திங்கட்கிழமை) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 22–4–1986 (செவ்வாய்க்கிழமை) | மகாவீர் ஜெயந்தி—விடுமுறை. |

மற்ற மானியக் கோரிக்கைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.



மானியக் கோரிக்கை எண்கள் 20, 49, 50, 35, 33, 34, 2, 26, 27, 4, 13, 14, 5, 6, 10, 22, 29, 18, 19, 3, 39, 40, 54 மற்றும் 55, அதாவது 1–4–1986ஆம் தேதி முதல் 12–4–1986 ஆம் தேதி முடிய எடுத்துக்கொள்ளப்படும் மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் 24–3–1986 திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் கொடுக்கப் பெற வேண்டும்.

ஏனைய மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்கள் 31–3–1986, திங்கட்கிழமை பிற்பகல் 3–00 மணிக்குள் கொடுக்கப் பெற வேண்டும்.

வெட்டுத் தீர்மானங்களுக்கான படிவங்களை, இச்செயலகத்தின் ' மசோதா பிரிவிலிருந்து ' பெற்றுக் கொள்ளலாம்.

பேரவை வழக்கம்போல் காலை 9–00 மணிக்கு கூடும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடி நாளை (20–3–1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1·34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

24. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் 1980–81 ஆம்ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

25. தமிழ்நாடு கைத்திறப் பொருள் வளர்ச்சிக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

26. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பதினொன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

[1986 மார்ச் 19

27. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

28. தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் 1984–85ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

1. 1986–87 ஆம் ஆண்டிற்கான 1, 2, 7, 8, 9, 11, 41 மற்றும் 47 ஆகிய கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

2. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 3 மற்றும் 13 முதல் 16 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள்.

3. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 4, 5, 6 மற்றும் 12 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

4. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 10 மற்றும் 22 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

5. 1986-87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20 மற்றும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

6. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண். 17-ன் விரிவான மானியக் கோரிக்கை.

7. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18, 19 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

8. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21, 25, 45 மற்றும் 56 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

9. 1986–87ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 23, 28 மற்றும் 35 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.



1986 மார்ச் 19]

10. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26, 27, 48, 51 மற்றும் 57 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

11. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 30 முதல் 32 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

12. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 29, 33 மற்றும் 34 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

13. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

14. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38 மற்றும் 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

15. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் மற்றும் 53—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

16. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39 மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

17. 1986–87-ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39—சாலைகளும், பாலங்களும், 54—சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள்.

18. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40, 44 மற்றும் 55 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

19. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 42, 46 மற்றும் 59 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

20. 1986–87 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43 மற்றும் 58 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

21. பதவிகள் சம்பள விதங்கள் பற்றிய விவர அறிக்கை (1986–87) (ஆங்கிலம்).

22. 1986–87 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

23. 1986–87 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

24. 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

25. 1986–87 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை குறிப்பின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

26. 1986–87 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் பகுதி-2 (திட்டங்கள்) (தமிழ், ஆங்கிலம்).

27. 1986–87 ஆம் ஆண்டு திட்டம் (நிதிநிலைக் குறிப்பு—திட்ட இணைப்பு) (தமிழ், ஆங்கிலம்).

28. 1986–87 ஆம் ஆண்டு வரவு -செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

29. வரவு-செலவுத் திட்ட விளக்க நூல், 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

30. 1986–87 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

31. 1986–87 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்து, நிதி அமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappal rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 1.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R B. Gandhi Street, Calcutta-11.

---

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 2-9-1986 Issued 2-9-1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மார்ச் 20, 1986-தொகுதி 18 எண் 3
Thursday, the 20th March 1986-Volume 18 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3-00 காசுகள்] [Price Rs 3-00 paise

## உள்ளடக்கம்.

**20—3—1986.**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 285—321 |
| 2. தகவல் கோரல் : | |
| (அ) தனி உறுப்பினர் அலுவலுக்காக ஒதுக்கப்பெற்றுள்ள நாள் .. .. | 821—323 |
| (ஆ) அச்சிடப்பெற்றுள்ள வெளியீடுகளில் அச்சகத்தின் பெயர் இல்லாமல் இருப்பது. | 323 |
| 3. அறிக்கை அளித்தல் : | |
| பேரவையில் திரு. அ. ரகுமான்கான் கல்வித் துறை பற்றி முன்னறிவிப்பின்றி குறிப்பிட்ட ஒரு குற்றச்சாட்டுக்கு அவை முன்னவர் அளித்த விளக்க அறிக்கை .. . | 324—331 |
| 4. வரவு-செலவுத் திட்டம், 1986-87, பொது விவாதம் .. .. .. | 331—402 |
| திரு. ஆர். ரெங்கசாமி .. .. | 331—337 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் .. | 338—346 |
| *திரு. வி. பி. சிந்தன் .. .. .. | 346—357 |
| திரு. கே. குப்புசாமி .. .. .. | 357—365 |
| திரு. அ. மலர்மன்னன் .. .. | 365—372 |
| திரு. வி. தங்கவேலு .. .. .. | 372—381 |
| திரு. வே. இரா. ஜெயராமன் .. .. | 381—388 |
| திரு. மா. கதிர்வேலு .. .. .. | 388—395 |
| திரு. சி. சுப்புராயர் .. .. .. | 395—402 |
| 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 403—404 |


டி2 A 3—1

2906

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மார்ச் 20, வியாழக்கிழமை

பங்குனி 6, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு— 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' உறுபொருளும் உல்கு பொருளும்தன் ஒன்னார்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.''

இறையாக வந்து சேரும் பொருளும் சுங்கமாகக் கொள்ளும் பொருளும் தன் பகைவரை வென்று திறையாகக் கொள்ளும் பொருளும் அரசனுடைய பொருள்களாகும்.

1. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

திருச்சியில் அனல் மின் நிலையம்.

*198—(*வினா எண் 5148)*—திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் ஒரு அனல் மின்சார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சி இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சரவர்களால் இரண்டாவது தலைநகரமாக ஆக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த நிலையிலே அங்கே மிகப்பெரிய பி. எச். இ. எல். பேக்டரி ஒன்று நடந்து கொண்டிருக்கிறது. அவர்களே இதை எடுத்து நடத்துவதாகக் கூறுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள் இது குறித்து அந்த பி.எச்.இ.எல். நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு இந்த அனல் மின்சார நிலையத்தை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பி.எச்.இ.எல். நிறுவனத்தார், அவர்களே முன்வந்து மின் உற்பத்தி துவங்க வருவார்களேயானால் இவ்வரசு அதனை ஆதரிக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருச்சியைப் போலவே தமிழகத்திலே தொழில் நகரங்களான மதுரை, கோவை போன்ற இடங்களில் அனல் மின் நிலையம் அமைப்பதற்கான உத்தேசம் அரசிடம் இருக்கிறதா ? தற்போது உற்பத்தியாகின்ற மின்சாரத்தினுடைய அளவு எவ்வளவு ? நம்முடைய தேவை எவ்வளவு ? வருகின்ற பருவகாலம் வரையில் மேலும் மின்வெட்டு இல்லாமல் இந்த அளவிற்கு மின்சாரத்தை அளிக்க முடியும் என்று அமைச்சரவர்கள் கருதுகிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனல் மின் நிலையத்தை அமைப்பதற்குப் பெருமளவிற்கு நிலக்கரி கொண்டுவர வேண்டி உள்ளது. கடல்வழி கொண்டு வந்து சேர்க்கின்ற வசதியுள்ள துறைமுக நகரங்களில் அனல் மின் நிலையங்களை உண்டாக்குவது எளிது. ஆனால் உள் பகுதியிலே, அது எவ்வளவு பெரிய நகரமாக இருந்தாலும் அங்கே அனல் மின் நிலையங்களை உருவாக்குவது பல்வேறு சிரமங்களைத் தரும். ஆகவே, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் அனல் மின்நிலையங்களை அமைப்பதை விட, கடலூர், நாகப்பட்டினம் போன்ற பகுதிகளில் அனல் மின் நிலையங்களை அமைப்பதைப் பற்றிதான் அரசு பரிசீலித்து வருகிறது. கோடை காலத்தைப் பொறுத்தவரையில், நெய்வேலியில் மேலும் ஒரு அனல் மின் நிலையத்தைத் துவங்க இருப்பதால் மின் வெட்டை அதிகரிக்க வேண்டிய அவசியம் இராது என்று திடமாக நம்புகிறோம்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்திலே வேறு எங்கேயாவது அனல் மின் நிலையங்களை அமைப்பதற்கு மைய அரசிடம் அனுமதியை தமிழக அரசு கோரியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, டலூரில் ஒரு அனல் மின் நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதுமட்டுமல்லாமல், இந்திய அரசு நெய்வேலியில் மூன்றாவது சுரங்கம் வெட்டி, அதிலே மிகப் பெரிய பெரும்பேரனல் மின் நிலையத்தை உருவாக்க வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. வி. பி. சிந்தன் : சபாநாயகர் அவர்களே, தொடர்ந்து மின்வெட்டினால் தொழிலும், விவசாயமும் பெருமளவிற்குப் பாதிக்கப்படுவதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அனல் மின் நிலையங்களை உருவாக்குவது பற்றித் தமிழக அரசு மைய அரசிடம் ஏதாவது ஆலோசனை சொன்னது உண்டா ? உறுதி



யான முறையில், இந்த இடத்தில் அனல் மின் நிலையம் அமைய வேண்டும் என்று ஆலோசனை கூறியது உண்டா ? அப்படிக் கூறியிருந்தால் மைய அரசிடமிருந்து பதில் கிடைத்தது உண்டா ? இதுபற்றித் தமிழக அரசின் கொள்கையை அறிய நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மின் பற்றாக்குறை என்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று என் பதில் கருத்து வேற்றுமைக்கு இடமே இல்லை. அனல் மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு இந்திய அரசுக்கு ஆலோசனை மட்டும் இவ்வரசு வழங்கவில்லை, அனுமதியும் பெற்றிருக்கிறது. மேட்டூர் அனல் மின் நிலையமானாலும், வடசென்னை அனல் மின் நிலையமானாலும் தூத்துக்குடி அனல் மின் நிலைய விரிவாக்கத் திட்டமானாலும், இவையெல்லாம் அனுமதிக்கப்பட்ட திட்டங்கள். அதோடு, இந்திய அரசை வற்புறுத்தி நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தை வெட்டி மிகப்பெரிய அனல் மின்நிலையம் உருவாக்கி வருவதும் இவ்வரசு எடுத்துக் கொண்டு வருகிற முயற்சி. மேலும், அனல் மின்நிலையங்களை உருவாக்க வேண்டுமென்ற வகையிலேதான் கடலூர், நாகப்பட்டினம் போன்ற பகுதிகளை ஆய்ந்து வருகிறோம்.

அதுமட்டுமல்லாமல், அணு மின் உற்பத்தி நிலையங்களை பொறுத்த வரையிலும் கூட, இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். இவ்வரசைப் பொறுத்தவரையிலே மிகத் தெளிவான கொள்கை, மின் உற்பத்தியைப் பொறுத்தவரையிலே வைத்திருக்கிறோம். அது என்னவென்றால், நம் மாநிலத்தைப் பொறுத்தவரையிலே, தன்னைத் தானே சமாளிக்கக்கூடிய தற்சார்பு நிலை மின்சாரத்தைப் பொறுத்த வரையில் உருவாக்க வேண்டுமென்பதுதான்.

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற பொழுது கடலூரில் புதிய மின்சார உற்பத்தி நிலையம் அமைக்கப்பட இருப்பதாகத் தெரிவித்தார்கள். கடலூரில் எந்தப் பகுதியில் அது அமைக்கப்படும் என்பதையும் அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டதா என்பதையும் அறிய விரும்புகிறேன். எந்தப் பகுதியில் அது அமைய இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்தைப் பயன்படுத்தி, உரிய பகுதியில் எங்கு அதிகமான அளவு, தேவையான அளவு நிலம் கிடைக்கிறதோ, அந்தப் பகுதியில் அது உருவாக்கப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நாகப் பட்டினத்திலே அனல் மின் உற்பத்தி நிலையம் துவக்கப் படுவதாக அறிவித்தார்கள், நன்றி. தஞ்சை மாவட்டத்திலே மின்சாரத்தை நம்பி விவசாயம் செய்யக்கூடிய சூழ்நிலை இருப்பதால், இந்த ஆண்டே நாகப்பட்டினத்தில் அனல் மின் நிலையம் துவக்குவதற்குத் திட்டம் உண்டா ? எப்பொழுது வேலைகள் துவக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, தஞ்சை மாவட்டத்திற்கு நாகப்பட்டினத்தில் மின் உற்பத்தியாகித்தான் வரவேண்டுமென்று இல்லை. தமிழகத் திலே மின் உற்பத்தி எங்கு ஆனாலும், தமிழகம் முழுவதும் விநியோகிக்கப்படுகிறது. ஆகையினாலே, மாவட்டத்திலே இருக் கிற அக்கறையை வைத்து, அவர்கள் தஞ்சை மாவட்டத்தில் இவ்வாண்டே ஒரு அனல் மின் உற்பத்தி நிலையம் வேண்டு மென்று வற்புறுத்துவாரானால் அது இயலாத காரியம். ஒரு மின் நிலையம் என்று அமைக்க முன்வருகிறபொழுது, நிதி ஆதாரங்கள், அதற்கு வேண்டிய இயந்திரங்கள் இவை யெல்லாம் தேவை. ஆகவே, ஆண்டுகள் பலவாகும். இவ் வாண்டே என்பது சாத்தியம் அல்ல.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே, உள்ள தொழிற்சாலை களிலே அதிகப்படியானவை இன்றைக்குச் சென்னையைச் சுற்றியிருக்கிற காரணத்தாலே ஏற்படுகின்ற மின் பற்றாக் குறையின் காரணமாக தொழிற்சாலைகள் பாதிக்கப்படுவதைக் கருத்திலே கொண்டு, சென்னையிலே தனியார் துறையிலே ஒரு அனல் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்காகக் கொள்கை ரீதியிலே ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அது எந்த நிலையில் உள்ளது ? அந்த நிலையம் எப்பொழுது செயல்படத் துவங்கும் என்பதை நான் உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம் என்கிற பகுதியில் ஒரு அனல் மின் நிலையம் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு ரூ. 200 கோடி அனுமதித்திருப்பதாகப் பத்திரி கைகளில் செய்தி வந்தது. அப்படி ஏதேனும் திட்டம் உண்டா ? குமரி மாவட்டத்தில் அனல் மின்சார நிலையம் வெகு விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஏதேனும் அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர் களே, அங்கேயும் துறைமுக வசதியைப் பயன்படுத்தி, புதிய அனல் மின்திட்டம் உருவாக்கலாமா என்கிற ஆலோசனை மின் வாரியத்திடம் இருக் து.





## சிறுவாணி அணையில் மின்சார உற்பத்தி.

199—(*வினா எண். 5319)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் உள்ள சிறுவாணி அணையில் மின்சார உற்பத்தி நிலையம் தொடங்க முடிவு செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

(இ) திட்டத்திற்கு ஆகும் செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ), (ஆ) மற்றும் (இ) : கோவை நகரத்திற்கு குடிநீர் உபயோகத்திற்காக சிறுவாணி அணையிலிருந்து கிடைக்கும் நீரைப் பயன்படுத்தி ரூ. 3.51 கோடி மதிப்பீட்டில் 3 மெக்காவாட் திறன் கொண்ட ஒரு சிறிய நீர் மின் நிலையம் அமைக்க மின்வாரியம் திட்டம் தீட்டி உள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த கேரள அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 9-10)

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, சிறுவாணி மின்சாரத் திட்டத்திற்கு செலவாகும் தொகையில் மத்திய அரசின் பங்கு கோரப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத்தகைய திட்டங்கள் பொதுவான திட்ட ஒதுக்கீட்டில் அடங்கும். ஆகையால் ஒவ்வொரு திட்டத்திற்கும் எவ்வளவு உதவி என்று சொல்வது இயலாது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, தமிழ் நாட்டின் மின்சாரத் தேவை மிக அதிகமாக இருப்பதால் நாம் தொடங்கும் எந்த மின்சாரத் திட்டமானாலும் 75 சதவீதம் அல்லது 100 சதவீதம் மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று இனிமேல் கோரப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்திய அரசு தன்னுடைய நிதியைப் மாநிலங்களுக்கு எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதற்கு வரன்முறைகள் இருக்கின்றன.

திரு. கு. ரமணி ; தலைவரவர்களே, மிகச் சிறிய மின் உற்பத்தி நிலையமாக இது இருப்பதால் இதில் உற்பத்தியாகும் மின்சாரம் சிறுவாணிப் பகுதியில் நீர் சப்ளை செய்ய, காரியால யங்கள், வீடுகளுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்க,

இன்னும் மற்ற பல காரியங்களுக்கு மட்டும் பயன்படுத்தப் படுமா? அல்லது கோவை நகரின் மற்ற பகுதிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் அந்த மின்சாரம் பயன்படுத்தப்படுமா? எந்த வகையிலே அந்த மின்சாரம் பயன்படுத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதன் மூலம் சுமார் 2.5 கோடி யூனிட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும். ஆகையால் அங்கே பயன்படுத்தப்படுவது மட்டு மின்றி, மற்ற பல காரியங்களுக்கும் பயன்படுத்தப்படும்.

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, இன்றைய சமுதாயத்தில் மிக முக்கியமான தேவையாக இருப்பது மின்சாரம். ஆகவே, மின்சாரம் உற்பத்தி செய்வதை தனியாரிடம் ஒப்படைப்பது என்கின்ற முடிவினை மறு பரிசீலனை செய்து, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மின் உற்பத்தியைத் தனியாரிடம் ஒப்படைக்காமல் இருக்க அரசு முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல மின்சாரம் மிகவும் முக்கியமான தேவையாக இருக்கிறது என்பதால் யாராவது உற்பத்தி செய்யட்டும், பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அரசு கருதுகிறது.

THIRU T. VENKATA REDDY : Hon. Mr. Speaker, Sir, Hosur is an Industrial area. The Hon. Minister for Industries and also the Chief Secretary have once promised to give a private generating system to get over the deficit current supply to Hosur Industrial area. May I know what has happened to that proposal ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the Hon. Member can know from the Hon. Minister for Industries because he deals with that subject.

திரு. கோ. வீரய்யன் : தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல மின்சாரம் அத்தியாவசியமான தேவையாக இருக்கிறது. அதுவும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிக, மிகத் தேவையான ஒன்று. நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் இருக்கிறோம். அதை உணர்ந்து, தொடங்கப்பட வேண்டிய மின் உற்பத்தி நிலையத்தைத் துரிதமாகத் தொடங்க



ஏற்பாடு செய்யப்படுமா? குறிப்பாக, நாகப்பட்டினத்தில் இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள்ளாவது அனல் மின் நிலையம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்த மின் நிலையத்தை அமைக்கும் பணி நம்மிடம் இல்லை. மத்திய அரசு அனுமதி அளிக்க வேண்டும். போதுமான நிலக்கரி கிடைக்க, நிலக்கரி சுரங்கம் வெட்டுவதற்கு மத்திய அரசு முதலீடு போட வேண்டும். இப்படிப்பட்ட பல்வேறு பிரச் சனைகள் இருக்கின்ற காரணத்தால் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்க இயலாது.

திரு. வி. தங்கவேலு : தலைவரவர்களே, வால்பாறையில் 'வாட்டர் பால்ஸ்' மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலை யம் எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அதுபற்றி என்னிடம் தகவல் இலலை.

திரு. கூடலூர் இ. வி. வேலு : தலைவரவர்களே, தவிட்டி லிருந்து மின்சாரம் எடுக்கலாம் என்று பொறியாளர்கள் சொல்லுகிறார்களே. அந்தத் திட்டம் அரசிடம் இருக்கிறதா? இல்லை என்றால் தவிட்டிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய் வதற்கு முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, திருச்சியில் பி.எச்.இ.எல். நிறுவனத்தார் உமியிலிருந்து fluidised bed combustion system என்று சொல்லுகின்ற முறையில், மின்சாரம் எடுக்கிற முயற்சியை மேற்கொண்டுள்ளார் கள். தவிட்டிலிருந்து எண்ணெய்தான் எடுக்க முடியும்; மின் சாரம் எடுப்பதாக தகவல் இல்லை.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, சென்னைக்கு அருகில் இருக்கிற அனல் மின்சார நிலையத்தினால் சுகாதாரக் கேடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, அந்த நிலை யத்தை மாற்ற அரசிடம் குறிப்பு இருக்கிறதா? அரசின் கொள்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இந்த மன்றத்தில் அதுபற்றி சொல்லப்பட்டிருக் கிறது. சென்னையில் பேசின் பிரிட்ஜில் இருந்த அனல் மின் நிலையத்தை மூடியிருக்கிறோம். அங்கே 'காஸ் டர்பைன்' பயன்படுத்தப்பட்டு, மின்சாரம் உற்பத்தி செய்கின்ற முறையை மேற்கொள்ளலாம்.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் ஒகனேக்கல் நீர்விழ்ச்சியிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான முயற்சி பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. அந்த நீர் மின்சாரத் திட்டத்தை இந்த ஆண்டிலாவது அமலாக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகளாக முயற்சி செய்தும் கர்நாடக அரசும், காவிரி அன்னையும் ஏமாற்றித்தான் வருகிறார்கள்.

அரசு அச்சக ஊழியர்களுக்கு மருத்துவ விடுப்பு.

200—(*வினா எண் 3640)—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் அரசு ஊழியர்களுக்கு 18 மாதங்கள் மருத்துவ விடுப்பு வழங்கப்படும் திட்டத்தை அரசு அச்சக ஊழியர்களுக்கும் நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்பொழுது முதல் அமலுக்கு வரும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளித்து இருக்கிறார்கள். அது எப்போது அமலுக்கு வரும் என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகத்தில் பணியாற்றுகின்றவர்கள் அரசுத் துறையைச் சேர்ந்தவர்களா அல்லது தொழிலாளர் பகுதியினரா என்ற முடிவை அரசு இன்னும் எடுக்கவேண்டி இருக்கிறது.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே அங்கேதான் இருக்கிறது. அரசு அச்சகத்தில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களும் அரசு தொழிலாளர்களாகத்தான் பாவிக்கப்படவேண்டும். எனவே அப்படி பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு அரசின் சலுகைகளை வழங்குவதில் தயக்கம் காட்டுவது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் எடுத்திருக்கிற முடிவுக்கு இன்னும் அரசு வரவில்லை என்ற காரணத்தால்வதான்.



திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகத்தின் ஊழியர்களைப் பொறுத்தவரையில் அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகளைத் தருகிறார்களோ அதேமாதிரிதான் தரவேண்டும். இன் ஆல் ஆஸ்பெக்ட்ஸ், அதாவது எல்லா வகையிலும் அரசு அச்சகத்தின் ஊழியர்களையும் அரசு ஊழியர்களாகத்தான் கருதுகிறார்கள். எனவே அவர்கள் கவர்ன்மென்ட் எம்பளாயிஸா, இல்லையா என்பதற்கு இடமே இல்லை. In all aspects they are following he Government Conditions. ஆகவே அவர்களை கவர்ன்மென்ட் எம்ப்ளாயீஸாக ட்ரீட் பண்ணி மெடிக்கல் லீவ் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களா என்ற அந்தச் சந்தேகம் இல்லை. ஆனால் இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் என்ற வகையில் அவர்கள் வருகிறார்கள். அதனால்தான் சில சலுகைகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

திரு. ஆர். ரெங்கசாமி : தலைவர் அவர்களே, இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் என்று சொன்னால் அவர்களுக்கு ஐ.டி. ஆக்ட் கவர் ஆகவில்லை. அப்படி இன்டஸ்ட்ரியல் ஒர்க்கர்ஸ் என்ற வகையில் க்ளெய்ம் பண்ணும்போது, You say that they are Government Employees. Now you say they are Industrial Workers. சர்வீஸ் கண்டிஷன்ஸ் மற்றும் எல்லா ஆஸ்பெக்ட்களிலும் அவர்கள் அரசு ஊழியர்களாக இருக்கும்போது இதிலே மட்டும் வித்தியாசம் காட்டுவது ஏன் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றித்தான் அரசு பரிசீலித்து வருகிறது.

கால்நடை மருத்துவமனைகளில் மருந்துகள் வழங்கல்.

(*201—வினா எண் 3483)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விலை உயர்ந்த Mifex, Calberol போன்ற கால்நடை மருந்துகளில் தமிழக அரசு என்ற முத்திரை இல்லாமல் மருத்துவமனைகளில் விநியோகிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) இதை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. ?

[1986 மார்ச் 20

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) கால்நடை மருத்துவ மனைகளில் தமிழக அரசு என்ற முத்திரையில்லாமல் கால்நடை மருந்துகள் விநியோகிக்கப்படுவதாகத் தகவல் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) இவ் வினாவுக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய பொதுநலத் திட்டங்கள் மூலமாக இனாமாக விநியோகிக்கப்படுகின்ற மருந்துகள் தவறான முறையிலே அந்தத் துறையிலே இருந்து மருந்துகள் விற்பனைக் கூடங்களுக்கு அனுப்பப்பட்டு அங்கே அதன்மூலம் சில தனியார்கள் இலாபம் பெறுகிறார்கள். தமிழக அரசின் மூலமாக தமிழக அரசின் பணியாளர்களுக்கு வழங்கப்படுகிற மருந்துகளில் 'தமிழக அரசு' என்று குறிப்பிடுகின்ற வகையில் சுருக்கமாக 'த.அ.' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதன் காரணத்தால் அரசு மருந்து என்று அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பும், தவறு செய்பவர்களைக் கண்டுபிடிக்கக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. அதையும்மீறி தவறு செய்பவர்களைப் பொறுத்தவரையில் உரிய நடவடிக்கை எடுக்கின்ற வகையில் சென்ற கூட்டத் தொடரிலே தனியாகச் சட்டம் போட்டு கடுமையான நடவடிக்கையை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : இந்தக் கால்நடை மருந்துகளைக் கடத்துகின்றவர்களை கண்டுபிடிக்கின்ற வகையில் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கின்ற வகையில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே சில நடைமுறைகளை அரசு பின்பற்றி வருகிறது. குறிப்பாக ஆண்டுதோறும் கால்நடை மருத்துவ நிலையங்களுக்குத் தேவையான மருந்துகள் தனியார் நிறுவனங்களிடமிருந்து டெண்டர் மூலம் பெறப்படுகின்றன. ஒப்பளிக்கப்பட்ட விலைப்பட்டியலைத் தனியார் நிறுவனங்கள் அனுப்பும்போது அரசு விநியோகம், கவர்ன்மென்ட் சப்ளை என்று குறிப்பிட்டு அனுப்ப வேண்டும் என்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அப்படி அரசு விநியோகம் என்ற முத்திரை இல்லாமல் தனியார் நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மருந்துகளை ஏற்றுக்கொளலாகாது என்றும் துறை அலுவலர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. இதில் ஏதாவது குறை இருக்குமேயானால் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1986 மார்ச் 20]

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'த/அ' என்று, அதாவது தமிழக அரசின் சப்ளை என்று குறிப்பிடப்படவில்லை என்றால் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் என்று சொன்னார்கள். என்னுடைய மூலக் கேள்வியிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். Mifex மற்றும் calberel போன்ற மருந்துகளிலே அது போன்று இடப்படவில்லை. என்று. அவைகள் மிகவும் விலை உயர்ந்த மருந்துகள். இது போன்ற மருந்துகளை கால்நடை மருந்தகங்களுக்குக் கொண்டு வந்து, அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்கு பயன்பெறச் செய்யாமல், வெளி மார்க்கெட்டுக்கு சென்று கொண்டிருக்கிறது. அதை உடனடியாகக் களைய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(முற்பகல் 9—20.)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எடுக்கும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவ மனைகளுக்குக் கொண்டு செல்லுகின்ற ஆடு மாடுகளுக்கு, மிக முக்கியமாக பெரிய வியாதிகள் வருகிற நேரத்தில், அங்கே மருந்துகளே இல்லை என்று சொல்லுகிறார்கள். எனவே இந்த மருந்து சப்ளை, அரசிடமிருந்து மாவட்டத் தலைநகரங்களுக்கு மட்டும் கொடுக்கப்படுகிறதா அல்லது மாவட்டத் தலைநகரங்களிலிருந்து ஒன்றியப் பகுதிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மலை வாசஸ்தலங்களில் தொழிலாளர் தங்கும் விடுதி.

(202—*வினா எண் 6099)—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் ஊட்டி, கொடைக்கனால் போன்ற மலை வாசஸ்தலங்களில் கோடையில் சென்று தங்குவதற்கு விடுதிகள் கட்டித்தரும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

[1986 மார்ச் 20

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் ஏற்கனவே நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்திலும், அண்ணா மாவட்டம் கொடைக் கானலிலும் தொழிலாளர்களுக்காக ஓய்வு இல்லம் கட்ட முடிவு எடுத்துள்ளது. தகுந்த நிலம் பெறுவதற்கு மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக எவ்வளவு நிலங்கள் கிடைக்க இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அந்த செலவினங்களை எல்லாம் நிர்ணயிக்க இருக்கிறோம். அதனைப் பிறகு பார்க்கலாம். மலைப்பகுதியிலே முதலிலே மனைகள் கிடைப்பதே பிரச்சினையாக இருக்கிற காரணத்தால் இடத்தைப் பொறுத்துத்தான் நாம் நம்முடைய மதிப்பீட்டைப் போட இருக் கிறோம்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுக்கும் அவர்களது குடும்பத்திற் கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பயணச் செலவு அளிப் பது போன்று தொழிலாளர்களுக்கும், அது போன்ற ஒரு வாய்ப்பு ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. எசனை சா. துரைசாமி : மாண்புமிகு தலைவர் அவர் களே, தொழிலாளர்களுக்கு ஓய்வு விடுதி கட்டுகின்ற திட் டத்தை நடைமுறைப்படுத்துகிற அரசுக்கு நன்றி. அந்தத்தொழி லாளர்கள் குடியிருக்கும், குடியிருப்பை தங்களுக்கே சொந்த மாக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கி றார்கள். உதாரணமாக கிண்டி தொழிற்பேட்டையில் குடி யிருக்கின்ற தொழிலாளர்களின் கோரிக்கை நீண்டநாட்க ளாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை அரசு பரிவுடன் கவனித்து நிறைவேற்றுமா என்று அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அது எந்த நிலையில் இருக்கிறது என்ற விவரம் தெரியும். இருந்தாலும் துரிதமாக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.



1986 மார்ச் 20]

திரு. கே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, உதகை யில் நில ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை என்று சொன்னார்கள். எந்தப் பகுதியில் அந்த முயற்சி எடுக்கப்பட்டது என்பதையும் அங்கே ஏன் நிலம் கிடைக்கவில்லை என்பதற்கான காரணத்தை யும் அரசு விளக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலை வர் அவர்களே, உதகமண்டலத்தில் இந்த ஓய்வு இல்லம் கட்டுவதற்காக சர்வே நெம்பர் 3077/10 இல் 25 செண்ட் நிலம் ஒதுக்கப்பட்டு முதலிலே பெறப்பட்டது. ஆனால் அந்த நிலத்தை பண்படுத்துகிற நேரத்தில் மேற்படி நிலத்தில் 24 மீட்டர் வரை ஆழமாக தோண்டியும், கெட்டியான மண்ணுள்ள நிலமே காணப் படாததால், மேற்படி நிலம் கட்டிடம் கட்டுவதற்கு உகந்ததாக இல்லை என்று, வேறு பகுதியிலே நிலத்தை பார்த்துக் கொண் டிருக்கிறோம்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தங்கும் விடுதி கட்டுகின்ற திட் டத்தை மற்ற மலைப் பகுதியில் ஏலகிரி மலை, ஏற்காடு மலைப் பகுதி, எனது தொகுதியான திம்பம் பகுதி ஆகிய இடங்களிலே கட்டப்படுமா ? அத்தோடு தொழிலாளர்களின் பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, அந்த தங்கும் விடுதியில் தங்கு கின்ற தொழிலாளர்களுக்கு இலவசமாக அனுமதி தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலை வர் அவர்களே, பகுதி பகுதியாக எல்லாப் பகுதிகளிலேயும் கட்ட வேண்டும் என்று ஒரு முடிவு அரசுக்கு இருக்கிறது. குறிப்பாக சென்னையிலே இருக்கிற தொழிலாளர்களுக்கு ஓய்வு இல்லம் வேண்டும் என்பதற்காக மகாபலிபுரத்திலே ஒரு ஓய்வு இல்லம் 22 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டு அந்தத் திட்டம் நடந்து கொண்டிருக்கிறது. விரைவில் அது கட்டப் பட்டு சென்னை, மற்றும் சென்னையை ஒட்டியிருக்கிற செங்கற் பட்டு மாவட்ட தொழிலாளர்களுக்கு பயன்படுகிற வகையிலே தொடங்கப்படும்.

### வனவிலங்கு—பறவைகள் சரணாலயங்கள் குறித்த ஆய்வு

(*203—வினா எண் 3014)—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா —

வனவிலங்கு—பறவைகள் சரணாலயம் பற்றி ஆய்வுகள் நடத்த நிபுணர் குழு அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தமிழகத்தில் வன விலங்குகள், பறவைகள் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைக் கண்டறிந்து அவ்விடங்களைச் சரணாலயங்கள் ! புகலிடங்களாக அறிவிக்கும் பொருட்டு ஆலோசனை வழங்க புகழ் பெற்றஇயற்கை இயல் வல்லுநர் திரு. எம். கிருஷ்ணன் அவர்களை அரசு ஏற்கனவே கேட்டுக் கொண்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நிபுணர் திரு. கிருஷ்ணன் அவர்களுடைய ஆலோசனை நமக்கு நலம் பயக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அமைச்சர் அவர்கள் இதை அறிவித்தது எல்லோருக்கும் நல்ல செய்தியாக இருந்தாலும் உலகில் வேறு எங்கும் காண முடியாத ஏதேனும் விலங்குகள், பறவைகள் தமிழ்நாட்டில் இருக்கின்றனவா ? அவைகளைப் பற்றி உலகெங்கும் அறிவிக்கப்பட்டுள்ளனவா ? அப்படிப்பட்ட பறவைகளின் பழக்க வழக்கங்களை ஆய்வாளர்கள் கவனித்து விவரங்கள் சேகரிக்க தொலைநோக்கிகள் பொருத்தப்பட்ட கூடங்கள் Watch Towers fitted with Telescope கட்டப்படுமா என அறியவிரும்புகிறேன்

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. கிருஷ்ணன் அவர்கள் இந்தத் துறையில் மிகுந்த புகழ் பெற்ற ஆராய்ச்சியாளராக விளங்குகிறார்கள். தமிழ் நாட்டில் பல இடங்களுக்கு வருகிற பறவைகள் உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பல ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவிலிருந்தும் வருகின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே உலகத்திலே இல்லாத பறவைகள் என்பதைவிட உலகத்திலே தொடர்பு கொண்டுள்ள பறவைகள் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன என்பதே அதிலிருந்து கிடைக்கின்ற செய்தியாகும். ஆகவே அப்படிப்பட்ட பறவைகள் வந்து தங்குகிற இடங்களை சரணாலயங்களாகவோ வன விலங்குகள் வாழ்கிற இடங்களை அப்படிப்பட்ட புகலிடம் அல்லது சரணாலயங்களாகவோ ஆக்க வேண்டும் என்ற ஆராய்ச்சியில் திரு. கிருஷ்ணன் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்காக அவருடைய கருத்து கோரப்பட்டிருக்கிறது. அதே போல் தொலைநோக்கி கருவிகளை வைத்துப் பார்ப்பது சுற்றுலாத் துறையின் மூலம் பல இடங்களில் வைக்கப்பட்டிருக்கிறதே தவிர இந்தப் பறவைகளைப் பார்ப்பதற்காக அந்தக் கருவிகள் வைக்கப்படுவதில்லை. வைத்தால் அது எந்தளவிற்கு பயன் தரும் என்றும் தெரியவில்லை. ஆகவே இவைகள் பற்றிய ஆய்வுகளை முடிவு செய்கிறபோது அப்படிப்பட்ட தொலைநோக்கிக் கருவிகள் வைப்பது பற்றியும் அரசாங்கம் பலன் இருக்குமானால் பரிசீலிக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லுகிறபோது உலகத்திலே தொடர்புடைய பறவைகள் என்று சொன்னார்கள். நான், உலகத்திலே வேறு எங்கும் காணக்கிடைக்காத பறவைகள் ஏதேனும் தமிழகத்தில் இருக்கின்றனவா என்ற செய்தியை அறிய





விரும்புவதற்குக் காரணம் அதன் மூலம் நாம் உலகப் புகழ் பெறலாம் என்பதுதான். உதாரணமாக ஜப்பான் போன்ற இடங்களில் யானைகள் கிடையாது அல்லவா ? அதே போல் ஏதாவது இருக்கிறதா என்பதுதான். அதோடு தொடர்பாக, முதுகளத்தூர் பகுதியில் ஒரு சிறிய இடத்தில், விளம்பரமில்லாதயிடத்தில் பறவைகள் வந்து தங்குகின்றன. வேடந்தாங்கல் போன்று விளம்பரம் இல்லாத மூன்றடைப்பு என்றயிடத்தில் வந்து தங்குகின்றன. அதிலிருந்து இருபது மைல்கள் அருகில் உள்ள கண்டகுளம் என்ற கிராமத்தில் அதிசயமான பறவைகள் வந்து தங்குகின்றன. இப்படிப்பட்ட இடங்களை நாம் பாதுகாக்க வேண்டும் என்பது என் போன்றவர்கள் கருத்து. எனவே தமிழக அரசு அந்த இடங்களை கிராமவாசிகள் பொறுப்பில் விட்டுவிடுவதை விட அவர்கள் துணையோடு பாதுகாக்கப்பட வேண்டிய ஏற்பாட்டை செய்ய முடியுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மிருகங்கள் என்பது ஒவ்வொரு நாட்டிலும் வாழ்கிற மிருகங்கள் என்கிற காரணத்தினால் சிறப்புமிக்க மிருகங்கள் என்ற பெயரைப் பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனால் பறவைகள் என்கிறபோது உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பறவைகள் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆகவே ஒரு நாட்டுக்குச் சொந்தமான பறவை என்ற சிறப்பைப் பெற முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு காலத்தில் இந்தப்பறவைகள் எங்கிருந்து வருகின்றன எனத் தெரியாத காரணத்தினால் அது அந்த நாட்டுக்குச் சொந்தமான பறவை என்று கூட எண்ணிய சூழ்நிலை இருந்தது. ஆனால் இப்போது ஒரு பறவை நமது கோடியக்கரைப் பகுதியில் காணப்படுகிறது என்றால் அது தமிழ்நாட்டுக்குச் சொந்தமான பறவை என்றல்ல. அது ரஷ்யப் பகுதியிலிருந்து, பல ஆயிரக்கணக்கான மைல்கள் அப்பாலிருந்து ஆண்டு தோறும் வந்து செல்கிற வரலாற்றை அந்தப் பறவைகள் படைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே பறவைகள் ஒரு நாட்டுக்குச் சொந்தமானவை என்று சொல்ல முடியாது. ஆகவே, உலகத்தின் பல இடங்களில் மனிதன்தான் எல்லைகளை வரையறுத்துக்கொண்டு, பேதங்கள் காட்டிக் கொண்டிருக்கிறான். நாடுகளை தன்னுடைய நாடு என்று ஆசையோடு அதற்காகப் போராடிக்கொண்டிருக்கிறான். ஆனால் உலகம் முழுவதும் பறவைகள் இந்த உலகத்தை பொதுமையாக ஆக்கிக் கொண்டிருக்கின்றன என்கிற வரலாற்றைப் படைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்தப் பறவைகள் எந்தெந்த நாட்டிலிருந்து வருகின்றன என்றெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்து ஆச்சரியப்படுகிறார்கள். அப்படிப்பட்ட

[1986 மார்ச் 20

(முற்பகல் 9–30)

பறவைகள் நம்முடைய தமிழகத்தின் பல கிராமப்பகுதிகளில் வந்து புகலிடமாக இருந்து, இந்த நாட்டைப் பார்த்து, மகிழ்ந்து செல்லுகின்றன என்ற அந்த வரலாறு நமக்கு கிடைத்திருக்கிறது. அப்படி செங்கற்பட்டு மாவட்டத்தில் கரிக்கிளியில் பறவைகள் சரணாலயம், புலிக்காட்டு ஏரியில் பறவைகள் சரணாலயம், தென்னாற்காடு மாவட்டத்தில் குழுவேலி ஏரி, இராமநாதபுரம் மாவட்டத்தில் சித்திரன்குடி கண்மாய், கஞ்சிரான்குளம், வேட்டன்குடி, திருநெல்வேலி மாவட்டத்தில் கருங்குளம் என்று இப்படிப்பல கிராமப் பகுதிகளில், நம்முடைய கவனத்திற்கு அப்பாற்பட்டிருக்கின்ற கண்மாய்கள், ஏரிகள் போன்றவற்றில் உலகத்தின் பல பகுதிகளிலிருந்து பறவைகள் வந்து தங்குகின்ற பறவைகள் சரணாலயங்களாக, புகலிடங்களாக அவைகள் கொண்டிருக்கின்றன என்ற செய்திகள் நமக்கு கிடைத்திருக்கின்றன. அந்த இடங்களை எல்லாம் பறவைகள் சரணாலயங்களாக மாற்றுகின்ற முயற்சிகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் தேசியப் பறவையாக இருக்கின்ற மயில் அதிகமாக புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலைப் பகுதியில் இருந்தது. இப்போது, இந்த மயில்கள் அழிந்து வருகின்றன. அங்கு மயில்கள் வேட்டையாடப்படுகின்றன. இதைத் தடுக்கின்ற வகையில், சட்டத்தைக் கடுமையாக்கவும், விராலிமலைப் பகுதியில் மயில் சரணாலயம் அமைக்கவும் அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயில்கள் அதிகமாக இருக்கின்ற விராலிமலைப் பகுதி, ஒரு பாதுகாப்பிற்குரிய, பாதுகாக்கப்பட்ட ஒரு சரணாலயமாக மாற்ற முடியுமா என்று பரிசீலிக்கப்பட்டது. ஆனால், பல மைல்கள் தூரம் பறந்து சென்று அந்த மயில்கள் அங்கே வந்து தங்கி, அதனால் ஒரு பெரிய எல்லையை வகுக்கின்றன. தற்போது அங்கே கிராமப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற மக்கள், பல ஆண்டுகளாக நம்முடைய பழக்கவழக்கங்கள், அவர்களுடைய அன்றாடத் தேவைகளுக்கான சூழ்நிலைகள் ஆகியவற்றைத் தடுக்கின்ற சங்கடங்கள் வருகின்றன. ஆகவே, அதிலே எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால், அந்தப் பகுதி மக்கள் விவரம் தெரிந்தவர்கள் ; நல்ல பண்புள்ளம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த மயில்களைக் கொல்ல நினைப்பதில்லை. இந்த மயில்களைப் பாதுகாக்கின்ற முயற்சியில் இருக்கிறார்கள். ஆனால், மனித உருவத்திலே சில பேர், மனிதப் பண்பற்றவர்கள் அதைக் கொல்லுவதற்கு முயற்சிக்கக் கூடும். ஆனால், அதைத் தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மயில்களைக் கொல்லக் கூடாது என்பது சட்ட விதிகளிலே ஒன்றாகும். அதன் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



1986 மார்ச் 20]

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் பிற்பட்ட பகுதியில், பவானிசாகரி லிருந்து தெங்குமராட்டா செல்லுகின்ற காட்டுப் பகுதிகள் யாவிலும் நிறைய மான்கள், பலதரப்பட்ட மான்கள் வசித்து வருகின்றன. அங்கே மான்கள் சரணாலயம் அமைப்பதற்கான ஆய்வு செய்யப்படுவதாக அங்குள்ள அதிகாரிகள் தகவல் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அது எப்போது அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

முதுமலை சரணாலயம்.

204—(*வினா எண் 3585)—திரு. சே. உச்சி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் முதுமலை சரணாலயத்தை தேசிய பூங்காவாக (National Park) மாற்றும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு. சே. உச்சி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே தேசிய பூங்கா ஏற்படுத்தப்படும் என்ற பீதியை உண்டாக்கி, அப்பகுதியிலுள்ள மசனக்குடி, மாயாறு பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிலப்பட்டா வழங்க முடியாது என்று சொல்லப்படுகிறது. ஆனால், தேசிய பூங்காவாக அதை ஆக்கும் எண்ணம் இல்லையென்றால், அந்த மக்களுடைய பீதியை அடக்குவதற்கு, பயத்தை நீக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு நிலப்பட்டா வழங்க ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுமலை சரணாலயப் பகுதி என்பது இந்தியாவில் இருக்கின்ற மிகச் சிறந்த சரணாலயங்களில் ஒன்று. இன்னும் சொல்லப்போனால், முதலிடமாக வகிக்கின்ற சரணாலயங்களில் ஒன்று என்றுகூடச் சொல்லலாம். அதை " நேஷனல் பார்க் " என்று கடுமையான சட்ட விதிகளுக்கு உட்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டிய பகுதியாக, தேசிய பூங்காவாக ஆக்க வேண்டுமென்பது உயிரியல் வல்லுநர்களுடைய கருத்து. ஆனால், அப்படி தேசிய பூங்காவாக அதை மாற்றுகிறபோது, ஏற்கெனவே அந்தப் பகுதியில் உருவாகி இருக்கின்ற

கிராமங்கள், அந்தக்கிராமங்களில் வாழுகின்ற மக்களுக்கு பல தொல்லைகள் ஏற்படுகின்றன. இந்தக் குடியிருப்புக்களை மாற்றுவது என்பதோ, அவர்கள் தங்களுடைய வாழ்க்கைக்காக வளர்த்துக் கொண்டிருக்கின்ற மாடுகள் போன்ற அந்தக் கால் நடைகளை அப்புறப்படுத்துவது என்பதோ மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கும். நிர்வாகப் பிரச்சினையாக இருக்கும் என்கிற காரணத்தால் வல்லுநர்கள் எல்லாம் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினாலும் அந்தச் சரணாலயத்தை தேசிய பூங்காவாக மாற்றுவதைப் பற்றி அரசு இப்போது பரிசீலிக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கிற உணர்வேகூட அங்கே பூங்காவாக ஆகப் போகிறது என்று பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறார்கள். தேசிய பூங்கா என்பது நாட்டினுடைய நன்மைக்காக உருவாக்கப்படுகிற ஒன்று. அது அங்கே வாழ்கின்ற மக்களுக்கு பயமுறுத்தலாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வியிலிருந்து தெரிகிறது. அவைகளை மனதில் வைத்துத்தான் பரிசீலனையில் இல்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நியாயமாக ஏற்படுகிற பிரச்சினைகளை அரசு பரிசீலிக்கும். ஆனால் தேசிய பூங்காவாக அறிவிக்கப்படவில்லையே தவிர, அந்தப் பகுதி ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய பகுதி என்று மத்திய அரசு வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. உயிரியல் வல்லுநர்களும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியில் வளர்ந்து வருகிற கிராமத்தை, மக்கள் தொகையை, கால்நடைகள் எண்ணிக்கையை கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் அரசிற்கு இருக்கிறது. அதையொட்டித்தான் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. கே. உச்சி :** தலைவர் அவர்களே, தேசிய மான் பூங்கா ஆக்க வேண்டுமென்பதை அரசு கைவிட்டு விட்டதாக அறிகிறேன். ஆனால் அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு பூங்காவாக அமைப்பதால் சங்கடங்கள் பல இருக்கின்றன. நீண்ட நாட்களாக, கிட்டத்தட்ட 30 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே சொல்கிறேன். அந்தப் பகுதி மக்களுக்கு மனைப்பட்டா, நிலப் பட்டா கிடைக்கவில்லை. ஆகவே உடனடியாக அந்த மக்களுக்கு மனைப்பட்டா, நிலப்பட்டாக்களை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, கைவிடப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். நான் என்னுடைய பதிலில் கைவிடப்பட்டது என்று தெரிவிக்கவில்லை. திட்டம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டார்கள். இல்லையென்று சொன்னேன். இனிமேல் வராது என்பதில்லை. வரக்கூடாது என்பதும் இல்லை. பட்டா தர வேண்டும் என்பது வேறு பிரச்சினை. தனிக் கேள்வி போட்டால் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் அளிக்கக்கூடும்.



**திரு. இரா. தாமரைக்கனி :** தலைவர் அவர்களே, முதுமலைக் காடுகளில் வறட்சி ஏற்படுகிறபோது நமது மாநிலத்தில் உள்ள யானைகள் பக்கத்திலுள்ள கர்நாடகா மாநிலத்திற்குச் சென்று விடுகின்றன. அதனால் நமது மாநிலத்தில் எவ்வளவு யானைகள் இருக்கின்றன என்ற கணக்கு தெரியாமல் போகிறது. ஆகவே, அந்த யானைகளை கணக்கெடுப்பதற்கு, எப்படி நமது மாடுகளென்று தெரிந்து கொள்வதற்கு கிராமப் புறங்களில் மாடுகளுக்கு சூடு போடுகிறார்களோ, அதைப்போல கழுதைகளைத் தெரிந்து கொள்வதற்கு அவற்றின் காதுகளை அறுத்துவிடுகிறார்களோ, அதைப்போல யானைகளை அடையாளம் தெரிந்துக் கொள்ள அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, இந்த விபரீதமான யோசனையை அரசு ஏற்றுக் கொள்ளாது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து சுற்றுவட்டாரத்தில் இருக்கிற மனக்குடி மற்ற பகுதி மக்களுக்கு பயம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லையென்று, இப்போதைக்கு நாம் கொஞ்சம் சமாதானமாக இருக்கலாம். ஆனால், பூர்ணமாக அந்தப் பயம் தீர்க்கப்படவில்லையென்ற நிலை இருக்கிறது. இந்த வனவிலங்கு சரணாலயம் என்பது மிகப்பெரிய சரணாலயமாகும். இதில் தண்ணீர் இல்லாமல் போய்விடுவதால் மிருகங்கள் எல்லாம் அந்தப்பகுதியிலிருந்து வேறு பகுதிகளுக்குப் போய்விடுகின்றனவென்றும், அதனால் சரணாலயம் மூடப்பட்டுள்ளது என்றும் செய்தி வருகிறது. அது உண்மையா ? அந்த மிருகங்கள் அங்கேயிருந்து போய் விடாமல் இருக்க, அந்தச் சரணாலயத்தை பொலிவுடன் நல்ல தன்மையில் வைக்க, வனவிலங்குகளுக்கு தண்ணீர் கொடுக்க உடனடியாக நடவடிக்கையை எமர்ஜென்சி திட்டத்தைப்போல அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, அந்தச் சரணாலயப் பகுதி என்பது 321 சதுர கிலோ மீட்டர் அளவுள்ள பகுதியாகும். இங்கே ஆயிரக்கணக்கான மிருகங்கள் வாழ்கின்றன. ஆனால் இயற்கையின் தாக்குதல்களால் மழை இல்லாமல் வறட்சி ஏற்படுகிற போது அந்தப் பகுதி முழுவதற்கும் நாம் செயற்கையாக தண்ணீரைக் கொண்டு போய் சேர்க்க முடிவதில்லை. அப்படிப்பட்ட வறட்சி நேரங்களில் குறைந்த அளவு தண்ணீராவது வேண்டுமென்பதற்கு ஆங்காங்கே செயற்கை நீர்நிலைகள், சிறிய சிறிய நீர் நிலைகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. உருவாக்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9-40)

ஆனால் அதுவும் வற்றிப் போய்விடுகின்றது என்கின்றபோது, இயற்கையினுடைய சோதனையை நாம் சந்தித்தாகவேண்டும். மனிதர்களுக்கு வருகிற சோதனையைப் போல மிருகங்களுக்கும் வருகிறது. அந்த நேரத்தில் இந்த மிருகங்கள் ஒரு எல்லையைத் தாண்டி இன்னொரு எல்லைக்கு, தண்ணீர் இருக்கின்ற இடத்தைத் தேடிச் செல்லுகின்றன. அங்கேயும் வறட்சி இருக்கிறது. அங்கே இருக்கின்ற மிருகங்கள் நம்முடைய எல்லைக்கு வருகின்றன. குறிப்பாக அந்தப் பகுதி என்பது 3 மாநில எல்லைகளைக் கொண்ட பகுதி, கேரளம், கர்நாடகம், தமிழகம். ஆகவேதான், இந்த 3 மாநிலங்களைச் சேர்த்து ஒரு தேசீய பூங்கா உருவாக்கவேண்டும் என்பது கூட சில ஆண்டுகளுக்கு முன்பு மத்திய அரசினாலே தெரிவிக்கப்பட்டது. அதை நம்முடைய மாநில அரசு கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும் இயற்கையை எதிர்த்துப் போராடுகின்ற மனிதன், இந்த வன விலங்குகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்கின்ற உணர்வோடு இந்தத் தண்ணீர் வழங்குகின்ற திட்டத்தை நாம் மிகுந்த கஷ்டத்தோடு நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறோம். இடையிலே சில மாதங்களில் ஏற்பட்டதே தவிர, இப்போது அங்கே தண்ணீர்ப் பிரச்சினை இல்லை. வறட்சிப் பிரச்சினையும் இல்லை.

திரு. கே. கல்லன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தச் சரணாலயம் பயணிகளுக்கு மூடப்பட்டு இருக்கிறது. இதேபோல், 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக, 2 மாதங்கள் மூடப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல், நீர்த்தேக்கங்கள் வைக்கலாமா என்கிற ஒரு திட்டம் தீட்டப்பட்டு, நன்றாக செயல்படவில்லை. எனவே, நீண்ட ஒரு கண்ணோட்டத்தோடு 4, 5 இடங்களில் ஒரு நிரந்தரமான நீர்த்தேக்கத்தை ஏற்படுத்தினால், நிச்சயமாக அது பயனுள்ளதாக இருக்கும். இதை அரசு செயல்படுத்துமா ? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செயற்கை நீர்த் தேக்கங்கள் ஏற்படுத்துவது என்பது மிகுந்த செலவு ஏற்படுகிற ஒரு திட்டம். குறிப்பாக கடந்த 5 ஆண்டுகளிலே ஏறத்தாழ இரண்டே கால் கோடி ரூபாய் இந்த வன விலங்கு சரணாலயங்களுக்காக அரசு செலவிட்டு இருக்கிறது. ஆனால் அந்த நீர்த்தேக்கங்கள் உருவாக்குவதற்கு சில கோடிக்கணக்கான ரூபாய்கள் தேவைப்படுகின்றன. ஆனாலும், அவைகளும் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருகின்றன மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போன்று, இப்போது மூடி இருப்பது தண்ணீர் இல்லாததினாலே அல்ல. இது கடுமையான கோடை காலம். ஆகவே, வெய்யிலினால்



அங்கே தீப்பிடித்துக்கொள்கிற வாய்ப்புக்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பயணிகள் அங்கே போய், உள்ளே வேறு ஏதாவது அசாதாரண சில நிகழ்ச்சிகள் ஏற்பட்டுவிடக் கூடாது, அந்த வனத்திற்கு எந்த ஆபத்தும் வந்து விடக்கூடாது என்பதற்காக தடுக்கப்பட்டு இருக்கின்றதே தவிர, தண்ணீர் இல்லாததினாலே அல்ல. சில மாதங்களுக்கு அல்லது சில வருடங்களுக்கு முன்பு மூடப்பட்டது தண்ணீர் இல்லாததினாலே, இன்றைக்கு மூடப்பட்டு இருப்பது, தண்ணீர் இல்லாததினாலே அல்ல. கடுமையான கோடைக்காலத்திலே நெருப்பு பற்றிக் கொள்கிற அபாயம் வந்துவிடக் கூடாது என்பதற்காக.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சில காலத்திற்கு முன்பு அமைச்சர் அவர்கள் முதுமலைக்குச் சென்று, அதை எளிதில் எட்டுகின்ற வகையில், ஹெலிகாப்டர் அல்லது சிறிய விமான போக்குவரத்து ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள். அதனுடைய இறைச்சலின் காரணத்தாலே, பறவைகளும், விலங்குகளும் சிதறி ஓடிவிடக் கூடும் என்ற அச்சம் நிலவியதினாலே இந்தத் திட்டம் கைவிடப்பட்டதா அல்லது இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட இருக்கிறதா? அந்த அச்சம் தேவையற்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தத்தைக் கேட்டு மிருகங்கள் ஓடுகின்றன என்பது நாம் எண்ணிக் கொண்டு இருக்கிற ஒரு மாயையான கருத்து, எந்த சத்தத்திற்கு மிருகங்கள் அதிகமாக பயப்படுகின்றன என்றால், மனிதனுடைய சத்தத்திற்குத்தான் மிருகங்கள் பயப்படுகின்றன. வேறு இயற்கையான சத்தங்களைக் கண்டு மிருகங்கள் அஞ்சுவது இல்லை. ஆகவேதான் வன விலங்குச் சரணாலயங்களுக்குச் செல்லுகின்றவர்களை, பேசாமல் வாருங்கள் என்று அங்கே எச்சரிக்கிறார்கள். பேசாமல் வந்தால், இயற்கையான அந்த விலங்கினங்கள் தன்னுடைய இச்சையான வாழ்க்கையை நடத்திக்கொண்டு இருக்கின்றன. மனிதனுடைய சத்தத்தைக் கேட்டவுடனே போய் மறைந்து கொள்கின்றன. இந்த ஹெலிகாப்டர் திட்டம் என்பது நம்முடைய அரசு வைத்துக்கொண்டு இருக்கிற ஒரு ஹெலிகாப்டரை சுற்றுலாத்துறைக்கு வாடகைக்குத் தந்தால், இதை இப்படிப் பயணிகள் வருகின்ற நேரத்தில், சீசன் என்று அழைக்கப்படுகிற அந்தக் காலத்தில், அதைப் பயன்படுத்தலாம், கோவையிலேயிருந்து ஊட்டிக்கும், ஊட்டியிலேயிருந்து முதுமலைக்கும் சென்று வருவதற்கு பயன்படுத்தலாம் என்று நாம் கேட்டு இருக்கிறோம். அரசு கொள்கை அளவில் அதை ஒத்துக் கொண்டு இருக்கிறது. ஆகவே அது பரிசீலிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறதே தவிர, அந்த ஹெலிகாப்டர் சத்தத்தினாலே மிருகங்கள் ஓடிவிடும் என்ற காரணத்தாலே அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை.

கோடியக்கரை சரணாலயம்.

205 (*வினா எண்—3635)—திரு. மு. தங்கமணி : மாண்பு மிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் கோடியக்கரை சரணாலயத்தில் புலிகள் உள்ளனவா?

(ஆ) மான்கள் எத்தனை உள்ளன?

(இ) வனவிலங்குகள் நல்ல முறையில் பாதுகாக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) கோடியக்கரை சரணாலயத்தில் புலிகள் ஏதும் இல்லை.

(ஆ) கோடியக்கரை சரணாலயத்தில் கடந்த 1985 ஆம் ஆண்டு கணக்கின்படி சுமார் 3,482 மான்கள் இருப்பதாகத் தெரிகிறது.

(இ) ஆம்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆண்டுதோறும் கோடைக்காலங்களில் ரஷ்யாவிலிருந்து ஆயிரக்கணக்கான பறவைகள் தஞ்சை மாவட்டம் கோடியக்கரை சரணாலயத்திற்கு 5 அடி உயரமுள்ள பறவைகள் வந்து தங்கி, 4, 5 மாதங்கள் இருந்துவிட்டு அதன்பிறகு அவை ரஷ்யாவை நோக்கி போய்விடுகின்றன. அப்படி வருகின்ற அந்தப் பறவைகளை அந்த இடத்திலேயே தங்கவைத்து அங்கு வருகிற சுற்றுலாப் பயணிகள் அவற்றைப் பார்க்கத்தக்க வகையில் ஏற்பாடு செய்ய இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து பறவைகள் வருகின்றன என்பதுதான் விசேஷம். அதுதான் சிறப்பு. அவைகளை இங்கேயே தங்க வைத்துவிட்டால் அதற்குள்ள பெருமையே போய்விடும். மேலும் அப்படி பறவைகளை கட்டுப்படுத்தி இங்கேயே தங்க வைக்க முடியாது. பறவைகள் அப்படியெல்லாம் எதற்கும் மயங்குகின்ற வர்க்கத்தைச் சார்ந்தவை அல்ல.

திரு. போ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடியக்கரையில் 3,482 மான்கள் தங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அந்த மான்கள் இந்த பங்குனி, சித்திரை மாதங்களில் தண்ணீர் இல்லாமல் இங்குமங்கும் அலைந்து பல்வேறு கேணிகளில் விழுந்து செத்துவிடுவதாக





அறிகிறேன். அங்கு தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் தண்ணீர் சப்ளை இல்லை. ஆகவே அமைச்சரவர்கள். அந்த மான்கள் உயிருடனும், நல்லவிதமாகவும் இருப்பதற்கு குழாய் மூலமாக தண்ணீர் சப்ளை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தண்ணீர் தேக்கி வைப்பதற்காக 7 சிறு தடுப்பு அணைகள் மழைக் காலங்களிலே தேங்குகின்ற தண்ணீரைத் தடுப்பதற்காக கட்டப்பட்டிருக்கின்றன. அதுபோல, பக்கத்திலே இருக்கிற வேதாரண்யத்திலிருந்து தண்ணீர் நிரப்புவதற்காக 19 குடிதண்ணீர் தொட்டிகள் அங்கே கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் முயற்சிகள் அங்கே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காரணம், மான்களுக்கு நல்ல தண்ணீர் ஏற்பாடு செய்யவில்லையானால் அந்த மான்கள் இறந்துவிடும் என்பதை அரசு உணர்ந்து இருக்கிறது. ஆகவே தீவிரமான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பறவைகள், வெளிநாடுகளிலிருந்தும், உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து தங்குகின்ற பறவைகள். சுமார் 3 மாத காலம் வந்து தங்குவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 206 முதல் 208 வரை மாண்புமிகு தொழிற்துறை அமைச்சரின் வேண்டுகோளுங்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

திருப்பூர் சட்டமன்ற தொகுதியில் குடிநீர்த் திட்டங்கள்.

209 (*வினா—எண், 1161)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஐரோப்பிய பொருளாதார சமுதாய அமைப்பின் உதவியுடன் வழங்கப்படவுள்ள பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தின் கீழ் திருப்பூர் சட்டமன்ற தொகுதிக்குள் எத்தனை குடியிருப்புகளுக்கு வழங்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : முதலிப்பாளையம், நல்லூர் ஆகிய இரு குடியிருப்புகள்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, முதலிப்பாளையம், நல்லூர் என்ற இரண்டு கிராமங்களுக்கு மட்டும் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. கோடைக்

காலம் தொடங்கி இருக்கிற காரணத்தினாலே, கிராமப்புறங்களில் பெரும்பகுதியான கேணிகள் வற்றி இருக்கிற காரணத்தாலே மேலும் சில ஊர்களுக்கு இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்டு இருப்பது ஐரோப்பிய பொருளாதார சமுதாய அமைப்பின் உதவியுடன் செயல்படக்கூடிய பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டம். ஆகவே, வறட்சி நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட இருக்கின்றன. இந்தத்திட்டத்திலே திருப்பூர் தொகுதியில் இரண்டு குடியிருப்புகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மொத்தம், கோவை, பெரியார் மாவட்டங்களில் 726 குடியிருப்புகள் இந்தத் திட்டத்தின் மூலம் பயன்பட இருக்கின்றன.

சிவகாசி ஒன்றியம் காந்தி நகர், காமராஜபுரம் குடியிருப்புப் பகுதிகளில் குடிநீர்த் தேக்கத் தொட்டி.

210—(*வினா எண்—3541)—திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி ஒன்றியம், காந்தி நகர், காமராஜபுரம் காலனி இவைகளில் நீர்த்தேக்கத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது திட்டம் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு உள்ளூர் மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். அதனால் இப்பணியில் தேக்கம் ஏற்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவரின் தலையீட்டினால் சரிப்படுத்தப்பட்டு இத்திட்டப்பணி நிறைவேற்றப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டு முடிவிற்குள் பணி முடிவுறும் என இயக்குநர் தெரிவித்துள்ளார். காமராஜபுரம் காலனி குடியிருப்பின் கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டு இறுதிக்கட்டப் பணிகள் முடிப்பதில் ஜி.ஐ. குழாய்கள் பற்றாக்குறையினால் சுணக்கம் ஏற்பட்டது. இது சரிசெய்யப்பட்டு குழாய் பதிக்கும் பணி மட்டும் எஞ்சியுள்ளது. இப்பணியும் விரைவில் முடிக்கப்படும்.



திருவிடைமருதூர் அரசு மருத்துவமனை.

211—(*வினா எண்—3223) திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் அரசு மருத்துவ மனையை 50 படுக்கைகள் கொண்டதாக மாற்றி மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தற்சமயம் இல்லை.

திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே திருவிடைமருதூர் தாலுக்கா அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டு சுமார் 5 ஆண்டுக்காலம் ஆகியும் அந்த மருத்துவ மனை எந்தவிதமான அபிவிருத்தியும் செய்யப்படாமல் இருக்கின்றது. அங்கே மகப்பேறு மருத்துவ வார்டுகளில் சுமார் பத்து படுக்கைகள் இருக்கின்றன. அது சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்டவை. அவையும் சரிசெய்யப்படாமல் கடந்த $1\frac{1}{2}$ ஆண்டுக்கு முன்னால் மகப்பேறான ஒரு குழந்தை ஓனாயால் தூக்கிச் செல்லப்பட்டது. இந்நிலைப்பற்றி பத்திரிகைகளில்கூட செய்தி வெளியானது.

(முற்பகல் 9—50)

ஆகவே, அரசு பரிசீலனை செய்து அந்த மகப்பேறு மருத்துவ நிலையத்தை சீர்செய்ய முன்வருமா என அறியவிரும்புகிறேன். அதே நேரத்தில் 3 மருத்துவ அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் உட்காருவதற்கு கூட அங்கே நாற்காலிகள் இல்லை. அதற்கான ஏற்பாட்டையும் அரசு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பிய கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆனால் இப்போது தாலுக்கா மருத்துவ மனையைப் பொறுத்தவரையில் 50 படுக்கைகள் கொண்ட தாலுக்கா மருத்துவ மனைகளாக அந்த அந்தஸ்த்தை உயர்த்த வேண்டும் என்ற திட்டத்தின் அடிப்படையில் (Phased Programme) மூலம் சில தாலுக்கா மருத்துவ மனைகளை எடுத்துக்கொள்ள இருக்கிறோம். நிதிநிலைமைக்கு ஏற்ப இந்த தாலுக்கா மருத்துவ மனைகளை வெகு விரைவில் எடுத்து விஸ்தரித்து அவைகளை Phased Programme-ன் எல்லைக்குள் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 மார்ச் 20

### சித்த மருத்துவ மூலிகைகள்.

212—(*வினா எண் 3937) திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவ மூலிகைகள் வளர்ப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

(ஆ) சித்த மருத்துவம் பற்றிய விளம்பரப் பணிகளை அரசு மேற்கொண்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) சித்த மருத்துவ மூலிகைகள் வளர்ப்பதற்கு ''தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம்'' என்னும் தன்னுரிமையுள்ள கழகம் ஒன்றினை அரசு நிறுவியுள்ளது. அக்கழகம் மூலிகைப் பண்ணைகள் அமைத்து மூலிகைகளை வளர்க்க ஏற்பாடு செய்து வருகிறது.

(ஆ) இந்திய மருத்துவத்துறை, தமிழ்நாடு அரசு சித்த மருத்துவ வாரியம், தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகம் இந்த 3 அமைப்புகள் மூலம் சித்த மருத்துவம் பற்றிய விளம்பரப்பணிகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலை நாடுகளில் பொதுமக்களையும், மருத்துவர்களையும் இன்று பயமுறுத்திக்கொண்டு இருக்கக்கூடிய எய்ட்ஸ் என்று சொல்லக் கூடிய உடலில் எதிர்ப்புச் சக்தியை மழுங்க வைக்கக் கூடிய ஒரு நோயை கட்டுப்படுத்துகிற அளவுக்கு சித்த வைத்தியத்தில் மருத்துவ முறைகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். அதேபோல் புற்று நோயை கட்டுப்படுத்துகிற அளவுக்கு சித்த வைத்தியத்தில் மருத்துவ முறைகள் இருக்கின்றன. என்று சொல்கிறார்கள். இப்படி சிறந்த சித்தவைத்திய மருத்துவ முறைகள் இன்னும் பொதுமக்களுக்கு சரியாக தெரியாமல் இருக்கிற காரணத்தால் இந்த வைத்திய முறையை தெரியப்படுத்தும் வகையில் ஆண்டுக்கு ஒரு முறை வைத்திய முறைகளை விளம்பரப் படுத்த, ஆராய்ச்சிகளை விளம்பரப்படுத்த கருத்தரங்கு ஒன்றை மாநில அளவில் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்த மருத்துவ முறையைப் பொறுத்தவரையில் சித்த மருத்துவம் என்று சொல்கிற நேரத்தில் indigenous system of medicines என்று, siddha, Ayurvedha, Unani இந்த 3 மருத்துவ முறைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கு மேலை



1986 மார்ச் 20]

நாடுகளில் இருந்து நிறைய நிபுணர்கள் வந்து நம்முடைய பேரறிஞர் அண்ணா மருத்துவ மனையை பார்வையிட்டு செல்கிறார்கள். அண்மையில் கூட 2 நாட்களுக்கு முன்பு கூட 2 பெரிய நிபுணர்கள் Soviet Russia நாட்டிலிருந்து வந்து பார்த்து இருக்கிறார்கள். அதிலும் அவர்கள் எல்லாம் எழுப்பியிருக்கிற கோரிக்கை இந்த சித்த மருத்துவ முறையில் என்ன மருந்துகளை நாம் பயன்படுத்திக்கொண்டு இருக்கிறோம் என்பதை, Scientific Essay தேவை என்று சொல்கிறார்கள். ஆகவே நாம் 10 நாட்களுக்கு முன்பு ஒரு கூட்டத்தை கூட்டி modern medicine doctors அதே மாதிரி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தின் படி indigenous system doctors எல்லோரும் சேர்ந்து அந்த மருந்தைக் கொடுக்கின்ற நேரத்தில் எவ்வளவு குணம் அடைகிறது என்று சித்த மருத்துவத்தில் மட்டும் சொன்னால் போதாது modern medicine doctors-ம் வந்து ஈ.சி.ஜி. எடுத்து இவ்வளவு 'இம்புரூவ்மெண்டு' என்று certify (சர்டிபை), 'குவாண்டிபை' செய்து விட்டு நல்ல வகையில் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதேபோல் இரண்டாவதாக ஒரு பெரிய ஆராய்ச்சி செய்து அந்த மருந்து கொடுக்கின்ற நேரத்தில் alcoloids எல்லாம் இருக்கிறதா என்று scientific ஆக பார்க்கவேண்டும் என்று அதற்கும் விஞ்ஞானிகளை இங்கே ஏற்படுத்தி நம்முடைய அண்ணா மருத்துவ மனையில் அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று உத்திரவு இட்டு இருக்கிறோம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவ மூலிகைகளை வளர்க்கின்ற பண்ணைகள் தமிழகத்தில் எத்தனை இடங்களில் இருக்கின்றன. நேற்றைய தினம் பத்திரிகையில் வந்த செய்தியில் சித்த மருத்துவ மூலிகைகளை வெளி நாட்டுக்கு அனுப்பியதன் மூலம் சுமார் 29 கோடி ரூபாய் கிடைத்து இருக்கிறது என்று செய்திவந்திருக்கிறது. அப்படி தனியார்கள் அனுப்புவதற்கு பதிலாக அரசே சித்த மருத்துவ மூலிகைகளை வெளி நாட்டுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை கமர்ஷியல் ரீதியாக சர்க்கார் செய்ய முடியவில்லை என்றாலும் இந்த கழகம் 27–9–1983 முதல் செயல்பட்டு வருகிறது. அதற்காக 250 ஏக்கர் நிலங்களை நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதிலே 33 ஏக்கர் நிலங்கள் கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. இதைச் சரியான வகையிலே சீர்படுத்தி, அந்த வாரியத்தின் மூலமாக மூலிகைகளை வளர்ப்பதற்கு திட்டமிட்டிருக்கிறோம். அப்படி மூலிகைகள் எல்லாம் வளர்ந்து, அந்த மூலிகைகள் நம்முடைய மருத்துவ மனைகளில் பயன்படுத்துவதற்கு முதலாவதாகவும், உபரியாக நமக்கு மூலிகைகள் இருக்குமானால், அவைகளை எக்ஸ்போர்ட் செய்கின்ற அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளலாம்.

[1986 மார்ச் 20

திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, சீன நாட்டில் தோன்றிய அக்குபங்ச்சர், ஜெர்மன் நாட்டில் தோன்றிய ஹோமியோபதி, அரேபிய நாட்டில் தோன்றிய யுனானி, கேரளாவில் தோன்றிய ஆயுர்வேதம் என்ற வைத்திய முறைகள் இன்று பரவலாக வளர்ந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் தோன்றிய சித்த வைத்தியம் என்ற வைத்திய முறை சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். பல்வேறு பகுதிகளில் இருக்கக் கூடிய சித்த வைத்தியர்கள் எல்லாம் ஒருங்கிணைக்கப்படவில்லை. அவர்களுடைய எண்ணங்கள் வெளியிடப்படவில்லை என்ற குறைகள் இருக்கின்றன. அந்த சித்த வைத்திய குறிப்புகள் எல்லாம் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் வெளிக்கொணரப்படவில்லை என்ற குறையும் இருக்கிறது. இவற்றைப் போக்குவதற்காக மாநில அளவில் ஒரு குழு அமைத்து அதன் மூலம் சித்த வைத்திய முறையை தமிழ்நாட்டில் பயன்படுத்திக் கொள்ள பரப்பிட அரசு முன்வருமா அல்லது அதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த சித்த வைத்திய முறை இங்கே செயல்பட்டு வருகிறது. மரியாதைக்குரிய முத்தமிழ்க் காவலர் கி.அ.பெ. அவர்கள் தலைமையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மாதிரியாக இந்த வாரியத்தின் மிக முக்கியமான பொறுப்பு, ஓலைச் சுவடிகளை எல்லாம் எடுத்து, ஒரு மைக்ரோ ஃபோட்டோகிராஃப் செய்துவிட்டு, நூல்களில் போட்டுவிட்டு, பிறகு தமிழ் டிரான்ஸ்லேஷன் எடுத்து, அதற்குப் பிறகு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஏராளமான நூல்கள் வெளியிடுகிறார்கள். அவை பப்ளிஷ் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஓலைச் சுவடிகளையெல்லாம் நான் முன்பு சொன்ன மாதிரி இரண்டு நாட்களுக்கு முன்னதாக ரஷிய டாக்டர்கள் வந்து பார்த்துவிட்டு மிக ஆச்சரியப்பட்டார்கள். அவை எவ்வளவு நன்றாக அந்தக் காலத்திலேயே இருந்தது என்பதுபற்றி மகிழ்ச்சியடைந்தார்கள். இவற்றையும் நாம் பப்ளிஷ் செய்து கொண்டு தான் வருகிறோம். ஆனால் நீங்கள் சொன்ன மாதிரியாக வெளிநாட்டில் இருக்கக் கூடிய நிபுணர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமானால், Scientific essay of the medicines given, விஞ்ஞான ரீதியில் அவர்களுக்குப் புரியக் கூடிய அளவுக்கு செய்யப்படுமானால், அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். அந்தப் பணிகளை நாம் மேற்கொண்டு இருக்கிறோம்.

டாக்டர் த. முகம்மது சலீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Acquired Immuna Deficiency Syndrome. i.e. AIDS நோயை சித்த வைத்தியத்தின் மூலம் குணப்படுத்தப்பட முடியும் என்று தூவில்லிப்புத்தூரைச் சார்ந்த ஒரு சித்த வைத்தியர் அமெரிக்காவில் ஒரு மருத்துவக் கழகத்திற்கு எழுதியிருந்தார்கள். அதற்காக அவர்கள் அவரை அழைப்பதற்கு அங்கிருந்து நோட்டீஸ் வந்திருப்பதாக தினமலர் பத்திரிகையில் படித்தேன். அது உண்மையா, அவர்கள் அனுப்பப்பட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1986 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகைச் செய்திகளை எல்லாம் இங்கே பேசக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர் ) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதிலளிக்கிறபோது முத்தமிழ்க் காவலர் திரு. கி. அ. பெ. அவர்கள் தலைமையில் ஒரு வாரியம் செயல்பட்டு வருவதாகச் சொன்னார்கள். அவர்களே ஒரு நூலில் எழுதியிருக்கிறார்கள். பல்வேறு சித்த வைத்திய முறைகள் குடும்ப வைத்தியமாக இருந்து ரகசியமாக காப்பாற்றப்படுகிறது என்று. இதைப் போக்குகிற வகையில் ஒரு குறிப்பிட்ட வைத்தியத்திற்கு சித்த வைத்தியத்தை வெளியிடுபவர்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பரிசுத் தொகையை நிர்ணயிக்குமா ?. ஏனென்றால் பல பெரிய மருத்துவ மனைகளில் எலும்பு முறிவுகளை செய்ய முடியாமல் அனுப்பிவிடுகிறார்கள். அவர்கள் ஒரே நாளில் அந்த சிகிச்சையை செய்துகொண்டு கிராமத்திற்கு வந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்டவைகளையெல்லாம் ரகசிய முறையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட புதிய சிகிச்சை முறைகளை வெளியிடுபவர்களுக்கு, பரிசு கொடுக்க அரசாங்கம் பரிசுத் தொகை ஏதாவது கொடுத்து ஊக்குவிக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பரிசு தொகை ஒன்றும் தேவையில்லை. எங்கெங்கே இந்த சித்தவைத்திய நிபுணர்கள் இருந்தாலும் இருந்தாலும், அவர்களை அழைத்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்துகொண்டுதான் இருக்கிறோம். எலும்பு முறிவு ப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அண்மையில் கூட, பேச்சலர் ஆஃப் இந்தியன் மெடிசன் என்ற பட்டம் பெறாது, அதே நேரத்தில் பரம்பரையாக இந்த எலும்பு முறிவு சிகிச்சைகளைச் செய்து வரக் கூடிய கேசவப் பிள்ளை அவர்கள் என்னைச் சந்தித்து, பல இடங்களில் இதுபோன்ற எலும்பு முறிவுகளுக்கான சித்தவைத்திய மருந்துகள் தன்னிடம் இருப்பதாகச் சொன்னார். அவருக்கு வாய்ப்பு கொடுத்து, அந்த நிபுணத்துவத்தையும் பயன்படுத்தி, விஞ்ஞான ரீதியாக நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் கேள்வி நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

எங்கெங்கே அந்த மாதிரியான தகவல்கள் கிடைக்கின்றனவோ அவைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். 3 மாதங்களுக்கு முன்னாலே உலகத்தின் பல்வேறு நாடுகள், 37,40 நாடுகளிலிருந்து நிபுணர்கள்—அந்த சித்த வைத்தியத்திலே அக்கறை உள்ளவர்கள் —வந்து பார்த்து இருக்கிறார்கள். ஸ்பெயின், இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து நிபுணர்கள் வந்து கலந்து கொள்ளக்கூடிய முறையிலே, for the first time ஒரு world siddha conferrance நடந்திருக்கிறோம். ஆகவே சித்த வைத்தியத்தை நாம் நல்ல முறையிலே ஊக்குவித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு புரட்சித்தலைவர் ஆட்சியிலே சித்த வைத்தியத்தின் பொற்காலம் இது என்று நாம் கருதிக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லாரையிலிருந்து டீ தயாரித்து விநியோகம் செய்யப்பட்டதே அதன் தற்போதைய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இப்போது ஹெர்பல் டீ நிறைய வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது இப்போது பாபுலராக இருக்கிறது.

திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே உள்ள அண்ணா மருந்துவ மனைக்கு நான் சென்று பார்க்கிற நேரத்திலே அங்கே மூலிகைகளை தயார் செய்கின்ற தொழிலாளர்கள் தங்களுடைய வருவாய் முதலிலே எப்படியிருந்ததோ அதைப்போல தான் இன்றும் இருந்து கொண்டு இருக்கிறது என்று அவர்கள் சொன்ன காரணத்தினால், அவர்கள் பணவசதி இல்லாத காரணத்தினால் அவர்கள் சொல்கிறார்கள், எங்களுக்கு நல்ல முறையிலே பணம் கிடைத்தால் இன்னும் முயற்சிகள் செய்து மருந்துகள் தயாரிப்போம் என்று சொல்கிறார்கள். அப்படி இருக்கிற நேரத்திலே மருந்தின் தரம் குறைந்து இருக்கிறதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, அந்த மூலிகைகளை 2 நாட்களுக்கு முன்பாக நானும் பார்த்தேன். மாண்புமிகு குமாரதாஸ், எம்.எல்.ஏ., அவர்களும் பார்த்தார்கள் மூலிகைகளுச்கு எல்லாம் நல்ல முறையிலே பொட்டானிக்கல் நேம்ஸ், தமிழிலே என்ன வார்த்தை, ஆங்கிலத்திலே என்ன வார்த்தை, வடமொழியிலே சமஸ்கிருதத்திலே என்ன வார்த்தை என்றெல்லாம் போட்டிருக்கிறார்கள். பொட்டானிக்கல் டிபார்ட்மெண்டிலே இருக்கக்கூடிய நிபுணர்கள் எல்லாம் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்



என்று சர்டிபை செய்திருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து வருகின்ற பாட்டானியில் பெயர்பெற்றவர்கள் எல்லாம் நன்றாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் ' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சித்த மருத்துவ மூலிகைகளை வளர்ப்பதற்கு எப்படிப்பட்ட சீதோஷ்ண நிலை உள்ள இடங்கள் தேவை எத்தனை ஏக்கர் நிலம் தேவை என்பதையெல்லாம் ஏற்கெனவே சித்த மருத்துவர்கள் விவரங்களைத் தயாரித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடங்களிலே அந்த மூலிகை பண்ணைகளை ஆரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? மத்திய அரசின் நேஷனல் இன்ஸ்டிட்யூட் இருக்கிறது, அதையும் வாங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திடம் வழக்கமாக கேட்டுக் கொண்டிருக்கிற மாதிரி கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அக்கறையோடு வாக்களித்திருக்கிறார்கள். மத்திய துணை அமைச்சர் திரு. கிருஷ்ணகுமார் நல்ல தொகையை நமக்கு கொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். ஸ்ரீவில்லிபுத்தூரிலே கோவிலுக்குச் சொந்தமான 250 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதிலே 33 ஏக்கர் இந்தக் கழகத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. அதை நாம் இப்போது சீர்திருத்திக் கொண்டிருக்கிறோம். சேலம் மாவட்டத்திலே கொல்லி மலை, மதுரையிலே சிறுமலை, கன்னியாகுமரி மாவட்டத்திலே வீரப்புலி போன்ற இடங்களிலே மூலிகைப் பண்ணைகள் தொடங்க ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. 1985–86 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலிகைப் பண்ணைகள் வைப்பதுபற்றிய வினாவாக இருப்பதால் கேட்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே மருந்து வாழ் மலை என்றே ஒரு மலை இருக்கிறது. அந்த மருந்து வாழ் மலையிலே வளர்ந்திருக்கிற மூலிகைகளை மேலும் பேணிப் பாதுகாப்பதற்கும் வளர்ப்பதற்கும் அந்தப் பண்ணையை அரசு பயன்படுத்துமா? சித்த மருத்துவத்தை சித்தர்கள் பயன்படுத்தினார்கள் அல்லது அவர்கள் கண்டுபிடித்தார்கள் என்பது மட்டுமல்லாமல் சித்தத்தில் சுத்தமான நம்பிக்கை இருந்தால் மட்டுமே அது பலிக்கும் என்று சொல்லப்படுவது உண்மையா? (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டாவது கேள்வியைப் பொறுத்த வரையில் சித்த வைத்தியத்தை இன்னொரு வைத்தியம் மாதிரி கொடுத்து, நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, நோயாளிகள் பலர் பயனடையக் கூடிய அளவிற்கு நம்மிடத்திலே சான்றுகள் இருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்தைப்பற்றி ஒரு அற்புதமான செய்தியைக் கொடுத்திருக்கிறார்கள். மருந்து வாழ் மலை பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைக் கவனத்திற்கொண்டு பரிசீலிக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்மிடத்திலே இருக்கின்ற செய்தியின்படி வீரப்புலி பகுதியிலே பண்ணை ஏற்படுத்தத் திட்டமிட்டிருக்கிறோம்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள்குறிப்பிடுகின்றபொழுது இந்திய நாட்டில் தோன்றிய சித்தவைத்தியம் ஜெர்மன் நாட்டில் தோன்றிய ஹோமியோபதி வைத்தியம், அரபு நாட்டில் தோன்றிய யூனானி வைத்தியம் என்று குறிப்பிட்டார்கள். அப்பொழுது அமைச்சரவர்கள் திருத்துவார்கள் என்று எதிர்பார்த்தேன். யூனானி வைத்தியம் என்பது அரபு நாட்டில் தோன்றியது அல்ல. யூனான் என்பது கிரேக்க நாட்டை குறிக்கும். அரபுகள் அதை மேலும் சீர்திருத்தம் செய்து, உலகத்திற்கு அறிமுகப்படுத்தினார்கள். எந்த நாட்டில் தோன்றினாலும் அந்த நாட்டின் உண்மையை நிலைநாட்ட வேண்டுமென்பதால் அந்த நாட்டின் பெயரை வைத்து, யூனானி என்று அறிமுகப்படுத்தினார்கள். அதை அமைச்சரவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அதை ஏற்றுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இன்னொரு தகவலைச் சொன்னார்கள். ஆயுர்வேதம் கேரளாவில் தோன்றியது என்று. அதையும் திருத்திக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

**எண்ணூர் பாரி உரத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகை.**

213—(*வினா எண் 5525) திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையை அடுத்த எண்ணூரிலுள்ள ஈ.ஐ.டி. பாரி உரத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையால் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?



(ஆ) அந்தப்புகை விஷத்தன்மை வாய்ந்ததா?

(இ) ஆம் எனில், அதை மாற்ற வேறு திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) சென்னை எண்ணூரிலுள்ள ஈ.ஐ.டி. பாரி உரத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் வாயுக் கழிவு கட்டுப்படுத்தாத நிலையில் சுற்றுப்புறத்தைப் பாதிக்கலாம்.

(ஆ) அந்த வாயுக் கழிவு அரிப்புத் தன்மையுடையது.

(இ) மேற்படி தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் வாயுக் கழிவுகளைக் கட்டுப்படுத்த அரசு தமிழ்நாடு அரசு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கே. பி. கே. சேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையை அடுத்த எண்ணூரிலுள்ள ஈ.ஐ.டி. பாரி உரத் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் விஷத் தன்மை வாய்ந்த வாயுவின் மூலம் மக்களுக்கு மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது. அந்த பகுதி மக்கள் அந்தப் புகையினால் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, இதுகுறித்துத் தயவு கூர்ந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாம் இதை அந்தத் தொழிற்சாலையினிடத்தில் எடுத்துக் கூறியிருக்கிறோம். இதற்காக 20—3—1985 அன்று To operate the plant in the air pollution control area as per Section 21 of the Air Pollution Prevention and Control Act. என்று அந்த ஏர்-பொல்யூஷன் எங்கெங்கு வரக்கூடும் என்று கருதுகிறோமோ அதையெல்லாம் கருத்திற்கொண்டு அந்தத் தொழிற்சாலையைச் செயல்படுத்துவதற்கு, உரிமை பெறுவதற்கு 20–3–1985 அன்று நாம் அனுமதி கொடுத்திருக்கிறோம். அவர்கள் விளக்கமாக, The Industry has provided cyclone separators and bag filters in the grinding section of rock phosphate to eliminate dust particles

என்று, தூள் எல்லாம், பெரிய பெரிய அளவிலே உள்ளது; 3 மில்லி மீட்டர்; 5 மில்லி மீட்டர் டஸ்ட் வெளியே வராமல் ஏற்பாடு செய்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம். நாம் எந்த அளவிற்குச் சுத்திகரிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோமோ அந்த அளவிற்கு சுத்திகரிக்கவில்லை என்றால், உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த என்ணூரில் உள்ள ஈ.ஐ.டி. பாரி உரத் தொழிற்சாலையில் சில மாதங்களுக்கு முன்னால் விஷக் கசிவு ஏற்பட்டு சில தொழிலாளர்களும், பொது மக்களும் பாதிக்கப்பட்டது உண்மையா? அப்படி உண்மை என்றால், கசிவு ஏற்படுவதற்கு நிர்வாகம் காரணம் என்றால் அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, ஈ.ஐ.டி. பாரி உரத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில் அந்த மாதிரி தகவல் நம்மிடத்தில் வரவில்லை.

(முற்பகல் 10-10)

**திரு. வி. பி. சிந்தன் :** தலைவர் அவர்களே, போபாலில் ஏற்பட்ட துரதிருஷ்டவசமான நிகழ்ச்சிக்குப் பிறகு பல்வேறு தொழிற்சாலைகளில் அத்தகைய நிலைமை நீடிக்கிறது என்று அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டும் சட்டப்படியான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்பது தான் எங்களுடைய குற்றச்சாட்டு. அதை நான் ஒரு கேள்வியாகக் கிளப்பி, எத்தகைய நடவடிக்கைகள் அரசு எடுத்திருக்கிறது என்ற விவரத்தையும் கேட்க வேண்டும். என்னுடைய தொகுதியிலே ஸ்டெட்போர்ட் ஹாஸ்ப்பிட்டல் என்ற மருத்துவமனைப் பகுதியிலேயிருந்து வருகிற கழிவு நீரினால், அந்தப் பக்கம் பூராவும் குடியிருக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

சென்னை நகரத்தில் இருக்கிற பெரும் தொழிற்சாலைகள் பூராவும் இந்த விஷயத்தில் எதையும் கவனிப்பதில்லை. அதிகாரிகள் வந்தால் அவர்களைச் சரிக்கட்டி, திருப்பி அனுப்பி விடுகிறார்கள். அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுப்பது இல்லை. இது சம்பந்தமாக ஏதேனும் உருப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றனவா? சட்டத்தில் கண்டு உள்ள நடவடிக்கைகள் ஏதேனும் எடுக்கப்பட்டிருக்கிறதா? எடுக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான பிராசிக்யூஷன்ஸ் நாம் நடத்தி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை பிராசுக்யூஷன்ஸ் என்ற விவரத்தைக் கேட்கிறார்கள்? பிராசிக்யூஷன்ஸ் எத்தனை, கோர்ட்டுக்கு எத்தனை எடுத்துச் சென்றிருக்கிறோம், எவ்வளவு கன்விக்ஷன்ஸ் என்ற அந்த டீடெயில்ஸ் எல்லாம் என்னால் கொடுக்க முடியும். இந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்புதான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும், 1972 ஆம் ஆண்டு உலகத்தின் பல பகுதிகளுக்குக் கொண்டு வரவேண்டுமென்று முடிவு செய்தார்கள். இந்திய அரசு 1974 ஆம் ஆண்டு அதைச் சட்டமாகக் கொண்டு வந்தது. இங்கேயும் கொண்டு வரவேண்டுமென்று 1974 ஆம் ஆண்டே சொன்னார்கள். ஆனால் கொண்டு வரவில்லை. எந்தக் காரணத்தினாலோ தள்ளி வைக்கப்பட்டது. பிறகு, மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சியில் 1981-வது ஆண்டு நாம் கொண்டு வந்திருக்கிறோம். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்த பிறகு, வேகமாக, பலர் மீது நடவடிக்கை எடுத்து, நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம். பலருக்கு அனுமதி கொடுக்கவில்லை. எங்கள் மீது உள்ள குற்றச்சாட்டு, பல தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைய வாய்ப்பு கொடுக்கவில்லை என்பது தான். எந்தத் தாட்சண்யமும் இல்லாமல், நடவடிக்கை எடுக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது நியாயமான கருத்து என்ற முறையிலே அவர்கள் சொல்கிற கருத்து எனக்கு உறுதுணையாக இருக்கும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தலைமையிலே தமிழ்நாடு ஸ்டேட் என்வைரன்மென்ட்டல் கமிட்டி என்ற உயர்மட்ட கமிட்டி அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிகாரிகள் கனவிலே கூட எதிர்பார்க்க முடியாத கேள்விகளை நாம் கேட்டு, அங்கு சரியாக இல்லை என்றால், அனுமதி கொடுப்பதாக இல்லை. அந்த வகையிலே மிகக் கடுமையாக இருக்கிறோம். கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஸ்டெட்போர்ட் ஹாஸ்ப்பிட்டல் பற்றி சொன்னார்கள். அவா விவரம் கொடுத்தால் நடவடிக்கை எடுப்போம். ஏர் பொலூஷன் ஆக்டின் 21-வது பிரிவு மிகக் கடுமையாக இருக்கிறது. அதிலே, பீனல் புரவிஷன்ஸ் 45, 46 இருக்கின்றன. ஆகவே, அந்த பீனல் புரவிஷன்ஸ் படி நாம் தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கிறோம். இன்றைக்கு நீங்கள் எழுப்பிய கேள்வியும் நான் அளித்த பதிலும் பொது மக்களுக்கு உதவியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[1986 மார்ச் 20

திரு. செ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து வெளி வருகிற புகை சொல்லி முடியாது. மூலக் கேளவிக்குத் தொடர்பில்லை என்று சொல்லி விடக் கூடாது. குறிப்பாக, எண்ணூர் பகுதியிலே சொல்லலாம். போக்குவரத்துக் கூட நடைபெற முடியாத அளவு, தூசி கண்களை மறைக்கிறது, அப்பகுதியில், அதே போன்று ஆவடியிலே இருக்கிற பாரி ஆலையினால் 10 கிராம மக்கள் இரவிலே தூங்க முடியாத நிலைமை இருக்கிறது. செங்கல்பட்டு பகுதியில் இருக்கிற ரப்பர் பாக்டரி, மற்றும் சாராய பாக்டரிகளிலிருந்து வெளி வரும் நாற்றத்தினால், குறிப்பாக, செங்கல்பட்டு பகுதி மக்கள் இரவில் நல்ல முறையில் தூங்க முடியாத நிலைமை இருக்கிறது. அதைப் பற்றி அரசு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு நான் தந்த விடை, இந்தக் கேள்விக்கும் பொருந்தும் என்று நினைக்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகளிலே இருந்து வெளி வருகின்ற புகையாக இருந்தாலும் சரி, விஷக் கழிவு நீராக இருந்தாலும் சரி, பாசனத்திற்கு மட்டுமல்லாமல், குடிநீருக்கும் கூட கேடு விளைவிக்கக் கூடிய அபாய நிலையிருக்கிறது. முதலிலே, எங்களுக்குக் கிடைக்கிற தகவலைக் கொண்டு, அந்தப் பகுதியிலே இருந்து வருகிற தகவல் அடிப்படையிலே நடவடிக்கை ஒரு புறம் இருந்தாலும் குற்றச்சாட்டு வந்தாலும், வராவிட்டாலும், அரசு எந்த, எந்தப் பகுதியிலே, ஆலைகளிலேயிருந்து வெளி வருகின்ற கழிவுகளாலே, தொல்லை ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்து, துரிதமான, முன்னோடியான நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது இருக்கிற நடவடிக்கை போதாது. இன்னும் வேகமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். புகார் கொடுத்தாலும் கூட விரைவான நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இப்போது வேகமாக நடவடிக்கை எடுத்து வருகிறோம். காங்கிரஸ் கட்சி துணைத் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால் இன்னும் வேகமாக நடவடிக்கை எடுக்கவிருக்கிறோம். இரண்டு வகைகளில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். முதலாவதாக



1986 மார்ச் 20]

'Issuing licences for new Industries' இதிலே நாம் கடுமையாக இருக்கிறோம். நாம் சொல்லக் கூடிய சரத்துக்களை எல்லாம் சீராக நிறைவேற்றி, நாம் சொல்லுகின்ற குறைபாடுகளை எல்லாம் நல்ல முறையிலே நிவர்த்தி செய்தால்தான் லைசன்ஸ் கொடுக்கிறோம். யாராக இருந்தாலும் அதிலே தயவு தாட்சணியம் காட்டப்படுவதில்லை. இரண்டாவதாக, ''ரினீவல் ஆப் லைசன்ஸ்'' என்கிற போது நாம் நோட்டீஸ் கொடுக்கிறோம். அதன்படி செய்தால் தான் ரினீவல் செய்கிறோம். நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இந்தத் துறை இப்போது தான் விரிவடைந்து கொண்டு வருகிறது.

This department should have been started in 1974. Then, there would not have been any problem. unifortunately, it was started very late. I do not know why the prevous Govt. falled to start this very important deparment, *viz.* envlronment and Pollution Control Deparment.

ஆகவே இப்போது நாம் படிப்படியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். இப்படி நடவடிக்கை எடுக்கிறபோது சில பிரச்சனைகள் வருகின்றன. உதாரணமாக, வட ஆற்காடு மாவட்டத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம். நடவடிக்கை எடுத்துக் கொண்ட அடுத்த வினாடியே நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அங்கே இருக்கிற ஒரு பார்லிமென்ட் உறுப்பினரே சொல்கிறார். அப்போதும் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். ''வெரி சாரி, எக்ஸ்கியூஸ் மி'' என்று சொல்லிவிட்டு, தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது, இப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கிறபோது ''நடவடிக்கை எடுக்க வேண்டாம்'' என்று தயவு செய்து யாரும் சொல்லக் கூடாது என்பது தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 214 முதல் 217 முடிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கூட்றவுத்துறை அமைச்சர் ஆகியோரின் வேண்டுகோள்களுக்கிணங்க ஒத்தி வைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) தனி உறுப்பினர் அலுவலுக்காக ஒதுக்கப்பெற்றுள்ள நாள்.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, வழக்கத்தில் இருந்து வரக் கூடிய 'பிரைவேட் மெம்பர்ஸ் டே' என்பது இந்த மன்றத்தில் இப்போது கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறது. அது சரியல்ல. வாரம் ஒரு நாள் பிரைவேட் மெம்பர்ஸ் டே இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சம்பந்தப்பட்ட விதியைப் படிக்கிறேன். அதன் பிறகு நீங்கள் இந்தப் பிரச்சனைகளை எழுப்பமாட்டீர்கள் என்று கருதுகிறேன்.

Rule 33 (i) says : "On all Thursday on which the Assembly sits, except Thursdays allotted for the discussion on the Motion of Thanks to the Governor's Address and Thursdays allotted for the discussion of financial matters under Articles 202 to 206 of the Constitution, the business of Private Members shall have precedence;

Provided that the Speaker may in consultation with the Leader of the House allot in lieu there of a day or days respectively, as the case may be, after completion of the discussions on the Motion of Thanks to the Governor's Address and financial matters, for transacting Private Members business......"

இப்போது பட்ஜெட் பற்றி விவாதித்துக் கொண்டிருப்பதால் அதற்கு வாய்ப்பே கிடையாது என்று விதியில் இருக்கிறது. ஏதாவது பிரச்சனை வந்தது என்றால், பட்ஜெட் பற்றிய விவாதங்கள் எல்லாம் முடிந்த பிறகு, டிஸ்கஷன் முடிந்து கிராண்ட்ஸ் வாங்கிய பிறகு, எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, " பிரைவேட் மெம்பர்ஸ் டே " கைவிடப்படவில்லை.

திரு. கு. ரமணி : ரூல்ஸ் பிரகாரம் நடத்த வேண்டும். ஃபினான்ஷியல் பிஸினஸ் நடக்கும்போது பிரைவேட் மெம்பர்ஸ் டே, வைக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. இதற்கு முன்பே கூட, பட்ஜெட் சம்பந்தப்பட்ட விவாதத்திற்கு முன்னால் தனியார் அலுவல் நாள் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடந்து போனதைப் பற்றி இப்போது சொல்ல வேண்டாம். இப்போது நடந்து கொண்டிருப்பது பட்ஜெட் செஷன். இது முடிந்த பின்னால், ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம்.

திரு. கு. ரமணி : அதற்கு நீங்கள் ஒரு உறுதி அளிக்க வேண்டும். இருக்கிற ரூல்படி நடந்தால் சரி. ஆனால் சாதாரண காலத்தில் கூட இந்த நாள் விடப்பட்டிருக்கிறது ; இனி மேல் விடப்படக்கூடாது என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : போன தடவை, ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெற்றது. ஆகையால் அப்போது தனியார் அலுவல் நாள் இடம் பெற வில்லை. நான் ஏற்கெனவே சொன்னது போல பட்ஜெட் விவாதம் எல்லாம் முடிந்த பிறகு ஒரு நாள் வைத்துக் கொள்ளலாம்.

(ஆ) அச்சிடப்பெற்றுள்ள வெளியீடுகளில் அச்சகத்தின் பெயர் இல்லாமல் இருப்பது.

திரு. குமரி அனந்தன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மன்றத்தில் ஐந்து வெளியீடுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன அவற்றில் நான்கு எந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டன என்று குறிப்பிடப்படவில்லை. அச்சகத்தின் பெயர் இல்லாமல் எந்த வெளியீடும் வரக்கூடாது என்று சட்டம் இருக்கும்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஐந்து வெளியீடுகளில் நான்கில் அச்சகத்தின் பெயர் இல்லை.

(முற்பகல் 10–20)

நேற்று தொழில் வளர்ச்சி நிறுவனம் என்ற பெயரில் தமிழில் அச்சிடப்பட்ட வெளியீட்டில் மட்டும் அச்சகத்தின் பெயர் இருக்கிறது. ஆனால் ஆங்கிலத்தில் தமிழ்நாடு ஸ்மால் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்று போட்டிருப்பதில்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எங்கே அச்சிடுகிறார்கள் என்று பார்க்கின்ற வேலை என்னைப் பொறுத்தவரையில் இல்லை. துறையினர்தான் அச்சிடுகிறார்கள். எனது செயலகத்திற்கு வந்தவுடன் என்னுடைய அனுமதி பெற்று அவையில் வைக்கிறார்கள்.

திரு. குமரி அனந்தன் : சட்டம் பாதுகாக்கப்படுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும் அல்லவா ? அச்சகத்தின் பெயரைப் போடுவதில் என்ன சிரமம் இருக்க முடியும் ? நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டத்தை நிறைவேற்றுகிற நம்மிடம் கொடுக்கப்படுவதே சட்டத்தை மீறியதாக இருக்கக்கூடாது. ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதில் அச்சகத்தின் பெயர் வரவில்லை. ஆகவேதான் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

### 3. அறிக்கை அளித்தல்.

பேரவையில் திரு. அ. ரகுமான்கான் கல்வித் துறை பற்றி முன்னறிவிப்பின்றி குறிப்பிட்ட ஒரு குற்றச் சாட்டுக்கு அவை முன்னவர் அளித்த விளக்க அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த அவைக்கு ஒரு விளக்கம் தருவதற்கு நான் விரும்புகிறேன். நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ரகுமான்கான் அவர்கள் கல்வித் துறையைப் பற்றிய ஒரு குற்றச் சாட்டைக் கூறி அது செய்தித் தாள்களில் எல்லாம் பரவலாக வந்திருக்கிறது. இது பற்றிய உண்மை நிலைமைகளை விளக்கிவிடுவது அதாவது அவையினருக்கும் சரி, நாட்டிலுள்ள பொது மக்களுக்கும் சரி, தெரியப்படுத்துகிற அளவுக்கு அமையுமேயானால் அது சரியாக அமையும் என்று நான் கருதுகிறேன். உண்மைக்குப் புறம்பான சில பல செய்திகள் எல்லாம் வெளியிடப்பட்டிருக்கிற காரணத்தால் உண்மை நிலையை அரசின் சார்பாக வெளியிடுவது எல்லோரும் அறிந்து கொள்ளுவதற்கும், புரிந்து கொள்ளுவதற்கும், தெரிந்து கொள்வதற்கும் வாய்ப்பாக அமையும் என்று கருதி, உள்ள நிலைமைகளை இந்த அவையின் முன் வைத்து, விளக்கிக் காட்ட நான் விரும்புகிறேன்.

திரு. ஜி. பி. வேல் முருகன், 1983–84-ஆம் கல்வி ஆண்டில் சென்னை அடையாறில் உள்ள அச்சுத் தொழில் நுட்பப் பயிலகத்தில் ' லித்தோகிராபி ' பிரிவில் சேருவதற்கு விண்ணப்பித்திருந்தார். இவர் ஏற்கெனவே இதே பயிலகத்தில் லெட்டர் பிரஸ் டிப்ளமோ வகுப்பில் படித்தவர்.

' லித்தோகிராபி ' பிரிவில் மொத்த இடங்கள் 30, இது ஒரு சான்ட்விச் பிரிவு ஆகும். இதில் 15 இடங்கள் இந்தப் பிரிவில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் தேர்ந்து எடுத்து அனுப்பும் மாணவர்களுக்கும், 15 இடங்கள் தகுதி அடிப்படையிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இப்பயிலகத்தில் மாணவர்கள் நேர் முகப் போட்டியில் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் பள்ளி இறுதியாண்டில் ஆங்கிலம் மற்றும் அறிவியல் ஆகிய இரண்டு பாடங்களில் பெற்ற மதிப் பெண்கள் ஆகிய இவைகளின் கூட்டு மதிப்பெண்களின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. வேல் முருகன் இதர மாணவர்களைப் போல், நேர்முகப் போட்டியில் கலந்து கொண்டார். மாணவர்களைத் தெரிந்தெடுக்க அமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவில் அரசு விதிகளின்படி முதலவர் உள்ளிட்ட இரு நபர் தேர்வுக்குழு மாணவர்களைச் சேர்ப்பதற்கு நேர்முகத் தேர்வு நடத்தினர். 'திரு. வேல்



முருகன், நேர்முகத் தேர்வில் சரியாக விடையளிக்காமையால் அவர் ' லித்தோகிராபி ' டிப்ளமோ வகுப்பில் சேருவதற்கு தெரிவு செய்யப்படவில்லை. இவர் இப்பயிற்சிக்குதெரிவு செய்யப்படாததால், முதல்வருக்கு இவர் மீது பகைமை உள்ளது, ஆகையால் முதல்வர் இவரைப் பழிவாங்கும் எண்ணத்தில் இவ்வாறு செய்துவிட்டதாகவும், முதல்வர் பயிற்சிக்குத் தெரிவு செய்யும் கமிட்டியில் இருக்கக்கூடாது என அவர் நேர் முகப் போட்டியில் கலந்து கொள்ளும்போதே மறுப்பு தெரிவித்திருந்ததாகவும் பொய்யாகக் கூறியுள்ளார். இதை வைத்துக் கொண்டு இதை எதிர்த்து சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு ரிட் பெட்டிஷன் நம்பர் 8710/83 தொடர்ந்தார். முதல்வர்மீது திரு. வேல் முருகன் வழக்கு ஒன்று பதிவு செய்திருப்பதால், முதல்வர் மாணவர் சேர்வதற்குரிய குழுவில் இடம் வகித்தது சரியில்லை ஆகையால், முதல்வர் , விரோதத்தின் காரணமாக அவர் தெரிவு செய்யப்படவில்லை என வாதிட்டார். இதை சென்னை உயர் நீதி மன்றம் ஏற்று, முதல்வர் இல்லாத நேர்முகக் கமிட்டி ஒன்றை நியமித்து, திரு. வேல் முருகன் அவர்களுக்கு நேர்முகப் போட்டி ஒன்று நடத்துமாறு பணிக்கப்பட்டது. அதன்படி, சென்னை அரசு அச்சக பொது மேலாளர் மற்றும் இரசாயனப் பயிலக முதல்வர் உள்ளிட்ட வேறு கமிட்டி ஒன்று அமைக்கப்பட்டு, வேல் முருகன் ஆய்வு செய்யப்பட்டார். இம்மாணவர் நேர்முகப் போட்டியின் சமயம் தகாத முறையில் நடந்து கொண்டு, நேர்முகப் போட்டியைப் பதிவு செய்யும் கருவியையும் பறிக்க முயன்றார். இதை இந்த கமிட்டி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது இந்த இரண்டாவது நேர்முகத் தேர்வு பதிவு விவரங்களை (interview transcript) சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மீதி ஆதவணங்களும் உயர் நீதி மன்றத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் தாக்கல் செய்யப்பட்டது உயர் நீதி மன்றம் வழக்கை விசாரித்து 31—1—1984 அன்று தள்ளுபடி செய்தது. இதன் பேரில் இவர் சென்னை உயர்நீதி மன்ற டிவிஷன் பெஞ்சிற்கு W.A. நெ. 201 of 1984 என்ற எண்ணில் மேல் முறையீடு செய்தார். தலைமை நீதிபதியை தலைமையாகக் கொண்ட முதல் பெஞ்சு, இந்த வழக்கினை முழுமையாக ஆய்வு செய்த பின் இந்த வழக்கை 3—8—1984 அன்று தள்ளுபடி செய்தது. இவர் தற்பொழுது மதிப்பெண் பட்டியல்கள் எனக் கூறிக் கொள்ளும் கழிவுத் தாள்கள் டில்லி உச்ச நீதி மன்றம் செல்லும் முன் சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்ததே இல்லை.

இதை எதிர்த்து இம்மாணவர் இந்திய தலைமை நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இத்தருணத்தில் இம்மாணவர், நேர்முகத் தேர்வில் அளிக்கப்பட்ட மதிப்பெண் பட்டியல் என இரண்டு மூன்று தாள்களின் போட்டோ பிரதிகளை அளித்தார். இது முதல் நேர்முகப் போட்டியின் போது முதல்வரால் நேர்முகப் போட்டிக்கு வந்த மாணவர்களின் தகுதியை அறிவதற்கு முதல்வர் தன் சொந்த உபயோகத்திற்கு வைக்கப்பட்டிருந்த " rough working sheet " ஆகும்.

இம்மாணவருக்கு உயர்நீதிமன்ற ஆணையின்படி, இரண்டாம் முறையாக நேர்முகப் போட்டி வைக்கப்பட்டது. இம்முறையும் இம்மாணவர் சரியான முறையில் பதில் அளிக்க முடியவில்லை. இவர் நேர்முகப் போட்டியில் சரியான முறையில் பதிலளிக்க முடியவில்லை என்ற ஆத்திரத்தில் நேர்முகப் போட்டியிலேயே தகாத முறையில் நடந்து கொண்டார். இவ்வாறு இம்மாணவர் சரியான முறையில் பதிலளிக்கவில்லை என்பது சென்னை உயர் நீதிமன்ற டிவிஷன் பெஞ்சு தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டி, இவரது மேல் முறையீட்டு மனுவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது. ஆகையால், எந்த சந்தர்ப்பங்களிலும், மார்க் பட்டியல் திருத்தப்படவில்லை.

1983–84 ஆம் ஆண்டில் மேற்படி பிரிவில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் விபரம் :—

| | |
|---|---|
| (அ) பின்தங்கியோர் வகுப்பில் தேர்வு செய்யப்பட்ட கடைசி மாணவர் பெற்ற மதிப்பெண்கள் .. | 159 |
| (ஆ) நிறுவனங்களால் அனுப்பப்பட்டு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கடைசி மாணவர் பெற்ற மதிப்பெண்கள் .. .. .. | 137 |
| (இ) திரு. வேல்முருகன் பெற்ற மதிப்பெண்கள் — | |
| முதல் நேர்முகப் போட்டி .. .. .. | 129 |
| இரண்டாவது நேர்முகப் போட்டி .. .. | 131 |

திரு. வேல்முருகன், பிரிண்டிங் டெக்னாலஜி பயிலகத்தில் லித்தோகிராபி பிரிவில் சேருவதற்கு விண்ணப்பம் நிராகரிக்கப்படவில்லை. இவர் இதர விண்ணப்பதாரர்களைப் போல் நேர்முகப் போட்டிக்கு அனுமதிக்கப்பட்ட பின் மேலே குறிப்பிட்டவாறு மதிப்பெண் வரிசையில் வராமையால், இவர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்படவில்லை.



**இந்த வழக்கு** சென்னை உயர்நீதிமன்றத்தில் நடைபெறும் **சமயம்** திரு. சீனிவாசன் அவர்கள் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அல்ல. ஆகையால் அவர் எந்தவித அபிடவிட்டும் தாக்கல் செய்யவில்லை. பொதுவாக அச்சுத் தொழில் நுட்பப் பயிலக மாணவர்கள் சேர்க்கையைப் பொறுத்த மட்டில் முன்னாள் இயக்குநரோ அல்லது தற்போதைய இயக்குநர் அவர்களுக்கோ சம்பந்தம் இல்லை. மதிப்பெண் பட்டியல் திருத்தியே சுப்ரீம் கோர்ட்டில் கொடுக்கப்படவில்லை. எந்த மார்க் பட்டியலும் திருத்தப்படவே இல்லை. இன்னும் குறிப்பாக கூறப்படுமாயின் இயக்குநர் சீனிவாசன் அவர்கள் டில்லி சுப்ரீம் கோர்ட்டிற்கு செல்லவும் இல்லை. அப்பாலஜி கேட்கவும் இல்லை. இதே போன்று இயக்குநர் சீனிவாசன் மற்றும் பிரின்சிபால் மோகன்ராவ் ஆகியவர்கள் சுப்ரீம் கோர்ட்டில் கவுண்டர்-அபிடவிட் எதுவும் போடவில்லை. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பிலும் மார்க் பட்டியல் திருத்தப்பட்டுள்ளது என்றோ அல்லது வேறு தவறுகள் நடந்து விட்டது போன்றோ அல்லது தவறு செய்து மன்னிப்புக் கேட்டது போன்றோ அல்லது இம்மாணவரின் தகுதி புறக்கணிக்கப்பட்டு விட்டது என்பது போன்றோ இல்லை. ஆனால், அதே சமயத்தில் மேற்கூறிய மாணவர் தகாதவாறு நடந்து கொண்டுள்ளார் என உரைத்ததைக் கருத்தில் கொண்டு, இம்மாணவர் பயிலகத்தில் ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதற்குரிய உறுதி மொழியைத் தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்கு அளித்தல் வேண்டும் என்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மாணவரும் இந்த உறுதிப் பத்திரத்தை எழுதிக் கொடுத்த பிறகே சேர்ந்து படித்து வருகிறார்.

இம்மாணவர் மீண்டும் சென்னை உயர்நீதி மன்றத்தில் திருத்திய மார்க் பட்டியல்களை வழக்குமன்றத்திற்கு அளித்ததாகக் கூறிய வழக்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் 5–12–1985 ஆம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

இம்மாணவர் தன்னை முதலாம் ஆண்டு லித்தோகிராபியில் சேர்த்துக் கொள்ளாததைக் குறித்துத் தான் சென்னை உயர்நீதி மன்றத்திலும் சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்கு தொடுத்தார். ஆனால், பிறகு தனக்கு சில பாடங்களில் வாரியத் தேர்வு எழுதுவதிலிருந்து விலக்களிக்கக் கோரி விண்ணப்பம் செய்திருந்தார். ஆனால், தேர்வு விதிகளில் எந்த பாடத்திற்கும் விலக்கு அளிக்க விதிமுறைகளில் வழி வகை இல்லாமையால் இவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. ஆகையினால், திரு. சீனிவாசன் இயக்குநர், மற்றும் மோகன்ராவ், முதல்வர் மீது வீணாகக் கெட்ட நோக்கத்தோடு இவ்வாறு கூறப்பட்டது. மேலும், மேற்படி மாணவர் 5–12–1984 ஆம் தேதிய சுப்ரீம் கோர்ட்டின் ஆணையின்படி 12–12–1984 ஆம் தேதி வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

(முற்பகல் 10–30)

சற்றேறக்குறைய ஒன்றரை ஆண்டுகள் கழித்து மேற்படி குற்றச்சாட்டு கூறப்பட்டிருக்கிறது. ஆகவே, மார்க்கை பொறுத்தவரையிலும் அவர் வாங்கியது குறைவு என்பதுதான். அதைத் திருத்த வேண்டிய அவசியம், திருத்திச் சொல்ல வேண்டிய அவசியம் எந்த ஒரு இடத்திலும் ஏற்படவில்லை. ஆனால், சுப்ரீம் கோர்ட்டிற்குப் போவதற்குப் பிறகு சுப்ரீம் கோர்ட் ஒரு காம்ப்ரமைஸ் செய்தது. அவரிடத்தில் அண்டர்டேகிங் கேட்டுக் கொண்டு மறுபடியும் சேர்த்துக் கொள்கிறீர்களா என்று கேட்டபோது, அப்படி அண்டர்டேக்கிங் கேட்டு சுப்ரீம் கோர்ட் டைரக்ஷன்படி சேர்த்துக் கொள்ளலாம் என்று சொல்லப்பட்டதே தவிர, மார்க் லிஸ்ட் எதுவும் திருத்தியமைக்கப்படவில்லை. மறுபடியும் இவர் சுப்ரீம் கோர்ட்டிலே சேர்த்துக் கொள்ளலாம் என்று வந்து, சேர்த்துக் கொண்டதற்கு பிறகு உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்தார். அதாவது கீழ்க் கோர்ட்டிலேயிருந்து மார்க்கைத் திருத்தி சுப்ரீம் கோர்ட்டிலே தனக்கு வழக்கு சாதகமாகிற அளவிற்கு திருத்திவிட்டார்கள் என்று வழக்கு போட்டார். இங்கே உயர்நீதி மன்றம் விசாரித்துப் பார்த்து, அப்படி எதுவும் திருத்தப்படவில்லையென்று தெளிவாகச் சொன்னார்கள்.

'The matter was subject to appeal before the Supreme Court and in the Supreme Court, the matter was compromised. There was no decision on the merits of the Case in the Supreme Court.

மெரிட்டின்படி சுப்ரீம் கோர்ட்டிற்கு வருமானால், கீழ்க்கோர்ட், புல் பெஞ்ச் போன்ற அந்தத் தீர்ப்புக்குத் தான் அவர்களும் வந்திருக்க வேண்டும். மெரிட்படி வராமல் ஒரு சாம்பரமைஸ் என்று வந்தது. சுப்ரீம் கோர்ட்டில் ஜட்ஜ் என்ன கேட்டார் என்றால்,

'whether the petitioner would be admitted as a special case on giving an undertaking for good behaviour.'

நன்னடத்தைச் சான்றிதழ் தந்ததற்குப் பிறகு அதன் பேரில் அவரை ஒரு தனி கேசாகக் கருதி சேர்த்துக் கொள்கிறீர்களா என்று கேட்கப்பட்டதே தவிர, எந்த இடத்திலும் மார்க் திருத்தப்பட்ட தன்மைகள் வழக்கிலே இல்லை. ஆகவே, அந்த வகையில் கொடுக்கப்பட்டது இங்கே உயர்நீதி மன்றத்தில் மறுக்கப்பட்டு விட்டது. சுப்ரீம் கோர்ட்டிற்கு தொழில் கல்வி இயக்குநர் செல்லவும் இல்லை. அன்றைய தினத்தில் கோர்ட்டில் பராசரன் இல்லவும் இல்லை. அவருடைய அசிஸ்டெண்ட் தான்



அங்கே இருந்திருக்கிறார்கள். ஆகவே, உண்மைக்குப் புறம்பாக செய்திகள் வருவது உண்மை நிலைக்கு மாறாக அமைந்து வீணான கெட்ட பெயரை பலருக்கு ஏற்படுத்துவதற்குக் காரணமாக அமைந்து விடுமென்ற காரணத்தால் தான் இதனைச் சொல்கிறேன். உண்மை நிலை மார்க் திருத்தப்பட வேண்டிய அவசியம் இல்லை, அப்படியேதான் இருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் கொடுக்கப்பட்ட அதே மார்க் தான் அங்கேயும் கொடுக்கப்பட்டிருக்கிறது. மெரிட்படி சுப்ரீம் கோர்ட் எதையும் செய்யவில்லை. காம்ப்ரமைஸ் செய்து இவரிடத்தில் அண்டர்டேக்கிங் வாங்கிக் கொண்டு இவரைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று சொன்னதன் பேரில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அதையும் மீறி அவர் உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடுத்து, அந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. இதுதான் உண்மை நிலை என்பதை அவை தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக இவற்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : நான் சொல்லியிருக்கிற குற்றச்சாட்டே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அறிக்கையை படித்து முடித்தாகி விட்டது. இனிமேல் அதுபற்றி எழுப்ப வேண்டாம். விதி 111-இல் தெளிவாக இருக்கிறது.

'A statement may be made by a Minister on a matter of public importance with the consent of the Speaker. There shall be no debate on such statement at the time it is made.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, மிஸ்லீடிங்காக இருக்கிறதென்று சொல்கிறேன். டாக்குமெண்ட்சை நான் உங்களிடத்தில் புரடியூஸ் பண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதி 93-யையும் உறுப்பினருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (குறுக்கீடு) விதியில் தெளிவாக இருக்கிறது.

" விதி 93. ஒரு உறுப்பினர் எழுத்து மூலமாக முன் கூட்டியே பேரவைத் தலைவர், அமைச்சர், சம்பந்தப்பட்ட உறுப்பினர் ஆகியோருக்கு தெரிவித்தாலன்றி மற்ற எந்த உறுப்பினர் மீதோ அல்லது எந்த அலுவலர் மீதோ அவதூறாகவோ அல்லது தனிப்பட்ட முறையில் அவர் மீது குற்றம் சாட்டக் கூடாது. அவ்வாறு முன்னறிவிப்பு கொடுப்பது குற்றம் சாட்டப்பட்ட உறுப்பினரோ அல்லது அமைச்சரோ அதனைப் புலனாய்வு செய்து

பதில் அளிப்பதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்''. இதை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். நோட்டீஸ் கொடுக்காமல் அலிகேஷன் கிளப்பக் கூடாது. (குறுக்கீடு) உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் சொல்வது கூட நல்லதல்ல.

திரு. அ. ரகுமான்கான் : இது அதிகாரிகள் மட்டும் சம்பந்தப்பட்டதல்ல.

MR. SPEAKER : The Hon. Minister is primarily a Member of this House. I have to protect his rights also.

திரு. அ. ரகுமான்கான் : அமைச்சர்களுக்கு சம்பந்தம் இருக்குமோ என்ற அச்சம் இருப்பதால் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சந்தேகத்தில் நாம் எதையும் பேசக்கூடாது. நோட்டீஸ் கொடுத்துவிட்டு நீங்கள் பேசியிருக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான் : ஒரு அலிகேஷன் சொல்லியிருக்கிறேன். அமைச்சர் அதற்கு பதில் சொல்லியிருக்கிறார். டாக்குமெண்ட்சை நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் படிக்கும் போது நீங்கள் இருந்திருந்தால், You would have been convinced.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய திரு. ரகுமான்கான் அவர்கள் ஏற்கனவே பேசுகிறபோது அவரிடத்திலே கிடைத்த சில ஆதாரங்களை வைத்து, அப்படி பேசியிருக்கிறார். அதைத் தொடர்ந்து அந்த விபரங்களைப்பற்றி, நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்ன அந்த விவரங்கள் அரசுத் தரப்பிலே இருந்து அதிகாரிகளிடத்திலேயிருந்து அவருக்குக் கிடைத்த விவரங்களைத்தான் அவர்கள் சொல்ல முடியும் என்று நான் கருதுகிறேன். எனவே கோர்ட் விவரங்கள் பற்றி, அந்த கோர்ட்டிலே நடைபெற்ற, நிகழ்ச்சிகளில் ஏதேனும் ஆதாரங்கள் இருக்குமானால், தங்களிடத்திலே அதைக் காட்டுவதன் மூலமாக சில உண்மைகளை இந்த அவைக்குத் தெரிவிக்கப்பட முடியுமானால், அதற்கு நீங்கள் வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் அவர்கள் கூறியது போன்று நானும் இருக்கிற நிலைமைகளை தெளிவாகச் சொன்னேன். அதிலும் மாறுபட்ட கருத்தோ, அல்லது உண்மைக்குப்





புறம்பான தன்மைகளோ இருக்குமானால், அதற்காக ஆதாரம் இருக்குமானால், அதைத் தங்களிடத்திலே மகஜர் மூலமாக தெரிவிப்பார்களானால், அதைத் தாங்கள் விசாரித்து தக்க முடிவு எடுக்கலாம். அதற்கும் நான் பதில் சொல்ல ஆயத்தமாக இருக்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தங்களிடத்திலே கொடுக்கிறேன். அதற்குப் பிறகாவது சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும்.

4. வரவு-செலவுத் திட்டம் 1986—87 பொது விவாதம் —தொடர்ச்சி.

*திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். புரட்சித் தலைவருடைய பட்ஜெட்டிலே புரட்சியும் இல்லை, புதுமையும் இல்லை, பொலிவும் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இந்த பட்ஜெட்டிலே குறள் உண்டு, அண்ணாவின் பொன்மொழி உண்டு. இலங்கைப் பிரச்சினை உண்டு. மத்திய சர்க்கார் மீது குறை சொல்லும் குற்றம் உண்டு. நாவலரின் நாவன்மை உண்டு. ஆனால் திட்டம் ஒன்றும் கிடையாது. இந்த பட்ஜெட்டிலே மக்கள் நிறைய எதிர்பார்த்தார்கள். ஏமாந்துவிட்டார்கள். எனவே ஏமாற்றப்பட்ட பட்ஜெட்டாகத்தான் இது அமைந்திருக்கிறது. சொல்லப்போனால், இந்த பட்ஜெட் routine Accountant Budget என்று தான் சொல்லவேண்டும். இந்த பட்ஜெட்டைப் பற்றாக்குறை பட்ஜெட்டாக போட்டிருக்கிறார்கள். 12 கோடி ரூபாய்க்கு பற்றாக்குறை காண்பித்து இருக்கிறார்கள். மேலும் இந்த மதுவிலக்கை அமுல்படுத்தினால் 60 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

There is no provision for prohibition implementation.

இதையும் சேர்த்தால், 72 கோடிக்கு மேலே பற்றாக்குறையாக உள்ள பட்ஜெட்டாக இது அமையும். இப்படி பற்றாக்குறை பட்ஜெட் போட்டால் அதனால் பண வீக்கம் ஏற்படும், விலைவாசி உயரும் என்பதெல்லாம் நிதியமைச்சர் அவர்கள் அறிவார்கள். அறிந்தும் இந்தமாதிரி பட்ஜெட் போட்டது விரும்பத்தக்கது அல்ல.

அடுத்து சேல்ஸ் டாக்சிலே நிறைய குறைவு பண்ணி இருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால் இன்னும் புலமுனை விற்பனை போடுவதைக் காட்டிலும் ஒருமுனை வரி தான் நல்லது.

Only for accounting purposes, for official purposes அதுதான் சிறந்தது. ஆகவே இன்னும் அரசாங்கம் பழைய முறையைப் பின்பற்றாது, ஒருமுனை வரியைக் கொண்டு வருவதுதான் சாலச் சிறந்தது. அதேபோல் தீப்பெட்டிக்கு சேல்ஸ் டாக்ஸ் எடுக்க வில்லை. காங்கிரஸ் ஆட்சியில் காமராஜர் அவர்கள் இருக்கும் போது, வெங்கட்ராமன் அவர்கள் தீப்பெட்டிக்கு இருந்த விற்பனை வரியை எடுத்துவிட்டார்கள். அதிலிருந்து கிடைக்கக் கூடிய விற்பனை என்பது மிகவும் குறைவுதான். எனவே அந்த மாதிரி தீப்பெட்டிக்கும் விற்பனை வரியை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டிலே நாட்டினுடைய முக்கியமான பிரச்சனை யான வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி எந்த திட்டமும் கிடையாது. தமிழ்நாட்டிலே வருடம் ஒன்றுக்கு எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணக்கூடியவர்கள் 3 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். ஹையர் செகண்டரியில் 2 லட்சம் பேர் இருக் கிறார்கள். கிராஜுவேட்ஸ் லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். எனவே படித்தவர்கள் ஆண்டு ஒன்றுக்கு 6 லட்சம் பேர்கள் இருக் கிறார்கள். இது போக 10ஆவது வகுப்புக் கீழே படித்தவர்கள் பல இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள்.

[முற்பகல் 10-40]

இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்புத் திட்டம் எங்கு போடப்பட்டுள்ளது. திட்டமே ஒன்றும் கிடையாது. சொல்லப் போனால் எம்ப்ளாய்மெண்ட் எக்சேன்ஜ்லே 1976 ஆம் ஆண்டி லிருந்து இன்னும் வேலைவாய்ப்பு வருவது கிடையாது. அதற்கு முன்புதான் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். 1976 லிருந்து பதிந்தவர்களுக்கு இன்னும் ஒரு இன்டர்வியூ கூட வர வில்லை. எனவே 10 ஆண்டு காலமாக வேலைவாய்ப்பே கிடையாது. அதற்கான அரசாங்கத் திட்டம் ஒன்றும் போடப் படவில்லை. மேற்கொண்டு, நமது தமிழக அரசு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று அறிவித்திருக்கிந்தார்கள். அந்தத் திட்டம் என்ன ஆனது? அந்தத் திட்டத்தை அமல் நடத்துவீர் களா என்று அறிய விரும்புகிறேன். அந்தத் திட்டத்தை சொன்னார்களே தவிர, அத்திட்டம் நிறைவேற்றப்படவில்லை. மேலும், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.ஈ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி., என் கின்ற மத்திய அரசின் திட்டங்களின் மூலமாக வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்பது வாஸ்த்தவம்தான். இருந்தாலும் கூட தமிழ்நாட்டைப் பொறுத்தட்டிலே, திட்டவட்டமாக படித்த வர்கள், படிக்காதவர்களுக்கென்று வேலைவாய்ப்புத் திட்டத் தைக் கொண்டுவரவில்லை. சொல்லப்போனால், Medical Graduates and now nurses. are unemployed. இந்த நிலைமையைப் பார்க்கும்போது அரசாங்கமானது, மெடிக்கல் டாக்டர்கள் தேவையாக இருக்கும்போது அது ஃபில் அப் பண்ணு





வதற்குத் தயாராக இல்லை. நர்சுகளும் தேவையாக இருக்கும் போது அதுவும் ஃபில் அப் பண்ணுவதற்குத் தயாராக இல்லை. எனவே, அரசாங்கம் இதையெல்லாம் ஃபில் அப் பண்ணுவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலும் வேலை கிடையாது. எனவே இந்தி படித்தாலாவது வெளி மாநிலங்களுக்கு வேலைக்குப் போக லாம் என்று சொன்னால் இந்தி படிக்கக்கூடாது என்று சொல் கின்றார்கள். அண்ணா தி.மு.க. காரர்களோ, தி. மு. க. காரர்களோ வேண்டுமானால் இந்தி படிக்க வேண்டாம். ஆனால் படிக்கவேண்டுமென்று விருப்பப்படுகிற காங்கிரஸ்காரர்கள் படித்து முன்னேறக் கூடாதா? தமிழ்நாட்டில் வேலை கிடை யாது. இந்தி படித்தால் வெளி மாநிலங்களுக்கு வேலைக்குப் போகலாம். எனவே தயவு செய்து இந்தி படிக்கக்கூடிய ஏற்பாடு களையெல்லாம் நீங்கள் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக விலைவாசி. விலைவாசி நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே போகிறது. அதற்கு கணக்கே கிடையாது. ஏன் இந்த உயர்வு ஏற்படுகிறது என்று சொன்னால், உதாரண மாக, விவசாயிக்கு நெல்மூட்டை ஒன்றுக்கு அதிகபட்சமாக இன் றைக்கு 130 ரூபாய் வரை கிடைக்கும். அதை அரிசியாக ஆக்கினால் மூட்டை ஒன்றுக்கு 230 ரூபாயாக ஆக்க முடியும். அதற்கு வேண்டிய வண்டிகூலி, லாபம் வைத்துக்கொண்டால் 280 ரூபாய் ஆகும். ஆனால் மூட்டை என்ன விலை விற்கிறது என்றால் 350 ரூபாய் விற்கிறது. இதனால் 100 ரூபாய் ஒரு மூட்டைக்கு லாபம் வருகிறது. அதேமாதிரி துணி விலையை எடுத்துக்கொண்டால் ஆலையில் ஒரு மீட்டர் ஆர்டினரி பாலிஸ் டர் துணி விலை 20 ரூபாய் அளவிற்கு விற்கிறது. ஆனால் மார்க்கெட்டிலே அது 40 ரூபாய் விற்கப்படுகிறது. இதனால் ஒரு மீட்டர் துணிக்கு 20 ரூபாய் லாபம் அதிகம் கிடைக்கிறது. எனவே வியாபாரிகள் கொள்ளை அடிக்கிறார்கள். இதை இந்த அரசாங்கம் கவனிக்கவில்லை. எனவே விலைவாசியைக் குறைக்க வேண்டும் என்றால் உண்மையான ஒரு நிலைமையை உண்டாக்க வேண்டுமென்றால், இந்த கொள்முதல், விநியோகம் ஆகிய இரண்டும் அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை என்று நீங்கள் சொல்வீர் கள். இருந்தாலுங்கூட தமிழக அரசு ஒரு முன்மாதிரியாக இந்தக் கொள்முதலையும், விநியோகத்தையும் எடுத்துக்கொண் டால் இந்த விலைவாசியை குறைக்க முடியும். இல்லாவிட் டால் குறைக்க முடியாது. ஆனால் உண்மையிலேயே செய்ய வேண்டுமென்றால் இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு ஆதாரமாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் இருக்கிறது. அந்த கார்ப்பரேஷனை பலப்படுத்துவதன் மூலமாக இந்த

வேலைகளைச் செய்ய முடியும். ஆனால் அங்கேயுள்ள கடைகளையெல்லாம் இப்போது மூடிவிட முடிவு செய்துள்ளார்கள். ஆட்குறைப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே நம்முடைய அரசு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக கொள் முதல் மற்றும் விநியோகம் ஆகிய இரண்டையும் எடுத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நீர்ப்பாசனம். நீர்ப்பாசனத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலே பெரிய திட்டங்கள் ஒன்றும் கிடையாது. என்றாலும்கூட கேரள மாநிலத்திலே மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் நதிகளிலே தண்ணீர் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அவைகள் யாருக்கும் பயன்படாமல் இருக்கின்றன. எனவே நம்முடைய அரசாங்கமே கேரள மாநிலத்தோடு பேசி, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகி செல்கின்ற தண்ணீரையெல்லாம் இங்கே திருப்பி விடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். இதற்கான திட்டமே கிடையாது. சென்றமுறையே நாங்கள் இதுபற்றி பேசியிருந்தோம். தமிழ் நாட்டிலுள்ள ஆறுகளையெல்லாம் நாம் பயன்படுத்தி விட்டோம்.

எனவே, மேற்கொண்டு நீர்ப்பாசன வசதி செய்ய வேண்டும் என்று சொன்னால் கேரள அரசோடு பேசவேண்டும் என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். கோவில்பட்டி, சங்கரன்கோவில் பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்யவேண்டும் என்றால் கிரியாறு திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். அந்த திட்டம் நல்ல திட்டம். நான் சொல்லும் போது அவர் சொன்னார் கேரள அரசோடு சேர்ந்து தான் செய்ய வேண்டும் என்று சொல்லிவிட்டார். எனவே அந்த கிரியாறு திட்டம்பற்றி கேரள அரசோடு பேசி தண்ணீரை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் பல கிராமங்களுக்கு இல்லாமல் இருக்கிறது. அந்த ஊரும் இருக்க முடியாது. கோவில்பட்டி பகுதியில் தண்ணீர் இல்லை. மழை கிடையாது. தோண்டினால் அங்கு தண்ணீர் வருவது இல்லை. அப்படி தண்ணீர் வந்தாலும் அது உப்பு தண்ணீராக மாறி விடுகிறது. எனவே, குடிநீர் பிரச்சினை பலமாக இருக்கிறது. செவலப்பேரியில் இருக்கக்கூடிய தண்ணீரை குழாய்மூலம் கொண்டு வந்து கோவில்பட்டி தொகுதியில் உள்ள கிராமங்களுக்கு கொடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் பிரச்சினை அதிகமாக வரும். இன்றைக்கு அரசு சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களுக்குத் தான் குடிநீர் கொடுக்கிறது. அதை வேண்டாம் என்று சொல்லவில்லை. அதேபோல கிராமங்களுக்கும் செவலப்பேரி தண்ணீரை குழாய்மூலம் கொண்டு வந்து மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



கோவில்பட்டி பகுதியில் சரியான மழை இல்லை. வறட்சி பகுதியாக இருக்கிறது. எனவே, அந்த வறட்சிப் பகுதியில் உள்ள மக்களுக்கு வரி வஜா செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வறட்சி நிவாரணப் பணியையும் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக வறட்சிப் பகுதி மக்களுக்கு எல்லாம் நல்ல ஒரு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அவர்கள் இந்த ஆடு, மாடு, கோழி பண்ணைகளை அங்கே ஆரம்பிக்க வேண்டும். இன்றைக்கு பொதுவாக அங்கே திட்டம் இருக்கிறது. ஏதோ ஒரு 10 பேருக்கு கொடுக்கிறார்கள். அது பொதுவான திட்டமாக இருக்கலாம். கோவில்பட்டி வறட்சிப் பகுதியாக இருப்பதால் அதற்கு என்று தனியாக திட்டம் போட்டு அங்குள்ள எல்லா மக்களுக்கும் இந்த ஆடு, மாடு, கோழிப் பண்ணைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், இதற்காக தனியாக ஒரு திட்டம் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த ஆடு, மாடு, கோழிகளுக்கான சப்சிடி குறைக்கப்பட்டு இருக்கிறது. அதையும் நீக்கிவிட்டு சப்சிடியை அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக தமிழ்நாட்டிலே பருத்தி விளைகிறது. பருத்தி குறைவாக விளையும் போது விலை அதிகமாக இருக்கிறது. பருத்தி அதிகமாக விளையும் போது விலை குறைவாக இருக்கிறது. இது Demand and supply theory. ஆனால், விவசாயிகள் பருத்தியை உற்பத்தி செய்யும் போது அதற்கு காஸ்ட் ஆப் புரடெக்ஷன் அதிகமாக இருக்கிறது. எனவே, அவர்களுக்கு இந்த விலை கட்டுப்படியாகவில்லை. எனவே, மகாராஷ்டிரா, குஜராத் போன்ற மாநிலங்களில் செய்வது போல் தமிழ்நாட்டிலும் தனியாக ஒரு தமிழ்நாடு காட்டன் கார்ப்பரேஷன் ஆரம்பித்து இந்தப் பருத்தியை விளைவிக்கும் விவசாயிகளுக்கு அதிக விலை கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்போது மக்கள் தொகை பெருகி வருகின்ற அளவுக்கு வீட்டு வசதி போதாது. அரசு இன்றைக்கு 30 இலட்சம் வீடுகள் கட்டுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், ஏற்கனவே கிராமங்களில் உள்ள கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்கள் எல்லாவற்றையும் மூடிவிட்டார்கள். கடந்த 2 ஆண்டுக் காலமாக அந்தச் சங்கங்கள் மூலம் கடன் கொடுப்பது இல்லை. ஏற்கனவே அட்வான்ஸ் வாங்கியிருக்கிறார்கள். இப்போது அதையும் கொடுக்க மறுக்கிறார்கள். எனவே, இந்த வீடு கட்டும் சங்கங்களைப் பொறுத்த வரையில் நல்ல ஒரு திட்டம் போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். யாருக்கு வீடு கிடைக்கவில்லை என்பதைப் பார்த்து—சில பேர் 2, 3 வீடுகளை வாங்கிவிடுகிறார்கள்—அவர்களுக்கு

வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே மாதிரி தொழிலாளர்களுக்கும், விவசாய மக்களுக்கும் பொதுவாக இந்த லோனைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு சலுகைகள் ஒன்றும் இல்லை. தமிழ்நாட்டில் அதிகமாக இருப்பவர்கள் விவசாயிகள் தான். அதைப் பற்றி நிதியமைச்சர் அவர்கள் மறந்து விட்டார்கள். அவர் சாப்பிடுகிற அந்த அரிசியைத் தருகிற விவசாயிகளை மறந்து விட்டார். எனவே, விவசாயிகளுக்குச் சரியான சலுகைகள் இதில் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். எல்லா விவசாயிகளும் ஏறத்தாழ நிறைய கடன், கூட்டுறவு வங்கிகள் மூலம் வாங்கியிருக்கிறார்கள். இப்போது ஜப்தி செய்கிறார்கள். அதை 10 ஆண்டுகளாக வசூல் செய்யவில்லை.

(முற்பகல் 10–50)

அரசாங்கம் செய்வது தவறு. திடீரென்று இப்போது வசூல் செய்தால், ஏக வட்டி, ஏகப்பட்ட பணம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அவர்களால், கொடுக்க முடியவில்லை. ஆகவே, ஒன்றைச் சொல்லப் பிரியப்படுகிறேன். மொத்தமாக வட்டியைத் தள்ளுபடி செய்துவிட்டு, அசலைத் தவணை முறையில் கொடுக்கும்படி சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, ஜப்தி பண்ண வேண்டுமென்றால், காரியம் ஆகாது.

அடுத்து முக்கியமாக தொழில் வளர்ச்சி தமிழ்நாட்டில் மிகவும் குன்றிவிட்டது. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் 8.1 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாகப் புள்ளிவிவரம் கூறியிருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரம் எங்கிருந்து வந்தது? உண்மையில் 8.1 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டிருக்குமானால், தமிழகம் இன்றைக்கு சிறந்து விளங்கியிருக்கும். ஆனால், தொழில் வளர்ச்சியே கிடையாது. ஆகவே, தொழில் வளர்ச்சியைப் பெருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்து நில ஆர்ஜிதம் செய்வதில் டிலே. அங்கு தண்ணீர் கிடையாது, மின்சாரம் கிடையாது. அதிலும் டிலே. தொழில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உதவிகள் பண்ணுவதற்குப் பதிலாக என்னென்ன சிக்கல்களை உண்டுபண்ண முடியுமோ அதைச் செய்கிறார்கள். இல்லையென்றால் நிறைய பணம் கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. அரசின் உதவிகள் ஆக்கப் பூர்வமாக இருந்தால், தொழில் வளரும். ஆனால், வந்தவுடனே அது கிடையாது, இது கிடையாது என்று சொன்னால் தொழில்கள் வளராது. ஆகவே, தமிழ்நாட்டைப் பொறுத்த





வரையில், No encouragement. Tamil Nadu Government should encourage all enterprenears in all matters. Then only they will start the Industrie..

அடுத்தபடியாக கோவில்பட்டியைப் பின்தங்கிய பகுதியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது அது முன்னேறிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் அங்கு இண்டஸ்ட்ரீஸ் வரவில்லை. இதைக் கருத்தில் கொண்டு கோவில்பட்டியை பின் தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ்—பொதுத் துறை நிறுவனங்கள்—சரியாக இயங்கவில்லை. அமைச்சர் அவர்கள் சௌண்டாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நன்றாக இயங்கி இலாபம் ஈட்டித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், உண்மையில் இலாபம் ஈட்டவில்லை. நாம் தொழிலில் போட்ட மூலதனம் எவ்வளவு? அதற்கு என்ன, Return வருகிறது, அது எப்படி இயங்குகிறது? என்று பார்த்தால் நஷ்டமாகத்தான் இருக்கிறது. இலாபம் ஒன்றுமே இல்லை. உண்மையிலேயே நாம் போட்ட முதலுக்கு, ஆதாயம் வருமேயானால், நமக்கு வரி விதிக்க வேண்டிய அவசியமே கிடையாது. ஆனால், எல்லாமே நஷ்டத்தில் தான் ஓடுகின்றன.

சிமெண்ட், சர்க்கரை, பஞ்சாலைத் தொழில்கள் தனியாரிடத்தில் இயங்குபவை இலாபத்தோடு தான் இயங்குகின்றன. ஆனால், அரசுத் துறையின் மூலம் இயங்குபவை நஷ்டத்தில்தான் இயங்கி வருகின்றன. பொதுத்துறையில் இயங்குகின்ற நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கவில்லை.

கடைசியாக எம்.எல்.ஏக்கள் கடிதம் எழுதினால் அவர்களுக்கு அரசு பதில் தருவதே கிடையாது. மத்திய அரசாங்கம் எம்.பி.க்கள் கடிதம் எழுதினால் அவர்களுக்குப் பதில் போடுகிறார்கள். உங்களுடைய கடிதம் கிடைத்தது என்று பதில் போடுகிறார்கள். ஆனால், தமிழக அரசைப் பொறுத்தவரையில் எம்.எல்.ஏ.க்களுக்குப் பதிலே போடுவது கிடையாது. ஏதாவது பேசவேண்டுமானால் அசெம்பிளியில் பேசலாம். ஆனால், பதில் ஒன்றுமே வராது. சும்மா பேசிவிட்டு போவது தான். ஆக அசெம்பிளியில் பேசினால், அதற்கும் பதில் போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்று சொல்லப் பிரியப்படுகிறேன். உணவு உற்பத்தியில் 1 கோடி மெட்ரிக் டன் என்பது டார்கெட். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கோடி என்று டார்கெட் போட்டார்கள். அந்த இலக்கை எய்த முடிந்ததா என்றால் இல்லை. ஏன் வரவில்லை என்று சொன்னால், அங்கு நீர்ப்பாசனம் கிடையாது. ஒரு கிராமத்திற்கும் கண்மாய் ஸ்கீம் கிடையாது. நிறைய கிராமங்களில் நாம் கண்மாய் ஸ்கீம் மூலம் நிச்சயமாக அங்கு நிலங்களுக்குத் தண்ணீர் விடமுடியும். கண்மாய் ஸ்கீமை அமல்படுத்தினால் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்கிறேன். ஒரு கிராமத்துக்கு ஒரு கண்மாய் வேண்டும் அதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். ஜெய்ஹிந்த்!

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் எண்ணங்களில் உதித்த நல்ல திட்டங்களை நாட்டு மக்களுக்குத் தருகின்ற விதத்திலே நம்முடைய நடமாடும் பல்கலைக் கழகம் நாவலர் அவர்கள் இந்த மன்றத்திலே சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையை நான் பராட்டி என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஏழை எளிய மக்களுக்கு உதவும் வகையிலே பல பொருட்களுக்கு வரி முழுமையாக தள்ளுபடி செய்யப்பட்டதன் மூலமாக ஏழை மக்களின் இல்லங்களிலே ஒளி விளக்கு ஏற்றியிருப்பதால் இந்த நிதிநிலை அறிக்கையானது ஏழைகளின் இல்லங்களிலே உள்ள ஒளி விளக்கு என்று கூற விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கும் பெரிதும் பயன்படும் வகையிலே விவசாயிகளின் உபதொழிலாக இருக்கக்கூடிய கோழிவளர்ப்புக்கு, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு ஆகிய மாவட்டங்களிலே உள்ள கோழி வளர்ப்புத் துறைக்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே அந்தத் தொழில் நலிந்துவிடக் கூடாது என்ற முறையிலே இந்த அரசு அந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருக்கிற அந்தக் குடும்பங்களுக்கு எல்லாம் விதிக்கப்பட்டிருந்த 5 சதவீத வரியை 2 சதவீதமாகக் குறைத்திருக்கிறார்கள். அதற்காக நான் மனமார்ந்த பாராட்டுதல்களையும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நிதியமைச்சர் நாவலர் அவர்களுக்கும் கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு. கே. ஏ. கே. அவர்களுக்கும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்ற நல்ல திட்டங்களைப் போட்டுவிட்டதோடு மட்டுமல்ல, அரசின் கொள்கைகளையும் ஆணித்தரமாக இந்த நிதிநிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போலவே இலங்கை வாழ் தமிழர்கள் பிரச்சினையாக இருந்தாலும்சரி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் திட்டமாக இருந்தாலும்சரி அதைத் தெள்ளத் தெளிவாக இந்த நிதிநிலை அறிக்கையிலே நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தேவை என்பதை வலியுறுத்தியவுடனே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகப் பேசிய உறுப்பினர் ஒருவர் நேற்றைக்குப் பேசியதாக பத்திரிகையிலே ஒரு செய்தி பெரியதாக வந்திருக்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்படுமானால் சர்வாதிகாரி போல் அவர்கள் இயங்குவார்கள் என்ற பொருள்பட பேசியதாக வந்திருக்கிறது. ஒரு காலத்திலே அன்னை இந்திரா காந்தி இந்திய நாட்டின் சமாதானப் புறாவாக உலக அரங்கிலே மிகப் பெரிய வல்லரசுகளை அடக்கியாளக்கூடிய அளவுக்கு இருந்த அன்னை இந்திரா காந்தி அவர்களை ஒரு காலத்திலே சர்வாதிகாரி என்றுதான் சொன்னார்கள். சர்வாதிகாரி என்று சொன்ன



வுடனே அவர்கள் சர்வாதிகாரி ஆகிவிடவில்லை. அதைப்போலவே மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் தருவதால் சர்வாதிகாரியாகிவிட மாட்டோம், அவர்கள் அப்படிச் சொன்னதற்காக நாங்கள் வேதனைப் படவில்லை, வருத்தப்படவில்லை. அம்மையார் அவர்கள் வேறு ஒரு உதாரணத்தை சுட்டிக்காட்டினார்கள். அந்த உதாரணத்தைச் சரியாகப் புரிந்துகொண்டுதான் சொன்னார்களா அல்லது யாருக்கு அந்த உதாரணம் சொல்லப்பட்டது என்று அறியாமல் பேசிவிட்டார்களா என்று தெரியவில்லை. காரணம் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டியது அவருக்கே உரிய அழகு தமிழிலே அந்தத் தமிழ் வார்த்தைகளைப் போட்டு ஒருவர் இன்றைக்கு நாடு முழுவதும் உலா வந்து தன்னை உள்ளாட்சித் துறை அமைச்சர் என்று நினைத்துப் பேசிக் கொண்டிருக்கிறார், அவருக்குப் புரியவேண்டும் என்பதற்காக அவருக்குச் சுட்டிக்காட்டுவதற்காக அரசியல் ரீதியாக எழுதினார்கள். அதைக் கொண்டுபோய் ஒரு பொருளாக வைத்து மாண்புமிகு அம்மையார் அவர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுத்தால் சர்வாதிகாரம் அமைந்துவிடும் என்று சொல்வது வேதனைப்படக்கூடியதாக இருக்கிறது.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சரவையிலே இருக்கிற வேளாண்மைத் துறைக்கு பொறுப்பேற்றிருக்கிற பொறுப்பு வாய்ந்த அமைச்சர் பேசியதைப்பற்றிச் சொன்னேன். ஊராட்சி மன்றங்களிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அந்தத் தலைவர்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருப்பவர்கள். அப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்று அவர்கள் வந்திருக்கிறபோது அத்தனை பஞ்சாயத்துத் தலைவர்களின் குடுமியும் எங்களுடைய கையில் இருக்கிறது என்று சொல்கிற ஒரு வார்த்தை ஒரு சர்வாதிகார எண்ணத்தை தோற்றுவிக்கிற சூழ்நிலை இருக்கிறது, ஆகவே அதைத் தவிர்க்கவேண்டுமென்ற எண்ணத்திலேதான் நான் சொன்னேனே தவிர வேறு அல்ல என்பதை நான் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைப்போலவே இன்னொரு கருத்தையும் சொல்லவிரும்புகிறேன். அமைச்சரைப்போலவே வேறு ஒருவர் இந்த நாட்டில் தான்தான் உள்ளாட்சித்துறை அமைச்சர் என்ற பாவனையோடு டேபிள் இப்படி இருக்க வேண்டும், கருத்து இப்படி இருக்க வேண்டும், அந்தப் படம் அப்படி இருக்க வேண்டும், தேர்தல் எப்படி நடத்த வேண்டும் என்பதைப்பற்றியெல்லாம் சொல்கிறார். அது ஏன் அம்மையாருக்குப் புரியவில்லை என்று தெரியவில்லை என்றுதான் குறிப்பிட்டேனே தவிர வேறு அல்ல. என்ன காரணமோ அம்மையாருக்கு திடீரென்று ஆவேசம் வந்திருக்கிறது, புரியவில்லை. பரவாயில்லை.........

திருமதி டி. யசோதா : துணைத் தலைவர் அவர்களே, ...........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு வார்த்தைக்கும் குறுக்கீடு செய்து பதில் சொல்லிக்கொண்டிருக்க முடியாது.

திருமதி டி. யசோதா : என்னைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்........

(முற்பகல் 11-00).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முதலில் நீங்கள் அனுமதி கேட்டபொழுது நான் அனுமதித்தேன். ஆனால் இப்பொழுது வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்ல வேண்டுமென்றால் அதை அனுமதிக்க முடியாது.

திருமதி டி. யசோதா : அம்மையாருக்கு ஆவேசம் வந்து விட்டது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். எனக்கு ஆவேசம் வரவில்லை என்று நான் சொல்ல வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படியெல்லாம் பார்த்தால், ஒரு உறுப்பினர் கோபமாகப் பேசினார் என்று மற்றொரு உறுப்பினர் சொன்னால், சம்பந்தப்பட்டவர் எழுந்து இல்லை இல்லை, நான் சந்தோஷமாகத்தான் பேசினேன் என்று சொல்வது என்றால் சபை நடவடிக்கைகளை நடத்த முடியாது.

திருமதி டி. யசோதா : என்னை மென்ஷன் பண்ணாமல் பேசட்டுமே.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் அப்பொழுது ஆவேசமாகப் பேசவில்லை ; இப்பொழுதுதான் ஆவேசமாக இருக்கிறார்கள். (சிரிப்பு).

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏழைகள் உபயோகப்படுத்தக்கூடிய பொருள்களாக இருக்கின்ற பல பொருள்களுக்கு வரி குறைப்பை இந்த நிதிநிலை அறிக்கையின் மூலமாக மாநில அரசு செய்திருக்கிறது. இதைப் பாராட்டுகின்ற விதத்தில் மனம் இல்லாமல், துத்தநாகம் பூசிய இரும்பு வாளிதானே, நாட்டுச் சர்க்கரைதானே என்று கேலி பேசும் விதத்தில் இந்த மன்றத்தில் உறுப்பினர்கள் பேசினார்கள். ஆனால் அவர்களுக்கு ஒன்றும் தெரியாமல் இல்லை. ஆனாலும், இளையவன் என்ற முறையில் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்ற உணர்வோடு சொல்கிறேன். ன்றைக்கு ஏழைகளும், ஆதிதிராவிட மக்களும் இருக்கின்ற



ஆயிரக்கணக்கான குடும்பங்களில், இரும்பு வாளிகளைத்தான் பயன்படுத்துக்கின்றார்கள். இன்னும் சொல்லப்போனால், காலையிலே எழுந்தவுடன் கழனிக்குச் சென்று உழைப்பதற்கு முன்னால் காப்பி போட்டுக் குடிப்பதற்கு வெல்லத்தையும், நாட்டுச் சர்க்கரையும்தான் பயன்படுத்துகின்றார்கள். அப்படி வெல்லம், நாட்டுச் சர்க்கரையைத்தான் ஏழை மக்கள், ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்துகின்றார்கள். அவர்கள் காப்பிக்குப் பயன்படுத்துவதற்கு இவைகள்தான் பெரிதும் பயன்படுகின்றன. அப்படிப்பட்ட நாட்டுச் சர்க்கரைக்கு வரியைக் குறைத்திருப்பதைக் கேலி பேசியவர்களை அந்த ஆதிதிராவிட மக்களும், ஏழைகளும் மன்னிப்பார்களாக. நான் அதற்கு மேலே போனால் அவர்களுக்குக் கோபம் வரும். வேறு என்ன செய்ய முடியும்?

இன்னும்கூடச் சொன்னார்கள். வேறு சில பொருள்களுக்கு வரியைக் குறைத்தால், மற்றப் பொருட்களுக்கு வரியைக் குறைக்கக்கூடாதா என்று சொல்கிறார்கள். எந்தெந்தப் பொருட்களுக்கு வரி போடும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வைத்திருக்கிறீர்கள் ? எந்தெந்தப் பொருட்களுக்கு வரியைக் குறைக்கின்ற அதிகாரத்தை மாநில அரசுக்கு வைத்திருக்கிறீர்கள் ? மாநில அரசுக்கு வரியைக் குறைக்கின்ற அதிகாரம் உள்ள பொருட்களுக்கு வரியைக் குறைப்பதற்கு நாங்கள் முயற்சிக்கிறோம். ஆனால், டீசல், பெட்ரோல் அல்லது ஸ்டீல் போன்றவற்றிற்கு வரியைக் குறைக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்குத் தரப்பட்டிருக்கிறதா ? அல்லது எக்சைஸ் டூட்டியினை எடுக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்குத் தரப்பட்டிருக்கிறதா ?

இங்கே பேசும்பொழுது குறிப்பிட்டார்கள், எதற்கெடுத்தாலும், மைய அரசைக் காட்டுகிறீர்களே என்று சொல்கிறார்கள். இப்படி அவர்கள் கேட்பது நியாயம்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மைய அரசிடமிருந்து நாட்டின் ஆதாரங்களைக் கேட்டுப் பெற்று மாநிலத்திற்குத் தேவையான திட்டங்களைத் தருவது மாநில அரசின் நோக்கமாக, மாநில அரசின் இலட்சியமாக, கொள்கையாக இருக்க முடியும். மைய அரசைக் கேட்கிறீர்களே, மைய அரசைக் கேட்கிறீர்களே என்று சொன்னால், நாங்கள், இந்த நாட்டின் நிதியாதாரங்களை வைத்திருக்கின்ற மைய அரசைக் கேட்காமல், அமெரிக்காவையா கேட்க முடியும் அல்லது ரஷ்யாவில் உள்ள கார்ப்பசேவ் அவர்களையா கேட்க முடியும் ? நான் சொல்வதைக் கேட்டு வருத்தப்படக்கூடாது ? மைய அரசைக் கேட்டுப் பெறும் விதத்தில் பெற்று நாட்டு முன்னேற்றத்திற்காக திட்டங்களைத் தீட்டுவதுதான் மாநில அரசுகளின் கடமை. அதை இந்த அரசு ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கிறது. இது குறித்து மைய அரசே பல முறை பாராட்டியிருக்கிறது ; மைய அரசின் சார்பில் இருக்கின்ற அமைச்சர்களும், உறுப்பினர்களும் பாராட்டி இருக்கின்றார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே, எவ்வளவுதான் நல்ல திட்டமாக இருந்தாலும், எவ்வளவுதான் நல்லதாக இருந்தாலும், அவைகளைத் திரித்திப் பேசி, அதைக் கெட்டதாக வருணிக்கத் தெரிந்த ஒருவரால் கூட, இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி அதிகமாக சுட்டிக்காட்டிப் பேச முடியவில்லை; குற்றம் காண முடியவில்லை. பரவாயில்லை. ஆனால், இந்த அரசு செயலற்ற அரசு என்று அவரும் சொல்கிறார்; அவரைச் சார்ந்த ஒருசில தலைவர்களும் நாடெங்கும் ஊர்ஊராகப்போய் இதைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். செயலற்ற அரசு என்றால் என்ன பொருள்? அல்லது செயல் உள்ள அரசு என்பதற்குத்தான் அவர்கள் இலக்கணம் தருகிறார்களா? இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழக அரசு இருபது அம்சத் திட்டத்தைத் தலைசிறந்த முறையிலே, சிறப்பான முறையிலே அமல்படுத்திய மாநிலம் என்று மைய அரசிலே இருப்பவர்கள் பாராட்டுகிறார்கள். அப்படியென்றால் இது செயல் உள்ள அரசு அல்லவா?

அதைப்போலவே, இந்தியத் துணைக் கண்டத்திலே, குடும்பநலத் திட்டதை சிறப்பான முறையிலே நல்ல முறையிலே செயாற்றிக் கொண்டிருக்கிறது தமிழ் மாநிலம் என்று சொல்கிறார்கள். தமிழ்நாடு மாநிலம்தான், தமிழ்நாடு சர்க்கார்தான், புரட்சித் தலைவர் அரசு தான் என்று மைய அரசு பாராட்டி, கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் பரிசுகள் வழங்கி இருக்கிறதே, இது செயல் உள்ள அரசு அல்லவா? அல்லது, இந்திய துணைக் கண்டத்திற்கே வழி காட்டுகிற விதத்தில் ஏழைக் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கி, அந்த ஏழைக் குழந்தைகளுக்குச் சீருடையும் வழங்கி, அதிலே ஒரு சமத்துவத்தை உருவாக்க முடியும், நாட்டிலே, புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்று இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழி காட்டிக் கொண்டிருக்கிறதே, தமிழ்நாடு அரசாங்கம், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அரசாங்கம், அது செயல் உள்ள அரசு அல்லவா? அல்லது செயல் உள்ள அரசு எப்படி இருக்க வேண்டும்?

இன்னும் கேட்கிறேன். இன்றைக்கு ஊருக்கு, ஊர் போய் கிராமங்கள் எங்களுடையது, ஒன்றியங்கள் எங்களுடையது, நகரங்கள் எங்களுடையது, இன்னும் சொல்லப் போனால், நாடே எங்களுடையது, கோட்டை மட்டும் தான் உங்களுடையது என்று பொய் மாளிகை கட்டி, கனவுகள் கண்டு, சந்தோஷக் கடலிலே உலவி வருகிறார்களே, அதற்கு அடித்தளமாக அமைந்திருக்கிற பஞ்சாயத்துத் தேர்தலை,—இவ்வளவு பெரிய பஞ்சாயத்துத் தேர்தலை—நடத்தியிருக்கிற அரசைப் பார்த்தா செயலற்ற அரசு என்று சொல்கிறீர்கள்? பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தவில்லையா அரசாங்கம், இவ்வளவு பெரிய பஞ்சாயத்துத் தேர்



தலை நடத்தியுள்ள அரசைப் பார்த்தா செயலற்ற அரசு என்று சொல்கிறீர்கள்? அப்படியென்றால் செயலுள்ள அரசு எப்படி இருக்க வேண்டுமென்று சொல்லுங்கள். ஒருவேளை, உங்கள் ஆட்சியிலே விவசாயிகள் போராட்டம் நடைபெற்றபொழுது, கோயம்புத்தூரிலே ஒரு மாணவன் சுடப்பட்டு,—நண்பர் சுப்பராயன் போன்றவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்—மாமன்ற உறுப்பினர்கள் பேசும்போழுது பழைய கதைகளைப் புரிந்து கொண்டால், யாரை, எந்த நேரத்தில், எப்படிப் பேசுகிறோம் என்ற உணர்வோடு இங்கே சொல்ல முடியும்—அப்பொழுது, திரு. எம். கல்யாணசுந்தரம், லாரியிலே மாணவர்களை ஏற்றி வைத்துக் கொண்டு ஊர்வலம் வந்தார்களே, இலட்சக்கணக்கானவர்கள் ஊர்வலமாக வந்தார்களே அந்தப் போராட்டத்தை மாநில போலீசார் தடுக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்ட உடன், வெலிங்டனிலே உள்ள இராணுவத்தினரை மேட்டுப்பாளையம் வரை இறக்கி, இராணுவத்தைப் பயன்படுத்த நினைத்தார்களே, அது தான் செயலுள்ள அரசாங்கமா? அல்லது ஒரு அமைச்சர் தன்னுடைய சொந்த வாழ்க்கையிலே மாணவர்கள் நுழைகிறார்கள், அல்லது மாணவர்கள் இடைஞ்சலாக இருக்கிறார்கள் என்பதற்காக திருச்சி கிளைவ் ஆஸ்டலிலே போலீசார் நுழைந்து, அங்கிருந்த மாணவர்களைப் பட்டப் பகலிலே அடித்து நொறுக்கினார்களே அது தான் செயல் உள்ள அரசு செயலா? அப்படித்தான் செயலாற்ற வேண்டுமென்றால், அது இந்த நாட்டுக்குத் தேவையில்லை, அந்தக் கொள்கை அ.தி.மு.க. அரசாங்கத்திற்கு வேண்டியதில்லை. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசைப் பொறுத்தவரையில் இது போன்ற செயல் திட்டங்களுக்குத் தயாராக இல்லை. நல்ல திட்டங்களைப் போட்டு, நாட்டு மக்களுக்கு நல்வாழ்வைக் கொண்டு வருவதற்குத்தான் இவர் முயன்று கொண்டிருக்கிறார். உங்களிடம் போய் செயலற்ற அரசுக்கு இலக்கணம் தாருங்கள் என்று கேட்பது எப்படி இருக்கிறது என்றால், பெற்ற பிள்ளையைக் கொன்று போடுகிற ஒரு பெண்ணிடம் போய், பிள்ளை பாசத்திற்கு இலக்கணம் தா என்று சொன்னால் எப்படி அவளால் தர முடியாதோ. தந்தால் எப்படி இருக்குமோ அப்படித்தான் இருக்கும் என்று நான் அவர்களுக்குச் சுட்டிக் காட்டுகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், தேர்தலைப் பற்றி சொல்லும் போது ஒன்று சொன்னார்கள். ஊராட்சித் தேர்தலுக்குப் பின்னாலே, அமைச்சர்களும் ஆளுங் கட்சியினரும் விரக்தியிலே பேசுகிறார்கள்; நாங்கள் எல்லாம் வெற்றி நேரத்திலும் சரி, தோல்வி நேரத்திலும் சரி ஒரே நிலையில்தான் இருந்தோம் என்றெல்லாம் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒரு உதாரணத்தைச் சொல்கிறேன், அவர்கள் வருத்தப்படக் கூடாது. ஒருவன் நாளெல்லாம் உழைத்துச் சம்பாதிக்கிற பணம் கொஞ்சமாக இருந்தாலும் கூட, அந்தப் பணம் குறைந்து போனாலோ, அல்லது அந்தப் பணம் களவு போனாலோ, வருத்தப்படுவான், எப்படிக் குறைந்தது, எப்படிக் காணாமல் போனது என்று சிந்திப்பான். ஆனால், பிக்பாக்கெட் அடிப்பவன் சிந்திக்க மாட்டான், எப்படியோ வந்த

பணம், எப்படி போனால் என்ன என்று அவனுக்கு அதைப்பற்றிக் கவலை கிடையாது, அவன் நிச்சயமாக சிந்திக்க மாட்டான். ஆனால், நாங்கள் எல்லாம் உழைத்து, நாட்டு மக்களுக்கு நல்ல திட்டங்களைக் கொடுத்து, நாட்டு மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்றிருக்கிற காரணத்தாலே, புரட்சித் தலைவர் ஆட்சி அதைப் பற்றி சிந்திப்பதிலே தவறு கிடையாது. அதைத்தான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அதைப் போலத்தான் இன்னொன்றைச் சொன்னார்கள். உள்ளாட்சித் தேர்தலுக்குப் பிறகு தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். ஊரெல்லாம் போய் வெற்றிக் களிப்பிலே—வேறு வார்த்தை சொன்னால் கோபம் வரும் அவர்களுக்கு—அலங்கார விளக்குகளைப் போட்டு ஏறி அமர்ந்து கொண்டு சொல்கிறார்கள். யார் பாடிய பாடலை, யார், யாருக்கு நினைவூட்டுவது என்ற விவஸ்தையே இல்லாமல், யாரோ நாடாளுமன்றத்திலே பேசினார்கள் என்பதை வைத்துக் கொண்டு, அந்தத் தகவலை வைத்து, ஊருக்கு ஊர் போய், தூங்காதே தம்பி என்ற பாடலை ஞாபகம் ஊட்டுகிறார்கள்.

(முற்பகல் 11-10)

இன்றைக்கு இந்த நிலை ஏன் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? இன்றைக்கு அவர் பேசிய பேச்சுக்கள், ஏசிய ஏச்சுக்கள், செய்த கேலிகள், வக்கணைகளை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொள்ளப் போகிறாரா? அதற்கு எல்லாம் மன்னிப்புக் கேட்கப் போகிறாரா? அல்லது மக்கள் மத்தியிலே மரியாதை இல்லாமல் சொல்லிவிட்டேன் ஒரு மாபெரும் தலைவரைப்பற்றி என்று சொல்வாரா?

அது மட்டுமல்ல, அன்றைக்கு வாங்காத கப்பலுக்கு கமிஷன் வாங்கினார் என்று ஊரெல்லாம் நாடெல்லாம் தம்பட்டம் அடித்தார்கள். பேசினார்கள். அதன் பின்னால் நிலைமை என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டாமா? அன்றைக்கு தொடங்கி இன்றைக்கு வரையில் அதே பாணியில் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இங்கே பேசிய உறுப்பினர்கூட இறுதியில் சொல்லும் போது கதை என்று சோன்னார்கள். அந்தக் கதையை தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நான் இவர்களைப் பார்த்து ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். சரித்திரச் சான்று என்று சொல்லி தன்னுடைய இலக்கிய அறிவைக் காட்டினார்கள். கவச குண்டலத்தோடு பிறந்தான் கர்ணன். வில்லோடு பிறந்தாள் சீதை. வெற்றியோடு பிறந்தார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். இன்றைக்கு நிலைமை மாறியிருக்கிறது என்றால் அதிலே என்ன தவறு? உலகத்திலேயே இலக்கியத்தைப் பார்க்கும்போது கவச குண்டலத்தோடு பிறந்தவன் கர்ணன் ஒருவன் மட்டும்தான். அதைப்போன்று இலக்கியத்திலே சொல்லப்படுவது வில்லோடு பிறந்தவள் சீதை மட்டும்தான். அதைப்போன்று வெற்றியோடு பிறந்தவர் புரட்சித் தலைவர் மட்டும்தான். அதைக் சொல்வதிலே என்ன தவறு ?



இப்படியே இன்னும் பல்வேறு உதாரணங்களைச் சொல்ல முடியும். நான் உதாரணங்களைச் சொல்லும்போது அவர்கள் வருத்தப்படக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கலியுகத்தில் பார்க்கும்போது சிலர் கன்னக்கோலோடு பிறக்கிறார்கள் என்று நான் சொல்லும்போது யாரும் வேதனைப் படக் கூடாது. கர்ணன் கவச குண்டலத்தோடு பிறந்தான். சீதை வில்லோடு பிறந்தாள். புரட்சித் தலைவர் வெற்றியோடு பிறந்தார். சிலர் கன்னக்கோலோடு பிறந்திருக்கிறார்கள் என்பதை பணிவோடு சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மற்றவர்கள் உதாரணம் காட்டும்போது இந்த எளியவனாலும் பல உதாரணங்களைக் காட்ட முடியும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

இப்படி அடுக்கடுக்காகச் சொல்வது அவர்களுடைய வாடிக்கையாகி விட்டது. இன்றைக்குக் கூட ஏதோ மார்க் பட்டியல் என்று சொன்னார்கள். அதற்கு நாவலர் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி பற்றி ரிமார்க் சொல்ல வேண்டும் என்பதற்காக மார்க்கை எடுத்துக் கொண்டார்கள். அது பத்திரிகையில் பெரிய அளவில் வெளி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்னைகளை அவையில் எழுப்புவதற்கு முன்பாகவே பத்திரிகையாளர்களுக்குச் சொல்லி வைத்து விட்டு இங்கே வருகிறார்கள். இந்தப் பிரச்சினை இன்றைக்கு வருகிறது, பார்த்துக் கொள்ளுங்கள் என்று பெரிய அளவில் விளம்பரப்படுத்துவதற்காகச் சொல்லிவிட்டு வருகிறார்கள். நான் இப்படி சொல்லும்போது யாரும் வருத்தப்படக் கூடாது, சில உண்மைகளை வெளியே சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் சொல்லுகிறேன்.

மார்க் பற்றி வெளியிட்ட அந்தப் பத்திரிகை இன்றைக்கு நாவலர் வெளியிட்ட அறிக்கையையும் அதே அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுமா? வெளியிட வேண்டும். அதுதான் பத்திரிகை தர்மம். நாம் எல்லாம் பத்திரிகை தர்மத்தைப் பற்றிச் சொல்கிறோம். பத்திரிகைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோம். அதேநேரத்தில் குற்றச்சாட்டு ஒன்றைச் சொல்லும்போது, அதற்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிடுகிறார்களோ அதே அளவுக்கு அந்தக் குற்றச்சாட்டுக்கான விளக்கத்தையும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட வேண்டாமா? அப்படி வெளியிடுவது தானே மரியாதை, நாகரீகம் அப்படி இருந்தால்தானே நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நான் பத்திரிகை விவகாரத்திற்குள் செல்ல விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு பத்திரிகை பற்றிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஒரு பத்திரிகையில் செய்தி வெளியிடப்படுகிறது. அதன் பின்னால் காவல் துறையினர் இன்வெஸ்டிகேஷன் செய்கிறார்கள். அதனால்

சம்பந்தப்பட்டவரை 15 நாள் ரிமான்ட் செய்கிறார்கள் பின்னால் உண்மை தெரியவருகிறது அந்தப் பத்திரிகையில் வந்த செய்தி பொய் என்று. இப்படிப்பட்ட நிலைமை ஏற்படக்கூடாது. இந்த சட்டமன்றத்தில் சொல்லும்போது கூட எதற்காக குறிப்பிடுகிறார்கள் என்று தெரிந்துகொண்டு செய்திகளை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு நிகழ்ச்சி மட்டுமல்ல. இப்படி பல செய்திகளைத் தொகுத்துக்கொண்டு, பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கொண்டு ஒவ்வொரு முறையும் வர்ணனை அரசியல் நடத்துவதே அவர்கள் நோக்கம். அவர்கள் எங்களைப்பற்றி, இந்த ஆட்சியைப்பற்றி ஏதோ உதாரணம் காட்டினார்கள். அதைப்போன்று என்னாலும் பல உதாரணங்களை இந்த அவையில் சொல்ல முடியும். பத்து, இருபது உதாரணங்களை சொல்ல வேண்டும், சொல்ல முடியும் என்றாலும் ஒன்றிரண்டை மட்டும் சொல்லியிருக்கிறேன். கிளைவ் ஆஸ்டல் விவகாரம், வெல்லிங்டன்னிலிருந்து மேட்டுப் பாளையத்திற்கு இராணுவத்தை அழைத்த விவகாரம் போன்ற ஒன்றிரண்டை மட்டும் எடுத்துக்காட்டியிருக்கிறேன். ஒரு காலத்திலே வாங்காத கப்பலிலே ஊழல் என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே வேறுபலவற்றைச் சொன்னார்கள். இன்றைக்கு மார்க் என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் இந்த மன்றத்திலே '' உண்மைக்கு மாறான வக்கணைப் பேச்சே உன் பெயர்தான் தி. மு. க. வா'' என்று கேட்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த நிதிநிலை அறிக்கைமீது சில கருத்துக்களைச் சொல்ல நான் இங்கே நிற்கிறேன்.

நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்ட சூழ்நிலை புரியாமல் நான் பேசவில்லை. மத்திய அரசினுடைய கொள்கைகளுக்கு உள்ளிட்டு, மாநிலங்களுடைய அதிகாரங்களை எல்லாம் கட்டுப்படுத்தி அனைத்து அதிகாரங்களும் தன்னுடைய கையிலே வைத்துக்கொண்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு அரசினுடைய சட்டத்திட்டங்களுக்கும் கட்டுக்கோப்புகளுக்கும் உள்ளிட்டு தயாரிக்கப்பட்டிருக்கிற ஒரு அறிக்கை இது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில் மாநில அரசுக்கு உள்ள அதிகாரங்களையும், மாநில அரசு நடத்தும் நிறுவனங்களையும் அவற்றினுடைய வருவாய்த் துறையினையும் முறையாகப் பயன்படுத்தக்கூடிய முறையில் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறதா என்று பரிசீலனை செய்யவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். உண்மையிலேயே தமிழகத்தின் பொருளாதார நிலைமையைப் பற்றியோ தமிழகத்தினுடைய செலவினங்களைப் பற்றியோ ஆழ்ந்து பரிசீலனை செய்து இருக்கிற பட்ஜெட்டாக இது அமையவில்லை



என்றும் மேலெழுந்தவாரியாகக் கூட இந்த ஆண்டுக்கு எந்தத் திட்டமும் உருவாக்கப்பட முடியாத உதவாக்கரை பட்ஜெட்டாகத்தான் இது அமைந்து இருக்கின்றது என்ற கருத்தையும் இங்கே வலியுறுத்திச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆரம்பித்து வைத்த அண்ணா அவர்களின் ஒரு வாசகத்தை இங்கே இந்த அறிக்கையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் இந்த வாசகத்தைப் பெரிதும் பாராட்டுகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும்; அந்த முறையில் அரசியல் சட்டங்களைத் திருத்தவேண்டும் என்பது அண்ணா அவர்கள் எழுதிய கடைசிக் கடிதத்தினுடைய ஒரு வாசகம். ஆனால், தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக ஆளுகிற கட்சியையும், ஆளுகிற கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களையும் நான் கேட்டுகொள்ள விரும்புவதெல்லாம் அந்தத் துறையிலே நீங்கள் இந்தப் பத்தாண்டுகளில் ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்தது உண்டா என்பதுதான். அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்காக உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்தது உண்டா? அரசியல் சட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வந்து மாநில அரசுகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்ற வகையில் ஏதேனும் முயற்சி இந்த மன்றத்தில் கடைப்பிடிக்கப்பட்டது உண்டா? அதுமட்டுமல்ல. இன்னும் பல நிறுவனங்களில் இந்தக் கருத்துக்களைக் கூற உங்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டபோது நீங்கள் அப்படிச் செய்தது உண்டா?

உதாரணமாக முதலமைச்சர்களுடைய மாநாடு கூடும்போது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று அங்கே கடுமையான சண்டை நடக்கிறபோது, மேற்கு வங்க முதலமைச்சரும், காஷ்மீர் முதலமைச்சரும், ஆந்திரா முதலமைச்சரும், கர்நாடக மாநில முதலமைச்சரும் அதற்காக சண்டை நடத்துகிறபோது என்றைக்காவது உங்களுடைய கட்சியின் சார்பிலே ஒரு குரல் எழுப்பப்பட்டது உண்டா? அதுமட்டுமல்ல. தேசிய வளர்ச்சிக் குழுவிலும, அதுபோல் திட்டக் குழுவிலும் நம்முடைய பிரதிநிதிகள் இடம்பெறும் போது இந்தப் போராட்டங்கள் அங்கே நடந்தது உண்டா? சென்ற ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போது நான் ஒரு பேருண்மையை இங்கே வலியுறுத்திச் சொன்னேன். பைனான்ஸ் கமிஷன், அதாவது 8-வது நிதிக்குழுவில் ஒரு ஆண்டுத் தொகை மாநிலங்களுக்கு மறுக்கப்பட்டு இருக்கிறது. அதை ஏன் நீங்கள் தட்டிக் கேட்கக்கூடாது. நீங்கள் ஏன் இந்த மன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றக் கூடாது என்று நான் கேட்டேன். ஆனால் அமைச்சர் பதிலளிக்கவில்லை, அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவுமில்லை.

[திரு. வி. பி. சிந்தன்] [1986 மார்ச் 20

இன்றைக்கும் மத்திய அரசு, நாடாளுமன்றத்தினுடைய கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே ஏராளமான உத்தரவுகளைப் போட்டு ஏராளமான அளவுக்கு விலையை உயர்த்திய சூழ்நிலையில் நாம் போடுகிற திட்டங்கள் எல்லாம் எவ்வளவு பாதிக்கப்படும் என்பதை அறியாதவர்கள் அல்ல இங்கே அமர்ந்திருக்கக்கூடியவர்கள். அனைவருக்கும் தெரியும். அதற்காக நாடு முழுவதும் கண்டனம் எழுப்பப்படுகிறது. சில மாநிலங்களில் பந்த் நடத்தப்படுகிறது. அனைத்து இந்தியாவிலும் இயக்கங்கள் நடத்தப்படுகின்றன. பல சட்ட மன்றங்களில் அதை எதிர்த்து தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன. ஆனால் நம்முடைய மாநிலத்தில் அதற்காக எந்த ஒரு கோரிக்கையும் எழுப்பப்படவில்லை. அதற்கான கண்டனத்தைக் கூட இந்த சட்டமன்றத்தில் தெரியப்படுத்த வில்லை.

நீதிபதி சர்க்காரியா அவர்களுடைய கமிஷன் மாநிலங் களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பது குறித்து பரி சீலிப்பதற்காக அமைக்கப்பட்டு அக்குழுவிடம் தமிழக அரசு ஒரு அறிக்கை கொடுத்ததாகக் கூறப்பட்டது. ஆனால் அந்த அறிக்கையைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட கொடுக்க வில்லை. மற்ற சில மாநிலங்களில் சட்டமன்றங்களில் விவாதிக்கப்பட்டு மனு கொடுத்திருக்கிறார்கள். அந்த அரசினர் அந்த அறிக்கைகளைப் பிரசுரித்து அதற்கான மக்கள் ஆதரவை யும் திரட்டுகிறார்கள். ஆனால் நம்முடைய அரசு அத்தகைய எந்தக் காரியத்தையும் அமல் நடத்துவதற்குரிய முயற்சியில் ஈடுபடவில்லை. 1969-ஆம் ஆண்டு கடைசியாக அண்ணா அவர்கள் எழுதிய கடிதத்தில் ஒன்று சொல்லி யிருக்கிறார்கள். இன்னும் சொல்லவேண்டும் என்றால் அது அண்ணா அவர்களின் அரசியல் உயில் என்றுகூட நான் சொல்வேன்.

(முற்பகல் 11.20)

அதிலே குறிக்கோளாக எடுத்துக் கூறியது காங்கிரஸை தமிழக ஆட்சியிலே இருந்து, தமிழகத்திலே இருந்து நாங்கள் அகற்றினோம். இன்னும் அந்த நிலையே தொடர்ந்து நீடிக்க வேண்டும். எக்காலத்திலும் காங்கிரஸ் தமிழகத்தின் ஆட்சியிலே பதவியிலே வரக்கூடாது என்பதுதான் அந்த உயிலினுடைய உயிர். ஆனால் அந்த மூலக் கருத்தையே விட்டு விட்ட நீங்கள் அண்ணா கொள்கையைப்பற்றிப் பேசுவது எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இனி என்னுடைய நேரத்தை கணக்கில் எடுத்துக் கொண்டு, நான் பட்ஜெட்டைப் பற்றிப் பேசுகிறேன்.

இந்த பட்ஜெட்டிலே தமிழகத்தினுடைய யதார்த்த நிலையை நீங்கள் பார்க்கவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு. இந்த பட்ஜெட்டிலே தவறான கணக்குகளை நிதியமைச்சர் கொடுத்து இந்த சட்ட மன்றத்திலே ஒரு தவறான எண்ணத்தை உண்டு பண்ண முயற்சிக்கிறார் என்பது என்னுடைய குற்றச்சாட்டு



1986 மார்ச் 20] [திரு. வி. பி. சிந்தன்]

இதிலே '' ஆய்வு ஒன்றின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள பதிவு செய்யப்பட்ட தொழில் துறை, ஆண்டு ஒன்றுக்கு சராசரி 8 1 விழுக்காடு '' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே அரசு பெருமிதம் கொள்வதாகவும் சொல்லியிருக்கிறார்கள். நான் சொல்லவிரும்புவது என்னவென்றால், இந்த பதிவு செய்யப் பட்ட தொழிற்சாலைகளில் எத்தனை தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எங்கேயிருந்து எந்த ஆய்வி லிருந்து நிதியமைச்சர் இந்த எண்ணிக்கையைக் கொடுக் கிறார்கள்.

ஆனால் உண்மையிலே நம்முடைய தொழிற்சாலையினுடைய உற்பத்தித் திறன், பெர்கேப்பிட்டா புரொடக்ஷன், இன்று இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநிலங்களிலேயும் 8வது பகுதி யிலே, அல்லது 10வது பகுதியிலே தான் இருந்து கொண் டிருக்கிறது. நம்முடைய தொழில வளர்ச்சி 10 ஆண்டுக் கால மாக பெரும் அளவுக்கு குறைந்து விட்டது. ஆனால் இங்கே 8.1 விழுக்காடு என்று சொல்லி நாம் ஏதோ உற்பத்தி திறனிலே முன்னேறி இருக்கிறோம் என்ற எண்ணத்தை உண்டு பண்ண முயற்சிக்கின்றார். உண்மையிலேயே அது பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கையாக இருக்கலாமே தவிர. செயல் படுகின்ற தொழிற்சாலைகளின் எண்ணிக்கையாகவோ அல்லது பெர்கேப்பிட்டா புரொடக்ஷனாகவோ இருக்க முடியாது என்பதை இந்த மன்றத்திலே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதிலே பெருமையும் பூரிப்பையும் அடைவதில் எந்த அர்த்தமும் இல்லை என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பத்தாண்டுக் காலமாக நம்முடைய தமிழகத்தின் தொழில் வளர்ச்சியிலே என்னென்ன பாதிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை விளக்கமாக எடுத்துக் கூற எனக்கு நேரம் இல்லை. பல தொழிற்சாலைகளில், பல தொழில் நிறுவனங்களில், அவர் களுடைய மூலதனத்தைப் பற்றி ஏராளமான விவரங்களை என்னால் சொல்ல முடியும்.

சட்டமன்றம் கூடி பட்ஜெட்டை இங்கே நிறைவேற்றிய அன்றைய தினம், தமிழகத்திலே பல்லாயிரக் கணக்கான சிறு தொழில் நடத்துபவர்கள் தமிழகம் பூராவும் ஒரு நாள் வேலை நிறுத்தத்தை நடத்தியதை நான் நம்முடைய மாண்பு மிகு நிதியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால் மத்திய அரசினுடைய கலால் வரியை எதிர்த்து அந்த வேலை நிறுத்தம் நடந்ததாக அவர் சொல்லக் கூடும். ஆனால் அவர்களுடைய கோரிக்கையைப் பார்த்தால், நிலக்கரி கிடைக்கவில்லை. கோக் கிடைக்கவில்லை. அதேபோல் பிக்-ஐயர்ன் கிடைக்கவில்லை, இன்னும் எங்களுக்கு தேவையான மூலப் பொருள்களை கிடைக்கச் செய்வதற்கோ அல்லது எங்களுக்குத் தேவையான பொருளாதார உதவிகளைக் கொடுப்பதற்கோ எந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் தமிழக அரசு எடுக்கவில்லை என்பதுதான் அவர்களுடைய குறைபாடு.

புதிய தொழிற்சாலைகள் ஏதேனும் துவக்குகின்ற திட்டத்தைப் பற்றி குறிப்பிடவாவது நீங்கள் முயற்சி செய்தது உண்டா? நான் நம்முடைய நிதியமைச்சர் கொடுத்த இந்த விளக்க உரையிலே மட்டும் அல்ல, அதையொட்டிக் கொடுத்திருக்கிற நூற்றுக் கணக்கான பக்கங்களையும் புரட்சி புரட்டி பார்த்தேன். உண்மையிலேயே அவர் தவறான கணக்குகளைத்தான் சொல்லியிருக்கிறார் என்று. நான் குறிப்பிட விரும்புகிறேன். புதிய ஆலைகளை உருவாக்குவதற்கு 1,200 கோடி ரூபாய் மூலதனம், கேப்பிடல் இன்வெஸ்ட்மெண்ட் என்று சொல்லப்படுகிறதே அதை ஆராய்ந்து பார்த்தால், அதிலே ஒரு சிறு தொகை/தான் புதிய தொழிற்சாலைகளுக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெருமளவு தொகை பழைய நிறுவனங்களுடைய தீர்க்கப்படாத வேலைகளை நிறைவேற்றுவதற்காகவே தான் பயன்படுத்தப்படுகிறது. புதிய ஆலைகளை ஊக்குவிப்பதற்கான எண்ணம் தமிழக அரசுக்கு இல்லை என்பது என்னுடைய விமர்சனம்.

உதாரணமாக மணலியில் உள்ள பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு ஆக்க பூர்வமான எந்த உதவியும் தமிழக அரசிடமிருந்து கிடைக்கவில்லை என்று அவர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறார்கள். பெட்ரோ கெமிகல்ஸ் தொழிற்சாலையிலே ஒரு புதிய பிரிவிற்கு—நேரம் இல்லை இருப்பினும் இது சம்பந்தமாக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். இப்போதுஇருக்கக் கூடிய பாம்பே ஹை குரூட் ஆயில் உபயோகித்து ஹை நாப்தா கன்டென்ட் உள்ள அந்த பொருளிலிருந்து 3 இலட்சம் அல்லது $3\frac{1}{3}$ இலட்சம் மெட்ரிக் டன் நாப்தா உருவாக்க முடியும் என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதிலேயிருந்து நமக்கு மிகவும் தேவையான P. T. acid என்று சொல்கிற மிகச் சிறந்த அருமையான ஆசிடை உருவாக்குவதற்குள்ள ஒரு திட்டத்தைப் போட்டு, 300 கோடி ரூபாயில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு கடந்த ஆண்டு பூராவும் தமிழக அரசினுடைய அரசுச் செயலாளரையும், தமிழக அரசின் பொறுப்பிலே உள்ள அமைச்சர்களையும் பலதடவைகள் அவர்கள் சந்தித்தும் பலனளிக்காமல், அந்தத் தொழிற்சாலைக்கு உரிமம் வழங்க தமிழக அரசால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இத்தகைய உதாரணங்களை ஏராளமாக நான் சொல்ல முடியும்,. புதிய தொழிற்சாலை அமைய வேண்டும் என்று விரும்பி அரசை அணுகுகிறவர்கள். அமைச்சர்களை, அணுகுகிறவர்கள், அரசுச் செயலாளர்களை அணுகுகிறவர்களிடம் அந்தத் தொழிற்சாலையை உருவாக்குவதற்கான திட்டங்களைப் பற்றிப் பேசுவதற்கு பதிலாக அங்கே * * தான் நடந்து கொண்டிருக்கிறது. இது ஒரு * * மாறியிருக்கிறது என்று நான் சொன்னால் அந்தப் பக்கத்திலே அமர்ந்திருக்கிறவர்கள் கோபித்துக் கொண்டு பிரயோஜனம் இல்லை. தமிழகம் முழுவதிலும் ஒரு காலத்தில், நீங்கள் எந்த திசையை நோக்கி கையைக் காட்டுகிறீர்களோ அந்தத் திசையிலே மக்கள்

** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





போனதுண்டு. இன்றைக்கு அந்த நிலைமை மாறிவிட்டது. விரைவிலே அந்த நிலைமை மாறும் என்று இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கரப்ஷன் என்பது இந்த அரசினுடைய ஒவ்வொரு இலாக்காவிலும், ஒவ்வொரு அலுவலகங்களிலும் ஊறிப்போன ஒரு நிகழ்ச்சியாக மாறியிருக்கிறது. அந்த விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்பெசிபிக்காகச் சொல்ல வேண்டும். ஒட்டுமொத்தமாகச் சொல்லக் கூடாது.

திரு. வி. பி. சிந்தன் : சபாநாயகர் அவர்கள் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கும் நேரம் 10 நிமிடங்கள் தான் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் குறைவாக இருக்கிறது என்பதற்காக எல்லாவற்றையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக டிபேட்டில் சொல்லிவிட முடியாது. சொல்வதைச் சுருக்கி ஸ்பெசிபிக்காகச் சொல்ல வேண்டும். * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, அதிகாரம் படைத்தவர்கள் நீங்கள். பெரும்பான்மை பலம் படைத்தவர்கள் நீங்கள். என்னுடைய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடலாம். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இந்த ஏட்டிலிருந்து நீக்கிவிடுவதால் மட்டும், அந்த வார்த்தையை தமிழக மக்களுடைய உணர்விலிருந்து நீக்க முடியாது என்பதைக் குறிப்பிட்டு அடுத்த கருத்துக்களுக்குச் செல்கிறேன்.

செலவினங்களில் வருவாய்க் கணக்கில் 223 கோடி ரூபாய்க்கு மேல் சிக்கனம் ஏற்படுத்தியதாக இங்கே நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். 'செலவினங்களில் இயன்ற அளவு சிக்கனக் கொள்கையைக் கடைப்பிடித்துவரும் அரசின் போக்கினால், வருவாய்க் கணக்கில் உபரி காட்ட முடிந்திருக்கிறது என்று நிதியமைச்சர் அவர்கள் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார்கள். நான் பட்ஜெட்டை ஒட்டிய அனைத்துக் காகிதங்களையும் இரவு இரண்டு மணி வரைக்கும் துருவித் துருவிப் பார்த்தேன். அப்படிப் பார்த்ததில் எந்தச் சிக்கனத்தையும் அரசு கடைப்பிடிக்கவில்லை என்பதைத்தான் தெரிந்து கொள்ள முடிந்தது.

ஆகவே எந்த வகையில் சிக்கனம் கடைபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை நிதியமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் சொல்லவேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவிக்கிறேன். சென்ற ஆண்டு போடப்பட்ட திட்டங்களைக் கடைசி

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

யாக திருத்தியமைத்தபோது (ரிவைஸ்ட் எஸ்டிமேட்டில்) பல தலைப்புகளில் கிடைக்கப்பட்ட தொகை தான் அது. மற்றபடி சிக்கனத்தால் வந்த தொகை அல்ல. ஆகவே எந்த வகையில் சிக்கனத்தைக் கடைப்பிடித்தோம் என்பதை எடுத்துக் காட்டினால் எங்களால் புரிந்து கொள்ள முடியும். மிசலேனியஸ் எக்ஸ்பென்சஸ் என்ற பகுதியிலே இதுவரையில் மொத்த செலவில் ஒரு சதவீதத்திற்கு மேல் எந்த ஒரு ஆட்சியிலும் தாண்டியதில்லை. 1984ஆம் ஆண்டில் அது 0.2 சதவீதம்தான் இருந்தது.

(முற்பகல் 11–30)

மொத்த செலவினங்களில் இந்த மிசலேனியஸ் எக்பென்சஸ். இப்போது அது 7.8 சதவீதமாக உயர்ந்து இருக்கிறது என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எதிலே சிக்கனப்படுத்தினீர்கள்? இப்போது வருவாய்த்துறையிலே நீங்கள் காட்டக்கூடிய தொகை பூராவும் அது கிராண்ட்--இன்-எய்டு மூலமாக, மத்திய அரசிலிருந்து கிடைக்கக்கூடிய கிராண்ட்-இன்-எய்டு, States share of Central Excise and States share of Income-tax. அதிலே 2 சதவீதம், 22 சதவீதம், 19 சதவீதம் என்ற அந்தப் புள்ளி விவரத்தை நான் படிக்கவில்லை. நீங்கள் ஏதோ சிக்கனப்படுத்தியதினால் தான் 225 கோடி ரூபாயை தமிழகத்திற்கு சேமித்து வைத்திருக்கிறோம் என்று சொல்வது உண்மை அல்ல. அது உண்மைக்கு மாறாக it is a jugglery of statistics. வேறு ஒன்றும் அல்ல, என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல் தொழிற்சாலைகளுடைய வளர்ச்சியைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். புதிய ஆலைகளை உருவாக்குவது இருக்கட்டும். மூடிய ஆலைகளைத் திறப்பதற்கு நீங்கள் என்ன நடவடிக்கையை எடுத்து இருக்கிறீர்கள்? அரசு மூடக்கூடாது என்று சொன்னதற்குப் பிறகும், பின்னி ஆலையை அந்த நிர்வாகம் மூடியிருக்கிறது. ஒரு மாதத்திற்கு மேலாக தமிழக அரசு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதேபோல் இந்தியா போர்ஜ் தொழிற்சாலை ஏராளமான பஞ்சாலைகள், நூற்றுக்கணக்கான சிறு தொழில்கள், இவை பூராவும் மூடப்பட்டு இருக்கின்றன. இந்த மூடிய ஆலைகளைத் திறப்பதற்கோ, அல்லது தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கோ எந்த ஒரு திட்டமும் இந்த பட்ஜெட்டிலே இல்லை



ஆகவே தான் நான் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு எந்த விதத்திலும் உதவி அளிக்கக்கூடிய ஒரு பட்ஜெட்டாக இது அமையவில்லை என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமானால், பல விவரங்களுக்குள் போக முடியும். ஆனால் நான் அந்த விவரங்களுக்குப் போவதற்குப் பதிலாக நிர்வாகத்தைப் பற்றி இந்த நேரத்திலே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். இதோ என்னிடம் ஒரு கடிதம் இருக்கிறது. நான் ஒரு கலெக்டருக்கு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் அதைப் பற்றி எழுதிக் கொடுத்தால் பரவாயில்லை. நீங்கள் தப்பாக நினைக்கவில்லை என்றால், நான் பழைய உதாரணத்தைச் சொல்கிறேன். நீங்கள் ரெட்ஹில்சிலே உள்ள இன்ஸ்பெக்டருக்கு ஒரு லெட்டர் எழுதியதாகவும் அந்த லெட்டரை, அந்த இன்ஸ்பெக்டர் கிழித்துப் போட்டதாகவும் நீங்கள் இங்கே புகார் பண்ணினீர்கள். உங்கள் புகாரை நம்பி, நானே விசாரித்தேன். அந்த முழு லெட்டரையும் அந்த இன்ஸ்பெக்டர் என்னிடம் ஒப்படைத்தார். எனவே நீங்கள் சபாநாயகருக்கு எழுதிக் கொடுத்தால், அதைப் பற்றி நாங்கள் விசாரிப்பதற்கு ஏதுவாக இருக்கும். நான் ரூல் 93 பிரகாரம் இதைச் சொல்கிறேன். ஆல் ஆப் எ சடன், நீங்கள் ஸ்வீப்பாகச் சொல்லிவிட்டுப் போய் விட்டால், அது உடனே பிரஸ்ஸிலே வந்துவிடுகிறது.

திரு. வி. பி. சிந்தன் : நான் அந்த விவரத்தை சபாநாயகருடைய பார்வைக்கு அனுப்பி வைக்கிறேன், ஆனாலும்.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** it will go on record. இங்கே உடனே பிரஸ்ஸிலே போட்டு விடுகிறார்கள். ரெட்ஹில்ஸ் இன்ஸ்பெக்டரைப் பற்றி இந்த அவையிலே நீங்கள் எழுப்பியிருக்கிறீர்கள். நீங்கள் சொன்னதை நம்பி, நான் அந்த இன்ஸ்பெக்டரை விசாரித்தேன். அந்த இன்ஸ்பெக்டர் அந்தக் கடிதத்தைக் கிழிக்கவில்லை என்று சொல்லி, உறுப்பினர் கையெழுத்துப்போட்ட அந்தக் கடிதத்தை என்னிடம் ஒப்படைத்தார். எனவே அதிகாரிகள் மேலே குற்றச்சாட்டு சொல்கிறபோது, அதைப்பற்றி முன்கூட்டியே எங்களுக்கு எழுதிக் கொடுங்கள், definitely we well enquire into the matter.

திரு. வி. பி. சிந்தன் : என்னிடம் திருப்பிக் கொடுத்த ஒரு கடிதம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் தகவலைச் சொன்னால் கூட, ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய கடிதத்தைத் திருப்பி அனுப்பினார் என்ற குற்றச்சாட்டுத்தான் வரும். இதுபோன்ற குற்றச்சாட்டைத்தான் நீங்கள் முன்பே சொன்னீர்கள். ரெட்ஹில்ஸ் இன்ஸ்பெக்டரைப் பற்றி இதே

அவையிலே பேசி, நான் அதைப்பற்றி விசாரித்து, நீங்கள் கையெழுத்துப் போட்ட அந்தக் கடிதத்தையே அவர் என்னிடம் ஒப்படைத்தார். நான் உங்களை உடனே கூப்பிட்டு, உங்களுக்கு தவறான தகவலை உங்களுடைய பி.ஏ. சொல்லியிருக்கிறார்கள், அதன் அடிப்படையிலே நீங்கள் ஒரு தவறான குற்றச்சாட்டை ஒரு அதிகாரி மீது சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னேன். நீங்களும் தவறு என்று அதை நேரிலேயே ஒத்துக் கொண்டீர்கள். எனவேதான் சொல்கிறேன், நீங்கள் தயவு செய்து எழுதிக் கொடுங்கள். உறுதியாக நான் விசாரிக்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** என்னுடைய நேரத்தை நீங்கள் எடுத்துக் கொள்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சபையினுடைய நேரத்தை நீங்கள் எடுத்துக் கொள்வதினாலே, உங்களுடைய நேரத்தை எடுத்துச் கொள்கிற ஒரு நிர்ப்பந்தத்திற்கு நாங்கள் ஆளாக்கப்படுகிறோம்.

**திரு. வி. பி. சிந்தன் :** போலீஸ் அதிகாரிக்கு எழுதிய அந்தக் கடிதத்தை அவர் கிழித்துப் போட்டதாகச் சொன்னேன். அவர் அதைக் கசக்கி, அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்தவருடைய முகத்திலே எறிந்து கடைசியாக அவர் என்னிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நீங்கள் சொன்னதும், அவர் மன்னிப்புக் கேட்டதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்போதும் உறுப்பினர் அவர்கள் தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். அந்தக் கடிதம் இன்றைக்குக் கூட என்னுடைய டிராயரிலே இருக்கிறது. கொஞ்சம் கூட கசங்காமல் உள்ள அந்த காகிதத்தை நான் உங்களிடமே காண்பித்தேன். எனவே தயவு செய்து தவறான தகவலைக் கொடுக்க வேண்டாம். கடந்த முறை நீங்கள் இந்தப் பிரச்சினையை எழுப்பியபோது, பேஸ்ட் ஆன் தி அலகேசன் அந்த இன்ஸ்பெக்டரை நாங்கள் விசாரித்தோம். அந்தக் கடிதம் கொஞ்சம் கூட கசங்காமல் இருந்ததை நான் உங்களிடத்திலே காண்பித்தேன். இப்போது கசக்கினார் என்று சொன்னால் எப்படி? அதற்காகத்தான் எழுதிக் கொடுங்கள் என்று சொன்னேன். நான் விசாரித்து உங்களுக்குத் தகவல் கொடுக்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன் :** இந்தப் பிரச்சினையை நான் ஒரு விவாதமாகவோ பிரச்சினையாகவோ ஆக்க விரும்பவில்லை. அங்கே நடந்தது பூராவும் உங்களுக்குத் தெரியும். எதற்காக அந்த இன்பெக்டர் உங்களிடம் வந்து நேரிலே மன்னிப்புக் கேட்டார்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மன்னிப்புக் கேட்டார் என்ற தகவலே தவறு. கிடையவே கிடையாது. நீங்கள் அவையிலே சொன்னது அந்தக் கடிதத்தைக் கிழித்துக் விட்டார்கள் என்பதுதான். நீங்கள் கையெழுத்துப் போட்ட அந்தக் கடிதம் என்னிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டது. எனவேதான் சொல்கிறேன். அதிகாரிகள் இன்ன தவறு செய்தார்கள் என்றால், அதைப் பற்றி எழுதிக் கொடுங்கள். அந்த அதிகாரிகள் மீது விசாரணை செய்கிறோம். எழுதிக் கொடுக்க மாட்டோம் என்றால் எப்படி. Rule 93 is very clear உண்மையாக தவறு என்று தெரிந்துகொள்வதற்கு முன்னாலே, இதைப் பற்றிச் சொன்னால், பத்திரிகையிலே வந்து விடுகிறது.

**திரு. வி. பி. சிந்தன் :** எழுதிக் கொடுக்கிறேன். எழுதிக் கொடுக்கிறேன் என்றுதான் சொன்னேனே தவிர, கொடுக்க மாட்டேன் என்று சொல்லவில்லை.

மீண்டும் நான் மூலதனச் செலவினத்தில் போட்ட தொகைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறேன். இன்னும் நீர்ப்பாசன வசதிக்காக எந்த கவனமும் இந்த பட்ஜெட்டிலே செலுத்தப்படவில்லை. தெலுங்கு கங்கை பிரச்சினை சம்பந்தமாக சென்னை நகரத்திற்குக் குடி தண்ணீர் கொண்டு வருவதற்கான அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது என்பதற்கு அமைச்சரிடமிருந்து விளக்கம் கேட்க நான் விரும்புகிறேன். வீராணம் திட்டம் ஒருவேளை அமல்படுத்தப்பட்டிருந்தால் இந்த நேரத்தில் சென்னை நகரத்திற்கு தண்ணீர் கிடைத்திருக்குமோ என்று சென்னை நகரத்தினுடைய சாதாரண மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நான் ஒரு எக்ஸ்பர்ட் அல்ல. ஆனால் மக்களுடைய எண்ணமெல்லாம் இது என்றைக்கு கிடைக்கப்போகிறது என்பதுதான். மத்திய அரசு இன்னும் அந்தக் காடுகளை வெட்டி அந்த வழியாக தண்ணீர் எடுத்துக் கொண்டு வருவற்கான அனுமதியைக் கூட தெலுங்கு கங்கை திட்டத்திற்காக வழங்கவில்லை. கோடிக்கணக்கான ரூபாய் இதற்காக செலவழிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, தேர்தலைப் பற்றி பேசியபோது, சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்துவதாகச் சொன்னார்கள். ஆனால் இன்னும் தேதி குறிப்பிடப்படவில்லை. அதோடு நகரியங்களுக்கான தேர்தலையும நடத்த வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மின்சார விளக்குகளைப் பற்றி ஏற்கனவே மின்சாரம் விநியோகிக்கிற பல முறைகளைப் பற்றி பல குறைபாடுகளை நாங்கள் ஏற்கனவே எடுத்துக் கூறியிருக்கிறோம். சென்னை நகரத்திலே கூட மின்சார விளக்குகள் இல்லாத தெருக்கள் உண்டு. அதற்காக சொல்லப்படுவது என்னவென்றால் இது பிரைவேட் லேண்ட், திட்டமிட்ட பகுதியில் அது

வரவில்லை. 20, 25 ஆண்டுகளாக குடியிருப்பவர்களுக்கு தெரு விளக்குகள் கொடுப்பதற்கோ, குடி தண்ணீர் கொடுப்பதற்கோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை மிக வருத்தத்தோடு எடுத்துக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் தெருக்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். அது பற்றி அரசு எடுத்திருக்கிற முடிவை நான் ஏற்கனவே இந்த அவையில் கூறி இருக்கிறேன். அதை அமல் படுத்தப் போகிறோம். தனியார் தெருக்களெல்லாம் இப்போது இருக்கிற சட்டப்படி கட்ட வேண்டிய—தெரு அபிவிருத்திக்கான 25 சதவீதத்தைக் கட்டிவிட்டு 75 சதவீதத்தை அவர்களுடைய வீட்டு வரியிலே சேர்த்து 5 ஆண்டுகளிலோ, 10 ஆணிடுகளிலோ வசூலித்துக் கொள்ளலாம் என்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் 25 சதவீதத்தைக் கட்டுவதற்குச் சிரமப்படுகிறார்கள் என்று சொன்னதற்குப் பிறகு இப்போது முதலமைச்சரவர்கள் ஆணையிட்டு இருப்பது என்னவென்றால் முழுமையாக மாநகராட்சி செலவு செய்யும் என்பதுதான். மொத்தச் செலவை 10 ஆண்டுகளில் வீட்டு வரியோடு சேர்த்து வசூலித்துக் கொள்ளலாம் என்று ஆணை பிறப்பிச்கப்பட்டிருக்கிறது. ஆணை மாநகராட்சிக்கு விரைவிலே அனுப்பப்படவிருக்கிறது. தனியார் தெருக்களிலெல்லாம் இனிமேல் அந்தப் பிரச்சினை எழாது. தனியார் தெருக்களில் தெரு விளக்கு, சாக்கடை வசதிகள் இவையனைத்தும் சரிப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : ஆனால் நேற்றுவரை அந்த உத்தரவு யாருக்கும் கிடைக்கவில்லை. நீங்கள் அனுப்பப்போகிறீர்கள், நன்றி. அதுமட்டுமல்ல, என்னுடைய தொகுதியிலே, அம்பத்தூர் நகரியத்திலே குடிதண்ணீர் வழங்குவதற்காக மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் தலைமையிலே 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு திட்டம் உருவாக்கப்பட்டு அந்த நகரியம் 30 இலட்சம் ரூபாய் செலவு செய்தும் குடிதண்ணீர் இன்னும் வழங்கப்படவில்லை. அந்த மன்றத்தின் உள்ளே நுழையும்போது அங்கு முதலமைச்சரால் திறக்கப்பட்ட ஒரு கல்லைத்தான் பார்க்க முடிகிறது. நகரியத்திலிருந்து 30 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டும் அந்தக் குடிதண்ணீர் திட்டம் இன்னும் வரவில்லை. நிறைவேற்றப்படவில்லை. 1986 ஆம் ஆண்டு கவர்னருடைய உரையிலே சென்னை நகரத்தினுடைய குடி தண்ணீர் அபிவிருத்திக்காக ஐந்து கோடியே ஐம்பது இலட்சம் லிட்டர் தண்ணீர் விநியோகம் செய்வதற்கு 98 கோடி ரூபாய் ஐக்கிய நாடுகள்வளர்ச்சித் திட்டத்தின் உதவியுடன் ஒரு திட்டம் நிறைவேற்றப்படுவதாகச் சொல்லி அது இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இப்படி நிறைவேற்றப்படாத திட்டங்





களுடைய நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளுடைய பட்டியலைப் படித்து நான் இந்த நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. ஆனால் நான் வலியுறுத்திக் கேட்பதெல்லாம் இன்றைக்காவது, இந்த சட்டமன்றத் தொடரிலாவது மத்திய அரசினுடைய தவறான கொள்கைகளை எதிர்த்து இந்த மாநில அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், இந்த அதிகாரங்கள் எல்லாம் சாதாரண மக்களுக்காகப் பயன்படுத்தப்படும் என்றும், ஜனநாயக உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் சொல்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11–40)

நான் இதைக் குறிப்பிடும்போது குறிப்பாக மாநில அரசினுடைய ஊழியர்கள் 36 பேர் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவர்கள் மீதான வழக்குகளை வாபஸ் பெற வேண்டும் என்றும், போராட்டத்தில் ஈடுபட்டவர்களை வஞ்சம் தீர்க்கின்ற முறையில் நடந்து கொள்ளக்கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. கே. குப்புசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அது குறித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க விழைகிறேன். நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டது போல் இயற்கை வளம் குறைந்த நிலையில், இருக்கிற பொருளாதார சூழ்நிலையில் இதை விட ஒரு நல்ல நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்க முடியாது என்ற அளவில் ஒருநல்ல அறிக்கையை மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கிறார்கள். நான் அதைப் பாராட்டுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 75 விழுக்காட்டிற்கு மேற்பட்ட ஏழை எளிய மக்கள் கிராமப்புறத்தில் வாழ்கிறார்கள். 1977 ஆம் ஆண்டில் அண்ணாவினுடைய ஆட்சியாம் இந்த ஆட்சியில் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பு ஏற்ற காலத்தில் இருந்து இன்று வரை கிராமப் புறத்தில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்கின்ற திட்டங்களைத்தான் நடைமுறைப்படுத்தி வருகிறார்கள் என்பதை மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

இங்கே பேசிய கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் ஆனாலும் சரி, இந்திய தேசீய காங்கிரஸ் கட்சி நண்பர்கள் ஆனாலும் சரி இந்த அறிக்கையில் எந்தத் திட்டமும் இல்லை, வார்த்தை அலங்காரங்கள்தான் இருக்கின்றன என்று சொன்னார்கள். நான்

கேட்கிறேன். அவர்களைப் பார்த்து—1977 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கம்யூனிஸ்டு நண்பர்கள் எடுத்துச் சொல்கிறபடி ஏழை எளிய மக்களுக்கு இந்த அரசு திட்டம் கொண்டு வரவில்லையா ? நடைமுறைப்படுத்தவில்லையா ? அவர்களுடைய அடிப்படைத் தேவையான உணவு, உடை, வீடு, குடிநீர் கிடைப்பதற்குத் திட்டங்கள் போடவில்லையா ? 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எடுத்தது உண்டா என்பதை எல்லாம் நான் அறிய விரும்புகிறேன்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் கடுமையான வறட்சியும், வெள்ளச் சேதமும் தமிழகத்தை ஆட்டிப் படைத்து வந்தது. ஆனால் அந்த நேரத்திலேயும் உணவுப் பிரச்சினையால் தமிழகத்து மக்கள் வாடாத அளவில் குறைந்த விலையில் அரிசியைக் கொடுத்தது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிந்த காலத்தில் கூட வறட்சி வந்தது, வெள்ளமும் வந்தது. ஆனால் அன்று எல்லாம் ஒரு கிலோ அரிசி 8 ரூபாய்க்கு கிடைக்கக்கூடிய ஒரு இன்னலான சூழ்நிலை அப்போது இருந்தது. 8 ரூபாய் ஒரு கிலோ அரிசி விற்ற காலத்தில் ஒரு ஆணுக்கு ஒரு நாளைக்கு கூலி 5 ரூபாயாகவும், ஒரு பெண்ணுக்கு ஒரு நாளைக்கு 2 ரூபாயாகவும் இருந்தது. ஆனால் இவ்வளவு வறட்சிக்கும், வெள்ளச் சேதத்திற்கும் பின்னால் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இன்றும் அரிசியின் விலை 5 ரூபாய், 3 ரூபாய், 4 ரூபாய் ஒரு கிலோ என்ற அளவில் விற்றுக்கொண்டு இருக்கிறது. ஆனால் சாதாரண ஏழை மக்களுக்கு தினக் கூலியாக ஒரு நாளைக்கு 10 ரூபாய் அளவிலும், 15 ரூபாய் அளவிலும் கிடைக்கிறது என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த 10 ஆண்டு காலத்தில் இந்த ஆட்சியில் தமிழகத்தில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது என்றும் உணவுப்பஞ்சத்தால் உணவு கிடைக்காமல் ஏழை இறந்தான் என்றும் யாராவது சுட்டிக் காட்ட முடியுமா ?

ஏராளமான நியாய விலைக் கடைகளைத் திறந்து விலைவாசி ஏற்றத்தைப் பாராது, 100 கோடி ரூபாய் செலவைப் பாராது, ஏழைகளுக்கு மலிவு விலையில் குறைந்த விலையில் தரமான அரிசியைக் கொடுத்து இருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி என்பதை மறந்து விட்டு கம்யூனிஸ்டு நண்பர்கள் கூட ஏழைகளைப் பற்றி நீலிக் கண்ணீர் வடித்த நிலையை நாம் கண்டோம்.



அதேபோல் உடுத்த உடை இல்லாமல் சாலை ஓரங்களில் நிர்வாணமாக ஆண்களும், பெண்களும் இருக்கிற நிலையை மாற்ற வேண்டும் என்று கருதி ஏழைத் தாய்மார்களுக்கும், முதியோர்களுக்கும், 8-வது வரை படிக்கின்ற பள்ளிக் குழந்தைகளுக்கும் இலவச உடை கொடுத்தது இந்த ஆட்சி என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள்.

அதே நேரத்தில் குடியிருப்பதற்கு ஒரு வீடு கூட இல்லாமல் சாலை ஓரங்களிலும், மரங்களின் அடியிலும், ரோடு ஓரங்களிலும் வாழ்கின்ற நிலையை மாற்றி ஆதி திராவிடர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், வறுமைக்கோட்டில் இருப்பவர்களுக்கும் கூட்டுறவுத் துறை மூலமாக வீடுகள் கட்டிக் கொடுத்து, இலவச வீடுகள் கட்டிக் கொடுத்த ஆட்சி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சி என்பதை கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள் ஏனோ மறந்து விட்டார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலே தான் குடிதண்ணீர் பிரச்சினை ஓரளவு கிராமப் புறங்களிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகின்ற விதத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கடந்த ஐந்து ஆண்டுக் காலத்திலே தான் தமிழகத்திலே, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அடி குழாய்கள் போடப்பட்டிருக்கின்றன. உள்ளாட்சித் துறையின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வருவதற்கு முன்னாலே இந்த ஆட்சி எங்கெங்கு குடிதண்ணீர் இல்லையோ, எங்கெங்கே மக்கள் குடிதண்ணீருக்காக அவதிப்படுகிறார்களோ அங்கெல்லாம் அடி குழாய்கள் அமைத்து, மேல் நிலைத் தொட்டிகளை அமைத்து, குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்து உதவியது, என்பதையெல்லாம் ஏனோ எதிர்க் கட்சியினர் மறந்து விட்டார்கள் என்றுதான் நான் கருதுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் வேலைவாய்ப்பைப் பற்றி ஒன்றும் இல்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே பல்வேறு திட்டங்களை கடந்த 10 ஆண்டுக் காலமாக புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது. இதிலே ஒன்று சத்துணவுத்திட்டம். இந்த சத்துணவுத் திட்டத்தை, இது நடைபெறுமா, இது வெற்றி பெறுமா, இது அமலுக்கு வருமா என்ற ஐய வினாக்களைத் தொடுத்தவர்கள் எல்லாம் ஏற்று, பாராட்டுகின்ற அளவிற்கு, மற்ற மாநிலங்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவுக்கு, மற்ற மாநிலங்கள் எல்லாம் கடைப்பிடிக்கின்ற அளவுக்கு மத்திய அரசே அதைத் திட்டத்திலே சேர்த்துக்கொள்கின்ற அளவுக்கு, வெற்றி பெறுகின்ற திட்டமாக மாற்றிக் காட்டியவர் புரட்சித் தலைவர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏராளமான தாய்மார்கள், பள்ளிப் படிப்பு படித்த மாணவியர்கள், சகோதரிகள், இதன் மூலம் வேலைவாய்ப்புக்களைப்பெற்றது இந்த ஆட்சியிலேதானே தவிர, வேறு எந்த ஆட்சியிலும் ஏற்படுத்தியிருப்பதாக வரலாறே கிடையாது. ஆக ஏராளமான தாய்மார்கள், பள்ளிப் படிப்பு படித்த இளைஞர்கள், அதற்குக் கீழே படித்த முதிய ஆயாக்கள்கூட வேலை வாய்ப்பைப் பெறுகின்ற ஒரு திட்டமாக இந்தச் சத்துணவுத் திட்டம் அமைந்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல், இங்கு நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களான என். ஆர். ஈ. பி., ஆர். எல். ஈ. ஜி. பி. இவைகள் எல்லாம் கிராமப்புற மக்களுக்காகக் கொண்டுவரப்பட்டன. கிராமப்புறத்திலுள்ள மக்கள் எல்லாம் வேலை அதிகமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிற நிலைமை இருந்து வருகிறது. இதை மாற்ற வேண்டுமென்கிற காரணத்தால், புரட்சித் தலைவர் அவர்கள் மத்திய அரசின் உதவியோடு என். ஆர். ஈ. பி., ஆர். எல். ஈ. ஜி. பி. போன்ற திட்டங்களை கிராமப்புறங்களில் நடைமுறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழைக் கூலித் தொழிலாளிகள் எண்ணற்றவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்ற சாதனையை ஏனோ எதிர்க்கட்சியினர் மறந்துவிட்டார்கள் என்று தான் நான் கருதுகிறேன்.

அதேபோல் கசிவு நீர்க் குட்டைகள் அமைப்பதும், தடுப்பு அனணகள் கட்டுவதும், புதிய திட்டங்கள் தீட்டுவதும் போதுமான அளவிற்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்க வேண்டுமென்பதற்காகத்தான். தமிழகத்திலே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான திட்டங்கள் என்னென்ன என்றெல்லாம் கேட்டார்களே, இவைகள் எல்லாம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற திட்டங்களாக உங்களுக்குத் தெரியவில்லையா ? இதை எதிர்க்கட்சியினர் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றுகூட நம்முடைய மாண்புமிகு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். இங்கே வைக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் மீது கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருந்தால், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லியிருப்பார்கள். இந்த ஆட்சியைப் பற்றி, இந்த ஆட்சியிலே நடைபெறுகிற குறைகளை, குறைபாடுகளைப் பற்றி அவர்கள் எடுத்துக்காட்டியிருப்பார்களேயானால், நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் பதில் சொல்லியிருப்பார்கள். ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு, இந்த ஆட்சியை நடத்திச் செல்லும் எங்கள் இயக்கத்தைச் பற்றி மிகவும் கேவலமான குற்றச்சாட்டுகளையெல்லாம் இந்தச் சபையிலே அள்ளி வீசினார்கள். நான் கூட அதற்கு ஆட்சேபம் தெரிவித்தேன்.





அது மாண்புமிகு சுப்பராயன் அவர்களுடைய கன்னிப் பேச்சாக இருந்தால், நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன். தலையிட்டு இருக்கமாட்டேன். இப்போது கூட பதில் சொல்லியிருக்கமாட்டேன். ஆனால் 1½ ஆண்டுகள் அனுபவத்திற்குப் பிறகும், சட்டமன்றத்திலே பலமுறை பேசியிருந்தும், எங்கள் இயக்கத்தைப் பற்றிப் பொது மேடைகளில் பேசுவது போன்று சட்டமன்றத்தில் அவர்கள் பேசினார்கள். நான் அதற்குப் பதில் சொல்லவில்லையென்றால், பொது மக்களிடத்திலே தவறான எண்ணத்தை ஏற்படும் என்ற காரணத்தால், என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். தமிழக மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன இருக்கிறது என்று சொன்னார்கள்.

(முற்பகல் 11–50)

இந்தியத் துணைக் கண்டத்திலே 57 சதவீதத்திற்கு மேல் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். வேறு மாநிலங்களை விட தமிழ்நாட்டிலேதான் 57 சதவீதம் வறுமைக் கோட்டிற்குக் கீழே மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு உங்களுடைய திட்டம் என்ன என்று கேட்டார்கள். தமிழ்நாட்டிலே 57 சதவீதம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள் என்ற காரணத்தினால்தான் வரியில்லாத நிதிநிலை அறிக்கையை நம்முடைய நாவலர் அவர்கள் இங்கே அளித்து இருக்கிறார்கள். வரிச் சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாம் ஏழை எளிய மக்களுக்கு நல்ல திட்டங்கள் என்று நீங்கள் சொல்கிறீர்களா ? இந்தத் திட்டங்கள் எல்லாம் அவர்களுக்கு நன்மை பயக்காது என்று சொல்கிறீர்களா ?

தொழில்களை வளர்ப்பதற்கு எந்தவிதமான திட்டமும் இல்லை என்று சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையை அவர்கள் கூர்ந்து பார்த்தால் சிறு தொழில்களை வளர்ப்பதற்காக விற்பனை வரியிலே சலுகைகளை நாவலர் அவர்கள் அளித்திருப்பதைப் பார்த்திருக்க முடியும். அதன் மூலமாக தமிழ்நாட்டிலே தொழில் வளம் பெருகுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்ற அளவுக்குத் திட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

இங்கே பேசிய திரு. சுப்பராயன் அவர்கள் வேலை வாய்ப்புப்பற்றிச் சொன்னார்கள். புதிய ஆலைகளை ஏன் திறக்நீர்கள் என்று கேட்டார்கள். வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்ற நோக்கத்திலேதான் புதிய ஆலைகள் திறக்கப்படுகின்றன. ஆனால் அவர் கேட்கிறார். புதிய ஆலைகளை ஏன் திறக்கிறீர்கள் என்று. ஆனால் அதே நேரத்திலே ஏன் வேலை வாய்ப்பு இல்லை என்றும் அவரே கேட்கிறார். ஆனால் நண்பர் திரு. சிந்தன் அவர்கள் இங்கே பேசியபோது நீங்கள் ஏன் புதிய ஆலைகளைத் திறக்கவில்லையென்று கேட்டார்கள். வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் நீங்கள் ஏன்

[திரு. கே. குப்புசாமி] [1986 மார்ச் 20

புதிய ஆலைகளைத் திறக்கிறீர்கள், மூடிய ஆலைகளை திறக்கக்கூடாதா என்று கேட்கிறார். ஆனால் இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் புதிய ஆலைகளை ஏன் கொண்டு வரவில்லை என்று கேட்கிறார். ஆகவே அவர்களுக்குள்ளாகவே இந்த முரண்பாடு இருக்கிறது. ஆளுகின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது இருக்கிற அருவருப்பின் காரணமாக பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதிலே கிஞ்சிற்றும் உண்மையில்லை. நண்பர் சுப்பராயன் அவர்கள் பேசியபோது தாழ்த்தப்பட்ட மக்கள் பகுதிகளுக்கு மின்சாரம் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கு என்ன திட்டம் உங்களிடம் இருக்கிறது என்று கேட்டார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்காக என்ன என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றி விவரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க முடியும். இந்த ஏப்ரல் மாதத்தில் நிலைமைகள் சீரடையும். ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ளாக 5 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் தமிழகத்திலே உற்பத்தி செய்யப்பட்டு தன்னிறைவு நிலையை அடையமுடியும் என்று தெளிவாக கொடுக்கப்பட்டிருக்கிறது. பருவ மழை தவறியபோதும் மின்சாரம் சீராக கிடைக்கும் என்ற பெருமையுடைய மாநிலம்தான் இந்தத் தமிழகம்.

நகராட்சி மன்றங்களிலே, ஊராட்சி மன்றங்களிலே எதிர்க்கட்சியினர் ஏதோ குறிப்பிட்ட அளவுக்கு வெற்றிபெற்றிருக்கிறார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஊராட்சி மன்றங்களிலே இன்றைக்கு யார் ஆட்சி செய்கிறார்கள் என்பதல்ல, நல்ல முறையிலே—யார் தலைவராக இருந்தாலும்—மக்களுக்குப் பயனுள்ள வகையிலே நிர்வாகத்தை நடத்துகிறார்கள் என்பதுதான் முக்கியம். ஊராட்சி மன்றங்களுடைய நிதியைப் பெருக்குவதற்காக கேளிக்கை வரியை நாவலர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். கேளிக்கை வரியை உயர்த்தி அதன் மூலமாக உள்ளாட்சி நிறுவனங்களின் வருவாயைப் பெருக்க முடியும். உங்களுக்குத் திட்டம் உண்டா என்று கேட்கிறார்கள்.

கடந்த பத்து ஆண்டுக்காலமாக நான் இந்தச் சட்டமன்றத்திலே உறுப்பினராக பணியாற்றிவருகிறேன். நான் கம்யூனிஸ்ட் நண்பர்களைப் பார்த்துக் கேட்கிறேன். என்ன திட்டங்களை நீங்கள் இதுவரையிலே கொடுத்திருக்கிறீர்கள் ? எந்தத் திட்டத்திலே குறை அல்லது தவறு சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள் ? இந்த இந்தத் திட்டங்களைக் கொண்டுவாருங்கள் என்று உருப்படியான திட்டம் எதையாவது கம்யூனிஸ்ட் நண்பர்கள் இங்கே கொடுத்திருக்கிறார்களா ? கம்யூனிசம் உயர்ந்த தத்துவம். பேரறிஞர் அண்ணா அவர்களும் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தத்துவம். சோவியுத் யூனியனிலே அந்தக் கொள்கை வெற்றி பெற்றிருக்கிறது.



1986 மார்ச் 20] [திரு. கே. குப்புசாமி]

ருமேனியாவிலே வெற்றிபெற்றிருக்கிறது, செக்கோஸ்லவாக்கியாவிலே வெற்றிபெற்றிருக்கிறது, ஹங்கேரியிலே வெற்றிபெற்றிருக்கிறது, கியூபாவிலே வெற்றிபெற்றிருக்கிறது. ஆனால் இந்தியாவிலே மட்டும் அது ஏன் வெற்றிபெறவில்லை. இந்தக் கேள்விக்கு உங்களுடைய பதிலை நான் எதிர்பார்க்கிறேன். நான் சொல்கிறேன் உங்களுடைய சந்தர்ப்பவாதம்தான் காரணம். மைய அரசை ஆளுகின்ற கட்சியோடு தேர்தல் கூட்டு வைத்திருந்தீர்கள். இங்கே எங்களோடு நீங்கள் கூட்டு வைத்திருந்தீர்கள். எங்களோடு கூட்டு வைத்திருந்தபொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சாடினீர்கள். இப்பொழுது அவர்களோடு கூட்டு வைத்திருக்கிறீர்கள். உங்கள் நிலைதான் என்ன ? ஆளுகின்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆற்றல் இல்லை, ஞானம் இல்லை, அறிவு இல்லை, பக்குவம் இல்லை என்றெல்லாம் அவர்கள் பேசினார்கள். நான் கேட்கிறேன். இதில் உங்களிடம் எது இருக்கிறது ? இப்படி சந்தர்ப்பவாதியாக இருக்கிறீர்கள். நீங்கள் ஒருகாலத்தில் எதிர்க்கட்சியாகக் கூட இருந்தீர்கள். ஆளுங்கட்சியாகக் கூட நீங்கள் வந்திருக்க முடியும். ஆனால் ஏன் அப்படி முடியவில்லை ? புரட்சித் தலைவரவர்களின் இயக்கத்தை மிகவும் கேவலமாகப் பேசுகிறீர்கள் சட்டமன்றத்திற்குள்ளேயே. நான் கேட்கிறேன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினைச் சேர்ந்த மதிப்பிற்குரிய திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் எங்கள் புரட்சித் தலைவரவர்களை வைத்துத்தான் அன்றைக்கு ஆளும் திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது குற்றச்சாட்டுக்களைக் கொடுக்க வேண்டுமென்று விரும்பினார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்களை எழுப்புவதற்குத் தமிழகத்திலே புரட்சித் தலைவர் ஒருவர்தான் பொருத்தமானவர் என்று கருதி, அவரை அணுகி அவர் மூலமாகக் கொடுத்தார்கள். அன்றைக்கெல்லாம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அறிவு இல்லை, ஆற்றல் இல்லை என்று அந்தத் தலைவர் சொல்லவில்லை.

அதேபோன்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களைப் பற்றி சுப்பராயன் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். சுப்பராயன் அவர்கள் இளைஞர் இப்போதுதான் சட்டசபைக்கு வந்திருக்கிறார். அந்தப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் கொடுத்த பொதுவுடைமை வாதத்திற்குப் புத்துயிர் கொடுத்து, வடிவம் அமைத்துக் கொடுத்து, அதை அமலாக்கியவர் எங்கள் புரட்சித் தலைவரவர்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜீவா அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களும் எங்களுடைய புரட்சித் தலைவர்களைப் பொதுவுடைமைவாதி என்று ஏற்றுக்கொண்ட பிறகு நம்முடைய சுப்பராயன் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றகழகத்தில் ஞானம் இல்லை, ஆற்றல் இல்லை, அறிவு இல்லை

பக்குவம் இல்லை என்று சொல்கிறார்கள் என்றால், நான் அவரைப் பார்த்துச் சொல்ல விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறு சுப்பராயன் அவர்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. எனவே, தயவு செய்து பெரியவர் கல்யாணசுந்தரம் அவர்களிடம் கேட்டுப் பாருங்கள் என்று நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் தற்பொழுது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இல்லை. ஜீவானந்தம் இல்லை. எனவே இருக்கிற கல்யாணசுந்தரம் அவர்களைக் கேட்டுக் தெரிந்து கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏதோ அரசியல் விபத்து காரணமாக நீங்கள் சட்டமன்றத் திற்கு வந்தீர்கள். ஆனால் இன்றைக்கு அதே சட்ட மன்றத் தொகுதியில் உள்ள மக்கள் எங்களுடைய கட்சி உறுப்பினரை அரியணையில் அமர்த்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் உங்கள் இலட்சியத்தை ஏற்கவில்லை என்றுதான் நான் எண்ணு கிறேன்.

காவேரிப் பிரச்னையிலே நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ? இதுவரையிலே, காவேரிப்பிரச்னையிலே இதுதான் எங்கள் நிலை என்று நீங்கள் சொன்னது உண்டா? மாநிலத்திற்கு மாநிலம் நீங்கள் கொள்கையிலே மாறுபடுகிறீர்கள். கர்நாடகத்தில் உள்ள கம்யூனிஸ்டுகள் அங்கே ஒரு மாதிரியாகப் பேசுவதும், ஆந்திரா விலே இருப்பவர்கள் அங்கே ஒரு மாதிரியாகப் பேசுவதும் ஆக நீங்கள் இங்கே தமிழகத்திலே காவேரிப் பிரச்னையைக் கிளப்புகிறீர்கள் என்றால், அதில் எங்களுக்குத் தெளிவு இல்லை என்று சொல்லுகின்ற கம்யூனிஸ்ட் நண்பர்களைப் பார்த்து நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். காவேரிப் பிரச்சினையிலே உங்களுடைய தெளிவான திட்டம்தான் என்ன ? கொள்கைதான் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

இலங்கைப் பிரச்சினையிலே, உங்களுடைய கூட்டணிக் கட்சி யாக திராவிட முன்னேற்றக் கழகம், இராணுவத் தீர்ப்பு காண வேண்டுமென்று சொல்கிறது. நீங்கள் அந்தக் கட்சியோடு கூட்டணியில் இருக்கிறீர்களே, அவர்கள் சொல்லுகின்ற இந்த நிலையில் உங்களுக்கு உடன்பாடு உண்டா, உங்களுடைய உறுதியான கொள்கைதான் என்ன என்று கேட்க விரும்புகிறேன்.

மொழிப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளுங்களேன், எங்க ளுடைய நாவலர் அவர்களைப் பற்றிச் சொல்லும்போது வார்த்தை அலங்காரங்கள், குறள் ஆகியவை என்று சொல்கிறீர்கள். நாங்கள் இந்த ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, தமிழுக்குத் தனிப் பெருமையை, தமிழ் இனத்திற்குத் தனிப் பெருமையைப் புரட்சித் தலைவரவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அழகான திருக்குறளை அழகான தமிழ் மொழியிலே வடித்துக் கொடுத்தது



கூட அவர்களுக்குப் பொறுக்கவில்லை என்றால் உங்களுக்கு மொழிப்பற்று இருக்கிறதா என்று நான் கேட்க விரும்புகிறேன். மொழிப்பிரச்னையில் உங்கள் கொள்கை என்ன ? நாங்கள் இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம். இங்கே இந்தி பேசாத மக்கள் விரும்புகின்ற வரையில் ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கும் என்று நேரு கொடுத்த உறுதி மொழியைச் சட்டமாக்க வேண்டு மென்று எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி வருகிறார்கள். இதில் உங்களுடைய நிலை என்ன என்பதை கேட்க விரும்புகிறேன்.

ஆகவே, இப்படி ஒவ்வொன்றிலேயும் நீங்கள் தெளிவு இல்லா மல், இடத்திற்கு இடம், மாநிலத்திற்கு மாநிலம் மாறுபட்ட கருத்தைச் சொல்கின்ற நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட நீங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் திற்கு தெளிவு இல்லை, அறிவு இல்லை, ஆற்றல் இல்லை என்று சொல்வீர்களேயானால், புரட்சித் தலைவர்களோடு நீங்கள் இந்தக் காலத்தில் 12 பேர்கள் இருந்தீர்கள், ஆனால் இப்பொழுது எத்தனை பேர்கள் இருக்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன். இன்றைக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு வேதனையோடு இருக்கிறீர்கள். இந்த நிலை தொடரக் கூடாது. உங்களைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

(நண்பகல் 12—00)

*திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் நிதி அமைச்சராகப் பதவியேற்று தொடர்ந்து ஏழாம் ஆண்டாக அளித்துள்ள இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பற்றி நான் சேர்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே ஒருசில கருத்துக்களை எடுத்துவைக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் நிதி அமைச்சரால் அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த நிதி நிலை அறிக்கையிலே வரவு-செலவு கணக்குகளைத் திருப்பி, திருப்பிப் பார்த்தால், இருட்டறையிலே கருப்புப் பூனையை பார்க்கின்ற அளவிற்குத்தான் இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கை இங்கே தரப்பட்டிருக்கிறது.

[திரு. அ. மலர்மன்னன்] [1986 மார்ச் 20

எங்கள் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராகவும் நிதி அமைச்சராகவும் இருந்த பொழுது 1975–76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் அளித்தார். அப்போது தமிழக அரசின் மொத்த வருவாய் ரூ. 550 கோடியாக இருந்தது. அது தற்போது 6 மடங்குக்கு மேல் உயர்ந்து வரும் நிதியாண்டின் முடிவில் ரூ. 3,000 கோடிக்குமேல் உயரும் என்று காவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆனால், எங்கள் நாலத்தில் தமிழகம் அடைந்த முன்னேற்றம் இப்போது அடைந்திருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வளர்ச்சிப் பணிகள் அவ்வளவு வேகத்தில் நடைபெறுகின்றனவா என்பதையும் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

'' நாட்டு வாட்டம் போக்கிட
நோட்டடித்தால் போதாது ''

என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957–லே கூறினார்கள். அதையே சற்று மாற்றி இப்போது சொல்ல வேண்டுமென்றால் ''வரியில்லாத வரவு-செலவுத் திட்டத்தை அளித்தால் மட்டும் நாட்டின் வாட்டத்தைப் போக்கிவிட முடியாது '' என்று கூறலாம்.

இன்று தமிழகத்திலே எரியூட்டும் பிரச்சினையாக இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கையில் எந்தப் பரிகாரமும் காணப்படவில்லை. நமது மாநில முதல் அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழுவின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அளித்துள்ள முன்னுரையில் பின்வருமாறு கூறியிருந்தார். " Although we can claim to occupy the third rank from the top in Industrial Production it is a sobering thought that in unempliment also we occupy the unenviable position of being the third largest State in terms of the number of unemployed. ''

தமிழகத்திலே நிலவி வருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை பற்றி நமது முதல் அமைச்சர் அவர்களே இதுபோன்ற படத்தைச் சித்தரித்துக் காட்டி இருக்கிறார்கள். முதல் அமைச்சர் அவர்கள் மற்றொரு கருத்தையும் இதே திட்டக் குழு அறிக்கையிலே கூறி இருக்கிறார்கள். வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கிற மக்களைப் பற்றி அவர் எடுத்துச் சொல்கின்ற பொழுது '' it is a matter for deep grief that the number of people below the poverty line in Tamilnadu is more than in most of the States in the country. '' என்று கூறியிருக்கிறார்கள்.



1986 மார்ச் 20] [திரு. அ. மலர்மன்னன்]

தமிழகத்தின் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசிக்கும் மக்களின் எண்ணிக்கை நமது நாட்டில் உள்ள பெரும்பான்மையான மாநிலங்களைவிட தமிழகத்தில் அதிகமாக உள்ளது என்று முதல் அமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். இந்த ஆட்சியில் சாராயம் தண்ணீர் போல் ஓடி மேலும் மேலும் மக்கள் வறுமைக் கோட்டிற்கே தள்ளப்படும் அவல நிலையைத் தான் இன்று காண்கிறோம். தேர்தல் நேரத்திலும், ஆளுநர் உரையிலும் மதுவிலக்கு மீண்டும் கொண்டுவரப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், நிதிநிலை அறிக்கையிலே எந்த அறிவிப்பும் விளம்பரமும் இல்லாததைக் காணும்போது, இந்த அறிவிப்பு கானல் நீராகத்தான் காட்சி அளிக்கிறது என்று கூற விரும்புகிறேன்.

16 ஆண்டுகளுக்குப் பின்னால தமிழகத்திலே ஊராட்சி மன்ற தேர்தல்கள் நடைபெற்று நான் சார்ந்திருக்கும் இயக்கம் பெரும்பான்மையான நகராட்சிக்களைக் கைப்பற்றியிருக்கின்றது.

இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் சுதந்திர தினத்தன்று, கோட்டையில் கொடியேற்றிவிட்டு அதில் சில அறிவிப்புக்களை முதல் அமைச்சர் வெளியிட்டார். அதிலே ஒன்று, நகராட்சிப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்கும் குடிநீர் அபிவிருத்தி செய்யவும் தெரு விளக்குகள் போடவும், தாய் சேய் நல விடுதி கட்டவும், ஒரு மூன்றாண்டுத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார். நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டு ஜூன் மாதம் நகராட்சி நிர்வாகத்திற்கும் குடிதண்ணீர் விநியோகத்திற்குமான தனது கொள்கைக் குறிப்பில் இதனைத் தெரிவித்தார். முதலமைச்சர் அறிவித்த நகராட்சிகளின் மூன்றாண்டு வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ. 145.52 கோடியில் ஒரு திட்டம் அரசினால் பரிசீலிக்கப்படுகிறது என்று சொன்னார். ஆனால், இந்த மூன்றாண்டுத் திட்டத்திற்கு ஏதேனும் நிதி ஒதுக்கப்படுமா என்று பார்த்தால் இந்த நிதி நிலை அறிக்கையில் எதுவுமே குறிப்பிடப்படவில்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை, தி. மு. கழகம் பெரும்பான்மையான நகராட்சிகளைக் கைப்பற்றிய காரணத்தால் அரசு இத்திட்டத்தை நிறைவேற்றாமல் பின்வாங்குமா என்ற அச்சம் எங்களுக்கெல்லாம் இருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

நகராட்சிகளுக்கு கடன் வசதிகளை அளிக்க நகராட்சி நிதி நிறுவனம் Municipal Finance Corporation ஒன்று உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

'காகிதப்பூ மணக்காது' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். ஜனவரி மாதம் இந்த மன்றத்தில் தொடங்கிய கூட்டத்தைத் துவக்கி வைத்து தமிழக ஆளுநர் அவர்கள் பேசுகையில் தமிழகத்தில் 30 இலட்சம் பேருக்கு வீட்டுவசதி அளிக்கும் வகையில் ஒரு திட்டம் மேற்கொள்ளப்படும் என்றும், இத்திட்டத்தின்கீழ் வரும் மூன்றாண்டுகளில் ஆண்டு ஒன்றுக்கு 10 இலட்சம் வீடுகள் ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கும் கட்டப்படும் என்றும் அறிவித்தார். ஆதி திராவிடர்களுக்கும், பழங்குடியினருக்கும், நரிக்குறவர்களுக்கும் மற்றும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வசிப்பவர்களுக்கும் ஒரு சிறிய வீடு கட்ட ஒரு குடும்பத்திற்கு குறைந்தபட்சம் மூன்று சென்ட் நிலம் தேவைப்படும். வீடு கட்டும் செலவு சுமார் 10,000 ரூபாய் பிடிக்கும். ஆகவே, 10 இலட்சம் வீடுகள் கட்ட ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் வீதம் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு மூவாயிரம் கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி 26 கோடி ரூபாய்தான். இத்திட்டத்தை நிறைவேற்ற ஆண்டு ஒன்றுக்கு 1,000 கோடி ரூபாய் தேவையானால் அந்த நிதி எங்கே? நீங்கள் ஒதுக்கியுள்ள 26 கோடி ரூபாய் எங்கே? இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியில் 3 சதவீதத்தைக் கூட இந்த அரசு ஒதுக்கவில்லை. ஆகவே இதுபோன்ற திட்டங்களை அறிவித்து மக்களை ஏமாற்ற வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வீட்டுவசதி வாரியத்திலே நடைபெறுகின்ற ஒருசில குறைபாடுகளை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். வீட்டுவசதி வாரியத்தில் இன்றைய தினம் வாடகைக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறார்கள்.

* * *

* * *

* * *

திரு. துரை கோவிந்தராசன் :

* * *

திரு. அ. மலர்மன்னன் :

* * *

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





அடுத்து, விற்பனை வரி சம்பந்தமாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1938 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் மதுவிலக்கு அறிமுகப்படுத்தப்படுவதால ஏற்படும் இழப்பை ஈடுசெய்ய ஒரு ரூபாய்க்கு ஒரு பைசா விற்பனை வரியாக விதித்தார். ஆனால் இன்று அந்த விற்பனை வரி பூதாகரமாக வளர்ந்து ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் கோடி ரூபாய்க்குமேல் அரசுக்கு வருவாயை ஈட்டித் தந்துகொண்டிருக்கிறது.

(பிற்பகல் 12–10)

இது தமிழக அரசின் மொத்த வருவாயில் சுமார் மூன்றில் ஒரு பங்காகும். அந்த அளவுக்கு வருவாய் ஈட்டித் தருகின்ற வணிகர்கள் வணிகவரித் துறையால் கேவலமாக நடத்தப்படுகிறார்கள். வணிகவரித் துறை அலுவலகங்களில் உள்ள அலுவலர்கள் வியாபாரிகளுக்கு உட்காரக்கூட நாற்காலி கொடுப்பதில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. ந. சிவஞானம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,

* * *

திரு. அ. மலர்மன்னன் : இன்றைய தினம் ஏதோ 20 கோடி ரூபாய் அளவுக்குச் சில சலுகைகள் அறிவிக்கப்பட்டதாக அதாவது வியாபாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு வியாபாரிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற லைசன்ஸ் கட்டணத் தொகை ரூபாய் 10-லிருந்து 100 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

அதுபோலவே குடோன் (Godown) லைசன்ஸ் 5-ஆக இருந்ததை 25 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி எல்லாம் உயர்த்தியிருப்பது கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகமாகும். இன்றைய தினம் தமிழகத்தில் சுமார் 2,80,000க்கு மேற்பட்ட ரிஜிஸ்ட்டர்ட் டீலர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். அதுபோலவே குடோன் கிளைகள் வைத்திருக்கின்ற வியாபாரப் பெருமக்கள் 3,00,000-க்கு மேல் இன்றைக்கு இருக்கிறார்கள். இவர்களுக்கு நீங்கள் உயர்த்தி

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருக்கிற கட்டணத்தின் மூலம் ரூ. 20 கோடி மேல் அதாவது ஒன்றரை மடங்கு அதிகமாக இன்றைய தினம் வருவாய் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ வெல்லம், சர்க்கரைக்கு விதிவிலக்கு அளித்திருப்பதாகவும், வரி குறைத்து இருப்பதாகவும், தவறான தகவலை ஆளும் கட்சி தரப்பிலே இருந்து சொன்னார்கள். ஆனால், ஏழை எளிய மக்கள் பயன்படுத்துகின்ற நாட்டுச் சர்க்கரைக்கு அவ்வாறு விதிவிலக்கு அளிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், வெல்லம், சர்க்கரைக்கு எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 5 சதவீதம் கொள்முதல் விற்பனை வரியாக இருந்தது. ஆனால் பல முனை விற்பனை வரியாக 5 சதவீதம் ஆக்கி இருக்கிறீர்கள். இப்போது மீண்டும் 8 சதவீதம் ஒருமுனை விற்பனை வரியாக ஆக்கி இருக்கிறீர்கள். இதிலே ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களைப் பற்றி இங்கே சொல்வது என்னுடைய கடமையாகும். வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கின்ற வியாபாரி எளிதாக நாட்டுச் சர்க்கரை, வெல்லத்திற்கு 4 சதவீதம் சி.எஸ்.டி. கட்டி விட்டு அனுப்பிவிடுவார். ஆனால், உள்ளூரிலே இருக்கிற ராமனும் சுப்பனும் இந்த வெல்லத்தையும் சர்க்கரையையும் வாங்கி சாப்பிட வேண்டுமென்றால் 8 சதவீதம் வரியைக் கட்டிவிட்டுத் தான் வாங்கி சாப்பிட முடியும் என்ற நிலையை உருவாக்கியிருக்கிறீர்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போலவே எவர்சில்வர் பாத்திரங்களுக்கு 10 சதவீதம் வரி என்று இருந்ததை இரண்டாகப் பிரித்து, முதல் நிலை விற்பனையில் 6 சதவீதம் என்றும் இறுதி விற்பனையில் 4 சதவீதமாகவும் மாற்றியிருக்கிறார்கள். அதனால் சர்க்காருக்கு கூடுதலாக வருவாய் கிடைக்க வழியில்லை. ஆனால், எவர்சில்வர் பாத்திரங்களின் விற்பனை மீதான வரி ஒரே இடத்தில் இருந்தால் சேல்ஸ் டாக்ஸ் ஆபிசர்கள், அவர்களிடம் மட்டும் செல்ல வேண்டியிருக்கும். ஆனால், இத்தகைய நடைமுறையில் அதிகாரிகளுடைய தொல்லைகளுக்கு உங்களுடைய இந்த வரிக் கொள்கையினால் வியாபாரிகள் அதிகமாக ஆளாவார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு லட்சத்திற்கு மேல் வரிவிதிப்பில் பாதிப்பு இருந்துக் கொண்டிருக்கிறது. ஆனால், வியாபாரிகள் கணக்குக் காட்டி, ரிடர்ன்கள் சப்மிட் செய்து, அதை ரி-பண்ட் பெறுகின்ற வகையிலே, அவர்களிடம் விட்டு விட்டு, அவர்களுக்கு ரி-பண்டும் கொடுத்துவிட்டு பிறகு வாங்குபவர்களிடம், வரியை வசூலிக்கின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அவைகளையெல்லாம் ஒழுங்காக மாற்றி அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



அதேபோல கூடுதல் விற்பனை வரி என்று ஒரு வரியை தமிழகத்திலே நாம் வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அந்தக் கூடுதல் விற்பனை வரியின் மூலமாக வியாபாரிகள் படுகின்ற தொல்லை மிக அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறது. காரணம் வியாபாரிகள் நஷ்டம் அடைந்தாலும், லாபம் அடைந்தாலும் அந்த கூடுதல் வரியை கட்டியாக வேண்டும் என்று இருக்கிறது. நஷ்டம் வருகின்ற வியாபாரிகள் எப்படி அந்தக் கூடுதல் வரியைக் கட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, அந்தக் கூடுதல் வரியை அறவே நீக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைய தினம் அதிகமாக வியாபாரம் செய்ய வியாபாரிகளை ஊக்குவிப்பதற்குப் பதிலாக, இந்தக் கூடுதல் வரியை 1.25 சதவீதம் உயர்த்தி போட்டிருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, வியாபாரிகளின் நீண்டநாள் கோரிக்கையான ஒருமுனை விற்பனை வரியாகவே எல்லாப் பொருள்களுக்கும் வைக்கப்பட வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்திச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். உங்களால் நியமிக்கப்பட்ட கைவார் கமிட்டியிலேயே, எல்லாப் பொருள்களுக்கும் ஒருமுனை வரி இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வொர்க்ஸ் கான்டிராக்ட் மீது விற்பனை வரி விதிக்கப்பட்டுள்ளது. அந்த வரியை அமல் படுத்துகின்ற நேரத்தில் பல நடைமுறைச் சிக்கல்கள் உருவாகும் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு, அந்த வரியை அறவே நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வர்த்தக விற்பனை வரியைப் பொறுத்த வரையில் இருக்கின்ற சோதனைச் சாவடிகள் எல்லாம் வேதனைச் சாவடிகளாகத்தான் வியாபாரிகளுக்கு இருக்கின்றன என்பதையும், அந்த வேதனைச் சாவடிகளால் வியாபாரிகள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொண்டு (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை) : சீக்கிரம் முடித்து விடுங்கள், 20 நிமிடங்களுக்கு மேல் பேசி விட்டீர்கள்.

திரு. அ. மலர்மன்னன் : நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நீதிக்குத் தலைவணங்கு என்ற படத்திலே நடித்தார்கள். ஆனால் இன்றைக்கு தமிழகத்திலே நீதியினுடைய நிலைமை என்ன நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. அ. மலர்மன்னன்] [1986 மார்ச் 20

திருச்சி மாவட்டத்திலே கிட்டத்தட்ட 7 அல்லது 8 மாவட்ட முன்சீப் பதவிகள் கடந்த ஓர் ஆண்டுக்காலமாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. அதனால் வழக்குகளுக்கு வருகின்ற பொதுமக்கள் மிகவும் சங்கடங்களுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். திருச்சி நகரத்திலே அரசால் நியமிக்கப்பட வேண்டிய பப்ளிக் பிராசிக்யூட்டர், கூடுதல் பப்ளிக் பிராசிக்யூட்டர் அரசு வழக்கறிஞர்கள் ஆகியோர் பதவிகள் ஓர் ஆண்டுக் காலமாக காலியாக உள்ளன. அவற்றிற்கு யாரையும் போட முடியாமல், அங்கேயிருக்கிற இரண்டு அமைச்சர்களுக்குள்ளே உள்ள சண்டையின் காரணமாகத்தான், அந்த இடங்கள் எலலாம் காலியாக நிரப்பப்படாமல் இருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அடுத்து சிறு விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கும் திட்டம் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள்.. (மணியடிக்கப்பெற்றது).

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986–87 ஆம் ஆண்டின் பட்ஜெட் விவாதத்தின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் இயக்கத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு இந்த அரசு, மதிப்பிற்கும் மரியாதைக்குப் உரிய திருவள்ளுவர் தந்திருக்கக்கூடிய புரட்சிகரமான கருத்துக்களை எடுத்துக் கொண்டு, அதன் அடிப்படையில் இங்கே வரவு செலவு மதிப்பீடு திட்டத்தை வைத்திருக்கிறார்கள். 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக பொய்யாமொழியை உருவாக்கிய திருவள்ளுவர் தந்த கருத்தை எடுத்துக் கொண்ட நம்முடைய அரசுக்கு மிகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12–20)

அதே நேரத்தில் அதற்கு பின்னாலே 19, 20, 21ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பொருளாதாரச் சிந்தனையாளர்களான சிலிக்கேன், ப் ட்மென்ஹட்டன் கனன் போன்றவர்கள் சொன்ன கருத்துக்களுக்கு முத்தாய்ப்பு வைக்கக் கூடிய அளவிற்கு இன்றைக்கு இந்த மன்றத்தில் சட்ட தந்தையாக, பொருளாதார தந்தையாக நின்றுகொண்டிருக்கக்கூடிய பாபா சாகேப் அம்பேத்கார் எழுதித் தந்திருக்கிற பொருளாதார சிந்தனையை—இந்த மாமன்றத்தில் பட்ஜெட் இங்கே தரப்படுகிறபோது—மறந்திருக்கிறார்கள் என்பது இந்த அறிக்கையை முனைந்து பார்க்கிறபோது நன்றாகத் தெரிகிறது.



1986 மார்ச் 20] [திரு. வி. தங்கவேலு]

இங்கே பற்றாக்குறை பட்ஜெட்டாகப் போட்டு 12 கோடி 24 லட்சம் பற்றாக்குறை என்று காட்டியிருக்கிறார்கள். இந்த மாமன்றத்தில் ஒரு முக்கியமான கருத்தை நான் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். ஒரு நாடு வாழ வேண்டும். வளர வேண்டும், ஓங்க வேண்டும், உயர வேண்டும் என்றால் அந்த நாட்டில் இருக்கக்கூடிய நடுத்தர மக்கள், கீழ்த்தளத்தில் இருக்கக்கூடிய மக்கள் ஆகியோர்களுக்கு நல்லபல கருத்துக்களை எடுத்துச்சொல்லி, பற்றாக்குறை பட்ஜெட்டை போடுகிறபோது அந்தப் பற்றாக்குறை வாயிலாக மக்கள் வரிப் பணத்தை செலுத்தி அந்தப் பற்றாக்குறையை நிறைவுசெய்து அதனை சர்ப்பிளஸ் பட்ஜெட்டாக மாற்றக்கூடிய அளவிற்கு புதியதொரு பட்ஜெட்டை உருவாக்கி தந்தால்தான் அந்த நாடு நல்ல நாடாக இருக்க முடியுமென்ற கருத்திலே பாபா சாகேப் அம்பேத்கார் அவர்கள்

'Democracy is not a form of Government but it is a form of social organisation.' என்று குறிப்பிட்டு 'டெமாக்ரசி' என்ற வார்த்தைக்கு ஒரு இலக்கணத்தை தந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் சுதந்திரம் என்றால் என்னவென்று சொல்கிறபோது கூட சுதந்திரம் என்பது சிறுபான்மை மக்கள், நடுத்தர மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக்கூடிய மக்களின் சிந்தனைகளை ஒன்றுபடுத்தி ஒரு அரசு நடத்தி, அது செயல்படுகிற முறையைத் தான் சுதந்திரம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பட்ஜெட் இங்கே போடப்பட்டிருக்கிறதா என்று முனைந்து பார்க்கிறபோது அப்படி இருப்பதாகத் தெரியவில்லை. 1986–87ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 92 லட்சம் மெட்ரிக் டன்னாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அரிசி குறைந்த விலையில் விற்பனை செய்வதால் சுமார் 100 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறதென்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 100 கோடி இழப்பு எதனால் ஏற்படுகிறது என்று பார்க்கிறபோது, அது மலை முகடுகளில் வால்பாறை, நீலகிரி, கொடைக்கானல் போன்ற பகுதிகளில் வாழ்கின்ற மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட, வறுமைக்கோட்டிற்கு கீழே இருந்து அல்லப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு அரிசி விநியோகம் செய்ததால் ஏற்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அவர்களுக்கு இந்த அரசு அரிசி விநியோகிக்கவில்லை என்பது கண்கூடாகத் தெரிகிறது. அப்படியிருந்தும் 100 கோடி ரூபாய் இழப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது எங்களுக்கு புரியாத புதிராக இருக்கிறது.

அடுத்து உபரி நிலங்களை கையகப்படுத்தி ஏழை எளிய மக்களுக்கு பிரித்து தருகிறது அரசு என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த இடத்தில், எந்த ஊரில் உபரி நிலங்களை

கையகப்படுத்தி எடுத்து பிற்பட்ட மக்களுக்கு கொடுத்திருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்களைப் பார்த்தால், இந்த நிலங்கள் இதுவரையில் பிரித்துத் தந்ததாக புள்ளிவிவரங்களில் தெரியவில்லை.

அடுத்து ஒருங்கிணைந்த சத்துணவு—சுகாதாரப் பாது காப்புத் திட்டத்திற்கு 1986–87ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 168.92 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவ-மாணவியர்களுக்கு சீருடைகள் வழங்குவதிலும் நூல்கள் வழங்குவத்லும் முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. இந்தச் சீருடைகள், நூல்கள் வழங்குவது பல இடங்களில் ஆண்டு இறுதியில்தான் வழங்கப்படுகின்றன. இதனால் ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட மாணவ மாணவியர்களுக்கு கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் கிடைக்காமல் அவர்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்து நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் தலைவிரித்து ஆடக்கூடிய நிலைமை இருக்கிறது. வேலை வாய்ப்புப் பற்றி சொல்கிற போது 1986–87-ஆம் ஆண்டில் 7.33 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்த அரசு திட்டமிட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். திருச்சி என்று சொல்லக்கூடிய முக்கிய மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் கிட்டத்தட்ட 2 லட்சம் பேர்கள் தங்களுடைய பெயர்களை பதிவு செய்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட தமிழகம் முழுவதும் 30 லட்சம் பேர்கள் வேலை வாய்ப்பு இல்லாத நிலைமையில் இருக்கிறபோது 7.33 லட்சம் பேர்களுக்கு வேலை தருவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது என்று சொல்கிறபோது, மற்றவர்களுடைய நிலை என்ன ? இது வேலைவாய்ப்பில் அரசு ஒரு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்துக் கொண்டு இருக்கிறது என்பதை தெளிவாகக் காட்டுகிறது. நிரந்தரமான வேலைவாய்ப்பை அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள அனைவருக்கும் வழங்கக்கூடிய முறையில் ஒரு திடமான கொள்கை ஏதாவது இந்த பட்ஜெட்டிலே சொல்லப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை என்று சொல்லக்கூடிய அளவில் தான் இருக்கிறது.

அடுத்தபடியாக இன்றைக்கு மின்சாரத்தை எடுத்துக் கொண்டால் 1986–87-ல் 395 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. இப்படி கோடிக்கணக்கான ரூபாய்களை மின்சாரத்திற்கும், மின்சார வளர்ச்சிக்கும், தமிழகத்தில் கொட்டிக் கொடுக்கப்படுகிறது. இந்த மின்சார வளர்ச்சிக்கு எந்த அளவிலே இன்றைக்கு இந்தப் பணம் செலவு செய்யப்படுகிறது என்று சொல்கிறபோது, ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கக்கூடிய 395 கோடி ரூபாயும் தனியார்களுடைய பையை



நிரப்பக் கூடிய அளவிற்குத்தான் இந்தப் பணம் போய்க் கொண்டிருக்கிறது என்பதை அரசு நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லவேண்டுமானால் இன்றைக்கு என்னுடைய தொகுதியாக இருக்கக்கூடிய வால்பாறை பகுதியிலே காடம்பாறை என்ற நீரேற்று மின் நிலையம் இருக்கிறது. ஹைடல் பவர் புராஜெக்ட். அந்த காடம்பாறையிலே இருக்கக்கூடிய தனியார் துறை என்று சொல்லக்கூடிய கான்ட்ராக்ட்காரர்கள், குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் என்று சொல்லக்கூடிய அந்த நிறுவனம், அங்கே போடக்கூடிய பணத்தை, கொடுக்கக்கூடிய பணத்தை அப்படியே எடுத்துக் கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு இன்றைக்கு கோடிக் கணக்கான ரூபாய்களை தனியார் நிர்வாகம், தனியார் ஒப்பந்தக்காரர்களுடைய பாக்கெட்டை நிரப்பக்கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தால், 395 கோடி ரூபாய் மின்சார வளர்ச்சிக்காக நாம் செலவு செய்கிறோம் என்றால், அரசுப் பணம், மக்களுடைய வரிப்பணம், மக்களுக்குப் பயன்படாமல் போய் விடுகிறது. குறிப்பாக மின்சார போர்டிலே இருக்கக்கூடிய அரசுத் துறை அதிகாரிகள் கூட அந்தப் பணத்தை எடுத்து பயன்படுத்தி, பக்குவமாக இந்த நாட்டுக்கு மின்சாரத்தை வழங்க வண்டும் என்று நினைக்கிறபோது, அப்படி செய்யக் கூடாது, அது தனியார் ஒப்பந்தக்காரர்களுக்கு கிடைக்க வேண்டும், தனியார் கான்ட்ராக்டர்களுக்கு கிடைக்கவேண்டும் என்று சொல்லி, 395 கோடி ரூபாய் இன்றைக்கு நாட்டிலே பல வகைகளிலே தனியார்களுடைய பாக்கெட்டை நிரப்பக் கூடிய அளவிற்கு பட்ஜெட்டிலே போடப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறபோது, இந்தச் செலவினங்களை இந்த அரசு மாற்றி அமைக்க முயலுமா ? என்பதை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

ஏதோ ''டிபார்ட்மென்ட்'' ஓர்க் என்று சொல்லி, அதைச் செய்தால் இன்றைக்கு குந்தா பவர் புராஜக்ட், மேட்டூர் டாம் பவர் புராஜக்ட் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நல்ல தரமான அணைக்கட்டுகளைக் கட்டி இந்த நாட்டுக்கு நிலையான புராஜக்ட்டைக் கொடுத்ததைப் போல கொடுக்க முடியும். ஆனால் இன்றைக்கு தனியார் துறைக்கு இதை விட்ட காரணத்தால் காடம்பாறையிலே கிட்டத்தட்ட 200, 250 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறதே தவிர, நியாயமான, ஒழுங்கான நன்மையான முறையிலே அது செலவு செய்யப்படவில்லை. எனவே இதை அரசு மாற்றி அமைக்க முடியுமா ? என்பதை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இங்கே பல குறைகளைப் பற்றி எடுத்துச்சொல்கிற போது, நம்முடைய மரியாதைக்குரிய உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் மிகவும் கொதிப்போடு பேசினார்கள் அவர்கள் கொதிப்பு அடையும் அளவிற்கு இங்கே எதுவு

இல்லை என்பதை நான் அவர்களுக்கு சொல்ல விரும்புகிறேன். உண்மையை நாங்கள் சொல்கிறோம். அப்படி உண்மையை சொல்கிறபோது உங்களுக்கு இப்படிப்பட்ட குழப்பங்கள் வரலாம். இன்றைக்கு பஞ்சாயத்து போர்டுகளை எடுத்துக் கொண்டால், ஜனநாயக அடிப்படையிலே வெற்றி பெற்று அங்கே வந்திருக்கக்கூடியவர்களுக்கு, ஜனநாயக அடிப்படையிலே அவர்களுக்கு அதிகாரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. அந்த அதிகாரங்கள் பறிக்கப்படவேண்டும் என்று சொல்கிறார்கள். இந்த மாநிலததிற்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று ஒரு பக்கம் கேட்கிறீர்கள். ஆனால் உங்கள் கையிலே கொடுக்கப்பட்டு இருக்கக்கூடிய அதிகாரங்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து போர்டு தலைவர்களுக்கு கொடுக்கக்கூடாது என்று நீங்கள் நினைக்கிறபோது, எந்த அளவிற்கு நீங்கள் அதிகார துஷ்ப்ரயோகம் செய்யவேண்டும் நினைக்கிறீர்கள் என்பதை நினைக்கிறபோது தான் எங்களுக்கு இப்படிப்பட்ட மனக்கசப்பு உண்டாகிறது. அப்படிப்பட்ட ஒரு போக்கு மாற்றப்பட்டு ஜனநாயகம் என்பது, எல்லா இடங்களிலேயும், எல்லோருக்கும் எல்லா வழிகளிலேயும் கிடைக்கவேண்டும். அப்படி கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் இந்தக் கருத்தை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறோம். உங்களை புண்படுத்துவதற்காகச் சொல்கிறோம் என்று தயவு செய்து நீங்கள் நினைக்க வேண்டாம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து வீட்டு வசதி வாரியத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தை பற்றிச் சொல்கிறபோது கிட்டத்தட்ட நம்முடைய யட்ஜெட்டிலே 26 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12.30).

வீடு கட்டுவதற்கு குறைந்தது 10 ஆயிரம் ரூபாய் என்று வைத்தால் 26 கோடி ரூபாய்க்கு 26,000 வீடுகள் தான் கட்ட முடியும். இன்றைக்கு வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக் கூடிய மக்கள் சுமார் 5 இலட்சம் பேர்கள் ; குறிப்பாகக் எடுத்துக் கொண்டால்கூட இந்த 5 இலட்சம் பேர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கு உங்களுக்கு 20 ஆண்டுகள் தேவைப்படும். இதைப் பார்க்கும்போது இந்தத் திட்டம் மக்களை முழுக்க முழுக்க ஏமாற்றுகின்ற திட்டம் என்பது தெளிவாகத் தெரிகிறது. அது மட்டுமல்ல இதை ஒரு மாய மான் திட்டம் என்று கூட சொல்லலாம். அது மட்டுமல்ல It is a handicapped budget என்று கூட சொல்லலாம். அதுமட்டுமல்ல It is a sickening budget





என்று கூட சொல்லலாம். It is an unhealthy budget என்று கூட சொல்லலாம். அதுமட்டுமல்ல இதை ஓநாய் பட்ஜெட் என்றுகூட சொல்லலாம். அந்த அளவுக்கு மக்களுக்கு மகிமையான கருத்துக்களை எடுத்துச்சொல்கின்றதை நினைக்கும்போது எனக்குக் கடந்த கால கம்பராமாயண நிகழ்ச்சியும் இங்கே கண்ணுக்குத் தெரிகிறது. மாயமானைத் தேடி அன்றைக்கு இராமச்சந்திரன் ஏமாற ஏமாற ஓடினார். அதை போல இன்றைக்கு புரட்சி தலைவரவர்கள் ஒரு திரைப்படத்திலே பாடி இருக்கிறார்கள். ஏமாற்றாதே, ஏமாறாதே என்று ஏமாற்றாதே, ஏமாறாதே என்று பாடிய பாடல் இன்றைக்கு எங்களுக்காகப் பாடிய பாடலாக இருக்கிறதென்று நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டுமல்ல, அவருடைய தொகுதியாக இருக்கக் கூடிய ஆண்டிப்பட்டியில் கூட இப்படிப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டங்கள் சரியாக செய்யப்படவில்லை என்று 'கல்கி' என்று சொல்லக் கூடிய வாரப் பத்திரிக்கையிலே, ஆண்டிப்பட்டியிலே இருக்கக் கூடிய குப்பம்மாள் என்று சொல்லக் கூடிய அந்த அம்மையார் எடுத்துச் சொல்லி இருக்கக் கூடிய கருத்துக்கள் கூட அந்தப் பத்திரிக்கையிலே வந்து இருக்கிறது என்று சொல்கிறபோது, ஏமாற்றாதே, ஏமாறாதே என்று சொல்லக் கூடிய கருத்துதான் இன்றைக்கு எங்களுக்காக பாடப்பட்ட ஒரு பாடல் போலத் தெரிகிறது.

இங்கே சினிமாவைப் பற்றி எடுத்துச் சொல்கிறபோது இன்றைக்கு இருக்கக் கூடிய புரட்சித் தலைவரவர்கள் சினிமாவுக்கு முக்கியத்துவம் தரக் கூடியவராக இருக்கிறார்கள். ஆனால் அதே நேரத்திலே சினிமா டிக்கெட் வரி உயர்வதனால் சினிமா உலகம் அழியக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. சினிமா கேளிக்கை வரி 10 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. அப்படிச் சொல்கிறபோது வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கக் கூடிய, வாடிக்கிடக்கக் கூடிய கோடிக்கணக்கான மக்கள் சினிமா என்று சொல்லக்கூடிய அந்த சினிமாவைத்தான் இன்றைக்கு ஒரு சாதாரண பொழுது போக்கு என்று சொல்லக் கூடிய cheapest entertainment ஆக இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிறபோது அந்த சினிமாவைக் கூட பார்க்க முடியாத அளவுக்கு ஒரு ரூபாய் டிக்கெட் இன்றைக்கு 3 ரூபாயாக ஆகக் கூடிய அளவுக்கு 10 சதவீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொல்கிறபோது அருமை சகோதரர் டாக்டர் ராமலிங்கம் அவர்கள் இது பற்றி சொல்லாமல் வேறு ஏதோ ஆதி திராவிடர்கள், கருப்பட்டி வெல்லம் சாப்பிடுகிறார்கள் ; ஆதி திராவிடர்கள் வாளியை எடுத்துக் கொண்டு போகிறார்கள் என்று சொல்கி...போது ஒரு சமுதாயத்தை குறை கூறி இன்னமும் இப்படி சாடிக் கொண்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் ; ஒரு சமுதாயத்தை குறிப்பிட்டுச் சொல்வது "அண்டச்சபிலிட்டி" ஆக்ட்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் ஒரு சமுதாயத்தைப் பற்றி குறை சொல்லவில்லை. அதைப் புரிந்து கொண்டு பேசுங்கள். அவர்களெல்லாம் அதை உபயோகிப்பதையே விட்டு விட்டார்கள். ஆகையால் சமுதாயத்தைக் குறை சொல்வதாக ''மிஸ்லீடிங்காக'' சொல்ல வேண்டாம்.

திரு. வி. தங்கவேலு : அடுத்து இங்கே மெத்த பணிவன்போடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுவது இங்குள்ள சாராயக் கடைகளை. நான் மெத்த பணிவன்போடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், கங்கை வற்றிப்போனாலும் போகலாம் ஆனால் இந்த நாட்டில் மது வெள்ளம் பாய்ந்து கொண்டு தான் இருக்கும் என்று ஒரு கவிஞன் பாடி இருக்கிறான். இந்த கங்கை வற்றிப்போனாலும் போகலாம் ஆனால் சாராய சாம்ராஜ்யம் பாய்ந்து கொண்டு தான் இருக்கும் என்று சொல்லக் கூடிய ஒரு தாரக மந்திரத்திற்கு மூல கருத்தாக இங்கே நம்முடைய அரசு நடந்து கொண்டு இருக்கிறது. சாராயத்தைச் சாப்பிடக் கூடியவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள். இன்றைக்கு நான் வால்பாறை தொகுதியிலேயிருந்து வந்தவன் என்ற முறையிலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன், நான் மலையாள மக்களோடு சேர்ந்து பழகிய காரணத்தால் இந்தச் சாராயம் 'நிங்களுக்கும் பெ, பெ, நிங்கள் அச்சனுக்கும் பெ, பெ, என்று மலையாளத்தில் சொல்லக் கூடிய வகையிலே அமைந்திருக்கிறது. அந்த தாரக மந்திரம்தான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. சாராயக் கடைகளை மூடிவிடுகிற காரணத்தால் கிட்டத்தட்ட 60 கோடி வருவாய் இந்த ஆண்டு இழப்பு ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்திலே, அடுத்த ஆண்டு சாராய விற்பனையை நிறுத்திவிடுகிற காரணத்தால் கிட்டத்தட்ட 250 கோடிக்கு மேல் இழப்பு ஏற்படும் என்று நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையிலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மாதம் ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் சாராயக் கடைவாயிலாக இங்கே வருவாய் வருகிறது என்று சொல்கிறார்கள். சாராய கடையின் மூலம் அப்பாவிடம் 5 ரூபாய் வாங்கி மகனுக்கு 50 பைசா பஞ்சு மிட்டாய் தருவதைப் போல் அந்தச் சாராயக் கடையிலிருந்து வரக் கூடிய அந்தப் பணத்தை சத்துணவு மையம் என்று சொல்லக் கூடிய அந்தத் திட்டத்திற்கு கொடுக்கக் கூடிய ஒரு நிலைமை இங்கே உருவாகி இருக்கிறபோது இந்த நாட்டில் பொருளாதார திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துச் சொல்லவில்லை என்பது தெளிவாக தெரிகிறது. 5 ரூபாயை அப்பாவிடமிருந்து வாங்கி 50 பைசாவிற்கு பஞ்சு மிட்டாய் தருவது போல் இங்கே ஏழை எளிய இந்த வறுமைக் கோட்டில் இருக்கக் கூடிய இந்த மாணவ மாணவிகளுக்கு சத்துணவு போடுகிறோம் என்று சொல்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அந்த சத்துணவுத் திட்டத்திற்கு நீங்கள் ஒதுக்கி இருக்கக் கூடிய பணம்



மொத்தம் 160 கோடி ரூபாய், என்று சொல்கிறபோது இங்கே எங்களுடைய கர்ம வீரர் காமராஜர் அவர்கள் அந்த பொற்கால புனிதர் ஆட்சியில் கூட இங்கே மதிய உணவு, பள்ளியில் இருக்கக் கூடிய மாணவர்களுக்கு குறிப்பாக ஏழை எளிய மாணவர்களுக்கு போடப்பட்டது. அந்த சத்துணவுத் திட்டம் சத்தான உணவுத் திட்டமாக இருந்தது போய் இன்றைக்கு இந்த சத்துணவுத் திட்டத்திற்கு 160 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள், வரவேற்கிறேன். * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்பெசிபிக்காக சொல்ல வேண்டும். பொதுப்படையாக போகிற போக்கில் சொன்னால் எப்படி ? அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. வி. தங்கவேலு : 160 கோடி ரூபாய் சத்துணவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. 160 கோடி ரூபாயில் இங்கே மகளிருக்கு, விதவைகள் என்று சொல்லக் கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு தருகிறோம் என்று சொல்கிறீர்கள். ஆகவே இந்த நாட்டுக்கு அது தேவை என்று சொல்கிறீர்கள். இதிலே 2 இலட்சம் பேர்கள் வேலை பார்க்கிறார்கள் என்று சொல்கிறீர்கள். அதற்காக நான் பாராட்டுகிறேன். ஆனால் இந்த 2 இலட்சம் மகளிருக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பை கொடுக்கிறீர்களா? இந்த 2 இலட்சம் பேர்களை நீங்கள் 'பார்ட் டைம் ஜாப்' என்று சொல்லக் கூடிய தற்காலிக ஊழியர்களாக வைத்து இருக்கிறீர்கள். அதை நீங்கள் தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படி பல முரண்பாடான திட்டங்களாக இங்கே இருக்கிற காரணத்தால் இந்த போக்குகளை தயவு செய்து மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே நான் மெத்த பணிவன்போடு சொல்வது சுடுகாட்டுப் பிரச்சினை. இன்றைக்கு உயிரோடு இருக்கிறபோது தான் நாம் நிம்மதியாக வாழ முடியவில்லையே என்று நினைத்தால் செத்ததற்குப் பின்னால் சுடுகாட்டிற்குப் போனால் நிம்மதி கிடைக்கும் என்று பார்க்கிறபோது அதற்கும் வழி இல்லாத நிலைமை இங்கே இருக்கிறது. செத்துப் போனவர்களுக்கு கார்ப்பரேஷனுக்கு கட்ட வேண்டிய கட்டணம் 15 ரூபாய். சுடுகாட்டில் அதை புதைப்பதற்கு எடுத்துச் செல்கிறபோது அந்த சுடுகாட்டில் அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பணம் 100 ரூபாய். 150 ரூபாய் வசதிக்கு தகுந்தாற்போல் கூட்டத்திற்கு ஏற்றாற்போல் 200 ரூபாய் கூட கேட்கிறார்கள். ஆக ஒரு நபர் இறந்து

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வி. தங்கவேலு] [1986 மார்ச் 20

போனால் ஈமச் சடங்கிற்கு ஆகிற செலவு 250 ரூபாய் ஆனால் இந்த அரசு 50 ரூபாய் தான் தருகிறது. ஆனால் இந்தப் பணத்தை வாங்குவதற்கு மேற்கொண்டு ஒரு 50 ரூபாய் செலவு செய்ய வேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்று சொல்லுகிறபோது இப்படிப்பட்ட ஒரு பட்ஜெட் இங்கே சுடுகாட்டில் புதைப்பதற்கு வழி இல்லாத நிலையில் இருப்பதை எ ணிப் பார்த்து மி வும் வருத்தப் டக் கூடிய ஒரு பட்ஜெட்டாக இங்கே காட்சி அளிக்கிறது.

அடுத்து, இங்கே கல்விக்கு பட்ெ ட்டில் ஒரு ோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. ஒரு பள்ளியைக் கட்ட 50 ஆயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. ஆக 200 பள்ளிகள் தான் கட்ட முடியும். 20 ஆண்டுகளில் தான் இத்திட்டம் மக்களுக்கு பயன்படும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை இங்கே இந்த திட்டத் தில் இருக்கிறது.

அது மட்டும் அல்ல, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று சொல்லியிருக்கிறர்கள். ஆனால் இங்கே இருக் கூடிய பட்ஜெட்டைப் பார்க்கிறபோது, 'உழவுக்குா தொழிலுக்கும் நிந்தனை செய்வோம்' என்று சொல்லக் கூடிய அளவில் இருக்கிறது.

There is no reference about the agricultural promotion, and indus-trial development in the Budget.

இதைப் பார்க்கிறபோது தொழில் புரட்சி, விவசாய வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தராத ஒரு பட்ஜெட்டாக இருக்கிறது.

குறிப்பாக ஆளியாறு பகுதியி இருக்கக் கூடிய பாம்பிக்குளம் என்று சொல்லுகிற அந்த இடத்தில் என்னுடைய தொகுதியை ஒட்டிய இடத்தில் ஒரு ப ணைக் கல்டிவேஷன் என்று சொல்லக் கூடிய ஒரு திட்டத்தைப் போட்டு இருக்கிறார்கள். அதற்கு 13 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். அந்தப் பணத்தை எப்படி நீங்கள் செலவு செய்து அந்த இடத்தில், பண்ணைக் கல்டிவேஷனை அமைக்கப் போகிறீர்கள் என்று எனக் குப் புரியாமல் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).

(பிற்பகல் 12-40)

என்னுடைய வால்பாறை தொகுதியைப் பொறுத்தவரை யில், சுதந்திரம் அடைந்து 38 ஆண்டுகள் ஆகியும், அந்த வால்பாறைப் பகுதி மலை முகடாகத்தான் இருக்கிறது. அங்கு எந்தவித பயிற்சி நிலையமும் கிடையாது. ஒரு ஐ.டி.ஐ. கூட கிடையாது. அப்படிப்பட்ட இருண்ட பகுதியில், மலைவாழ் க்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், நரிக்குறவர் ஆகியோர் நலன்



1986 மார்ச் 20] [திரு. வி. தங்கவேலு]

களுக்காக இந்த நிதியாண்டில் 1986–87-லே ஒரு ஐ.டி.ஐ. நிறுவனத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மரியாதைக்குரிய மாண்புமிகு காளிமுத்து அவர்கள் எங்களைப் பற்றி அவதூறாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். சாட்டை அடி அடித்து சந்திசிரிக்க வைப்பேன். தூக்கிலிட்டுக் கொன்றுவிடுவேன் என்றெல்லாம் அவதூறாக அமைச்சர் அவர்கள் எங்களைப் பற்றி பேசுவதற்கெல்லாம் ஒரு முற்றுப் புள்ளி, முத்தாய்ப்பு வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் இங்கே அளிக்கப்பட்டிருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் மீது எனது கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரை, பல்வேறு கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தங்கவேலு அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

Unhealthy budget, unhappy budget, handicaped budget,

மாயையான பட்ஜெட், பற்றாக்குறை பட்ஜெட் என்று ரங்கசாமி அவர்கள் கூறியிருக்கிறார்கள். வேலை வாய்ப்புகளை உருவாக்காத, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்காத பட்ஜெட்டை இன்றையதினம் உருவாக்கியிருக்கிறார்கள் என்று குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இந்த பட்ஜெட்டைப் பற்றி விமர்சித்திருப்பது எனக்கு ஒரு சந்தேகத்தைக் காட்டுகிறது. பற்றாக்குறை பட்ஜெட், பற்றாக்குறை பட்ஜெட் என்று கூறுவது, மத்திய அரசின் மாண்புமிகு நிதியமைச்சர் வி. பி. சிங் அவர்கள் அளித்த பட்ஜெட்டைத் தான் இங்கே விமர்சித்திருக்கிறார்களோ என்றுதான் ஐயப்படுகிறேன். பற்றாக்குறை பட்ஜெட் வந்தால் விலைவாசி ஏறும் என்று மாண்புமிகு உறுப்பினர் ரங்கசாமி அவர்கள் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற பட்ஜெட்டானது மக்கள் நல பட்ஜெட், It is a pragmatic budget. உண்மைகளை உள்ளடக்கிய, ஒத்துக்கொண்ட நடைமுறைக்கு சாத்தியமான ஒரு பட்ஜெட்டை இன்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கின்ற வரிவிலக்குகள், ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற வரி ஒழுங்குகள்

Rationalisation of tax structure

இவைகளனைத்தையும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், தமிழகத்தினுடைய பட்ஜெட், நிதி நிலை அறிக்கை எந்த அளவிற்கு சிறந்ததாக இருக்கிறது என்பதை நீங்கள் அறியமுடியும். அந்த வகையில் நாடானது மிக்க பொருள் வளத்தையும், விளைபொருள்களையும் அடக்கியிருக்கும். அந்த அடிப்படையில், infra-structural facilities ஏற்படுத்தவேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றையதினம் பொருள் வளங்களை ஏற்படுத்துவதற்கான உதவிகளைச் செய்வதற்காக அதிகமான நிதியைப் பெறுவதற்கான வழிவகைகளை இந்த பட்ஜெட் கொண்டிருக்கிறது.

அதே நேரத்திலே ஏற்படுத்தப்பட்ட நிதியாதாரங்களை வைத்துக் கொண்டு, வேளாண்மை, விளைபொருள்கள் மின்சாரம்; நீர்பாசனம் ஆகியவற்றிற்கு வேண்டிய முக்கியமான 'கோர்செக்டார்களுக்கு' அதிகமான நிதி ஒதுக்கீடுகளைச் செய்து எதிர்காலத்திலே வளர்ந்துவருகின்ற தமிழகத்தில் நல்ல திட்டங்களுக்கான அடிப்படை வசதிகளை நிதியமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது மிகையாகாது. அந்த வகையில் இன்றையதினம் இங்கே இருக்கின்ற உறுப்பினர்களுக்குத் தெரியும்—மத்திய வரிக் கொள்கையின் காரணமாக மத்திய அரசின் பட்ஜெட்டிலே ஏற்படுத்தப்பட்ட கட்டண உயர்வின் காரணமாக மண்ணெண்ணெய், பெட்ரோல், வாயு ஆகிய பொருட்களின் விலை உயர்வு காரணமாக இன்றையதினம் மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆக வரி விதிப்பின் காரணமாக மாநிலங்கள் பாதிக்கப்பட்டிருப்பதை நீங்கள் கண்டிருக்கிறீர்கள். இவ்வளவையும் உள்ளடக்கியும் இன்றையதினம் நிதியமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டை சமர்ப்பித்திருக்கிறார்கள். அதை நீங்கள் பாராட்ட வேண்டும் என்று வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சி, வெள்ள நிவாரணப் பணிகளுக்கு, நலிந்தோர் நல்வாழ்வு பணிகளுக்கு மத்திய அரசு உதவுகிறது. மத்திய அரசு நிதியுதவியை அளித்தாலும், அவற்றை நிறைவேற்றுகின்ற முழுப் பொறுப்பும் மாநில அரசுகளுக்குத்தான் இருக்கிறது. அந்த வகையிலே அதிக வருவாயை ஈட்டுகின்ற மேம்பாட்டு திட்டங்களுக்கும், இந்திய ஒருமைப்பாட்டிற்கு உட்பட்ட நிலையில், ஒரு புதிய அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டுமென்றும், மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்





அளிக்கப்பட வேண்டுமென்றும், சர்க்காரியா கமிஷனிடம் நமது தமிழக அரசு கோரிக்கைகளை எடுத்து வைத்திருக்கிறது. இந்திய துணைக் கண்டத்தின் இணைப்பு ஆட்சி மூலமாக உதவுவதற்கு சர்க்காரியா கமிஷன் பரிந்துரை செய்யவேண்டுமென்ற நிலையினை தமிழக அரசு எடுத்து வைத்திருக்கிறது.

அருமை உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் கூறினார்கள். தென்னக முதல்வர்கள் கூடும் கூட்டத்திற்கு தமிழக முதல்வர் அவர்கள் போகவில்லை என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அவர் கூறவில்லை என்றால் இன்னொரு உறுப்பினர் கூறியிருக்கிறார் என்று நினைக்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : நான் தென்னக முதல்வர்கள் கூட்டத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை. முதல்வர்கள் மாநாடு நடைபெற்ற நேரத்திலே அங்கே பல முதலமைச்சர்கள் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்றும் பைனான்ஸ் கமிஷன் கொடுத்த வழிமுறைகள் தவறு என்றும் கூறியபோது நம்முடைய அரசைச் சார்ந்தவர்கள் அந்தக் கோரிக்கையை அவர்களுடன் சேர்ந்து வலியுறுத்தவில்லை என்றுதான் குறிப்பிட்டேன். தென்னக முதல்வர்கள் மாநாடு பற்றி நான் குறிப்பிடவில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென்னகத்திலே, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த முதல்வர்கள் ஒன்று சேர்ந்து மத்திய அரசை எதிர்க்கின்ற நோக்கத்தோடு நடத்தப்பட்ட கூட்டத்திலே தமிழக முதல்வர் அவர்கள் ஏன் கலந்துகொள்ளவில்லையென்றால் எந்த அடிப்படையிலே நீங்கள் அந்தக் கூட்டத்தை நடத்துகிறீர்கள் என்று கேட்டு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதினார்கள், அவர்களிடமிருந்து அந்தக் கடிதத்திற்குப் பதில் வராத காரணத்தினால் அவர்கள் கலந்துகொள்ள வில்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்பதிலே தமிழக அரசு தான் முன்னணியில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இலங்கைப் படுகொலையைப் பொறுத்தவரையில் நான் இங்கே இருக்கிற காங்கிரஸ் உறுப்பினர்களை கேட்கிறேன், மத்திய அரசு அதை ஜெனோசைட் என்று அறிவிக்க வேண்டும். இண்டர்நேஷனல் அம்னஸ்ட்டி இருந்தும் அதை வைத்துக் கொண்டு இன்றைய தினம் 30, 40 வருடங்களுக்குப் பிறகும்கூட எங்காவது மறைந்திருந்தால்கூட கண்டுபிடித்து கொண்டுவந்து தூக்கிலே போடுகிறார்கள். அந்த முறையிலே இனப்படுகொலையைச் செய்கின்ற ஜெயவர்த்தனா

வையும் அதுலத்முதலியையும் தூக்கிலே போடவேண்டும். இலங்கையிலே மட்டுமல்ல, இனப்படுகொலை என்பது எந்த நாட்டிலே நடந்தாலும் சரி அதைக் கண்டிக்கவேண்டும். தமிழக அரசிற்கு மட்டுமல்ல அந்தப் பொறுப்பு. மத்திய அரசிற்கும் அந்தப் பொறுப்பு இருக்கிறது. இன்றைய தினம் இண்டர் நேஷனல் பிராப்ளமாக அது உருவாகிற நிலை இருக்கிறது. பாகிஸ்தானும் இலங்கையும் இராணுவ ஒப்பந்தம் செய்கிற அளவுக்கு திரை மறைவிலே கூட்டுகள் உருவாகின்றன. எனவே மத்திய அரசு உடனடியாக இனப்படுகொலை என்று கண்டித்து அறிவிக்க வேண்டும்.

எங்கள் பகுதியிலே கடந்த ஆண்டு வறட்சி ஏற்பட்டது. இப்போது பருவ மழை மிகமிகக் குறைந்து விட்டது. அதன் காரணமாக விவசாயக் கிணறுகளில் நீர் இல்லை. எனவே அரசு இப்போதே நிவாரணப் பணிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை ஆயத்த வேலைகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு தானிய உற்பத்தியைப் பொறுத்தவரையிலே இந்த வறட்சியிலும் இப்படி குறைந்த அளவில் வசதிகளைப் பெற்றிருக்கிற இந்த நேரத்திலேயும் 92 இலட்சம் மெட்ரிக் டன் என்று இலக்கு நிர்ணயித்து அதற்கான வேலைகளைச் செய்து வருவது குறித்து நான் பாராட்டுகிறேன்.

இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற பணிகளிலே இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழக அரசு தான் முன்னணியில் இருக்கிறது. இந்த மார்ச் மாதம் முடிவதற்குள் 75 விழுக்காட்டிற்கு மேலாக 20 அம்சத் திட்டத்திலே அதிகமான பணிகளை இந்த அரசு செய்துகொண்டு வந்திருக்கிறது. அதோடு மத்திய அரசு கொடுக்கிற நிதி ஒதுக்கீடுகளை முழுமையான அளவுக்கு செலவிடுகின்ற ஒரே அரசு தமிழக அரசு தான். ஆகவே கொடுக்கிற பணத்தைக் குறைவாகச் செலவழிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இந்த அரசு ஆளாக விரும்பவில்லை. கொடுக்கின்ற பணம் போதாது என்ற நிலையில் தான் இருக்கிறது. மேலும் மேலும் அதிகமான நிதியை மத்திய அரசிடமிருந்து பெறவேண்டுமென்ற முறையிலே தான் நாங்கள் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.



(பிற்பகல் 12-50)

தொழில் வளம் பெருக வில்லை; வேலை வாய்ப்புகளை உருவாக்கவில்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு. பத்து இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்காகத் திட்டமிட்டிருக்கிறோம். அதன் மூலமாக எத்தனை பேர்களுக்கு indirect employment generation ஏற்படும் என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். அந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்ற தச்சர்கள், கொல்லர்கள் இன்னும் மற்றுமுள்ளவர்களுக்குக் கூலி கிடைக்கும். இப்படிக் கிராமப் புறங்களிலே இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்கிறோம். 200 கோடி ரூபாய் திட்டத்திலே 120 பேர்களுக்கு வேலை கொடுப்பதைவிட, பெரிய திட்டத்தைப் போட்டு கிராமப் புறத்திலுள்ள பல பேர்களுக்கு வேலை வாய்ப்பினைக் கொடுக்கின்ற அதே நேரத்தில், அவர்கள் பயன்பெறுகின்ற அளவிற்கு வீடுகளைக் கட்டுகின்ற திட்டம் தான் புரட்சித் தலைவரவர்களின் திட்டம். இதற்கு நீங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும், இதில் உங்களுடைய கருத்துக்களை கூறுகின்ற நேரத்தில், இந்தத் திட்டத்திற்கு நல்ல உறுதுணையான கருத்துக்களை அளிக்க வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக அனைத்து கிராமங்களுக்கும் பயன் அளிக்கும் விதத்தில் 45 கோடி ரூபாய்களை ஒதுக்கியிருக்கிறார்கள். தேனி தொகுதியில் உள்ள சின்ன ஓவுலாபுரம், கோவிந்த நகரம் ஆகிய இரண்டு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தினால் என்னுடைய தொகுதியில் உள்ள அனைத்துக் கிராமங்களுக்கும் குடிநீர் கிடைக்கும் என்று கூறி இதை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திட்டங்களின் மிக முக்கியமான பகுதியாக இருப்பது மின்சாரம். திட்டத்தில் 395 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கியிருக்கிறார்கள். இதில் தமிழகத்தின் பங்கு மட்டும் 300 கோடி ரூபாய். ஆகவே, எதிர் காலத்தில் மிகப் பெரிய மின்சார உற்பத்தியைப் பெருக்குவதற்கும் தமிழகம் தன்னை ஆட்படுத்திக் கொண்டு திட்டங்களைத் தீட்டி வருகிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் உற்பத்தியான மின்சாரத்தைப் பொறுத்தவரையில் கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி யூனிட் ஒன்றுக்கு 43 பைசா என்று முடிவு செய்திருக்கிறது. இப்பொழுது இரண்டாவது யூனிட் மூலம் 35 மெகா வாட் மின்சாரம் கிடைக்கவிருக்கிறது. அதற்கு 43 பைசாவிற்குக் குறைவாக கட்டணத்தை விதிக்கப் போகி

றோம் என்ற நல்ல செய்தியினைக் கல்பாக்க நிலையத்தின் சேர்மன் மூர்த்தி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி அதிகமான மின்சாரத்தைப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பம்பு செட்டுகளைப் பொறுத்த வரையில், முன்பு 50,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். இந்த மார்ச் 31 ஆம் தேதிக்குள் அந்த 50,000 பம்பு செட்டுகளுக்கும் மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டு விடும் என்று எதிர்பார்க்கிறேன். அப்படிக் கொடுத்து முடித்து விட்ட பிறகு, அடுத்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் மேலும், 50,000 அல்லது 60,000 பம்பு செட்டுகளுக்கு வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து மின் இணைப்பு கொடுப்பதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கொள்கிறேன்.

''சோழ வளநாடு சோறுடைத்து'' என்று சொல்வார்கள். ஆனால் இன்றைக்கிருக்கிற நிலையில் ''சோழவள நாடு எண்ணெய் வளமுடைத்து'' என்று சொல்லத்தக்க வகையில் மத்திய அரசினுடைய ஆயில் அண்ட் நேச்சுரல் கேஸ் கமிஷன் அங்கேயிருந்து எடுக்கும் எண்ணெய் வளத்தில் ஒரு பங்கினைத் தமிழக அரசுக்குக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்த வரையில் தேனி பகுதியில் விவசாயிகள் உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் விதத்தில் தேனிக்கு அருகே கூட்டுறவு சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்திருக்கிறேன்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கம் 82.54 விழுக்காடும் மத்திய அரசின் நிதியுதவியைப் பொறுத்த வரையில் 116.28 விழுக்காடும் உயர்ந்துள்ளன. இவை அனைத்தும் வரவேற்கத் தகுந்தது. இவை அனைத்தும், தமிழக நிதியமைச்சர் அவர்கள் நிதி நிர்வாகத்தை நன்றாகத் திறமையோடு செய்து வருகிறார்கள் என்பதற்கு எடுத்துக் காட்டுகளாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்த வரையில் அத்தனை பேர்களுக்கும் தெரிந்த ஒன்று. 1980–81 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட ரூரல் ரோட்ஸ் என்று சொல்லப்படுகின்ற கிராமச் சாலைகள் இது வரையில் ஹைவேஸ் துறையினரால் பராமரிக்கப்படாத நிலை இருக்கிறது. ரூரல் ரோட்ஸ் என்ற தலைப்பின் கீழ் உள்ள பஸ் ரூட் போடப்பட்ட சாலைகளை ஹைவேஸ் டிபார்ட்மென்ட் எடுத்துக் கொண்டு அரசு சாலைகளாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஹைவேஸிலே இப்பொழுது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பெறப்படுகின்ற ஈ.எம்.டி. பணத்தை, கட்டி முடிக்கப்பட்ட பின்னர் ஒரு வருடத்தில் திரும்பப் பெறலாம் என்று இருந்த நிலைமையை மாற்றி, ஐந்தாறு வருஷங்கள் வரையில் வைத்துக் கொள்ளுகின்ற நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையிருந்தால் எந்த ஒப்பந்தக்காரரும் ஹைவேஸ் வேலையை எடுப்பதற்கு முன் வர விரும்ப மாட்டார்கள். ஆகவே, பழைய நிலையே நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலைகளைப் பொறுத்த வரையில், முக்கியமான ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 1979–80 ஆம் ஆண்டில் இராமக்கல் மெட்டு, சாக்குளத்துமெட்டு என்ற இடத்தில் மலையடிவாரம் வரையில் தார் போடப்பட்டு முடிக்கப்பட்டு விட்டது. ஆனால மலையில் 4 கிலோ மீட்டர் தூரத்திற்கு Permission under Hill Preservation Act. சிபாரிசு செய்ய வேண்டுமென்று தமிழக அரசு கேட்டுக்கொண்டது. ஆனால் அந்த சிபாரிசு இன்னமும் வரவில்லை. நான் கூட ஐயப்படுகிறேன்.

* * * * * * *

என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது. அவர்கள் உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கல்லன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலிருந்து * * * என்று பேசுவது சரியா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதை நீக்குகிறேன். வேறு வார்த்தை சொல்லுங்கள்.

திரு. வே. இரா. ஜெயராமன் : மத்திய அரசுக்குத் தமிழக அரசால் அனுப்பப்பட்ட திட்டங்களுக்கு உடனடியாக, கூடிய விரைவில், மிக, மிக விரைவாக, அனுமதி அளிக்குமாறு பணிவன்போடு இந்த அவையின் வாயிலாக, மக்வானா போன்ற அமைச்சர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக * * *

யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன் என்று கூறுவார்கள். அதைப் போல் அரசு ஊழியர்களாக இருந்தாலும் ஒரு வீடு கிடைக்கும், இறந்தாலும் ஒரு வீடு கிடைக்கும் என்ற நிலை இன்றையதினம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வே. இரா. ஜெயராமன்] [1986 மார்ச் 20

பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு ரூ. 39.32 கோடி செலவில், 17,060 ஹெக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி செய்யப்பட இருக்கிறது. இந்த நேரத்திலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை நான் விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த நாட்டுக்குப் பயன் தரத்தக்க, இப்பொழுது நிதி அமைச்சர் அவர்களுடைய ஆய்விலே இருக்கிற, அவர் ஒப்புதலுக்காகக் காத்துக் கிடக்கிற சண்முகா நிதி அணைத் திட்டம், நங்கஞ்சியாறு அணைத் திட்டம், பதினெட்டாம் வாய்க்கால் திட்டம் ஆகியவைகளை புரட்சித் தலைவர் ஆட்சியிலே நாங்கள் பெறுவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். நீங்கள் அனுமதி அளிப்பதன் வாயிலாக, எதிர்காலத்திலே நிரந்தரமான அரசு மூலதனத்தை, பாசன வாயில்களின் வழியாக ஏற்படுத்துகிறீர்கள் என்ற நிலையில், இந்தத் திட்டங்களை நிறைவேற்ற உடனடியாக நீங்கள் அனுமதி வழங்க வேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டு, கொடுத்த வாய்பிற்கு நன்றி கூறி அமர்கிறேன்.

* * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பொதுப்படையாக குற்றம் சொல்வது சரியல்ல ; இது சம்பந்தப்பட்ட அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க ஆணையிடுகிறேன்.

*திரு. மா. கதிர்வேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே வைக்கலாம் என்று கருதுகிறேன். அந்த வகையில் பார்க்கிறபொழுது மாண்புமிகு நிதி அமைச்சராலே இங்கே வைக்கப்பட்டிருக்கிற நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, வேலையற்றவர்கள், நடுத்தர மக்கள், பாமர மக்கள் என்று எல்லா மக்களாலும் எதிர்பார்க்கப்படுகின்ற இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, ஒரு தொலைநோக்குத் திட்டம் இல்லாத ஒரு பட்ஜெட்டாகவும், கணக்குப் பிள்ளை பட்ஜெட்டாகவும், எந்தப் பலனும் அளிக்க முடியாத பட்ஜெட்டாகவும் இது இருக்கிறது என்பதை நான் இங்கே சொல்ல விழைகிறேன். அப்படிப் பார்க்கிறபொழுது சாதாரண மனிதனுடைய பொருளாதார வளர்ச்சிக்கு என்ன திட்டம் போட்டிருக்கிறார்கள் என்று இந்த அவையின் மூலமாக கேட்க விழைகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மார்ச் 20] [திரு. மா. கதிர்வேலு]

(பிற்பகல் 1-00)

வீட்டுக்கு ஒருவருக்கு வேலை என்று சொல்லி திட்டம் ஆரம்பிக்க வேண்டுமென்றால் அந்த அளவுக்கு தொழிற்சாலைகள் உருவாக வேண்டும் அல்லது விவசாயத் துறையை ஊக்குவிக்க வேண்டும். இந்த இரண்டு துறைகளிலும்தான் வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் சாத்தியக்கூறு இருக்கிறது என்பது என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட திட்டங்கள் அல்லது ஊக்குவிப்புகள் நடைபெற எந்தவிதமான செயல்முறைகளும் இதுவரையில் அளிக்கப்படவில்லை. ஆக, இப்படி இல்லாத ஒரு பிரச்சனையே அறிக்கையாக இருக்கிறது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால், 50,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு என்று சொல்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களைப் பார்த்துக் கேட்கிறேன். மைய அரசிலே சுய வேலை வாய்ப்புக்கு நிதி உதவி அளிக்கும் திட்டம் இருக்கிறது. ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்கள் மூலம்தான் இங்கே சுய வேலைவாய்ப்புத் திட்டம் செயல்பட வழிவகை இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப் போனால், இங்கே இருக்கின்ற நிர்வாகத் திறமையைப் பார்க்கும்போது மிகவும் வருத்தப்பட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறது. கடந்த வெள்ளப் பாதிப்பின்போது பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய ராஜீவ் காந்தி அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்கள் வந்து பார்த்து சென்றதன் விளைவாக, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொல்லி 66.8 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு செலவு செய்திருக்கிற பணத்தைப் பார்க்கும்போது இதுவரையில் 45 கோடி ரூபாய்தான் செலவிடப்பட்டிருக்கிறது. இந்த நிதியாண்டின் முடிவுக்குள்ளாக செலவின் அளவு ரூ. 60 கோடியை எட்டிவிடும் ; மீதமுள்ள தொகை வரும் நிதியாண்டில் தொடர்ந்து செலவிடப்படும் ; அதாவது அடுத்த ஆண்டில் 6 கோடி ரூபாயை செலவு செய்வோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடைபெற்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுதான் போர்க்கால அடிப்படையில் வேலைகள் நடைபெறும் நிலையா என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

இன்னும் சொல்லப்போனால் ஆதிதிராவிடர், பழங்குடியினர், நரிக்குறவர், ஏழ்மைக் கோட்டிற்குக் கீழே இருக்கும் ஏனையோர்களுக்கு 30 இலட்சம் பேர்களுக்கு மூன்றாண்டுகளில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும், இந்த ஆண்டு 10 இலட்சம் பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக 26 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறார்கள். வீட்டுக்கு 10,000 ரூபாய் என்று பார்த்தால் 26 கோடி ரூபாயில் எத்தனை வீடுகள் கட்டப்படும் என்று பார்க்கும்போது இது ஒரு குழப்பமான திட்டமாக, மக்களை ஏமாற்றும் திட்டமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எனக்கு இதிலே ஒரு சந்தேகம் வருகிறது. மத்திய அரசால் அறிவிக்கப்பட்டிருக்கிற ஆர்.எல்.இ.ஜி.பி., என்.ஆர்.இ.பி. போன்ற திட்டங்களின் மூலம் ஒரு பஞ்சாயத்துக்கு 20 வீடுகள் கட்டவேண்டுமென்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் ஆறு பஞ்சாயத்துக்களுக்கு 120 வீடுகள் என்று பார்த்தால் தமிழ்நாட்டிலிருக்கிற சுமார் 382 ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற பஞ்சாயத்துகளில் ஏறத்தாழ 50,000 வீடுகள் கட்டுகின்ற திட்டம் நடைமுறையில் இருக்கிறது. அதைப்போன்று நகரப் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டுப் பார்த்தால் ஒரு இலட்சம் வீடுகள் மத்திய அரசு நிதியிலிருந்து கட்டப்படும் சூழ்நிலை இருக்கிறது. ஏற்கனவே அரிசனங்களுக்கு வீடு கட்டித்தரும் திட்டம் நடைமுறையில் இருக்கிறது. ஆகவே, நீங்கள் சொல்லுகின்ற 30 இலட்சம் வீடுகள் கட்டும் திட்டத்தில் இதையும் சேர்த்து அறிவித்திருக்கிறீர்களா அல்லது தனியாக இதற்கு நிதி ஒதுக்கி செலவு செய்யப் போகிறீர்களா என்ற விவரத்தை தெளிவாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு எங்களுடைய வடாற்காடு மாவட்டத்தில் ஒரு மிகப்பெரிய பயங்கரமான, கொடுமையான, பாதகமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் பறிக்கப்படுகின்றன ; இலட்சக்கணக்கான உயிர்களின் ஆயுட்காலம் குறைக்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கே இருக்கிற தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் இத்தகைய பாதிப்பு ஏற்படுகிறது. கழிவுநீர் பாதிப்பினால் சுமார் 3,000 ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஆம்பூர், பேரணாம்பட்டு, குடியாத்தம், வாணியம்பாடி, வேலூர், இராணிப்பேட்டை, வாலாஜா போன்ற பகுதிகளை எடுத்துக் கொண்டால் சுமார் 20,000 ஏக்கர் நிலத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது.



அவ்வாறு விவசாயம் பாதிக்கப்படுகிறது என்பதோடு மட்டுமல்ல. குடிநீரிலும் விஷம் கலந்து தண்ணீர் விஷத்தன்மை கொண்டதாக மாறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஏற்படுகின்ற நிலைமை பற்றி இந்து பத்திரிகை எழுதுகிறது ; சண்டே பத்திரிகை எழுதுகிறது ; இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை எழுதுகிறது. இவ்வாறு அத்தனை பத்திரிகைகளிலும் ஆண்டுக்காண்டு இந்த அரசிற்காகவும், மக்களுக்காகவும் எழுதப்படுகிறது. சட்டமன்றத்தில் கூட நான்கைந்து தடவைகளுக்கு மேல் அடுத்தடுத்து சொல்லிக்கொண்டு வருகிறோம். ஆனால் இதற்கு ஒரு நிரந்தர நிவாரணத்தைக் காண்கின்ற வகையில் அரசின் நடவடிக்கை இருக்கிறதா என்று சொன்னால் எதுவுமே செய்யப்படாத சூழ்நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது.

நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குக் கொடுத்த கடிதத்திற்குக் சுத்தப்படுத்தி (எஃபுளுவல்ட்) வெளியேற்றாத தோல் தொழிற்சாலைகளுக்கு 31-7-1985-க்குப் பிறகு உரிமம் அளிக்க மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலமாக கழிவுநீரை வெளியேற்ற முடியாது என்று முதல்வர் அவர்களால் 26—7—1985-ல்அளிக்கப்பட்ட பதிலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தத் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் இன்றைக்கும்கூட கழிவுநீரைக் கட்டுப்படுத்துகின்ற வகையில் எந்தத் திட்டமும் செயல்படுத்தப்படவில்லை. . அப்படி செயல்படுத்தாத காரணத்தால் அந்தத் தொழிற்சாலைகளின் லைசன்ஸ் ரென்யூ செய்யப்படவில்லை. அப்படி ரென்யூ செய்யப்படாத நிலைமையில், லைசன்ஸ புதுப்பிக்கப்படாத சூழ்நிலையில் இன்றையதினம் அந்தத் தொழிற்சாலைகள் இயங்குகின்றன என்று சொன்னால் அரசு இதற்கு உடந்தையா? இந்தத் தொழிற்சாலைகள் லைசன்ஸ் இல்லாமல் நடப்பதை எப்படி அனுமதிக்கிறீர்கள் என்று இந்தச் சட்டமன்றத்தில் பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.

இன்னும் சொல்லப்போனால் 1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 13 ஆம் நாள் தம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். இப்படி அடுத்தடுத்து உறுதிமொழிகளை இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகும் எங்களுடைய பகுதியிலே இந்த நிலைமை நீடிப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டு மிகப் பெரிய சமுதாயக் குழப்பம் நிச்சயம் ஏற்படும். அப்படி சமுதாயக் குழப்பங்கள் எற்பட்டால் அரசுதான் அதற்குப் பொறுப்பேற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். அப்படிப்பட்ட ஒரு நிலை எங்கள் மாவட்டத்தில் இருக்கிறது. இதற்கு ஒரு நிரந்தர நிவாரணம் ஏற்படுத்தப்படவில்லை என்று சொன்னால், பாலாற்றின் மூலமாக ஆயிரக்கணக்கான மக்களுக்குக் குடிநீரைத் தருகின்ற எங்கள்

[திரு. மா. கதிர்வேலு] [1986 மார்ச் 20

மாவட்டத்திற்கே வெளி மாவட்டங்களிலிருந்து லாரிகளிலே தண்ணீரைக் கொண்டு வந்து சப்ளை செய்யக்கூடிய ஒரு பேரபாயத்திற்கு எங்கள் மாவட்டம் தள்ளப்பட்டிருக்கிறது என்பதை நான் மெத்தப் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில், ஆயிரக்கணக்கான மக்களை பலி கொள்கின்ற வகையில் குடிநீரில் விஷத்தன்மை ஏற்பட்டு வருகின்ற சூழ்நிலையை மாற்றி, தொழிற்சாலைகள் உரிய ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையில் நிச்சயமான ஒரு அறிவிப்பை அறிவித்தே தீரவேண்டும். இல்லை என்று சொன்னால் எங்கள் மாவட்டத்தில் பெரிய சமுதாயக் குழப்பம் ஏற்படும். அது தவிர்க்கப் படவேண்டும்.

அடுத்து, கிராமப்புற மக்களுக்கு பொழுதுபோக்கு சினிமா தான். விடிந்தவுடன் வேலைக்குச் சென்று கழனியிலே வேலை செய்துவிட்டு மாலையிலே திரும்பியபின் ஏழை மக்கள் இளைப்பாறுகின்ற வகையில் பார்ப்பது சினிமாதான். ஓலைக் கொட்டகையாக இருந்தாலும் அல்லது கட்டடம் உள்ள கொட்டகையாக இருந்தாலும் ஏழை எளிய மக்கள் பார்ப்பது சினிமாதான். ஆனால் சினிமாவில் இருக்கின்ற கஷ்டங்களை எல்லாம் புரிந்துள்ள, அதிலேயிருந்து வந்து இன்றைக்கு ஆளுகிற பொறுப்புக்கு வந்திருக்கிற முதல்வர்அவர்கள், மக்களுடைய தன்மையைப் புரிந்துள்ள முதல்வர் அவர்கள் சினிமா துறையிலே 10 சதவீதம் வரியை உயர்த்தி இருப்பது குறித்து அரசு பரிசீலனை செய்யவேண்டும். ஏழை எளிய மக்கள் பார்க்கிற சினிமாவிற்கான கட்டணத்தை உயர்த்துகின்ற அந்தத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு 4 சதவீதம் எக்ஸைஸ் வரி போடுகிறார்கள் மத்தியிலே. ஆனால் தமிழகத்திலே உற்பத்தியாகிற பொருட்களுக்கு, அதாவது சேஸிஸ் ஆக இருந்தாலும், டி.வி.எஸ் 50 ஆக இருந்தாலும், ஹீரோ மெஜஸ்டிக்காக இருந்தாலும், மொப்பட்டாக இருந்தாலும், எந்த வண்டியாக இருந்தாலும் பாண்டிச்சேரியில் சென்று வாங்கினால் 500 ரூபாய் குறையும், சேஸிஸ் வாங்கினால் 6000 அல்லது 7,000 ரூபாய் குறையும் என்று எண்ணி வாங்குகின்ற நிலைமை இருக்கிறது. இப்படி இங்கே உற்பத்தியாகின்ற பொருட்களை பாண்டிச்சேரி போன்ற அண்டை மாநிலங்களுக்குச் சென்று வாங்கினால் அவற்றைக் குறைந்த விலையில் வாங்க முடியும் என்ற சூழ்நிலை தமிழகத்திலுள்ள உபயோகிப்பாளர்களுக்கு இன்றையதினம் ஏற்பட்டிருக்கிறது.



1986 மார்ச் 20] [திரு. மா. கதிர்வேலு]

(பிற்பகல் 1–10)

அப்படி ஏன் அந்த நிலை இங்கே வந்தது? ஆகவே நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திலே உற்பத்தியாகிற பொருள்கள் இங்கேயே விற்கப்பட வேண்டும், வியாபாரத் துறைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் அரசுக்கு வந்தால்தான், வியாபாரிகள் வியாபாரத்தை அதிகமாக விரிவாக்க வாய்ப்பு ஏற்படும்.

இன்னொன்றையும் நான் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், மத்திய அரசாங்கம் ஒரே சீராக எக்ஸைஸ் வரியை நிர்ணயித்து குறிப்பிட்டிருப்பது போல், வேறு மாநிலங்களிலே நம்முடைய மக்கள் சென்று இன்றியமையாத சில பொருட்களை வாங்குவதற்கு தடை நிற்காத வகையிலே வரியைக் குறைத்தால்தான் நல்லது. அவ்வாறு நீங்கள் அறிவிக்க வேண்டும். அதுதான் பொருளாதார வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்க முடியும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து இங்கே ஒரு கோடி ரூபாய் பள்ளிக்கூடங்களுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக ஒதுக்கியிருக்கிறீர்கள். இதிலே நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சத்துணவுக் கூடங்கள் எவ்வளவு இருக்கின்றன, என்னுடைய தொகுதியிலே இயங்குகின்ற சத்துணவுக் கூடங்கள் எல்லாம் கிழிந்த கூரை குடிசைகளின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கின்றன. 100-ச்கு 75 பள்ளிகளில் அந்த நிலைமை தான். பழுதடைந்த பாழ்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் உள்ள கட்டிடங்களில்தான் அவை இயங்குகின்றன. அதை பழுதுபார்க்க 500 ரூபாயைக் கொடுக்கிறார்கள். எப்படி அதை வைத்துக் கொண்டு பழுதுபார்க்க முடியும்? செப்பனிட முடியும்? தமிழகம் முழுவதும் இயங்கி வரும் சத்துணவுக் கூடங்களைக் கணக்கு எடுத்துப் பார்த்தால் உங்களுக்கே தெரியும், அவைகள் எந்த நிலையில் இருக்கின்றன அவைகளுக்கு இந்த ஒரு கோடி ரூபாய் போதுமா என்று. ஆகவே இது நல்லது அல்ல. பள்ளிகளைச் செப்பனிட ஒரு கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு என்று சொன்னால், பள்ளிக்கு வருகின்ற குழந்தைகளின் விகிதாசார புள்ளிவிவரம் எடுத்துப் பார்த்தாலும், வளர்ந்து வருகின்ற பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கையை கணக்கில் வைத்துப் பார்த்தாலும், இந்த ஒதுக்கீடு யானைப் பசிக்கு சோளப்பொறிதான். இப்படி இதற்காக ஒரு கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கியிருக்கிறீர்களே கல்விக்கு நீங்கள் கொடுக்கின்ற முக்கியத்துவம் இதுதானா? சத்துணவு கொடுக்கிறீர்கள். உடைகள் கொடுக்கிறீர்கள். போதுமான அளவு என்று மட்டும் அல்லாமல் அதிக அளவில் பிள்ளைகள் பள்ளிக்கு வர வேண்டும் என்று பெரும் தலைவர் காமராஜர் கொண்டு

வந்து சமர்ப்பித்த திட்டத்தை கருத்தில் கொண்டு, அதை விரிவுபடுத்தி தமிழக முதல்வர் அவர்கள் தற்போது கொண்டு வந்திருக்கிறார்கள் என்று மகிழ்ச்சியடைந்தோம். ஆனால் அப்படி முக்கியத்துவம் வாய்ந்த அந்தப் பள்ளிக்கூடங்களைச் செப்பனிடுவதற்கு, கட்டுவதற்கு, ஒரு கோடி ரூபாயை மட்டும் ஒதுக்கினால், படித்தவர்கள் ஒப்புக் கொள்வார்களா ? இங்கே இருக்கிற மக்களே அதனை ஏற்றுக்கொள்வார்களா ? நகைக்க மாட்டார்களா ? இதைப்பற்றி சொல்வதற்கே நமக்கே வெட்கமாக இல்லையா ? ஆகவே இந்த அறிவிப்பை மாற்றி இன்னும் அதிக அளவில் பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கான நிதியை அறிவித்தால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பற்றி. அவர்களிடம் சுமுகமாக நடந்து கொள்ள வேண்டும், பழி வாங்கும் உணர்ச்சி இருக்கக்கூடாது என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு அறிவித்த சலுகைகள் அனைத்தையும் அறிவித்ததைப் போல நடைமுறைப்படுத்த வேண்டும். அத்தோடு, அவர்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் நம்முடைய கோட்டையிலே பணி புரியும் ஊழியர்கள் துணை நின்று வேலைநிறுத்தம் செய்தார்கள். அதற்காக அவர்கள் பழி வாங்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒரே முதலாளியின் கீழ் வேலை செய்பவர்கள் என்ற முறையில், அரசு ஊழியர்கள் நாமனைவரும் ஒன்று என்ற உணர்வில் ஒருவருக்கொருவர் தங்களுடைய குறைகளைப் பகிர்ந்து கொள்வது, ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வது இயல்பு. அதை அந்தக் கண்ணோட்டத்தில்தான் பார்க்க வேண்டுமே தவிர, அரசியல் எண்ணத்தோடு பார்க்கக்கூடாது. ஆகவே பழி வாங்கப்பட்டிருக்கும் தலைமை செயலர் ஊழியர்களின் சஸ்பெண்ஷன் ஆர்டரை திரும்பப் பெற்றுக் கொண்டு, அவர்களை மீண்டும் வேலையில் அமர்த்த வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, பலமுனை வரிகளை எல்லாம் குறைத்து ஒரு முனை வரிகளாக ஆக்க வேண்டும் என்று சொல்லி, இந்த பட்ஜெட்டிலே சில பொருள்களுக்கு ஒரு முனை வரியாக ஆக்கியிருக்கிறீர்கள், சாதாரண மக்கள் உபயோகப்படுத்துகின்ற வெல்லம் போன்ற பொருள்களுக்கெல்லாம் வரியைக் குறைத்திருக்கிறீர்கள். அதையெல்லாம் வரவேற்கிறோம்.

புதிய வரிகளைப் போடாத பட்ஜெட்டை உருவாக்கியிருக்கிறோம் என்று அடிக்கடி சொல்லிக் கொள்கிறீர்கள். புதிய வரிகளைப் போட்டு, அதன்மூலம் வரும் வருமானத்தில் இன்னின்ன திட்டங்களைச் செயல்படுத்த இருக்கிறோம் என்ற வகையில் செய்வதுதான் சரியாக இருக்கும். அதை விடுத்து வரிபோடாத பட்ஜெட் என்று சொல்லி, தமிழகத்திற்கு



எதுவுமே முன்னேற்றம் இல்லாத சூழ்நிலையை உருவாக்கி ஒரு கற்பனை பட்ஜெட்டாகத்தான் உருவாக்கித் தந்திருக்கிறீர்கள் என்று சொல்லி, இந்த அவையிலே பேச வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பத்திரிகையாளர்களுக்கு அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் மலர்மன்னன் அவர்கள் பேசுகிறபோது இன்ன சட்டமன்ற உறுப்பினர் என்று பெயர் சொல்லாவிட்டாலும் கூட முன் அறிவிப்பு எதுவும் கொடுத்து அனுமதி பெறாமல் சில குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். அதன் விவரங்களை நான் பார்த்து விட்டு தீர்ப்பு அளிக்கும் வரையில், அதை பத்திரிகையில் போடவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தன்னிலை விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் குப்புசாமி அவர்கள் பேசுகிறபோது அவையிலே நான் இருக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. அவர்கள் பேசுகிறபோது, நான் பேசியபோது குறிப்பிட்ட சில விஷயங்களைப் பற்றி விமர்சித்ததை நான் ஆட்சேபிக்கவில்லை என்றாலும், அவர்கள் நான் இந்த மாநில அரசை அறிவில்லாத அரசு என்று குறிப்பிட்டதாகக் கூறியதை மட்டும் தவறு என்று கூறி வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன். நான் அவ்வாறு அந்த வார்த்தையைச் சொல்லவில்லை. நான் சொன்னது, சொன்னதை நினைவுபடுத்த விரும்புவது "சமூகச் சிக்கல்களுக்கு பல்வேறு சாரணங்கள் இருக்கின்றன. அந்த சமூகச் சிக்கல்களைப் புரிந்துக் கொள்கிற, அந்த சமூகச் சிக்கல்களை தீர்க்கின்ற அரசியல் ஞானம் இந்த அண்ணா தி.மு.க. அரசுக்கு இல்லை" என்றுதான் சொன்னேனே தவிர, அறிவே இல்லை என்று சொல்லவில்லை என்பதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. கே. குப்புசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சுப்பராயன் அவர்கள் சொன்னதைத்தான் நானும் சொன்னேன். ஞானம் என்றும் சொன்னேன், அறிவு என்றும் சொன்னேன், இதிலே என்ன வேறுபாடு இருக்கிறதென்று தெரியவில்லை.

திரு. கு. சுப்பராயர் : துணைத் தலைவர் அவர்களே, குறிப்புகளில் தவறுதலாக பதிவாகி விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். சமூகப் பிரச்சினைகளை புரிந்து கொள்வதில் ஞானம் இல்லை, சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஞானம் இல்லையென்று சொல்கிறபோது (குறுக்கீடு) தயவு செய்து நான் முடித்து விடுகிறேன், பின்னால் நீங்கள் பதில் சொல்லுங்கள், நான் ஆட்சேபிக்கவில்லை. சமூகப் பிரச்சினை

களைத் தீர்ப்பதில் பல்வேறு அரசியல் ஞானங்கள் இருக்கின்றன. ஆனால் சமூகப் பிரச்சினைகளை உண்மையிலே தீர்க்கக்கூடிய தத்துவார்த்த ஞானம் இல்லையென்று தான் குறிப்பிட்டுச்சொன்னேனே தவிர வேறல்ல.

*திரு. சி. சுப்பராயர் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்துள்ள 1986-87ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு முன்பு, இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

புரட்சித் தலைவரை என்றென்றும் தங்கள் இதய தெய்வமாக வழிபடும் ஏழை மக்களின் நன்மையைக் கருதியும், அவர்களுடைய வாழ்வு மேம்பட வேண்டுமென்ற எண்ணத்திலும் தான் நல்லமுறையில் இந்த ஆண்டு இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையில் ஒன்றுமில்லை யென்று கூறுபவர்கள் வேண்டுமென்றே பொய் சொல்கிறார்கள் என்று நான் திட்டவட்டமாகச் சொல்வேன். மத்திய அரசு ஏகப்பட்ட பொருள்களின் மீது வரியை ஏற்றியிருக்கும் சமயத்தில் கூடுதல் வரிச் சுமையை மக்கள் மீது சுமத்தாமல் ஏகப்பட்ட பொருள்களுக்கு வரி விலக்கு அளித்து இருக்கிற இந்த அறிக்கை தான் இந்தியாவிலேயே தலை சிறந்த அறிக்கையாக இருக்குமென்று கருதுகிறேன். இந்தப் பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசிற்கே சேரும். மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி தெளிவாகச் சொல்லவில்லையென்று எதிர்க் கட்சியினர் குறை கூறினார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மதுவிலக்கைப் பற்றியும், அதனால் ஏற்படும் வருமான இழப்பைப் பற்றியும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்கள்.

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் போன்ற திட்டங்கள் மத்திய அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தில் சரியான முறையில் செயல் படுத்தப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் பேசுகின்றபோது தமிழகத்தில் இந்தத் திட்டங்கள் சரியாக செயல் படவில்லையென்று குறை கூறினார்கள். அவர்கள் கட்சி ஆளும் கேரள மாநிலத்தில் இந்தத் திட்டங்கள் என்றால் என்னவென்றே தெரியாத சூழ்நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியின் எல்லையில்தான் கேரள மாநிலம் இருக்கிறது. அந்த எல்லையை ஒட்டி 100 மைல் சுற்றளவிற்கு கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களில் இதுவரையில் எந்தவிதமான திட்டமும் நிறைவேற்றப்படவில்லை. தேசிய வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றியோ, ஊரக நிலமற்





றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தைப் பற்றியோ அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. எந்தவிதமான முன்னேற்றமும் கடந்த ஏழு ஆண்டுகளில் அங்கே கிடையாது. ஆனால் தமிழகத்தில் எந்த ஒரு சிறிய கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் அங்கே ஒரு வேலை அல்லது இரண்டு வேலைகள் இந்தத் திட்டங்களின்கீழ் நடைபெற்றுச் கொண்டிருக்கும். தமிழகத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தில் எல்லா சாலைகளும் இணைக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் நான் 'வார்த்தா' என்ற மலையாளப் படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தில் கேரளாவில் இந்த மத்திய அரசுத் திட்டங்கள் எப்படி செயல் பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அங்கேயுள்ள பொறியாளர்கள் பினாமி பெயர்களில் காண்ட்ராக்ட் எடுத்துக் கொண்டும் மற்றும் பல தில்லு முல்லுகளைச் செய்து கொண்டும் நேரிடையாக அந்தத் திட்டங்கள் மக்களுக்குப் போய்ச் சேரவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெளிவாக காட்டியிருக்கிறார்கள்.

அடுத்து அகில இந்தியா முழுவதும் எடுத்துக் கொண்டால் தமிழகத்தில்தான் போக்குவரத்து வசதிகள் அதிகமாக உள்ளன. அதிகமாக வாகன வசதிகள் தமிழகத்தில்தான் உள்ளன. எல்லா நகரங்களிலிருந்தும் எல்லா கிராமங்களுக்கும் செல்வதற்கு வாகன வசதிகள் உள்ளன. கேரள மாநிலத்தில் உள்ள போக்குவரத்துக் கழக பஸ்களுக்கு தமிழகத்தில்தான் பாடி கட்டுகிறார்கள். கேரள மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் இது பற்றி குறிப்பிடுகிறபோது தமிழகத்தில்தான் பஸ்களுக்குத் தேவையான பாடிகள் மிகவும் குறைவான விலையில் நல்ல முறையில் கட்டுகிறார்கள்; கேரள மாநிலத்தில் செலவு அதிகமாக இருக்கிறது என்று கூறி இருக்கிறார்கள். இன்றைக்கு கேரளத்தில் உள்ள எல்லா மாவட்ட தலைநகர்களுக்கும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் செல்கின்றன. சமீபத்தில் நடந்த அய்யப்பன் கோவில் திருவிழாவிற்குகூட செங்கோட்டை மற்றும் பல இடங்களிலிருந்து நம்முடைய திருவள்ளுவர் போக்குவரத்துக்கழகப் பேருந்துகள் சென்று வந்தன. இன்னும் ஓரிரு ஆண்டுகளில் கேரளாவில் உள்ள எல்லா ஊர்களுக்கும் நமது சட்டமன்ற உறுப்பினர்கள் இலவசமாகச் செல்லலாம் என்ற அளவிற்கு நிலைமை மாறவிருக்கிறது.

(பிற்பகல் 1-20)

இந்தமாதிரி தமிழகத்தில்தான் போக்குவரத்து மிக முன்னணியில் இருக்கிறது என்பதை பெருமையாகச் சொல்ல விரும்புகிறேன். இது புரட்சித் தலைவர் அவர்களின் சீரிய அரசுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சுமார் 10 பொருட் களுக்கு மேல் வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இவை யாவும் ஏழை மக்களால் பயன் படுத்தப்படும் பொருள்களாகும். ஏழை மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, தயாரிக்கப் பட்ட நிதிநிலை அறிக்கை என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். இவ்வாறு வரி விலக்கு அளிக்கப்பட்ட பொருட் கள் யாவும் குடிசைத் தொழில் மூலமாக தயார் செய்யப்படும் பொருட்களாகும். எனவே வரி விலக்கு மூலம் குடிசைத் தொழில்கள் பெருகுவதற்கான வழி வகை இந்த நிதி நிலை அறிக்கை மூலம் செய்யப்பட்டு உள்ளது.

அதேபோன்று தாய்மார்கள் பயன் படுத்தும் குங்குமம், மஞ்சள் ஆகிய பொருட்களுக்கும் வரி விலக்கு அளிக்க வேண்டும் என்று நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். இப்போது பல முனை வரியாக இருந்த சில பொருட்கள் ஒரு முனை வரிக்கு மாற்றப்பட்டு உள்ளன. இது பொதுமக்க ளுக்கு ஏகப்பட்ட நன்மைகளை அளிக்கும். ஏன் என்றால் பல முனை வரி என்று சொல்லும்போது, எந்தெந்த வரியைப் போடுவார்கள் என்று தெரியாது. வாங்கினாலும் வரி, திருப்பி விற்றாலும் வரி. உதாரணமாக என்னுடைய தொகுதியில் இருக்கிற விவசாயிகள் பெரும்பாலும் கேரள மாநிலத்தில் நிலம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தமிழகத்திலிருந்து பொருட்களை வாங்கிக் கொண்டு செல்லும்போது, தமிழகத் திலே ஒரு வரி கட்டுகிறார்கள். கேரள மாநிலத்திலே அங்கே உள்ளே நுழைந்ததும் ஒரு வரி செலுத்துகிறார்கள். இதனால் ஏகப்பட்ட பிரச்சினைகள் வருகின்றன.

அடுத்து, மக்களின் உயிர் காக்கும் 41 வகையான மருந்து களுக்கு 8 சதவீத வரியிலிருந்து 4 சதவீதமாக குறைக்கப்பட்டு இருக்கிறது. இதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். இதை எல்லோருமே சிறந்த ஒரு வரி குறைப்பு என்று சொல்கிறார் கள். ஆனால் மருந்துக் கடைகளுக்குச் சென்று மருந்து வாங்கும் போது, யாருக்கும் எந்தெந்த மருந்துகளின் மீது வரி குறைப்பு செய்யப்பட்டு இருக்கிறது என்பது தெரியாது. எனவே எந்தெந்த மருந்துகள் மீது வரிகள் குறைக்கப்பட்டு உள்ளன என்பதை தெரிவிக்க எல்லா மருந்துக் கடைகளிலும் ஒரு போர்டு வைக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் அரசைக் கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, இந்த மாநிலத்தில் உற்பத்தி செய்யப்படும் நிலக் கடலை மீது முதல் விற்பனை வரி ரத்து செய்யப்பட்டு கொள் முதல் மீதான வரியாக மாற்றப்பட்டு இருப்பது விவசாயிகளுக்கு ஒரு வரப் பிரசாதமாகும். ஏன் என்றால், அவர்கள் கஷ்டப் பட்டு, பாடுபட்டு, விளைச்சல் செய்து கொண்டு வரும் நிலக்





கடலைக்கு நல்லதொரு விலை கிடைக்கும். விற்பனை வரி இருந் தால், வியாபாரிகள் விவசாயிகளிடத்திலே இருந்து அந்த நிலக் கடலையை வாங்கும்போது, அந்த வரியைக் கழித்துக் கொண்டு தான் விலை வைக்கிறார்கள். எனவே 80 ரூபாய், 90 ரூபாய் மதிப்புள்ள கடலைக்கு அவர்கள் கொடுக்கும்போது, 60 ரூபாய் 65 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். எனவே இந்த திட்டம் அறிவிக்கப்பட்டதால், இனிமேல் அவர்களுடைய நிலக் கட லைக்கு நல்ல விலை கிடைக்கும்.

அதே போன்று, வேப்பம் புண்ணாக்கு பல முனை வரி விதிக்கும் ஒரு பொருளாக இருந்து வருகிறது. என்னுடைய தொகுதியில் வசிக்கும் ஏராளமான விவசாயிகள் இந்த வேப்பம் புண்ணாக்கைப் பயன் படுத்துகிறார்கள். இந்த வேப்பம் புண்ணாக்கை விவசாயத்தைத் தவிர வேறு எந்தக் காரியத்திற் கும் பயன்படுத்துவதில்லை. எனவே இந்த வேப்பம் புண்ணாக் கை, ஒரு முனை வரியாக விதிக்கப்படும் பொருளாக மாற்ற வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களை என் தொகுதி மக்கள் சார்பாக கேட்டுக் கொள் கிறேன்.

அதேபோல், வேளாண்மைத் துறையில், ஊரக நிலமற் றோர் தேசிய வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் மூலம் கட்டப்படும் கசிவு நீர்க் குட்டைகளுக்கு அதிக நிதி அளிக்க வேண்டும். ஏன் என்றால், பெரும் பகுதி மக்கள் விவசாயத்தை நம்பித்தான் உள்ளார்கள். இதனால் விவசாயிகளுக்கு ஏராள மான நன்மைகள் ஏற்படும்.

அதேபோல், விவசாயிகளுக்கு மின்சார இணைப்பு கிடைப் பது மிகவும் சிரமமாக இருக்கிறது. மின்சார இணைப்பு சுலப மாகக் கிடைத்தால், விவசாயம் பெருகும். விவசாயம் பெருகு வதால், தமிழ்நாடு விவசாயத்திலே முன்னேற முடியும். வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிற்கு பொருட்கள் இங்கே விளைகின்றன. எனவே இப்போது மின்சாரப் பற்றாக் குறை இருப்பதால், விவசாயிகள் டீசல் என்ஜினை வைத்து விவசாயத் தைச் செய்வதால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. சிறு விவசாயிகளுக்காவது, 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருப்பவர் களுக்காவது மின்சார இணைப்பு கூடிய விரைவில் வழங்க, துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்மிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிறிய பாசனத் திட்டத்தை நிறைவேற்ற கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். ஏன் என்றால், சில இடங்களில் விவ சாயிகள் 20 ஏக்கர், 25 ஏக்கர் வைத்திருப்பார்கள். அவர் களால் தனிப்பட்ட முறையில் ஒரு கால்வாயிலிருந்து தண்ணீர் கொண்டு செல்ல முடியாது. ஆனால் அவர்களுடைய நிலம்

தண்ணீர் எளிதில் சென்று பாயக் கூடிய நிலமாக இருக்கும். அதாவது, 'கமான்டபிள் ஏரியா' என்று சொல்வார்கள். அந்த மாதிரி இடங்களுக்கு பொதுப் பணித்துறை மூலமாக வாய்க்கால்களை வெட்டுவதற்கோ, அல்லது மதகு வைப்பதற்கோ கூடுதல் தொகை ஒதுக்கினால், நம்முடைய நீர்ப் பாசனத் துறை மூலமாக அதிகமான விவசாயிகள் நன்மை பெறுவார்கள்.

மதுரை மாவட்டத்தில் ஏராளமாக நெல் விளைகிறது. எனது தொகுதி Rice bowl of Madurai District என்று சொல்வார்கள். வைகை ஆற்றுப் பாசனத்தின் மூலம் இரு போக விவசாயம் நடை பெற்று வருகிறது. தற்போது உலக வங்கி உதவியுடன் தமிழக அரசின் சீரிய முயற்சியால் வைகை-பெரியார் திட்டத்தை நவீனப்படுத்தும் திட்டம் நல்ல முறையில் நடைபெற்று வருகிறது. என்னுடைய தொகுதியில் உள்ள உத்தமுத்து, வைரவன் ஆகிய இரு வாய்க்கால்களை நவீனப் படுத்தும் திட்டத்தில் சேர்த்து இந்த வாய்க்கால்களையும் நவீனப் படுத்த வேண்டும். அப்படி நவீனப் படுத்தப் பட்டால் ஏராளமான தண்ணீர் மிச்சமாகும். அதனால் பல ஏக்கர் நிலம் பாசனம் பெறும். எனவே பெரியார்-வைகை பாசனத்தில் உள்ள உத்தமுத்து, வைரவன் ஆகிய இரு வாய்க்கால்களையும் உலக வங்கித் திட்டத்தில் சேர்த்து நவீனப்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் ஹைறேஞ்சஸ் எனப்படும் மலைப்பகுதி உள்ளது. அங்கே தனியாருக்குச் சொந்தமான 7 தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. அதில் இரவங்களம் எனப்படும் பகுதியில் இன்னும் மின்சார வசதி கிடையாது. மின்சார வசதி இல்லாததனால் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் இரவு நேரங்களில் மிகவும் சிரமப்படுகிறார்கள். பக்கத்தில் காடுகள் இருக்கின்ற காரணத்தால் இரவு நேரங்களில் யானைகள் தொழிலாளர்கள் குடியிருப்புகளுக்கு வந்து அங்கே உள்ள ஏராளமான பொருள்களை நாசப்படுத்துகின்றன. தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான தேயிலைத் தோட்டங்களாக இருப்பதால் மின்சாரம் வசதி அமைத்து கொடுப்பதற்கான மொத்தச் செலவு கிட்டத்தட்ட 3 இலட்ச ரூபாய் வரையில் ஆகிறது. இதை தேயிலைத் தோட்ட நிர்வாகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று மின்சார துறையினர் சொல்கிறார்கள். ஆனால், அந்த



நிர்வாகம் அவர்களுக்கு உள்ளே இருக்கிற சிக்கல்களின் காரணமாக அந்தப் பணத்தை நாங்கள் கட்ட மாட்டோம். அந்த பணம் பொதுமக்களைச் சேர்ந்தது தான்; உங்களுடைய தொகுதி மக்களைச் சேர்ந்தது தான்; எனவே அதற்கு நீங்கள் தான் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று என்னிடமே கூறுகிறார்கள். அந்த நிர்வாகத்திற்கும் மின்சாரத் துறைக்கும் இருக்கிற பிரச்சினையின் காரணமாக அங்கே மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, தமிழக அரசு இதில் தலையிட்டு இரவங்களம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அந்தப் பகுதியில் அதிகமான போக்குவரத்து வசதிகள் கிடையாது. எனவே, பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக பேருந்து விடுவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் என்னுடைய தொகுதியில் கோம்பையில் இருந்து நாமக்கல்மேடு என்ற பகுதியில் ஒரு மலைச்சாலை செல்கிறது. அந்த மலைச் சாலையில் அடிவாரம் வரை ரோடு போடப்பட்டு இருக்கிறது. அந்த அடிவாரத்தில் இருந்து மேலே வனத்திற்குள் செல்ல வேண்டியிருப்பதால் மத்திய அரசின் வனத்துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என்ற காரணத்தால் அந்த சாலை இன்னும் போடப்படாமல் இருக்கிறது. இந்த சாலைக்காக எஸ்டிமேட் தயார் செய்து எத்தனை மரங்கள் வெட்டப்பட வேண்டும். இதனால் எவ்வளவு சேதாரம் ஏற்படும் என்பதை எல்லாம் மாவட்ட வன அதிகாரிகள் புள்ளி விவரம் தயார் செய்து சி.சி.எப். மூலமாக மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான ஒப்புதலும் வரவில்லை. எனவே இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஏராளமான மழை பெய்த காரணத்தால் சாலைகள் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. குறிப்பாக, பாளையம்-பண்ணைப்புரம் சாலையும், குள்ளகவுண்டன்பட்டி-சுருளியாறு சாலையும் மிகவும் மோசமாக உள்ளன. ஆகவே, இந்த இரண்டு சாலைகளையும் உடனடியாக சீர்படுத்த ஆவன செய்ய வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள கம்பம் ஒரு நகராட்சி ஆகும். அங்கே அரசின் ஆய்வு மாளிகையோ, பயணிகள் தங்கும் விடுதியோ கிடையாது. கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஜனத்தொகை கொண்ட ஊர் ஆகும். அந்த ஊரில் முனிசிபல் தங்கும் விடுதியோ, அல்லது பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதியோ அல்லது ஹைவேஸ்க்கு சொந்தமான

ஆய்வு விடுதியோ கிடையாது. அதிகாரிகளும் மற்றவர்களும் மதுரையில் இருந்தோ அல்லது திண்டுக்கல்லில் இருந்தோ இங்கே வந்து தங்கும்போது மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக பயணிகள் விடுதியோ, அல்லது பொதுப்பணித் துறையின் மூலமாக ஆய்வு விடுதியோ கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று தமிழக அரசை கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையாது. ஆனால் அங்கே பலவிதமான வளங்கள் இருக்கின்றன. அப்படி இருந்தாலும் எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையாது. ஒரு பகுதி வளமாக இருந்தாலும் இன்னொரு பகுதி வெற்றுப் பூமியாக இருக்கிறது. எனவே, மதுரை மாவட்டத்தில் உள்ள உத்தமபாளையம் தாலுக்காவை ,இண்டஸ்ட்ரியலி பேக்வர்டு ஏரியா, என்று டிக்ளேர் செய்து அங்கே பலவிதமான தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், நிதி அமைச்சர் அவர்களையும், மற்றும் தொழிற்துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மலர்மன்னன் அவர்கள் பேசும்போது தலைவருடைய முன் அனுமதியின்றி '**

என்பதில் இருந்து '**

என்று குறிப்பிட்டது வரை அனைத்தையும் நீக்கும்படி உத்தர விடுகிறேன். இப்பிரச்சினைக் குறித்த குறுக்கீடுகளும் நீக்கப் படுகின்றன.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21-3-1986) காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

29. 1979-80 ஆம் ஆண்டிற்கான கூடுதல் மேல்வரியினை காலம் தாழ்ந்து செலுத்தியதற்காக சேலம் அண்ணா போக்குவரத்துக்கழகம் செலுத்த வேண்டிய தண்டத் தீர்வையினை குறைப்பது குறித்து உள்துறையின் 6—1—1986 ஆம் நாளிட்ட 20 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

30. சேலத்திலுள்ள, சேலம் மாவட்ட மாச்சத்து மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவு சங்கத்தினரால் விற்கப்படும் சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாச்சத்திற்கு விதிக்கப்படும் வரியினை குறைப்பது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 31—10—1985 ஆம் நாளிட்ட 1001 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

31. வணிக வரிகள் - சமய அறக்கட்டளைகள் துறையின் 23—11—1983 ஆம் நாளிட்ட II (1)/CTRE /211/83 ஆம் எண் அறிவிக்கையில். திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 2—12—1985 ஆம் நாளிட்ட 1081 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை) முன் வைக்கப்பெற்றது].

32. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1983-84 ஆம் ஆண்டிற்கான அறிக்கை (சிவில்) [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்].

33. தமிழ்நாடு அரசின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கக் கணக்குகள் (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்)

34. தமிழ்நாடு அரசின் 1983-84 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் கணக்குகள் [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

35. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான பத்தொன்பதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

136452
சென்னை-600 008.

D 1
V211,31 N56
N86-18-2 93